IFJ FIP

# ஒருமைப்பாட்டில் சுதந்திரம்


## தெற்காசியாவில் சமாதானத்திற்காகப் பாடுபடும் ஊடகங்கள்


















சமாதானத்திற்கான ஐக்கிய அரசுகள் கழகம்

# உள்ளடக்கம்


1. **முன்னுரை** 1

2. **பங்களாதேஷ்:** ஊடகங்களின் பிரிவினைக்கு *உணவளிக்கும் அரசியல் பகைமைகள்* 7
   *அமர் தேஷ் வழக்கு* 12

3. **இந்தியா:** அடிப்படை வலுவானாலும் பிரச்சினைகள் *தொடர்கின்றன* 14
   *மணிப்பூர்: ஊடக சுயாட்சியைப் பாதுகாப்பது* 17

4. **நேபாள்:** புத்திளம் ஜனநாயகத்தைப் பேணிக் காப்பது 23
   உயிர்களைக் காப்பாற்றிய நற்பணிகள் 26
   சட்டாம்பிள்ளையின் நீளும்கை 29

5. **பாகிஸ்தான்:** இன்னல்களுக்கு இடையில் பத்திரிகைத் துறை 31
   ஊடகங்களுக்குக் கசையடி 33
   பிரஸ் கிளப்கள்: ஊடகச் சமூகத்திற்கு ஒரு மேடை 35

6. **இலங்கை:** போருக்குப் பிந்தைய சவால்களும், பிரிந்து நிற்கும் ஊடகங்களும் 39
   திஸ்ஸநாயகத்தின் தண்டனை 42
   மௌபீமா: அனைவருக்காகவும் செய்தி வெளியிட்டதற்காகப் பலி 46

7. **முடிவுரையும், பரிந்துரைகளும்** 47


இந்த ஆவணத்தை சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் (IFJ) தனது கூட்டாளிகள் மற்றும் சார்பு அமைப்புக்களுக்காகத் தயாரித்தது.

அனைத்திந்திய செய்தி ஏடுகள் ஊழியர் சம்மேளனம்
அனைத்து மணிப்பூர் உழைக்கும் பத்திரிகையாளர் யூனியன்
பங்களாதேஷ் ஃபிரீடம் வாட்ச்
பங்களாதேஷ் மனோபதிகார் சங்பாதிக் மன்றம்
சத்தீஸ்கர் ஷ்ரம் ஜீவி பத்ரகார் சங்
தாக்கா ரிப்போர்ட்டர்ஸ் யூனிட்டி
தில்லி பத்திரிகையாளர் யூனியன்
ஊடக ஊழியர் தொழிற்சங்கங்கள் சம்மேளனம்
நேபாளி பத்திரிகையாளர் சம்மேளனம்
சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை
இந்திய பத்திரிகையாளர் யூனியன்
காஷ்மீர் பிரஸ் கில்டு
மாஸ்லைன் மீடியா சென்ட்டர், பங்களாதேஷ்
மீடியா வாட்ச், பங்களாதேஷ்
தேசிய பத்திரிகையாளர் யூனியன், இந்தியா
தேசிய பத்திரிகையாளர் யூனியன், நேபாளம்
நேபாள் பிரஸ் யூனியன்
பாகிஸ்தான் பிரஸ் யூனியன்
பாகிஸ்தான் பிரஸ் பவுண்டேஷன்
பாகிஸ்தான் பத்திரிகையாளர் ஃபெடரல் யூனியன்
இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம்

## ஒருமைப்பாட்டில் சுதந்திரம்: தெற்காசியாவில் சமாதானத்திற்காகப் பாடுபடும் ஊடகங்கள்


**உருவாக்கி, ஆராய்ந்து, எழுதியவர்கள்:**
சுகுமார் முரளிதரன், லட்சுமி மூர்த்தி, ஜாக்குலின் பார்க்



**ஆசிரிய மற்றும் நிர்வாக உதவி:**
தேபொரா முயிர், கிளெய்ர் ஓ'ரூர்க்கி, கேமரன் டர்ன்ஸ்ஃபோர்ட்

**சிறப்பு நன்றி:**
மஸர் அபாஸ்,
குர்ஷித் அபாஸி,
கோவிந்த ஆச்சார்யா
யூசப் அலி
டங்க்கா ஆரியல்
சூரஜ் பட்டாரை
பரத் பூஷன்
ஷூஜாத் புக்காரி
ராம்ஜி தஹல்
தாராநாத் தஹால்
சுனந்தா
தேஷ்பிரியா
முகமது ஃபரூக்
ஹானா இப்ராஹிம்
தர்மேந்திர ஜா
பொஷன் கேசி
தாரக் மஹ்மூத்
காஞ்சனா மாரசிங்க
கம்ருல் ஹாசன் மொஞ்சு
ஷம்சுல் இஸ்லான் நாஸ்
பிஷ்ணு நிஷ்ரூரி
எஸ்.கே. பாண்டே
பிரதீப் பாஞ்சபம்
ஷோபாபதி சமோம்
பெர்வேஸ் ஷவுக்கத்
ராய் ஹுசைன் தாஹிர்
கே.கே. வாசுதேவன்

**வடிவமைப்பு மற்றும் அச்சகம்:**
இம்ப்பல்ஸிவ் கிரியேஷன்ஸ்

தெற்காசிய ஊடக ஒருமைப்பாட்டு நெட்வொர்க் (SAMSN) சார்பாக வெளியிட்டோர் சர்வதேசப் பத்திரிகையாளர் சம்மேளனம் (IFJ) ஆசிய-பசிபிக் கிளை.


இந்த வெளியீட்டின் எந்த ஒரு பகுதியையும் எந்த வடிவிலும் வெளியீட்டாளரின் முன் அனுமதி இன்றி வெளியிட முடியாது. இந்தப் புத்தகத்தின் உள்ளடக்கம் காப்புரிமை பெற்றது. இதில் பங்களித்தவர்களின் படைப்புக்களைப் பயன்படுத்துவது வெளியீட்டாளரின் உரிமை.


அக்டோபர் 2010

இந்த ஆவணம் சமாதானத்திற்கான ஐக்கிய அரசுகள் கழகத்தின் (USIP) ஆதரவுடன் தயாரிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ள கருத்துக்கள், கண்டு பிடிப்புகள், முடிவுரைகள் அல்லது பரிந்துரைகள் யாவும் எழுதியவர்களின் கருத்துக்கள், அவை சமாதானத்திற்கான ஐக்கிய அரசுகள் கழகத்தின் கருத்தைப் பிரதிபலிக்கவில்லை.

# முன்னுரை

| | |
|---|---|
| *Speak, for your two lips are free;* | பேசு, உதடுகள் உனது இரண்டும் சுதந்திரமானவை |
| *Speak, your tongue is still your own;* | பேசு, நாக்கு இன்னமும் உனதே |
| *This straight body still is yours—* | வளைந்து கொடுக்காத இந்த உடம்பு இன்னமும் உனதே |
| *Speak, your life is still your own.* | பேசு, உனது வாழ்க்கை இன்னமும் உனதே. |
| *See how in the blacksmith's forge* | பார், கொல்லன் பட்டறையில் கொழுந்து விட்டெரியும் தீ |
| *Flames leap high and steel glows red,* | அதில் கனன்று சிவக்கும் இரும்பு |
| *Padlocks open wide their jaws,* | அறுபட்டது தளைகள் யாவும் |
| *Every chain's embrace outspread!* | பரந்து விரிந்தது ஒவ்வொரு கரமும் |
| *Time enough is this brief hour* | பேசு, காலம் கடந்துவிட வில்லை |
| *Until body and tongue lie dead;* | உடம்பும் நாக்கும் மரத்துக் கிடக்கவில்லை |
| *Speak, for truth is living yet—* | பேசு, உண்மை இன்னமும் உறங்கவில்லை |
| *Speak whatever must be said.* | பேசு, பேச வேண்டியதை எல்லாம் பேசு. |

பேசு, இயற்றியவர் ஃபயஸ் அகமது ஃபயஸ் (மொழியாக்கம் : ராஜாராம்)

தெற்காசிய வட்டாரத்தில் திடீர்திடீரென நிகழும் மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தெற்காசிய நாடுகளில் உள்ள ஊடகங்கள் திண்டாடித் திணறித்தடுமாறுகின்றன. இந்த வட்டாரத்தில் உள்ள எல்லா நாடுகளையுமே மாறுதல் காணும் நிலையில் உள்ள சமுதாயங்கள் எனலாம். இந்த அறிக்கையில் குறிப்பிட்டப்பட்டுள்ள ஐந்து நாடுகளும் குறிப்பான பிரச்சினைகளில் மாறுபட்டாலும், அவற்றிடையே போதுமான அளவுக்குப் பொதுப்பாண்புகள் தென்படுகின்றன. ஏனெனில் அவற்றின் வரலாறு பொதுவானது. இதனால், முரண்களைத் தீர்க்கும் முக்கிய சக்தியாக ஊடகச் சுதந்திரத்தைக் கருதி பொதுவான வட்டார உத்தி ஒன்றைஉருவாக்க முடியும்.

இந்தத் தொகுப்பில், ஊடகச் சுதந்திரம் தொடர்பான நெருக்கடிகளை ஒன்றுபட்டு எதிர்கொள்வதில் பத்திரிகையாளர்களின் அமைப்புக்களுக்கு உள்ள பங்கு மற்றும் அவற்றின் திறமை பற்றி கவனம் செலுத்தி சர்வதேசப் பத்திரிக்கையாளர் சம்மேளனம் தனது சார்பாளர்கள் மற்றும் கூட்டாளிகளுடன் சேர்ந்து நடத்திய ஆய்வின் முடிவுகள் தொகுத்துவழங்கப்பட்டுள்ளன. முரண்பாடான நிலைமைகளில் சிக்கிக்கொண்டபோது பத்திரிக்கையாளர் அமைப்புக்கள் ஒன்றுபட்டு வெற்றி பெற்றதற்கு எண்ணற்றசான்றுகள் உள்ளன. அதேபோல, ஒன்றுபட்டுச் செயல்பட்டும் குளிக்கோள்களை எட்ட முடியாமல் போனதற்கும் சான்றுகள் உள்ளன. இத்தகைய பல நிகழ்வுகளைத் திரட்டி, தொகுத்து, முரண்பாடுகள் மிகுந்த நிலைமைகளில் ஊடகச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான உத்திகளை உருவாக்க இந்த ஆய்வு முனைகிறது.

இந்த வட்டாரத்திலேயே மிகப்பெரிய நாடான இந்தியாவில் நிலையானதோர் அரசியல் முறைமை உள்ளது. இதற்கு ஆதாரமாக எல்லா அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்களுக்கு இடையே செயல்பாட்டு முறைகள் பற்றிய பொதுவான கருத்தொற்றுமை நிலவுகிறது. ஆனால், புதிய உலக ஒழுங்கில் "உருவெடுக்கும்" நிலையில் இருப்பதாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்தியப் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க அமைப்பு மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. எல்லாப் பிரிவு மக்களுக்கும் வாய்ப்புக்களும், அச்சுறுத்தல்களும் ஏற்பட்டுள்ளன. இந்தியா தனது கனவு மற்றும் வேற்றுமைகள் காரணமாக, இந்த வட்டாரப் பொருளாதார நடவடிக்கையின் மையமாகத் திகழ்கின்றபோதிலும், இந்தத் திறன் முழுமையாகப் பயன்படுத்தப்படாமலேயே உள்ளது. ஒவ்வொரு அண்டை நாட்டுடனும் இந்தியா கொண்டுள்ள உறவுகளில் காணப்படும் பாதுகாப்புக் கவலைகளே இதற்குக் காரணம். இந்தியாவிற்கு உள்ளேயே, ஜம்மு-காஷ்மீரில் பதற்றம் புகைந்து கொண்டிருக்கிறது. வடகிழக்கு மாநிலங்களில் எண்ணற்றஇனக்கிளர்ச்சிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. மத்தியபகுதியில் உள்ள ஐந்து மாநிலங்களிலும் மாவோ இயக்கக் கிளர்ச்சியாளர்களுக்கும், பாதுகாப்புப் படைகளுக்கும் இடையே நாள்தோறும் வன்முறைச் சண்டைகள் நிகழ்கின்றன. இந்த நிலைமைகள் யாவும் பத்திரிக்கையாளர்களுக்கு இடைவிடாத சவால்களை ஏற்படுத்தியுள்ளன. இவற்றுக்கு பத்திரிக்கையாளர்களின் பிரதிபலிப்பு மாறுபட்டவையாகவும், புதுவழி காண்பவையாகவும் இருந்தன.

தெற்காசியாவில் உள்ள மற்றநாடுகளில் சிக்கலான, பலபரிமாண அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. பாகிஸ்தானிலும், நேபாளத்திலும் 2008. ஆம் ஆண்டு நடைபெற்றநாடு தழுவிய தேர்தலினால் அவற்றின் ஆட்சி முறையில் ஒரு மாற்றம் நிகழும் என்றநம்பிக்கை ஏற்பட்டது. அந்த இருநாடுகளிலும், ஒன்றில் இராணுவ ஆட்சியையும், இன்னொன்றில் மன்னர் ஆட்சியையும் அகற்றி அரசியல் பாதையை மாற்றிய கூட்டுச் சக்திகளில் பத்திரிகையாளர் சங்கங்கள் முக்கிய பங்கு வகித்தன. இதனால் சர்வதிகார அரசுகள் ஒதுங்கி நின்று, அரசியல் ஆதிக்கத்தை ஜனநாயக சக்திகளுக்கு விட்டுத்தர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நேபாளத்தில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் சாசன நிர்ணய சபையால் 2010, மே மாதத்திற்குள் குடியரசு அரசியல் சாசனத்தை நிறைவேற்றுவதாக அளித்த வாக்குறுதியைச் செயல்படுத்த முடியவில்லை. அங்கு இரண்டு அரசுகள் பதவியில் இருந்தன. ஒன்றுக்கு ஒன்று கடுமையான எதிரிகளாக உள்ள அரசியல் கட்சிகளிடையே நிகழ்ந்த பேரங்களின் விளைவாக இந்த இரு அரசுகளும் பதவிக்குவந்தன. பொதுக்கருத்து அடிப்படையில் ஆட்சி முறையும், அரசியல் சாசனமும் வகுக்கப்படும் என்று எல்லா அரசியல் கட்சிகளிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் தேர்தல் முடிந்தவுடனே மீறப்பட்டது. 2008-ஆம் ஆண்டில் நடந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தலுக்குப் பிறகு பதவியேற்றஇரண்டாவது அரசும் பதவிவிலகியபிறகு, நேபாளம் அடுத்த அரசுக்காக நீண்ட நெடுங்காலமாகப் பயனின்றி காத்திருக்கிறது.

பாகிஸ்தானில் 2007, ஆம் ஆண்டில் பெரியதொரு போராட்டம் நடைபெற்றது. அதன் விளைவாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு பதவியேற்றது. பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைமையிலான கூட்டணி அரசு, ஜனநாயகத்தை மீட்பதில் பத்திரிக்கையாளர்கள் ஆற்றிய பங்குபணியை ஓரளவுக்கு அங்கீகரித்து முந்தைய ராணுவ நிர்வாகம் கொண்டுவந்த பல மோசமான சட்டங்களையும், நடைமுறைகளையும் ரத்து செய்தது. ஆனால், உலகளாவிய புவி அரசியலமைப்பில் பாகிஸ்தானுக்கே உரித்தான நிலைமை இந்த அரசை ஆட்டுவிக்கிறது. பாகிஸ்தானின் தலைவிதி எப்போதுமே அதன் அண்டை நாடுகளான இந்தியாவுடனும், ஆப்கானிஸ்தானுடனும் பின்னிப்பிணைந்துள்ளது. ஆப்கானிஸ்தானின் இன்றைய நிலைமையின் நீண்டநெடிய நிழல் பாகிஸ்தானின்மீது படிந்துள்ளது. பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தினால் (முந்தைய வடமேற்கு எல்லை மாகாணம்) அரசின் உறுதிப்பாடு ஆட்டம் கண்டுள்ள வேளையில், பழங்குடிப் பகுதிகளிலும், பலுச்சிஸ்தானிலும் உள்ள ஆப்கன் தாலிபான் சக்திகளினால் தூண்டப்பட்டு பஷ்ட்டூன் மற்றும் பலுச் வட்டாரங்களிலும் கொந்தளிப்பு நிலவுகிறது. இவை மத்திய அரசின் ஆணையை ஏற்க மறுத்துவருகின்றன.

பத்திரிக்கையாளர்கள் கண்ணியமான ஊதியத்திற்காகவும், பணி நிலைமைக்காகவும், பாதுகாப்புக்காகவும் போராடி வருகின்றனர். இந்தப் போராட்டங்களுக்கு குறிப்பிடத்தக்க வெற்றியும் கிடைத்துள்ளது. ஆனால் பெரிய ஊடக நிறுவனங்கள் பத்திரிக்கையாளர்களை ஆதரிக்கத் தயங்குகின்றன. நேபாளத்தில் இருப்பதைப் போலவே, பாகிஸ்தானிலும் ஜனநாயக மீட்பு இயக்கத்தை வெற்றிகரமாக்கிய மற்றசிவில் குழுக்களுடன் ஏற்படுத்தப்பட்ட விரிவான கூட்டணி குறிக்கோள் நிறைவேறியதும் இடர்கள் ஏற்பட்டுவிட்டன.






**தெற்காசியாவில் உள்ள புத்திரிகையாளர்களுக்கு அவர்களுடைய அன்றாட வேலைகளில் தாக்குதல் அச்சுறுத்தல்கள் ஏற்படுகின்றன. எப்போதாவது, பெஷாவர் பிரஸ் கிளப் தற்கொலைக் குண்டுவெடிப்பு போன்று கொலைத் தாக்குதல்களுக்கும் உள்ளாகின்றனர். அவர்களுக்கு வாழ்க்கை நெருக்கடி ஏற்படுகிறது. நியாயமான ஊதியம் மற்றும் கண்ணியமான பணி நிலைமைக்காக தெருக்களில் இறங்கி போராட வேண்டியுள்ளது.** ***(புகைப்படங்களுக்கு சிறப்பு ஏற்ப்பாடு : PFUJ, UNI)***

இலங்கையில் நீண்டகாலமாக நடைபெற்றஉள்நாட்டுப் போரினால் குடிமக்கள் சமுதாயத்திற்கு உள்ளேயும், ஊடகங்களுக்கு இடையேயும் ஆழ்ந்த, கசப்பான பிரிவினைகள் ஏற்பட்டுள்ளன. மிக மோசமான போர் நடைபெற்றபோது, பத்திரிக்கையாளர்கள் எந்த சமூகத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், தாங்கள் கண்டதைக் கண்டதுபோலவே தெரிவிக்க பெரும் முயற்சிகளை எடுத்துக் கொண்டனர். 2002–ஆம் ஆண்டில் இருதரப்பினரும் செய்த சண்டை நிறுத்தப் பிரகடனம், சமூகங்களுக்கு அப்பாற்பட்ட இயக்கங்களை உருவாக்குவதற்காக தங்களுடைய கூட்டு ஒருமைப் பாட்டை ஏற்படுத்த பத்திரிக்கையாளர் அமைப்புக்களுக்கு புதிய வாய்ப்புக்களை அளித்தன. ஆனால், அரசுக்குச் சொந்தமான ஊடகங்களைச் சீர்திருத்த வேண்டியது முதல் வேலை என்று அரசியல்வாதிகள் பலரும் அங்கீகரித்த போதிலும் அதற்கான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை. 2006–இல் புதுவேகத்துடன் உள்நாட்டுப் போர் மீண்டும் தொடங்கியபோது, பத்திரிக்கையாளர்கள் அமைப்புக்கள் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் செய்திகளை வெளியிடுவதற்காக உகந்த சூழலை உருவாக்க கூட்டு நடவடிக்கை எடுத்தன. ஆனால் ஊடக உரிமையாளர்களின் அலட்சியமும், "எம்முடனா, எமக்கு எதிராகவா" என்றஅரசின் போக்கிற்கு ஏற்ப அவர்கள் நடந்து கொண்டதும், புது வேகம் பெற்றபோரின்போது அரசு ஊடகங்கள் கட்டவிழ்த்து விட்ட இடைவிடாத பிரச்சாரமும் பெருந்தடங்கல்களை ஏற்படுத்தின. ஊடகங்கள் ஒடுக்கப்ட்ட புதிய சூழலுக்கு பத்திரிக்கையாளர் அமைப்புகள் பலியாயின. குறிப்பாக, பல முன்னணிப் பத்திரிக்கையாளர்கள் குறிவைத்து வாயடைக்கப்பட்டனர், அல்லது நாடுகடத்தப்பட்டனர். இலங்கை அனுபவம் தெற்காசியாவிலும் வேறு இடங்களிலும் உள்ள பத்திரிக்கையாளர் அமைப்புக்களுக்கு ஒரு படிப்பினை ஆகிவிட்டது.

பங்களாதேசத்தில் கிட்டத்தட்ட இரண்டாண்டு காலம் ராணுவத்தின் ஆதரவு பெற்றபராமரிப்பு அரசு ஆட்சிசெய்த பிறகு, 2009 தொடக்கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு அந்நாடு மாறியது. நெருக்கடி நிலை ஆட்சி நடைபெற்றமாதங்கள் வழக்கமான அரசியல் முறைக்கு கடுமையானதாக இருந்தன. இரண்டு பெரிய கட்சிகளின் பல்வேறுநிலைத் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டதால் அந்தக் கட்சிகள் முடங்கிப் போயின. ஆயினும், நாடாளுமன்றத் தேர்தல் தேதிகள் முறைப்படி அறிவிக்கப்பட்டதும் அவை மீண்டும் உயிர்த்தெழுந்தன. ஆனால் தேர்தலில் அவாமிலீக் அமோக வெற்றி பெற்றதும், இரண்டு கட்விகளுக்கு இடையே நிலவிய பகைமையாலும், ஜனநாயகம் இயங்குவதற்கு அடிப்படைத் தேவையான நீதிமன்றங்களும் தேர்தல் ஆணையமும் எவ்வாறு செயல்படவேண்டும் என்பதில் அந்த இருகட்சிகளுக்கு இடையே உடன்பாடு ஏற்படாததாலும், மக்கள் சமுதாயமும் ஊடகங்களும் பிளவுபட்டு நிற்கின்றன. இதனிடையே, 1971–இல் தேசிய விடுதலைப் போரின் போது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களுக்கான வழக்கு விசாரணை தொடங்கியது. நாட்டின் முதல் பிரதமர் ஷேக் முஜிபுர் ரஹ்மானைக் கொலை செய்த ஐந்துபேர் தூக்கிலிடப்பட்டனர். மக்கள் அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் அரசியல் நிலையற்றுப் போனது. மேலும் அதிகக் கொந்தளிப்புக்கான வாய்ப்புக்கள் வலுவாக உள்ளன. ஆனால், முஜிப் கொலையாளிகள் தூக்கிலிடப்பட்டதையும், போர்க் குற்றங்கள் பற்றிய வழக்கு விசாரணை தொடங்கியதையும் மக்கள் சமுதாயம் அங்கீகரித்துவிட்டதுபோல் தோன்றுகிறது. இதனால் ஊடகங்கள் இருவேறு துருவங்களாகப் பிரிந்திருப்பது குறையும் என்று பங்களாதேஷ் நோக்கர்கள் கருத்துகின்றனர். ஆயினும் அவர்கள் எதையும் நம்பத் தயாராக இல்லை.

## வேற்றுமை மொழிகள்

பங்களாதேஷ் நீங்கலாக, இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ள நாடுகள் அனைத்திலும் பல்வேறு மொழிகள் பேசப்படுகின்றன. மொழி வேற்றுமையால் ஊடக நேயர்களும் பிரிந்து நிற்கின்றனர். வேறுபட்ட சமூகங்களுக்கு உள்ளே வேறுபட்ட உரைகள் உருவெடுக்கின்றன. இந்த நாடுகளில் ஆங்கில மொழி ஊடகங்கள் முக்கிய பங்கு வகித்தாலும், ஆங்கில மொழியின் பாதிப்பு ஒரே





சீராக இல்லை. அங்கும் இங்குமாகத் திட்டுத்திட்டாகத்தான உள்ளது. இந்தியாவில், ஆங்கில மொழி ஊடகம் பெரிதாக வளர்ந்துவருகிறது. அது படித்த மேல்தட்டு மக்களின் தேவைகளை நிறைவேற்றுகிறது. பணம்படைத்த, அதிக வருமானம் உள்ளவர்களுக்காக ஆங்கில ஊடகம் இருப்பதால், அது விளம்பரங்களை ஈர்க்கிறது. பாகிஸ்தானிலும் இலங்கையிலும் இதேநிலைதான் என்றாலும், குறைவான அளவில் உள்ளது. ஆனால் பங்களா தேசத்திலும், நேபாளத்திலும், மக்கள் தொகை அளவுடன் ஒப்பிடும்போது, ஆங்கில ஊடகம் சிறிதாகவே இருக்கிறது. இதை மேல்தட்டு வர்க்கத்தினர்தான் வாசிக்கிறார்கள் என்பதும், இந்தநாடுகளைப் பற்றி வெளி உலகம் புரிந்து கொள்ள அடிப்படைத் தகவல்களைத் தருகிறது என்பதும் இதனுடைய செல்வாக்கிற்குக் காரணமாகும்.

இந்த வட்டாரத்தில், குறுகலான, பணக்கார மக்களின் நலன்களில் ஆங்கில ஊடகம் வலுமாக வேரூன்றியுள்ளது. இது மற்றமொழி ஊடகங்கள் அந்தந்த பண்பாட்டுச் சமூகங்களிடையே வேரூன்றியிருப்பதை விட முற்றிலும் மாறுபட்டதாகும். இந்தப் பண்பாட்டுப் பிரிவுகள் தேசிய அரசியலின் குறைபாடுகளுடன் மோதும்போது, ஊடகங்கள் ஏதாவது ஒரு பக்கத்துடன் இழுபட்டு முரண்பட்டு நிற்கின்றன. இதற்கு ஒரு சான்றாக, இந்தியாவின் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் ஒரு மத டிரஸ்ட்டுக்கு சர்ச்சைக்குரிய நிலம் ஒதுக்கப்பட்டது தொடர்பாக 2008 ஜுலை முதல் ஆகஸ்ட் வரை கலவரங்கள் நிகழ்ந்ததைக் குறிப்பிடலாம். அந்த மாநிலத்தின் இருவேறு பண்பாட்டு வட்டாரங்கள் இருதுருவங்களாகப் பிரிந்து நின்றன. இதன் விளைவாக, காஷ்மீர் வட்டாரத்தில் உள்ள ஊடகங்கள் ஜம்மு வட்டாரத்தின் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாயின. ஆத்திரத்தைத் தூண்டும் வகையில் காஷ்மீர் ஊடகங்கள் மிகைப்படுத்துவதாக ஜம்மு மக்கள் கருதினார்கள். அதே வேளையில், ஜம்மு ஊடகங்கள் காஷ்மீரில் கண்டிக்கப்பட்டன. அளைவ புரிந்துகொள்ளாமல் இருப்பதாக காஷ்மீர் மக்கள் கருதினார்கள். இந்தப் பிரிவினை ஆங்கில ஊடகத்தில் மட்டுமல்ல, உள்ளூர் மொழி ஊடகங்களிலும் பரவியது. வடகிழக்கு இந்திய மாநிலமான மணிப்பூரில் 2010-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கிட்டத்தட்ட இதேபோன்றநிலை ஏற்பட்டது. பள்ளத்தாக்குப் பகுதியில் வசிக்கும் மக்களும், மலைப் பகுதி மக்களும் இருதுருவங்களாகப் பிரிந்து நின்றனர். இந்த இருசமூகங்களிடையே நிலவிய அரசியல் பதற்றத்தினால். பத்திரிகையாளர்கள் சுதந்திரமாகச் செயல்படமுடியாமல் தடங்கல் ஏற்பட்டது.

## ஊடகமும் சமூகத் தகுநிலையும்

குறிப்பிடத்தக்க பொதுக் கொள்கைப் பிரச்சினைகள் விவாதிக்கப்படும்போது, ஊடகங்களின் சமூக வேர்களும் கேள்விக்குரியதாக ஆகின்றன. எடுத்துக்காட்டாக, இந்தியாவின் சாதிகள் வரிசையில் வரலாற்றுக் காரணங்களால் ஒதுக்கப்பட்டவர்களின் நலனுக்காக முனைப்பான நடவடிக்கை எடுக்கப்பட்டதைக் கூறலாம். 2006-ஆம் ஆண்டு இந்தியாவில் இத்தகைய ஒரு பொதுவிவாதம் நடை பெற்றபோது, தில்லியில் நடத்தப்பட்ட ஆய்வில், செய்திகளை முன்னுரிமை கொடுத்து வெளியிடுவதில் ஓரளவுக்கும், உறுதியாகவும் செல்வாக்கு செலுத்தக் கூடிய 80 சதவிகித பத்திரிக்கையாளர்கள் மேல் சாதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்தது. சாதிக் கோட்பாடுகளின்படி ஒதுக்கப்பட்ட தவித்துகள் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புக்களைச் சேர்ந்த பத்திரிக்கையாளர்கள் மிகச் சிலரே இருந்தனர். மதச் சிறுபான்மையினரும், மொத்த மக்கள் தொகையில் அவர்களுக்கு உள்ள எண்ணிக்கைக்கு ஏற்ப, குறைவான பிரதிநிதித்துவமே பெற்றிருந்தனர்.

1 பார்க்க அலோக் தாக்கோர், ‘பிரேக்கிங் இன்ட்டு தி மீடியா’, தி ஹூட், ஜூன் 12, 2006 மற்றும் “கேஸ்ட் மேட்டர்ஸ் இன் தி இண்டியன் மீடியா”, தி இந்து, ஜூன் 3, 2006. ஊடகங்களின் பங்கு உள்பட உறுதியான நடவடிக்கை பற்றிய விரிவான விவாதத்திற்கு பார்க்க, “ரிசர்வேஷன்ஸ்: தி டை இஸ் காஸ்ட்”, தி லிட்டில் மேகஸின், வால்யூம் VI, எண்கள் 4 மற்றும் 5, 2006 (பிரதிகளை ஆன்லைனில் வாங்க http://www.littlemag.com/reservation/printmag.html).

இலங்கையில், ஊடக அமைப்புக்களின் சமூகவேர்களும், அவற்றின் வாசகர்களினுடைய பண்பும் முக்கியத்துவம் பெறுகின்றன. இங்கு நிலைமை அப்பட்டமாகத் தெரிகிறது. ஏனெனில், அரசுக்கும், தமிழ் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான கால்நூற்றாண்டுகால போர் 2009 மே மாதம் முடிந்துவிட்டதாக முறைப்படி அறிவிக்கப்பட்டபோதிலும் அதன்நிழல் தொடர்ந்து படிந்துகொண்டே இருக்கிறது. இந்தப் பிரிவினையின் பண்பு ஊடகங்களிலும் பிரதிபலிக்கிறது. சமீபத்திய ஆண்டுகளில், இருதுருவ மோதல்களுடன் முஸ்லிம் சமூகத்தினரின் கண்ணோட்டம் என்னும் மூன்றாவது பரிமாணமும் பிரச்சினையில் சேர்ந்து கொண்டது. விட்டுக்கொடுக்காத இருவேறு போர் அணிகளுக்கு இடையே முஸ்லிம்கள் சிக்கிக் கொண்டுள்ளனர். இங்கும் ஊடகங்களின் நிலை மோசமாகவே உள்ளது. அவை பகைமைப்போட்டிக்குள் இழுக்கப்பட்டுவிட்டன. போரிடும் குழுக்களிடம் இருந்து விடுபட்டு இருக்கவேண்டிய உணர்வை இழந்துவிட்டன. இதனால், பூசலுக்குத் தீர்வுகாணும் ஒரு சாதனமாக ஊடகங்கள் செயல்படமுடியாமல் பயனற்றுப் போயின.

இது இலங்கை ஊடகங்களின் நீண்டகாலப் பிரச்சினை. 2003-இல் இலங்கைத் தீவில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் குறிப்பிடப்பட்டதைப் போல, பண்பாட்டு நிலையைத் தாண்டி செய்திகளை வெளியிடுவது குறைவாகவே இருந்தது. ஒவ்வொரு ஊடக நிறுவனமும் தனது சொந்த, குறுகிய, மொழிவாரிக் குழுவின் அல்லது சமூக பொருளாதாரப் பிரிவின் நலன்கள் நிறைவேறும் வகையில் செயல்பட்டாலே போதும் என்று நினைக்கின்றன. பண்பாட்டு நிலையைத் தாண்டி ஊடகங்கள் கவனம் செலுத்தும்போது, அது "மற்றொரு இனக்குழுவின் குறைகளைச் சுட்டிக்காட்டுவதாகத்தான் இருக்கும்."[2] போரின் பிற்கால ஆண்டுகளில் நிலைமை மாறத் தொடங்கியது. தங்களது சொந்தச் சமூகங்களைவிட தொழில்முறைச் செயல்பாடே பெரிது என்று பத்திரிக்கையாளர்களின் அமைப்புக்கள் தீர்மானித்தன. இந்தப் போக்கிற்கு கண்டனங்கள் எழுந்தன. பல நிலைகளில், அரசில் இருப்பவர்கள் துன்புறுத்தினார்கள்; வன் முறைமிரட்டல்களை விடுத்தனர். ஆனால் இப்போது போர் முடிந்துவிட்ட நிலையில், குறுகிய சமூக அடையாளங்களுக்கு அப்பாற்பட்டும், சிறுபான்மையினரின் நலன்களை நேர்மையாகவும், சரியாகவும் தெரிவிக்கும் புதிய செய்தி வெளியிடும் தன்மையை உருவாக்க முனைந்துள்ளன. போருக்குப் பிந்தைய இலங்கையில், சமூக நீதியில் இருந்து பொருளாதார வளர்ச்சி நோக்கியதாக முன்னுரிமை இருக்க வேண்டும் என்று தற்போதைய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு தடங்கல்கள் தொடர்கின்றன.

## இடர்மிகு பகுதிகள்

பாகிஸ்தானில், கைபர் பக்டுன்க்வா மாகாணத்திலும், பலுச்சிஸ்தான் மற்றும் மத்திய நிர்வாகத்தில் உள்ள பழங்குடிப் பகுதிகளிலும் (FATA), நடைபெற்றுக் கொண்டிருக்கும் வெளிப்படையான போர், பத்திரிகையாளர்களை பெருமளவில் பலிவாங்கியுள்ளது. வெளிப்படையான போர் நடைபெறும் இடங்களில் மட்டுமல்ல பத்திரிக்கையாளர்கள் பாதிக்கப்படுவது. உள்ளூரில் உள்ள செல்வாக்குமிக்க குழுக்களும், அரசின் பாதுகாப்பு முகமைகளும் தங்களது சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகள் பற்றி செய்திகளை வெளியிடும் பத்திரிக்கையாளர்களைத் தாக்குகின்றனர். இலங்கையில் உள்நாட்டுப் போரின் மோசமான நாட்களில் நிகழ்ந்தது போலவே, பாகிஸ்தானிலும் ஆங்காங்கு குறிவைத்துத் தாக்கப்படுகின்றனர். உதாரணமாக, 2010 ஜுலையில் உயிருக்கும் உடைமைக்கும் பெரும் சேதத்தை விளைவிக்கும் நோக்குடன் லாகூரில் டேட்டாகஞ்ச் பக்ஷ் மசூதி குண்டு வைத்துத் தாக்கப்பட்டது.

பாகிஸ்தானில் ஜனநாயக மீட்புப் போராட்டத்தில் பத்திரிக்கையாளர்கள் முன்னணியில் இருந்தனர். இந்த முயற்சியில், ஊடக உரிமையாளர்கள் மற்றும் செய்தி ஆசிரியர்களுடனும், வழக்குரைஞர்கள் போன்றமற்றதொழில் முறைக் குழுக்களுடனும் பத்திரிக்கையாளர்கள் விரிவான கூட்டணி வைத்துக் கொண்டனர். இதனால் போராட்டம் தீவிரமடைந்தது. ஆனால் 2008-இல் உடனடி குறிக்கோளை அடைந்தவுடன் இந்தக் கூட்டணி நீடிக்கவில்லை. 2001-இல் அறிவிக்கப்பட்ட சட்டபூர்வ ஊதிய விகிதத்தை அமல்படுத்தும்படி செய்ய பாகிஸ்தானின் உயர்நிலை பத்திரிக்கையாளர் சங்கம் இயக்கம் நடத்தியது. போர்ப் பகுதிகளில் வேலை செய்யும் பத்திரிக்கையாளர்களின் பாதுகாப்புக்காகவும் போராடியது. இந்த ஒட்டுமொத்த கிளர்ச்சியின் ஆயுதங்களாக, புறக்கணிப்பு அல்லது கூட்டு வேலை நிறுத்தம் போன்றவை பின்பற்றப்பட்டு, ஓரளவு வெற்றியும் கிடைத்தது.

தெற்காசியாவில் உள்ள மற்றநாடுகளைப் போலன்றி, பங்களா தேசத்தில் தீவிரமான கிளர்ச்சிப் பிரச்சினை இல்லை. சிட்டகாங் மலைப் பகுதிகளிலும், தென்மேற்கு குல்னா கோட்டத்திலும் மட்டும் சிறிய அளவில் கிளர்ச்சி இருக்கிறது. இருவேறு துருவங்களாக பிரிவு பட்டுநிற்கும் அரசியல் சூழல்தான் இங்கு பூசலுக்கு அடிப்படைக் காரணம். பத்திரிக்கையாளர் அமைப்புக்கள் உள்ளிட்ட குடிமக்கள் சமூக நிறுவனங்கள் போட்டி அரசியல் கட்சிகளுக்கு விசுவாசமாக இருப்பதில் பிரிந்து நிற்கின்றன. தென்மேற்கு மாவட்டங்களைச் சேர்ந்த பத்திரிக்கையாளர்களுக்கு மிரட்டல்களும், உடலுக்கு ஊறுவிளைவிக்கப்படுவதும் முக்கிய கவலைகளாக உள்ளன. பங்களா தேசத்தின் ஆறுநிர்வாகப் பிரிவுகளில் ஒன்றான குல்னா கோட்டத்தில், பத்திரிகையாளர்களுக்கு மிகவும் ஆபத்தான பணிநிலைமைகள் ஏற்பட்டுள்ளன. ஊடகப் பணியாளர்களையும், மற்றபிரிவு மக்களையும் குறிவைத்துத் தாக்குவதும், திடீர் திடீர் எனத் தாக்குவதும் உள்ளிட்ட "பயங்கரவாதம்" என்றநடைமுறையே இங்கிருந்துதான் தொடங்கியது எனலாம். இது நாள் வரையிலும் மிரட்டல்கள் தொடர்கின்றன. இஸ்லாமியக் குழுக்களும், தீவிர இடதுசாரிக் குழுக்களும் உடைங்களுக்கு இடையே பாதுகாப்பற்றஓர் உணர்வை ஏற்படுத்தியுள்ளன.

நேபாளத்தில் கடந்த மூன்றாண்டுகளில் ஊடக அடிமைத்தனம் ஆழமாகப் பரவிக்கிடந்தது. இப்போது ஊடகச் சுதந்திரத்தின் பயன்களைப் புரிந்துகொண்டு, அதற்காகப் போராடுகின்றன. 2005 பிப்ரவரியில், மன்னர் ஞானேந்திரர் அதிகாரம் முழுவதையும் கைப்பற்றஇறுதிப் போராட்டம் நடத்தியபோது, நேபாளப் பத்திரிக்கையாளர் சம்மேளனம் அதை முதலில் கண்டித்தது, அவருடைய செயல் ஜன நாயகத்தை கவிழ்க்கும் முயற்சி என்று வர்ணித்தது. அதைத் தொடர்ந்த காலகட்டத்தில், நேபாள பத்திரிக்கையாளர் சம்மேளனத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் உள்பட பல பத்திரிக்கையாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். முழுமையான செய்தித் தணிக்கை அமல்படுத்தப்பட்டது.

2006 மார்ச் தொடங்கி, இடைவிடாத மாவோ கிளர்ச்சியாளர்களின் நெருக்குதல்களினால் மன்னராட்சி பணிந்தது. ஜன நாயக சக்திகள் ஒன்று சேர்ந்து போராடத் தொடங்கின. அந்தப் போராட்டத்தில் நேபாள பத்திரிக்கையாளர் சம்மேளனம் முன்னிலை வகித்தது. நேபாள பத்திரிக்கைச் சங்கம் (NPU) மற்றும் நேபாள பத்திரிக்கையாளர் தேசிய சங்கம் (NJUN) குறிப்பிடத்தக்க வகையில் பங்காற்றின. கடைசியில் மன்னர் தமது முழுமையான அதிகாரங்களை விட்டுக்கொடுக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டு. தேசிய சட்டப்பேரவை மீண்டும் நிலைநாட்டப்பட்டதால் ஊடகங்களுக்கு தார்மீகச் செல்வம் சேர்ந்தது. இந்தத் தார்மீகச் செல்வம் நல்ல முறையில் செலவிடப்பட்டது. நேபாள உழைக்கும் பத்திரிக்கையாளர் சட்டத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்யவைப்பதில் ஊடகச் சமூகம் வெற்றி பெற்றது. இதனால் எல்லாப் பத்திரிக்கையாளர்களுக்கும் பணிப்பாதுகாப்பும், நன்கு வரையறுக்கப்பட்ட ஊதியமும் கிடைத்தன. தொழில் திறன் வளர்ச்சிக்கு உதவிட ஊடக நிறுவனங்கள் உறுதியளித்தன. இடைக்கால தேசிய சட்டமன்றத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டமும் நிறைவேற்றப்பட்டது. இது ஜன நாயக மீட்பில் ஊடக சமூகம் ஆற்றிய பங்கை அங்கீகரிக்கும் வகையில் அமைந்தது.

2 எஸ். தேசப்பிரியா மற்றும் எஸ். ஹட்டோட்டுவா, ஸ்டடி ஆஃப் தி மீடியா இன் தி நார்த் ஈஸ்ட் ஆஃப் ஸ்ரீலங்கா, சென்ட்டர் ஃபார்பாலிஸி ஆல்ட்டர்நேட்டிவ்ஸ், இலங்கை மற்றும் இன்ட்டர்நேஷனல் மீடியா சப்போர்ட், டென்மார்க், 2003, பக்கம் 8.

இந்தச் சட்டங்கள் இருந்தபோதிலும், நேபாளத்தில் நிலவும் சாதகமற்றநிலைமைகளினால் இவை செயல்படுத்தப்படாமலே உள்ளன. ஊடகச் சுதந்திரம் தொடர்பான பிரச்சினைகளிலும், பத்திரிக்கையாளர்களின் சமூக மற்றும் தொழில் உரிமைகளிலும் புதிய அரசியல் முறைமை போதுமான கவனம் செலுத்தும்படி செய்திட ஊடகச் சமூகங்கள் திட்டமிட்டுள்ளன.

## எல்லை தாண்டிய பூசல்களின் சக்தி

தெற்காசியாவின் ஒவ்வொரு நாடுகளுக்கு உள்ளே காணும் பூசல்கள் தவிர, நாடுகளுக்கு இடையே தகராறு நிலவும் வரலாறும் உள்ளது. இதில் மிகவும் வெளிப்படையாகத் தெரிவது இந்தியாவுக்கு பாகிஸ்தானுக்கும் இடையிலான தகராறு. ஓரளவுக்கு இந்தியாவுக்கும் பங்களாதேஷ், நேபாளம், இலங்கை ஆசியவற்றுடனும் தகராறு உள்ளது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே காஷ்மீர் தொடர்பாகவும், எல்லை தாண்டிய பயங்கரவாதம் தொடர்பான பரஸ்பர கவலைகளினாலும் தகராறு ஏற்படுகிறது. ஆப்கானிஸ்தானுடன் பாகிஸ்தானுக்கு பொதுஎல்லை இருப்பது தகராறுக்குக் காரணமாகிறது. இவை இரண்டுமே ஒன்று மற்றதை அரசியல் உறுதிப்பாட்டை நிலைகுலைய வைக்கிறது என்று சந்தேகப்படுகின்றன. இந்தப் போர்கள் பலவும் "நாடு கடந்த மற்றும் உலகளாவிய விளைவுகளைக்" கொண்டுள்ளன. இந்தத் தகராறுகள் ஏற்படுவதற்கு பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூகம் என்று பற்பல காரணங்கள் உள்ளன. வரலாற்றுக் காரணங்களும் இதில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. குடும்பங்களும், இனங்களும் எல்லை கடந்து வசிக்கும் வரலாறும் பூசல்களைத் தோற்றுவிக்கின்றன. இந்தக் காரணம், பிரிக்கப்பட்ட ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் இரு பிரிவுகளுக்கு இடையேயும், பங்களாதேஷுக்கும், இந்தியாவின் அண்டை மாநிலங்களுக்கும் இடையேயும், நேபாளத்தின் சமவெளிப்பகுதிக்கும், இந்தியாவின் பிகார் மற்றும் உத்தரப்பிரதேச மாநிலங்களின் சமவெளிப் பகுதிக்கும் இடையேயும், பாகிஸ்தானையும், ஆப்கனிஸ்தானையும் பிரிக்கும் ட்யூராண்ட் கோட்டின் இருபுறங்களிலும் வசிக்கும் பஷ்ட்டூன் பழங்குடியினருக்கு இடையேயும் வெளிப்படையாகத் தெரிகிறது.

காலனி ஆதிக்கம் அகன்றபிறகு உருவான நாட்டு அரசுகளின் "பிரதேசக் குழப்பத்தினால்" வன்முறைதோன்றுவது பற்றி அண்மையில் வெளியான ஒரு கட்டுரையில், இந்தியாவின் எல்லைகள் தெளிவற்று இருப்பதால் மூன்று வகையான தேசியக் கவலைகள் தோன்றியிருப்பதாகக் குறிப்பிடபட்டுள்ளது. சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் எல்லைகளை முறையே மக்மோகன் மற்றும் ராட்கிளிஃபன் என்றபிரிட்டிஷ் அதிகாரிகள் வரையறுத்தது தொடர்பான பிரச்சினைகள், இந்தியாவுடன் காஷ்மீர் இணைந்தது தொடர்பான பிரச்சினை இவற்றில் அடங்கும். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான வன்முறையை தோற்றுவித்தன. இந்த வன்முறைகள் எல்லைப்பகுதி நிலங்களில் நிகழ்ந்தன. அங்கு சமூகச் சார்புகளும் உறவு முறைகளும் தனித்தனி நாடுகளின் பிரதேசக் குழப்பங்களுடன் இணையவே முரண்பட்டு வன்முறை. மோதல்களாக வெடித்தன. இந்தப் பிரதேசக் குழப்பங்களால் தெற்காசியாவில், குறிப்பாக பாகிஸ்தானுடனும் பங்களாதேஷுடனும் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள கவலைகள் பற்றி சொல்லத் தேவையில்லை.

கிட்டத்தட்ட எல்லா நாடுகளிலுமே, பிரதேசம் கடந்த புறம்பான விசுவாசங்களுக்கு ஒரு சான்றாக எல்லை கடந்த தொடர்புகள் கருதப்படுகின்றன. இந்தத் தொடர்புகள், காலனி ஆதிக்கத்துக்குப் பின்பு எதிர்பார்க்கப்பட்ட தேசிய அரசுகள் மீதான விசுவாசத்தைக் குலைக்கின்றன. இதனால் சம்பந்தபட்ட சமூகக் குழுக்கள் தொடர்புடைய நாட்டின் தேசிய அரசியலில் ஒதுக்கப்படுகின்றன. இந்தச் சமூக விலக்கம், சாதிமுறையினால் விதிக்கப்படும் விலக்கத்தில் இருந்து மாறுபட்டதாகிறது. இந்தியா, நேபாளம், இலங்கை ஆகியநாடுகளில் இந்த சாதிசார்ந்த விலக்கங்கள் காணப்படுகின்றன. எல்லா நாடுகளிலும் ஊடகங்கள் அரசுமுறைவழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதாலும், எல்லை கடந்த விசுவாசங்களுக்கு ஊடகங்கள் சரிவர, செவிசாய்க்காமல் போவதாலும் போர்கள் தொடர்கின்றன.

3 வில்லியம் ஃபான் ஷெண்டல், "தி வாகா ஸிண்ட்ரோம்: டெரிட்டோரியல் ரூட்ஸ் ஆஃப் கான்டெம்ப்ரரி வயலன்ஸ் இன் சவுத் ஆசியா", அம்ரிதா பாசு மற்றும் ஸ்ரீரூபா ராய் (ஆசிரியர்கள்), வயலன்ஸ் அண்டு டெமாகிரஸி இன் இண்டியா, ஸீகல் புக்ஸ், லண்டன் மற்றும் நியுயார்க், பக்கம் 36 முதல் 82.

தண்டிக்காமல் இருக்கும் பண்புக்கு எதிராக அரசுகள் தீர்க்கமாகச் செயல்பட விரும்பாததால், பத்திரிக்கையாளர்கள் பெரும்பாலும் பாதுகாப்பாகச் செயல்படவே விரும்புகின்றனர். பேச்சு சுதந்திரம் கட்டுப்படுத்தப்படாத இடங்களில் கூட, பகைமைச் சூழலினால் ஊடகங்கள் தங்களைத் தாங்களே தணிக்கை செய்யும்படி கட்டாயப்படுத்தப்படுகின்றன. ஊடகங்கள் மீதான பாரம்பரிய சமூக மற்றும் அரசியல் விருப்பு வெறுப்புக்களால் மாறுபட்ட கருத்துக்கள் பற்றிய பொது விவாதங்களுக்கு முட்டுக்கட்டை போடப்படுகிறது. இதற்கு இரண்டு சான்றுகளாக, காஷ்மீர் நிலைமை பற்றி இந்திய ஊடங்கள் செய்தி வெளியிடும் முறையையும், இலங்கையின் போர் மற்றும் அதன் பின் விளைவுகள் பற்றிய உண்மைச் செய்திகள் வெளிடப்படுவதைத் தடுக்கும் முயற்சிகளையும் குறிப்பிடலாம். போதுமான அளவுக்கு எல்லாத்தரப்புத் தகவல்களும் கிடைக்காததால், ஜனநாயக நடைமுறைகளில் குடிமக்கள் முழுமையாக ஈடுபட முடியாமல் போகிறது. குழுமோதல்களை அமைதியான சமரச முயற்சிகள் மூலம் தீர்க்க முடியாமல் போகிறது.

## ஒற்றுமை மற்றும் போராட்டத்திற்கான உத்திகள்

பத்திரிக்கையாளர்கள் பெரும் எண்ணிக்கையில் இருக்கும்போது, அவர்கள் தங்களது உரிமைகளுக்காக கூட்டாகப் போராடும் திறன் பெரிதாக உள்ளது. ஆனால் பத்திரிக்கையாளர்களின் எண்ணிக்கை குறைவாகவும், அவர்களுக்கு இடையே தொடர்பு இல்லாமலும் இருக்கும்போது கூட்டுநடவடிக்கை வெற்றிபெறுவது இயலாமல் போகிறது. இந்தியா போன்றபரந்துவிரிந்த நாடுகளிலும், பாகிஸ்தான், நேபாளம் போன்றபெரிதும் மாறுபட்ட நில அமைப்புக்களும், பண்பாடும் உள்ள நாடுகளிலும் தேசியத் தலைநகரங்களுக்கும் பெருநகரங்களுக்கும் அப்பால் தொலை தூரப் பகுதிகளிலும், உள்ள பத்திரிக்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். கூட்டு நடவடிக்கை வெற்றிபெறவேண்டுமானால், எல்லா வட்டாரங்களிலும் உள்ள பத்திரிக்கையாளர்களுக்கும், தேசியத் தலைநகர்களிலும், பெருநகரங்களிலும் உள்ள பத்திரிக்கையாளர்களுக்கும் இடையே பயன்மிக்க தொடரமைப்பு ஏற்பட வேண்டும். இந்த நகரங்கள் கிளைகளாகச் செயல்பட்டு, அவற்றின் மூலமாகத் தகவல்களை வட்டாரங்களுக்கும், உலகளாவிய தொடரமைப்புக்களுக்கும் இடையே பரிமாறிக்கொள்ளலாம். இதனால் பயனுள்ள வகையில் உள்ளூர் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

பத்திரிக்கையாளர் சங்கங்களும், அமைப்புக்களும் உள்ளூர் நிலையில் ஊடகங்கள் செய்தி வெளியிடுவதற்கான நெறிகளை உருவாக்குவதில் முனைப்பாகப் பங்காற்றவேண்டும். இதற்கு வடகிழக்கு இந்தியாவில் உள்ள மணிப்பூரை ஒரு சான்றாகச் சொல்லலாம். அங்கு ஒன்றுக்கு ஒன்று நேர் எதிராகச் செயல்படும் பற்பல கிளர்ச்சிக்குழுக்கள் பத்திரிகையாளர்களுக்கு நெருக்குதல் கொடுத்து, மற்றகுழுக்களின் குரலை ஒலிக்க விடாமல் தடுக்கின்றன. இந்தச் சவாலை மணிப்பூர் மாநில பத்திரிக்கையாளர் சங்கம் ஏற்று, நடத்தை நெறியை உருவாக்கி, அதை விளம்பரப்படுத்தியது. இதனால் அரசு முகமைகளும், கிளர்ச்சிக் குழுக்களும் தங்களது கருத்துக்களை எந்த அளவுக்கு ஊடகங்கள் மூலமாக வெளியிடலாம் என்பதைத் தெரிவித்துவிட்டது. இந்த நடத்தை நெறி கூட்டாக ஒப்புக்கொள்ளப்பட்டதால், தனித்தனி பத்திரிக்கையாளர்களின் வலு கணிசமாக உயர்ந்தது. ஆயுதம் ஏந்திய குழுக்கள் செய்திவெளியிடுவதை தங்கள் விருப்பம் போல் திரிக்கவேண்டும் என்று விடுத்த கோரிக்கையை நிராகரிக்க முடிந்தது.

போர் பற்றிய செய்திகளைத் தெரிவிப்பதற்கான பொருத்தமான வார்த்தைகள், களத்தில் உள்ள தொழில் முறைப்பத்திரிக்கையாளர்களுக்கு பெரும் சவாலாக உள்ளது. அவர்கள் மிகவும் கவனமாக வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து செய்திகளை எழுதினாலும், அவர்கள் எதிர்நோக்கும் நிலைமைக்கு ஏற்றசொல் அடைவுகள், தொலைவு நகரங்களில் உள்ள பத்திரிக்கை அலுவலகப் பணியாளர்களால் பெரும்பாலும். சுருக்கப்படுகின்றன; தலைப்பிடப்படுகின்றன, உரிய பக்கத்தில் வெளியிடப்படுகின்றன. இந்த பத்திரிக்கை அலுவலகப் பணியாளர்கள் தெளிவற்றசொற்களைப் பொறுத்துக் கொள்வதில்லை. தெளிவான வர்ணனை இருக்கவேண்டும் என விரும்புகின்றனர். செய்தியாளர்கள் அனுப்பும் செய்திகளின் தலைப்பு பற்றியோ, அந்தச் செய்திகளுடன் வெளியிடப்படும் புகைப்படங்கள் பற்றியோ

அவர்கள் எந்தக் கருத்தும் கூறமுடியாது. அதேபோல, புகைப்படக் கலைஞர்கள் அனுப்பும் படங்களுக்குத் தரப்படும் தலைப்பு பற்றியும் அவர்கள் எதுவும் கூறமுடியாமல் போகலாம். ஒரு செய்தி நிறுவனத்துக்குள் காணப்படும் இந்த வேலைப்பகுப்பு பல சமயங்களில் போர் மண்டலங்களில் பணியாற்றும் செய்தியாளர்களுக்கும் ஊடகப் பணியாளர்களுக்கும் ஆபத்தை உண்டாக்குகிறது. அவர்கள் பெயருடன் வெளியாகும் செய்தி அறிக்கையில் இடம்பெற்றகுறிப்பிட்ட சொற்றொடர்களுக்கு விளக்கம் தருமாறு அவர்களிடம் கோரப்படுகிறது. ஆனால் அதற்கான பொறுப்போ வேறெங்கோ இருக்கிறது. இந்தச் சவாலைச் சமாளிக்கும் வகையில், தெற்காசிய நாடுகளில் உள்ள பத்திரிகையாளர் சங்கங்கள் தங்களுக்கென பொதுவான சொற்றொடர்களை உருவாக்கின. அவர்கள் எதிர் கொள்ளும் தெளிவற்ற, சிக்கலான நிலைமைகள் அனைத்தையும் அவை பிரதிபலித்தன. இந்தச் சொற்றொடர்களை உருவாக்குவதில் தலைமையிடத்தில் உள்ள செய்தி ஆசிரியர்களின் ஆதரவு தேவை. செய்தியை இறுதியாக வெளியிடும்போது இந்தச் சொற்றொடர்களை ஏற்புடைய இடுபொருளாக ஆக்குவதற்காக தலைமையிடச் செய்தி ஆசிரியர்களின் ஆதரவு அவர்களுக்குத் தேவைப்படுகிறது. போர்ப்பகுதிகளில் பணியாற்றும் பத்திரிக்கையாளர்களின் பாதுகாப்புக்கு முழு முதல் பொறுப்பு ஊடக நிறுவனங்கள் மற்றும் அவர்களின் உரிமையாளர்களைச் சார்ந்ததாக ஆக்கிட ஓர் உறுதியான நெறியை ஏற்படுத்த வேண்டும். ஆபத்து மிகுந்த பகுதிகளில் செய்திகளை முந்திக்கொண்டு முதலில் வெளியிடுவது தொடர்பான நெறியை உருவாக்குவது ஒரு கூட்டு நடவடிக்கையாகும். செய்தி சேகரித்து முதலில் வெளியிட வேண்டும் என்றஆர்வத்தினால் பத்திரிக்கையாளர்கள் அடிக்கடி அபாயங்களில் சிக்கிக்கொள்கின்றனர். ஊடக நிறுவனங்களுக்கு இடையே நிலவும் போட்டி இந்தப் போக்கை வளர்க்கிறது. செயற்கைக்கோள் தொலைக் காட்சி அலைவரிசைகளும், கேபிள் டிவி-களும் பல்கிப் பெருகிவிட்டதால் ஊடகங்களின் போட்டி அதிகரித்துவிட்டது.

ஆர்ப்பாட்ட முறைகளும் பலவகைகளாகிவிட்டன. தெருக்களில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் நிலைமாறி, ரகசியமாக, திரைமறைவு வேலைகள் மூலம் ஆதரவு திரட்டப்படுகிறது. தெரு ஆர்ப்பாட்டங்களில் அதிக அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டது. ஒரே குறிக்கோளை உடைய பல தரப்பட்ட மக்கள் அமைப்புக்களை பிரச்சினைகள் ஈர்த்தன. இதனால் பத்திரிக்கையாளர்களுக்குப் பலபரிமாண அச்சுறுத்தல்கள் தீவிரமாக ஏற்பட்டன. மொத்தமாக வேலை நிறுத்தம் செய்து ஊடகங்களை மூடும் நிலை ஏற்பட்டது. காஷ்மீரிலும், மணிப்பூரிலும் நிகழ்ந்ததை இதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். காஷ்மீரில் ஊடகங்கள் விரும்பி மூடப்படவில்லை. அவை கட்டாயப்படுத்தப்பட்டன. ஆனால் ஊடகங்கள் ஒரு தொழில் நிறுவனம்போல மிகவும் ஒழுங்காகச் செயல்படும்போது, பலர் முடிவெடுக்க வேண்டும் என்றநிலை ஏற்படும்போது, இந்த முழு வேலை நிறுத்தம் இயலாமல் போகிறது. ஆதரவு திரட்டும் முயற்சிகளுக்கு அரசியல் ஒரு மூலதனமாக இருக்கலாம். அரசியலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களுக்குப் பதிலளிக்கக் கடமைப் பட்டவர்கள் என்பதால், அவர்கள் ஊடகங்களிடையே தங்களுக்கு நன்மதிப்பைத் தேடுவதற்கு ஆர்வமாக இருக்கலாம். ஆனால் இது பத்திரிக்கைத் தொழிலில் ஒரு கூட்டமைப்பை விட, தனி நபர்களுக்கே ஆதாயம் தருவதாக இருக்கும். எனவே, தலைவர்களும், சான்று பெற்றபேச்சுவார்த்தைப் பிரதிநிதிகளும் முற்றிலும் வெளிப்படையான ஒரு கொள்கையைப் பின்பற்றவேண்டியது அவசியமாகிறது. சோதனைகள் மிகுந்த காலகட்டத்தில் சர்வதேச ஆதரவும், தொடரமைப்பும் பேருதவியாக இருக்கும் என்பதை தெற்காசிய ஊடக ஒருமைப்பாட்டுத் தொடரமைப்பின் (SAMSN) அனுபவம் காட்டுகிறது. பத்திரிக்கையாளர் சங்கங்களின் இந்த பரந்துவிரிந்த கூட்டமைப்பு, பத்திரிகைச் சுதந்திரத்திற்காகப் போராடும் அமைப்புக்களுடன் சேர்ந்து 2002-ஆம் ஆண்டில் இருந்து பயனுள்ள முறையில் செயல்பட்டுவருகிறது.

## ஆய்வுமுறை

நெருக்கடி மற்றும் போர்நிலைமைகளில் சர்வதேசப் பத்திரிகையாளர் சம்மேளனத்தின் சார்பு அமைப்புக்களும், கூட்டாளிகளும் மேற்கொண்ட குறுக்கீடுகள் பற்றியும், நடவடிக்கைகள் பற்றியும் இந்தத் திட்டப்பணியில் விவரிக்கப்படுகிறது. போர் நிலைமைகள் (நேரடித் தாக்குதல், எதிரெதிர் துப்பாக்கிச் சூடு, குறி வைத்து மிரட்டப்படுவது மற்றும் துன்புறுத்தப்படுவது உள்பட) பற்றி செய்திவெளியிடும்போது சிக்கிக்கொண்ட பத்திரிக்கையாளர்களின் எதிர்வினைகள்; போர் முதற்கொண்டு ராணுவப்புரட்சி வரையும், ஜனநாயக விரோதமாக நிறுவப்பட்ட அரசுகளை அகற்றநடைபெறும் மக்கள் கலிகங்கள் வரையும் போர்நிலைமைகள் பற்றி செய்தி வெளியிடும்போது ஆதரவாகச் செயல்படுவது போன்றநடவடிக்கைகள் இவற்றில் அடங்கும். இப்படிபட்ட நிலைமைகளில், பத்திரிக்கையாளர் அமைப்புக்கள் நடத்தும் பயிற்சி மற்றும் இதர நடவடிக்கைகளிலும், உள்ளூர் நடத்தைநெறி உருவாக்குவதிலும் போர்பற்றிய நுட்பமான உணர்வுகளைச் சேர்ப்பது தொடர்பான பிரச்சினைகள் இந்த ஆய்வில் தொகுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பிரச்சினையிலும் சம்பந்தபட்ட முக்கியமான நபர்களுடன் தொடர்பு கொண்டும், தொடர்புடைய மற்றதரப்பினரைப் பேட்டி கண்டும் முறைசாராத ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. ஐந்து நாடுகளில் தெற்காசிய ஊடக ஒருமைப்பாட்டுத் தொடரமைப்பின் (SAMSN) தற்போதுள்ள கூட்டாளி அமைப்புக்களுடன் முறைப்படியும், முறைசாராமலும் தொடர்புகளை ஏற்படுத்தி தகவல்கள் திரட்டப்பட்டன. வன்செயல்கள் மற்றும் துன்புறுத்தல்களினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பத்திரிக்கையாளர்களுடன் சர்வதேசப் பத்திரிக்கையாளர் சம்மேளனம் இதற்கு முன் கொண்டிருந்த தொடர்புகள் புதுப்பிக்கப்பட்டு, தொலைவில் இருந்து பின்னோக்கிய தகவல்கள் பெறப்பட்டன.

இந்தியாவிலும் பங்களா தேசத்திலும் குழு விவாதங்கள் நடத்தப்பட்டன. இலங்கையில், பத்திரிக்கையாளர்களின் கூட்டுநடவடிக்கைகளுக்கு எதிரான சூழல் நிலவுவதால், குழு விவாதங்களை நடத்துவதற்குப் பதிலாக, இலங்கையில் இருப்பவர்களுடனும், நாடு கடந்து வசிப்பவர்களுடனும் தனித்தனியாக ரகசியமாக விசாரணைகள் நடத்தப்பட்டன.

நேபாளத்திலும், பாகிஸ்தானிலும் ஆய்வாளர் பல இடங்களிலும் பயணம் செய்து, பத்திரிகைச் சுதந்திரத்திற்காகப் போராடும் மற்றும் போர்நிலைமைகள் ஏற்படுத்தும் குறிப்பிான சவால்கள் பற்றி மதிப்பு வாய்ந்த கண்ணோட்டங்களைக் கொண்டுள்ள பத்திரிக்கையாளர்களுடன் பலவகையான பேட்டிகளை நடத்தினர். 2008 மற்றும் 2009 செப்டம்பரில் நடந்த வருடாந்திர SAMSN மாநாடுகள் போன்றஇதர சர்வதேச பத்திரிக்கையாளர் சம்மேளனத் திட்டப்பணிகள் போன்றநடவடிக்கைகளில் பங்கேற்றவர்களின் இந்த அறிக்கை தொடர்பான கருத்துக்கள் திட்டப்பட்டன.

இந்த ஆய்வின் மூலம் பெறப்பட்ட தகவல்கள் நாடுவாரியாகத் தொகுக்கப்பட்டு 2010 ஜுலையில் நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் நடைபெற்றவட்டார விவாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த விவாதத்தில் எல்லா ஐந்து நாடுகளையும் சேர்ந்த மூத்த ஊடகப் பிரதிநிதிகள் பங்கேற்றனர். இந்த வட்டமேசை விவாதத்தில் ஊடகங்களின் பங்கு, பத்திரிக்கையாளர்கள் மற்றும் பத்திரிக்கையாளர் அமைப்புக்களின் பங்கு போர்நிலைமைகளில் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றியும், தெற்காசிய நாடுகளுக்க இடையேயும், அவை ஒவ்வொன்றிற்கும் உள்ளேயும் போர்பூசல்களைத் தீர்ப்பதில் இவர்கள் ஆற்றிய பங்கு பற்றியும் விவாதிக்கப்பட்டது. போர்நிலைமைகளைப் புரிந்து கொண்டு, அவற்றைத் தீர்ப்பதற்காக நாட்டிற்கு உள்ளேயும், வட்டாரம் முழுவதும் ஊடகச் சமூகங்கள் ஒன்று சேர்ந்து பயன் படுத்திய நடவடிக்கைகள், இயக்கங்கள் மற்றும் வாதாடும் உத்திகள் விவாதத்தில் கண்டறியப் பட்டன. இந்த விவாதத்தில் பங்கேற்றவர்கள், வெவ்வேறு நிலைமைகளில் எந்தெந்த உத்திகள் பயன்தரக் கூடியவை என்பதையும், எதிர்காலத்தில் நிலைமையை மேம்படுத்த, அல்லது பூசலை அமைதியாகத் தீர்க்க என்ன செய்யலாம் என்பதையும் மதிப்பிட்டனர். இந்த நடவடிக்கைகள் மற்றும் கலந்தாலோசனைகளின் முடிவுகள் இந்த அறிக்கையில் உள்ளன.



நாடாளுமன்றம் எதிரெதிர் கொள்கைகளைத் தெரிவிக்கும் கட்டபூர்வமான அரங்கமாகத் தெரியவில்லை. அந்தக் கொள்கைகள் ஊடகங்கள் மூலமாகவும், தெருக்களிலும் அதிகம் வெளியிடப்படுகின்றன.
*(புகைப்படம்: சுகுமார் முரளிதரன்)*

# பங்களாதேஷ்

## ஊடகங்களின் பிரிவினைக்கு உணவளிக்கும் அரசியல் பகைமைகள்

பங்களாதேஷில் 2009-இல் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஆட்சிக்கு வந்ததில் இருந்து, எதிர்வரும் ஆண்டுகளில் அரசியலை வழி நடத்துவதற்காக நிலையான கருத்தொற்றுமையை மீண்டும் உருவாக்கும் முயற்சிகள் தொடங்கின. இந்தப் பணி இடர்கள் மிகுந்ததாக இருந்தது. முக்கிய எதிர்கட்சியான பங்களாதேஷ் தேசியக் கட்சி (BNP), தேர்தலில் தனது முக்கிய எதிரியான அவாமிலீகிற்கு சாதகமாகத் தில்லு முல்லுகள் நடந்தன என்றுகூறி, புதிதாக இயங்கத் தொடங்கிய நாடாளுமன்றக் கூட்டத்திலேயே அதைப் புறக்கணிப்பதாக அறிவித்து விட்டது.

நாட்டின் முக்கிய அரசியல் கட்சிகளுக்கு இடையே அடிப்படை விதிகள் பற்றிய உடன்பாடு ஏற்படாததால், ஊடகங்கள் மீண்டும் கசப்பான ஒரவஞ்சனை நிலைமைக் குத்தள்ளப்பட்டன, மற்றஎல்லாவற்றையும் விட, ஊடகங்களின் உரிமைகள் பற்றிய கோட் பாட்டை உருவாக்க பங்களாதேஷ் தவறிய தற்கு இது முக்கிய காரணமாகிவிட்டது.

1971 தேசிய விடுதலைப் போரின் தலைவரான ஷேக் முஜிவுர் ரஹ்மான் கொலையில், 1977-இல் தொடங்கி இருபதாண்டுகள் வழக்கு விசாரணைக்குப் பின்னர் தண்டிக்கப்பட்ட ஒன்பது பேர்களில் ஐந்து பேர் 2010 ஜனவரியில் தூக்கிலிடப்பட்டதைத் தொடர்ந்து, மிக மோசமான அரசியல் முரண்பாடுகள் முளைவிடத் தொடங்கி விட்டன. மதசார்பின்மை மற்றும் ஜனநாயகம் என்னும் அடிப்படை மாண்புகளை உறுதிப்படுத்துவதற்காகவே இந்த மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது என்று ஆளுங்கட்சியான ஷேக் முஜிப் தோற்றுவித்த அவாமிலீக் நியாயப்படுத்திப் பேசியது. எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியக் கட்சி – BNP மௌனமாக இருந்தது. தனது ஆட்சியினால் பாதுகாக்கப்பட்ட தனிநபர்கள் தூக்கிலிடப்பட்டது தனக்கு ஏற்புடையதல்ல என்பதை இதன் மூலம் அது தெளிவுபடுத்திவிட்டது.

இந்த மரணதண்டனை நிறைவேற்றம் சட்டத்தின் ஆட்சியில் நாட்டிற்குள்ள நம்பிக்கையை நிலைநாட்டுகிறது என்பதால் ஊடகங்கள் வரவேற்றன. “முஜிப் அரசு கொலை வெறித் தாக்குதல் மூலம் கவிழ்க்கப்பட்டது பற்றிய அரசியல் விவாதங்கள், தண்டிக்கப் பட்டவர்களின் சடலங்களுடன் சேர்த்து புதைக்கப்பட மாட்டாது” என்று நியு ஏஜ் தலையங்கம் எழுதியது. “இவ்வாறு நிகழ வேண்டுமானால், அரசியல் கொலைக்கு வழிவகுத்த அரசியல் நிகழ்வுகள், அவற்றின் அரசியல் மற்றும் கலாச்சார விளைவுகள், 34 ஆண்டுகளுக்கு முன்பு இந்த அசட்டுததுணிச்சல் அரசியலின் போதைமயக்கத்தில் இருந்து நமது வரலாற்றை விடுவிப்பதற்கான வழிகள் ஆகியன பற்றி முழுமையான விவாதங்கள், தகவலறிந்த கலந்தாலோசனைகள் நடத்தப்பட வேண்டும்” என்று அது கூறியது. பங்களாதேஷில் மிக அதிகம் விற்பனையாகும் “டெய்லி ஸ்டார்” என்ற ஆங்கில நாளேடு மிகவும் உருப்படியான ஒரு மதிப்பீட்டைத் தெரிவித்தது. “சட்டத்தின் ஆட்சிதான் பெரிது, நீதிதான் முக்கியமானது, குற்றம் இழைத்தவர்கள் தப்பித்து விடலாம் என எதிர்பார்க்க முடியாது என்கிற மகத்தான ஒரு கருத்து நாட்டில் மீண்டும் திரும்ப வேண்டும். நீதி மீடகப்படுவதை இப்போது சட்டநடைமுறைகள் உறுதிப்படுத்திவிட்டதால் குடிமக்கள் அனைவரும் கட்சி சார்பு மற்றும் அரசியல் கருத்து வேறுபாடின்றி, மேம்பட்ட சமத்துவ எதிர்காலத்தை நோக்கிய நமது நெடும் பயணத்திற்குத் தடங்கலாக இருந்த இருண்ட நிழல்கள் பற்றி சிந்திக்க வேண்டிய வேளை வந்துவட்டது” என்று அது எழுதியது.

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்காக பங்களாதேசத்தின் ஊடகத் துறையினருடன் நடத்திய கலந்துரையாடலின் போது, பெருமளவு மக்களைச் சென்றடையும் வங்க மொழிப் பத்திரிக்கைகள் ஐந்துபேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதை அங்கீகரித்தது தெரியவந்தது. ஜமாத்-இ இஸ்லாமி என்னும் வலதுசாரி மதவாதக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள சங்ராம் என்ற பத்திரிக்கையும், அவாமிலீகிற்கு எதிரான நிலை எப்போதும் எடுத்துள்ள அமர்தேஷ் என்ற பத்திரிக்கையும் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருந்தன. ஆளும்கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் இடையிலான மிகமோசமான போட்டிக்குக் களமாக அமர்தேஷ், ஆகிவிட்டது. இதனால் இந்தப் பத்திரிக்கை திடீரென மூடப்பட்டு, அதன் செய்தி ஆசிரியர் கைது செய்யப்பட்டார். இந்த வழக்குபற்றி மேலும் அதிகத் தகவல்கள் பின்னர் தெரிவிக்கப்படும் (பார்க்க பெட்டிச் செய்தி). பங்களாதேசத்தில் எவ்வாறு ஊடகங்கள் மறைமுகப் போர்க்களமாக மாறிவிட்டன என்பதையும், சட்டமன்றங்களும் குடிமக்கள் அமைப்புக்களும் நியாயமான அரசியல் கருத்துமோதல்களுக்கு உரிய மன்றங்களாக

1 தலையங்கம்: நியூ ஏஜ், ஜனவரி 29, 2010, எடுக்கப்பட்டது : http://www.newagebd.com/2010/jan/29/edit.html#1.

2 தலையங்கம், தி டெய்லி ஸ்டார், ஜனவரி 29, 2010, எடுக்கப்பட்டது : http://www.thedailystar.net/newDesign/news-details.php?nid=123985.

உருவெடுக்கும் வளாய்ப்பு சிறிது கூட இல்லை என்பதையும் இது எடுத்துக் காட்டுகிறது. பங்களாதேசத்தில் நம்பகமான, துல்லியமான தகவல்களைப் பெறுவதற்குரிய மன்றமாக ஊடகங்களைப் பேணிக்காப்பதற்கு பத்திரிகையாளக்ள் போராட வேண்டியுள்ளது. எவ்வளவோ தடங்கல்கள் இருந்த போதிலும் இந்த முயற்சியில் பத்திரிக்கையாளர்கள் கணிசமாக வெற்றி பெற்றுள்ளனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற சிலவாரங்களிலேயே தலைநகர் தாக்காவில் துணைராணுவப் படையான பங்களாதேஷ் ரைஃபிள்ஸ் படையின் பாசறையில் கலகம் மூண்டது. நாட்டின் எல்லைகளைக் காக்கும் பொறுப்பு தரப்பட்ட இந்தப்படை கலகத்தில் ஈடுபட்டதால் புதிதாகப் பொறுப்பேற்ற அரசைக் கவிழ்க்கும் அபாயம் ஏற்பட்டது. தேர்தல் ஜனநாயகம் என்னும் மையக் கோட்பாட்டில் ராணுவத்திற்கும், சிவில் அமைப்புக்களுக்கும் உறுதியான பிடிப்பு இல்லை என்பதையும் இது எடுத்துக்காட்டியது. இந்தச் சம்பவத்திற்கு முதல் எதிர்வினையாக கலகம் தொடர்பான காட்சிப்படங்களையும், இதர பொருட்களையும் பரிமாறும் யூடியுப் வீடியோ வலைதளத்தையும், பல பிளாக் தளங்களையும் அரசு ஒடுக்கியது. பங்களாதேஷில் இணைய தளங்களை அணுகும் வாய்ப்பு மறுக்கப்பட்டது. எனினும், இந்த முயற்சி முழுவெற்றி பெறவில்லை. பங்களாதேசத்திற்கு வெளியே இந்த தளங்கள் கிடைத்தன. தகவல் பெறவேண்டும் என்ற மன உறுதியுடன் இருப்பவர்களுக்கு போதுமான வழிகளை இணைய தளம் திறந்துவைத்தது.

கலகத்தின்போதும் அதன்பிறகும் பங்களாதேசத்தில் முக்கியமான ஊடகங்கள் மிகமோசமான இடையூறுகளில் இருந்து தப்பித்துவிட்டன. கலகக்காரர்கள் இழைத்த அட்டூழியங்களின் அளவு தெளிவாகத் தெரிந்ததும், அனைவரும் கலகக்காரர்களைத் தண்டிக்கும் அரசின் முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தது இதற்கு ஓரளவு காரணம். 2010 செப்டம்பர் நடுவில் சிற்சில சம்பவங்களில் ஈடுபட்ட ஸியல்ஹெட் நகரின் கலகக் காரர்களுக்கு தீர்ப்பு எழுதப்பட்டது. தாக்கா கலகக்காரக்கள் தொடர்பான வழக்கு விசாரணையில் குற்றங்களைப் பதிவு செய்யும் நிலை வந்தது. அவர்களுக்கு மிகவும் கடுமையான தண்டனை வழங்கப்படலாம் என்ற அச்சம் பரவியது மக்களாட்சி திரும்பியதால் ஊடகச் சுதந்திரத்தில் பெருத்த வித்தியாசம் ஏற்படுமா என்பதும் சந்தேகமாகவே இருந்தது. 2008-ஆம் ஆண்டில் ஊடகச் சுதந்திரத்திற்கு எதிராக, ஆள்கடத்தல்கள் முதல் மிரட்டல்கள் மற்றும் சட்டநடவடிக்கைகள் வரை, குறைகூறி செய்தி வெளியிட விடாமல் வாயடைப்பதற்காக 115 அத்துமீறல்கள் நிகழ்ந்தன என்று அதிகார் என்னும் மனித உரிமைகள் அமைப்பு பட்டியலிட்டது. (4) 2009-இல், தேர்ந்தெடுக்கப் பட்ட அரசு பதவிக்கு வந்த ஓராண்டில், ஊடகச் சுதந்திரத்திற்கு எதிராக இதேபோன்ற 266 தாக்குதல்கல் நிகழ்ந்ததாக இதே மனித உரிமைகள் அமைப்பு கூறியது.

நெருக்கடி நிலை ஆட்சியின் போது குறைகூறி செய்திவெளியிடுவோருக்கு எண்ணற்ற இடையூறுகள் தரப்பட்டதால், 2008-ஆம் ஆண்டில் நிகழ்ந்தவை பற்றிய தகவல்கள் குறைவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கலாம் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். 2008 அறிக்கையில் அதிகார் அமைப்பு குறிப்பிட்டதைப் போல, "2008-ஆம் ஆண்டு முழுவதிலும் பத்திரிக்கைகள் மற்றும் மின்னணு ஊடகங்கள் மீது" வெளிப்படையாகவும் மறைமுகமாகவும்" கட்டுப்பாடுகள் தொடர்ந்து விதிக்கப்பட்டன. உரிய தகவல்கள் வெளியே வராமல் ஊடக அடக்கு முறையின் உண்மையான அளவை மதிப்பிட முடியாமல் இந்த பல்வேறு தடங்கல்கள் பார்த்துக் கொண்டன. மக்களாட்சி ஏற்பட்டபிறகு ஒட்டுமொத்த மனித உரிமைகள் நிலை மேம்பட்டுவிட்டது என்பதை நம்புவதற்கு அடிப்படை இல்லாமல் போய்விட்டது.

2008-இல் நீதிக்குப் புறம்பான 149 கொலைகள் நிகழ்ந்ததாக அதிகார் அமைப்பு குறிப்பிடுகிறது. 2009-இல் நிலைமை இதை விட மோசம். நீதிக்குப் புறம்பாக 154 கொலைகள் நிகழ்த்தப்பட்டதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இங்கும், 2008-இல் தகவல் சூழல் முற்றிலும் வெளிப்படையாக இல்லை என்பதைப் பதிவுசெய்தாக வேண்டும். இதனால் அந்தப் புள்ளிவிவரங்களை 2009-ஆம் ஆண்டின் தகவல்களுடன் ஒப்பிட முடியாது. எனினும், ஊடகச் செய்தி வெளியீடு தொடர்பான நீதிக்குப் புறம்பான கொலைகள் நிகழ்ந்தன என்பதே கவலைதரக் கூடியது.

தெற்காசியாவின் பெரும்பாலான நாடுகளைப் போல, பங்களாதேசத்திலும் கடந்த இருபதாண்டுகளில் ஊடடகங்கள் வெகுவேகமாக வளர்ந்துள்ளன. ஆயினும் இந்த வளர்ச்சி சமமானதாக இல்லை. அச்சு ஊகங்கள் மக்களைச் சென்றடைவதற்கும் அவற்றின் வளர்ச்சி வாய்ப்புக்கும் பல தடங்கல்கள் இருந்தன. இதற்கு விளம்பரம் மூலம் வருமானம் கிடைப்பதும், எழுத்தறிவு குறைவாக இருப்பதும் ஒரு காரணம். மின்னணு ஊடகங்கள் வளர்ந்தாலும் அவை கேளிக்கையில் மட்டுமே கவனம் செலுத்தின. வானொலிக்குப் பல இடைஞ்சலான விதிமுறைகள் உள்ளன, சமூகவானொலிக் கொள்கை 2008-இன் தொடக்கத்தில் அறிவிக்கப்பட்டது. ஆனால் தயக்கத்துடனே செயல் படுத்தப்படுகிறது.

## நெருக்கடிநிலையும் அதன்பின்னரும்

இந்த அறிக்கையுடன் தொடர்புடைய மிக முக்கியமான ஒரு நிகழ்வு, உடனடி அக்கறை உள்ள காலகட்டத்திற்கு அப்பால் நிகழ்ந்தது. ஷேக் முஜிப் படுகொலையைத் தொடர்ந்து நீண்ட நெடுங்காலம் ராணுவ ஆதிக்கத்திற்குப் பிறகு மக்களாட்சி ஏற்பட்ட மூன்றாண்டுகளில் 1994-இல் பங்களாதேஷ் பத்திரிகையாளர் ஃபெடரல் யூனியன் (BFVJ) பிளவுபட்டது. இரு பிரிவுகளுமே தங்களையே பிரதான சங்கமாகக் கூறிக் கொண்டன. நாட்டின் முக்கியமான இரண்டும் இருதுருவங்களாகப் பிரிந்து நின்றதால் இந்தப் பிளவு இணைக்கப்படவே இல்லை.

2001-இல் நடைபெற்ற தேசியத் தேர்தலில் ஓர் அரசியல் கட்சி உறுதியான வெற்றி பெற்றதும். பங்களாதேசத்தின் மதச் சிறுபான்மையினருக்கு எதிராகவும், மதஅரசியலில் நடுநிலை வகித்தவர்களுக்கு எதிராகவும் திட்டமிட்ட தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அந்தக் காலகட்டத்தில் அவாமிலீகிற்கும், பங்களாதேஷ் தேசியக் கட்சிக்கும் (BNP)இடையிலான மோதல் முற்றி, பெரிதாக விரிந்துவிட்டது நாட்டின் நலனுக்காக அண்டை நாடுகளுடனும், உலகுடனும் எவ்வாறு தொடர்பு கொள்வது என்கிற அளவுக்கு இந்த மோதல் முற்றியது.

2006-இல் மற்றொரு சுற்றுத் தேர்தல் நடைபெற வேண்டிய நிலையில், அரசியல் வன்முறை தெருக்களில் வெடித்தது. ஆட்சியில் இருக்கும் அரசு சுதந்திரமான தேர்தலை நடத்தமுடியுமா என்பது பிரச்சினையாக உருவெடுத்தது. பங்களாதேசத்தின் சட்டப்படி, அடுத்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்பு நாட்டு விவகாரங்களை ஒரு பராமரிப்பு அரசுதான் நடத்த வேண்டும். ஆனால் தேசியக் கட்சிகளிடையே பரஸ்பர நம்பிக்கை குலைந்துபோய், தேசிய நிறுவனங்கள் பற்றி மக்களிடையே நம்பிக்கை இல்லாமல் போனதால், ஜனநாயக நடைமுறை முற்றிலுமாக நிறுத்திவைக்கப்பட்டது. நெருக்கடி நிலை ஆட்சி பிறப்பிக்கப்பட்டது. இந்த ஆட்சியின் முன்னிலையில் அரசு அதிகாரிகள் சிலர் இருந்தனர். ஆனால் உண்மையில், ஆயுதப்படைகளிடம்தான் அதிகாரம் இருந்தது.

“நெருக்கடி நிலை” பிறப்பிக்கப்பட்டதும் உடனடியாக செய்தி இருட்டடிப்பு செய்யப்பட்டது. அடுத்த சில நாட்களில் புதிதாக உருவாக்கப்பட்ட பராமரிப்பு அரசின் அதிகாரிகளுக்கும் பத்திரிகை

3 இவையும், தொடர்புடைய இதர நிகழ்வுகளும் IFJ-யின் பிரஸ் ஃபீரிடம் ஃபார் சவுத் ஆசியா கட்டுரையில் உள்ளன, மே 2009, கிடைப்பது: http://asiapacific.ifj.org/assets/docs/082/145/d084a52-925dc91.pdf.

4 2008-இல் பங்களாதேஷில் மனித உரிமைகள் பற்றிய விவரம் அதிகார் அறிக்கையின் 36-ம் எண் பக்கத்தில் உள்ளது: http://www.odhikar.org/report/pdf/hr_report_2008.pdf.

5 2009-இல் பங்களாதேஷில் மனித உரிமைகள் பற்றிய விவரம் அதிகார் கமிட்டியின் 27-ம் பக்கத்தில் உள்ளது: http://www.odhikar.org/documents/2009/English_report/HRR_%202009.pdf



நெருக்கடிநிலை ஆட்சி எதிர்க்கருத்து உள்ளவர்களை கடுமையாக ஒடுக்கியது. ஆனால் பத்திகையாளர்கள் ஒன்றுபட்டு தங்களுடைய நியாயமான துயரங்களை தெருக்களில் எடுத்துச் சென்று போராடினார்கள் *(புகைப்படம்: டிரிக் நியூஸ்)*

பாதிப்பு பெரிதாக இல்லை. எனினும், ஊடகங்கள் எச்சரிக்கையோடு இருந்தன.

புதிய நிர்வாகத்திற்கு எதிரான சவால்களின் முதலாவது அறிகுறியாக 2007 ஆகஸ்டில் தாக்கா பல்கலைக் கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதுபற்றிய அரசின் குரல் கடுமையானதாக இருந்தது. அந்த ஆர்ப்பாட்டம் பற்றிய செய்திகளை வெளியிட்ட போது, "நெருக்கடி நிலைச் சூழல்" பற்றிய கண்டிப்பான நினைவூட்டலை அரசு வெளியிட்டது. ஊடகங்கள் செய்திவெளியிட்டதால்தான் ஆர்ப்பாட்டம் வன்முறையாக மாறியது என்று வெளிப்படையாக நிர்வாகம் பேசியது. கலகம் பரவவே, நாட்டின் ஆறு நிர்வாகக் கோட்டங்களில் உள்ள நகரங்களில் ஊரடங்கு உத்தரவை நிர்வாகம் பிறப்பித்தது. அப்போது அதிபரின் செய்தி ஆலோசகராக இருந்த மெய்னுல் ஹொசைன் பங்களாதேஷின் முன்னணி பத்திரிக்கை ஆசிரியர்கள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களின் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, அவர்களை "பொறுப்புணர்வோடும். நிலைமையை உணர்ந்தும்" செய்தி வெளியிடும்படி

ஆசிரியர்கள் மற்றும் மூத்த பத்திரிக்கையாளர்களுக்கும் இடையே தொடர்ச்சியாகப் பல சந்திப்புக்கள் நடை பெற்றன. அதன்பின்னர் செய்திகளை வெளியிடுவதன் மீதான தடை தளர்த்தப்பட்டது. "உண்மையான" செய்திகளை வெளியிடும்படி வெளிப்படையான அனுமதி தரப்பட்டது. தொலைக்காட்சி அலைவரிசைகள் மீண்டும் செய்தி நிகழ்ச்சிகளைக் காட்டத் தொடங்கின, செய்தி ஏடுகள் செய்திக்கதைகளை வெளியிட்டன எனினும், அவை ஓரளவு கவனத்தோடு, சுயதணிக்கையுடன் செய்திகளை வெளியிட்டன. நாடாளுமன்றம் முடக்கப்பட்டதால், பொது மக்களின் விவாதமன்றமாக ஊடகங்கள் செயல் படவேண்டும் என பங்களாதேஷ் ராணுவத் தலைவரும், பிரதமருக்குரிய அதிகாரங்களுடன் செயல்பட்ட அதிபரின் ஆலோசகரும் ஒவ்வொரு தடவையும் வலியுறுத்தினார்கள். எனினும், நெருக்கடி நிலை அரசு தனது முதல் நடவடிக்கையாக ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் ஒரு தனிப்பிரிவை ஏற்படுத்தியது. செய்தி ஏடுகளின் விமர்சிக்கும் வரம்புகள் பற்றி ஊடகங்களுக்கு எழுதப்படாத அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. ஒலி-ஒளிபரப்பு ஊடகங்கள் நேரடி விவாத நிகழ்ச்சிகளில் எந்தெந்த விஷயங்களைப் பற்றிப் பேசலாம் என்றும், இந்த நிகழ்ச்சிகளுக்கு யார் யாரை அழைக்கலாம் என்றும் அடிக்கடி குறிப்பான எழுத்தாணைகள் பிறப்பிக்கப் பட்டன.

இந்தக் காலகட்டத்தில், நெருக்கடி நிலை ஆட்சியை ஆதரிக்கும்படி ஊடகங்களைக் கேட்டுக் கொள்ளும் அறிவுறுத்தல்களை நிர்வாகம் அடிக்கடி அனுப்பிக் கொண்டே இருந்தது. 2007 ஏப்ரலில் தணிக்கை முறையை அரசு மேலும் ஒருபடி உயர்த்தியது. குறிப்பாக அரசு அதிகாரிகள், வியாபாரிகள், தொழில்முறையாளர்கள், அறிஞர்கள், அரசியல்வாதிகள் ஆகியோருக்கு எதிராக கெட்டநோக்குடைய, துன்புறுத்தும் அல்லது திசைதிருப்பும் செய்திகளை வெளியிடவோ, ஒலி-ஒளிபரப்பவோ வேண்டாம் என ஊடகங்களைக் கோரும் கடிதங்கள் அனுப்பப்பட்டன. "அரசியல்சார்பற்ற, ஆதாரபூர்வமான செய்திகளை செய்திக் கட்டுரைகளை, விவாதங்களை, அங்கத நிகழ்ச்சிகளை, கார்ட்டூன்களை அதிகக் கவனத்துடன் வெளியிட்டு ஒலி-ஒளிபரப்பி மின்னணு ஊடகங்களும், அச்சு ஊடகங்களும் ஆக்கப்பூர்வமான பங்காற்ற வேண்டும்" என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. பத்திரிக்கைகள் மீது புதிய ஆட்சி தனது அதிகாரத்தை எந்த அளவுக்கு செலுத்தத் தயாராக இருந்தது என்பதை இது காட்டவில்லை. மேலும், நெருக்கடிநிலை அரசு என்ன ஆயுதங்களைப் பயன்படுத்தும் என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. இந்தக் காரணங்களுக்காக, அறிவுறுத்தல்களின்

வற்புறுத்தினார். எந்த வகையிலும் செய்தித் தணிக்கை கொண்டுவர அரசு விரும்பவில்லை, ஆனாலும் அவ்வாறு செய்ய அரசுக்கு அதிகாரம் உள்ளது என்று அவர் கூறினார். இந்தக் கட்டளையை விமர்சித்து சில பத்திரிக்கைகள் வெளியிட்டன. ஆனால் நிச்சயமற்ற குழப்பமான நிலைமை நிலவியதாலும், முந்தைய ஆண்டுகளின் கசப்பான சச்சரவுகள் இல்லாத, புதிய கருத்தொற்றுமை அரசியலை ஏற்படுத்த நெருக்கடி நிலை நிர்வாகம் முனைகிறது என்ற பொதுவான கருத்து நிலவியதாலும் ஊடகங்கள் விரோதம் பாராட்டவில்லை.

2008 டிசம்பரில் நெருக்கடி நிலை தளர்த்தப் பட்டவரையிலும் பதற்றம் அடியோடிக்கிடந்தது, 2008 டிசம்பர் 5 அன்று, மிசசம் சொச்சம் நெருக்கடி நிலை விதிமுறைகள் நீக்கப்பட்ட போது, பங்களாதேசத்தின் முன்னணி ஆங்கிலப் பத்திரிக்கையான நியு ஏஜ் தனது தலையங்கத்தில், "பொதுவாக செய்தி ஊடகங்களை எதிர் நோக்கிய குறுக்கீடுகளும், துன்புறுத்தல்களும், குறிப்பாக செய்தியாளர்களுக்குத் தரப்பட்ட தொந்தரவுகளும் நெருக்கடி நிலை நிர்வாகத்தில் முந்தைய 15 ஆண்டுகளில் இருந்ததைவிட அதிகமாகவே இருந்தன" என்று எழுதியது.

## மோசமான நிகழ்வுகள் பற்றிய சுருக்கமான விவரம்

அரசியல் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது பற்றியும். ஹடகங்களில் விமர்சிப்பதன் வரம்புகள் குறித்தும் கருத்தொற்றுமை இல்லாவிட்டால் பத்திரிகைத் துறைக்கு என்ன அபாயங்கள் ஏற்படும் என்பதைக் காட்டும் கடந்த ஐந்தாண்டு காலத்தின் சில நிகழ்வுகளின் சுருக்கம் இங்கே தரப்பட்டுள்ளது :

- நவம்பர் 2005. மாணிக்சாரி பிரஸ் கிளப்பின் பொதுச் செயலரும், தைனிக் ஆஜ்கெர் காகோஜ் பத்திரிக்கையின் சிறப்புச் செய்தியாளருமான ஊபிபுர் ரஹ்மான் ஹபிப் ஆளும் பி என்பி கட்சியின் தொண்டர்களால் தாக்கப்பட்டார் அந்தத் தாக்குதலுக்கு முன்பாக, காக்ராச்சாரியில் ஆளும்கட்சி எம்பி ஒருவர் பத்திரிகையாளர்களுக்கு மிரட்டல் விடுத்திருந்தார். உல்லாபாரா என்ற இடத்தில் பி என் பி உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி, தைனிக் ஜுகாந்தர் நாளேட்டின் இதழ்களைத் தீவைத்துக் கொளுத்தினார்கள். "இஸ்லாமி தீவிரவாதிகளின் தலைவர் பங்களா பாய் ஒரு பி.என்.பி. தலைவரின் வீட்டில் தங்கியுள்ளார்" என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டதற்காக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

- ராஜ் ஷாகி என்ற ஊரில் அமர்தேஷ் நாளேட்டின் செய்தியாளர் ரஃபிக்குல் இஸ்லாம் என்பவர் ஆளும்கட்சியின் மாணவர் அணியான ஜாதியபாதி சாத்ரா தளத்தின் உறுப்பினர்களால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டார். தாக்குதல் நடத்திய பத்துப் பேர் துர்காபூர் பிரஸ் கிளபிற்குள் நுழைந்து, அதன் தலைவராக இருந்த ரஃபிக்குல் இஸ்லாமைத் தாக்கினார்கள். கிளபின் பொதுச் செயலர் நூருல் இஸ்லாம் தலையிட முற்பட்டபோது அவரும் தாக்கப்பட்டார். அந்தத் தாக்குதல் நடப்பதற்கு முன்பாக, ஜே ஸி டி உறுப்பினர்கள் மிரட்டிப் பணம் பறிப்பது பற்றி செய்திவெளியிடக் கூடாது என்று மிரட்டியதாக ரஃபிக்குல் இஸ்லாம் போலீசில் புகார் செய்திருந்தார். ஆனால் அவருக்கு பாதுகாப்புத் தரப்படவில்லை - 2006 மே குஷ்தியா நகரில் பிரஸ்கிளப் அருகே நடந்த பத்திரிகையாளர் மாநாட்டைத் தாக்குவதற்கு ஷகிதுல் இஸ்லாம் என்ற ஆளும்கட்சி எம்பி ஆயுதம் ஏந்திய ஆட்களை ஏவிவிட்டார். மாநாட்டிற்காக தாக்காவில் இருந்து அழைக்கப்பட்டிருந்த இக்பால் சோபான் சௌத்ரி - பங்களாதேஷ் அப்சர்வர் ஏட்டின் முன்னாள் செய்தி ஆசிரியர் மற்றும் BFUJ தலைவர் உட்பட பல மூத்த பத்திரிக்கை யாளர்கள் அந்தத் தாக்குதலில் காயமடைந்தனர் - 2007 மார்ச் 5 அன்று அபாஸ் செய்தி நிறுவனம் மற்றும் தைனிக் கிரி தர்ப்பண் என்ற உள்ளூர் நாளேட்டின் செய்தியாளரான ஜமால் உத்தீன், கத்தல்தாலா என்ற இடத்தில் உள்ள தமது வீட்டில் இருந்து மாயமாக மறைந்தார். மறுநாள் அவருடைய சடலம் ரங்மதி ஏரி அருகே கிடந்தது. அதனுடைய முகம்பாதி சிதைக்கப்பட்டிருந்தது. உடம்பின் பல இடங்களில் வெட்டுக்கள் இருந்தன. கழுத்தைச் சுற்றி கயிறு கட்டப்பட்டிருந்தது. சடலம் கிடைத்த 12 நாட்களுக்குப் பிறகு தரப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் ஜமால் உத்தீன் தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அவருடைய தோழர்களும் உறவினர்களும் இதை ஏற்க மறுத்தனர். ஜமால் உத்தீனிடம் தற்கொலைப் போக்கு கிடையாது என்றனர். ஆனால் ஜமால் உதீன் சடலத்தின் மீது ஒரு ஆடியோ கேசட் கிடந்ததாகவும், அதில் அவருடைய தற்கொலைக் குறிப்பு பதிவு செய்யப்பட்டிருப் பதாகவும் போலீஸ் கூறியது. எனினும், அவருடைய தோழர்கள் அந்த ஒலிப் பதிவைக் கேட்பதற்கு போலீஸ் அனுமதிக்க வில்லை.
- 2007 அக்டோபர் 23 அன்று சங்பாத் நாளேடு மற்றும் சி எஸ் பி டெலிவிஷனின் நிருபர் ஜஹாங்கீர் ஆலம் ஆகாஷ் இரவில் கைது செய்யப்பட்டார். ராஜ்ஷாகி நிர்வாகக் கோட்டத்தில் உள்ள அவருடைய வீட்டில் இருந்து அதிரடி பட்டாலியன் (RABV) காவலர்கள் அவரைக் கைது செய்தனர். பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டதற்கு பொறுப்பானவர் என்று ஆகாஷ் தமது செய்திகளில் குறிப்பிட்டிருந்த ஒருவரின் தலைமையில் காவலர்கள் கைது செய்ய வந்தனர். ஆகாஷ் தமது புலனாய்வுச் செய்தி அறிக்கைகள் பலவற்றில் நிதி முறைகேடுகள் நடந்ததாகக் கூறி ஒருவர் மீது குற்றம் சாட்டி எழுதியதை அடுத்து அவர் ஒரு மதநிறுவனத்தின் டிரஸ்ட்டி பதவியை இழந்தார். அவர் தம்மிடம் பணம் பறிக்க ஆகாஷ் மிரட்டியதாகக் கொடுத்த புகாரின் அடிப் படையில் ஆகாஷ் கைது செய்யப்பட்டார். நீதிமன்றத்தில் ஆகாஷ் முன்ஜாமீன் பெற்றிருந்த போதிலும், கைது செய்யப்படுவதற்கு நான்கு மணிநேரத்திற்கு முன்பாக மற்றொரு புகார் கொடுக்கப்பட்டு கைது செய்யப் பட்டார். நவம்பர் 19 வரை அவரை அதிரடிப்படையினர் காவலில் வைத்திருந்த போது ராஜ்ஷாகி போலீஸ் சித்திரவதை செய்தது. ஜாமீனில் விடுவிக்கப்பட்ட பின்னரும்கூட, அவருக்கு எதிராக புதிய வழக்கு பதிவு செய்யப் பட்டது. இதனால் அவர் தாக்காவில் தஞ்சம்புக நேரிட்டது. இப்போது அவர் தமது ஊரைவிட்டு வெளியேறி வசிக்கிறார்.
- 2007 அக்டோபரில் இன்குலாப் மற்றும் நியூ நேஷன் நாளேடுகளின் செய்தியாளர் ஜஹிருல் ஹேக் டிட்டு தென் மேற்குபங்களாதேஷில் உள்ள அவருடைய சொந்த ஊரான பிரோஜ்பூரில் கைது செய்யப்பட்டார். வழக்கு எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனினும், நெருக்கடி நிலை அதிகார விதி 16(2) பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டார். இந்த விதி போலீஸ் அல்லாத அதிகாரிகளுக்கு சோதனை போட்டு பறிமுதல் செய்யும் போலீஸ் அதிகாரத்தைத் தருகிறது. 2003-ஆம் ஆண்டில் இருந்தே இஸ்லாமிய சக்திகளும் பி என் பி கட்சியில் உள்ள அவர்களின் ஆதரவாளர்களும் டிட்டுவிடம் விரோதமாக இருந்துவந்தனர்-அவர் பல முறை தாக்கப்பட்டும் அவைபற்றி துப்புத்துலக்கப்படவே இல்லை.
- 2007 மே 11 அன்று பத்திரிகையாளரும் மனித உரிமைகள் பிரச்சாரகருமான தஸ்னீம் கலீல் தாக்காவில் உள்ள அவருடைய வீட்டில் சீருடை அணியாத அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். சங்கசத் பவன் ராணுவ முகாமுக்கு கலீல் கொண்டுசெல்லப் பட்டு சித்திரவதை செய்யப்பட்டார். பங்களாதேஷின் முன்னணி ஆங்கில நாளேடான டெய்லி ஸ்டார் பத்திரிகையில் துணை ஆசிரியராக இருந்த கலீல், சிஎன்என் இன்ட்டர்நேஷனல் தொலைக் காட்சிக்கும் வேலை செய்தார். ஹ்யுமன் ரைட்ஸ் வாட்ச் அமைப்புக்கும் அறிக்கைகளை அனுப்பிவந்தார். சித்திரவதையில் கலீல் மிக மோசமாகக் காயம் அடைந்தார். ஒருநாள் காவலில் வைக்கப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டார்.
- 2007 செப்டம்பரில் புரோத்தோம் அலோ என்ற வங்க நாளேட்டின் கார்ட்டூனிஸ்ட் அரிஃபுர் ரஹ்மான் தீட்டிய ஒரு கேலிச் சித்திரத்திற்காக, மொகமது என்ற பெயரைப் பயன்படுத்தி வார்த்தை விளையாட்டு நடத்தியதற்காக. அதை எதிர்த்து இஸ்லாமியக் குழுவினர் காட்டமாக ஆர்ப்பாட்டம் செய்தனர். அதைத் தொடர்ந்து அவர் வேலையில் இருந்து நீக்கப் பட்டார். செய்தி ஆசிரியருக்கோ, வெளியீட்டாளருக்கோ தடை விதிக்கப்படாத போதிலும் அந்தப் பத்திரிகை மன்னிப்பு கேட்டுக்கொண்டது. இரண்டுநாட்கள் கழித்து ரஹ்மான் கைது செய்யப்பட்டார். அவருக்கு உத்தரவாதம் தர எவரும் முன்வராததால் 30 நாட்கள் சிறைக்கு அனுப்பப்பட்டார். திரும்பத்திரும்ப காவல் நீட்டிக்கப்பட்டு, 2008 மார்ச் 20 விடுதலை செய்யப்பட்டார், 2010 ஜனவரியில் எல்லா வழக்குகளில் இருந்தும் அவர் விடுவிக்கப்பட்டார்.

பங்களா தேசத்தின் பத்திரிகையாளர் அமைப்புகள் தங்களுடைய தொழில்பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள இத்தகைய எண்ணற்ற சவால்களைச் சமாளிப்பதற்காக நன்கு வலுவுடன் ஒன்றுபட்டுள்ளன. ஆனால் பல்வேறு நிலைகளில் அவற்றுக்கு இடைஞ்சல்கள் எதிர்நோக்கியுள்ளன. எடுத்துக்காட்டாக, 2005 நவம்பரில். ஊடகங்களுக்கு அச்சச் சூழல் அதிகரித்து வருவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக, தேசியப் பத்திரிகையாளர் மாநாட்டை நடத்துவதற்கு BFUJ ஆயத்தம் செய்து கொண்டிருந்தபோது, மாநாடு நடத்துவதற்காக முன்கூட்டியே இடம் பதிவு செய்யப்பட்டதை அரசு ரத்து செய்தது. காரணம் எதுவும் கூறப்படவில்லை. "பாதுகாப்புக் காக" என்று மேம்போக்காகக் கூறப்பட்டது.

பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகங்களுக்கு எதிரான பெரும்பாலான வன்செயல்கள் தண்டிக் கப்படாமலே போயின. இந்த வகையில் தெற்காசியாவின் பெரும்பாலான நாடுகளில் - சிற்சில விதிவிலக்குகள் நீங்கலாக - காணும் தண்டிக்காத கலாச்சாரத்தை பங்களாதேசமும் பகிர்ந்துகொள்கிறது.

## அவதூறு வழக்குகளும், பணப்பறிப்பு குற்றச் சாட்டுக்களும்

பங்களாதேசத்தில் மனித உரிமைப் பிரச்சினைகள் பற்றி, குறிப்பாக ராணுவமும் பாதுகாப்பு அமைப்புக்களும் ஈடுபடும் நீதிக்குப் புறம்பான கொலைகள் பற்றி, செய்திவெளியிடும் பத்திரிகையாளர்களுக்கு மோசமான அச்சுறுத் தல்கள் எதிர் நோக்கியுள்ளன. குறைகூறி விமர்சித்து செய்திவெளியிடுவோருக்கு எதிராக அடிக்கடி அவதூறுச் சட்டங்களும், பணப்பறிப்பு குற்றச்சாட்டுக்களும் பயன் படுத்தப்படுகின்றன.

2005 ஜுலையில், இரண்டு வங்கமொழிநாளேடுகளின் செய்தி ஆசிரியர்களுக்கு எதிராக, பி என் பி உறுப்பினர் ஒருவர் அவதூறு

வழக்கு தொடரவே, கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. ஒரு கொலையில் தம்மையும், தமது சகோதரர்கள் இருவரையும் சம்பந்தப்படுத்தி செய்தி வெளியிட்டதாக அவர் இந்த வழக்கைத் தொடுத்தார்.

மற்றோர் உதாரணமாக, ஜமால்பூர் மாவட்டத்தின் மெலந்தாகாவைச் சேர்ந்தவரும், நயாநகர் ஒன்றியப் பஞ்சாயத்தின் தலைவருமான ஃபக்கீர் அபு பக்கர் சித்திக்கி என்பவர் பொரேர்காகஜ் மற்றும் புரொத்தோம் அலோ என்ற நாளேடுகள் மற்றும் ஷமோகால் என்ற பத்திரிகையின் உள்ளூர் பத்திரிக்கையாளர்களுக்கு எதிராக, செய்தி ஆசிரியர்கள், வெளியீட்டாளர்கள் உட்பட, அனைவர் மீதும் தன்னைப்பற்றி செய்தி வெளியிட்டதற்காக அவதூறுவழக்கு தொடுத்தார்.

ஓர் ஆக்கப் பூர்வமான நடவடிக்கையாக, 2006 பிப்ரவரியில் சங்பாத் என்னும் நாளேட்டின் செய்தி ஆசிரியருக்கு உயர்நீதிமன்றம் முன்ஜாமீன் வழங்கியது. 2006 ஜுலையில் "ஜமால்பூரில் உள்ளூர் பி என் பி உறுப்பினர்களிடையே உட்பூசல்" என்ற தலைப்பிலி ஒரு செய்தியை சங்பாத் வெளியிட்டிருந்தது. அதில் உள்ளூர் அரசியல் ஒருவர்மீது கிரிமினல் குற்றம் சுமத்தப் பட்டிருந்தது. இதனால் செய்தி ஆசிரியர் மற்றும் நிருபர்மீது அவதூறு வழக்கு தொடுக்கப்பட்டது.

## மிக மோசமாக பிளவுபட்ட பத்திரிகையாளர் அமைப்புக்கள்

ரகசியமாக இருக்கும் அரசியல் விரோதங்களை பீதியூட்டும் அளவுக்கு ஊடகங்கள் அம்பலமாக்கும் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்ட ஒரு சம்பவம் 2010 மார்ச்சில் நிகழ்ந்தது. அப்போது ஜாதீய (தேசிய) பிரஸ் கிளப் தலைவரும், பி என் பி தலைவர் பேகம் கலிதா ஜியாவின் ஆலோசகருமான ஷவுக்கத் மஹ்முத் என்ற பத்திரிகையாளருடன் தொடர்புடைய ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம். பங்களாதேசத்தின் முன்னாள் அதிபரும், பி என் பி கட்சியின் நிறுவனருமான ஜியாவுர் ரஹ்மானின் சமாதியைப் பராமரிப்பதற்கு பொதுப்பணம் ஏராளமாகச் செலவிடப்படுவதாக பிரதமர் ஷேக் ஹசீனா வெளியிட்ட அறிக்கையால் கோபம் கொண்ட மஹ் முத், ஜியாவுர் ரஹ்மானின் கம்பீரமான நினைவிடத்திற்கு ஊறு விளைவிக்க எவரும் நினைத்தால் அவர்களுடைய உடலுக்கு ஆபத்து ஏற்படும் என்று காட்டமாக எச்சரித்தார். மேலும் பிரதமர் அந்த நினைவிடத்தைக் கடக்கும் ஒவ்வொரு முறையும் பி என் பி நிறுவனரின் அரசியல் பாரம்பரியத்தைக் கௌரவிக்கும் வகையில் வணக்கம் செலுத்த வேண்டும், குறிப்பாக பங்களாதேசத்தில் பலகட்சி ஜனநாயகத்தை மீட்ட அவரைப் போற்ற வேண்டும் என வற்புறுத்தினார்.

இதற்காக மஹ்முதுக்கு எதிராக ஆளும் கட்சி உறுப்பினர்கள் பல்வேறு நீதிமன்றங்களில் 27 மானநஷ்ட வழக்குகளைப் போட்டனர். இவ்வாறு செய்தபோது, நேரடியாகப் பாதிக்கப்படும் ஒருவர்தான் மானநஷ்ட வழக்கு போடமுடியும் என்ற சட்டவிதிகளையும் அவர்கள் அலட்சியப் படுத்தினர். இதற்குப் பதிலடியாக, மஹ்முதுக்கு விசுவாசமான பிரஸ் கிளப்களை பி என் பி தூண்டிவிட்டது. தங்களது ஆலோசகர் இவ்வாறு சட்டவழிகளில் நுன்புறுத்தப்படுவதற்கு எதிராக அவை ஆர்ப்பாட்டங்களை நடத்தின. நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் முன்னணி பத்திரிகையாளர்கள் பங்கேற்பதாக இருந்தது. ஆனால் மார்ச் 20 அன்று தென் மேற்கு கோட்டத்தின் தலைநகரான குல்னாவில் நடைபெற இருந்த ஆர்ப்பாட்டத்தில் ஒலி பெருக்கியைப் பயன்படுத்த அனுமதி மறுக்கப் பட்டது. இதனால் ஆளுங்கட்சிக்கும் எதிர் கட்சிக்கும் இடையே மற்றொரு சுற்றுப் பகைமை வளர்ந்தது.

ஊடகங்களின் விமர்சனங்களும் இருதுருவங்களாகப் பிரிந்து நின்றன. உதாரணமாக, பிரதமருக்கு மஹ்மூத் விடுத்த எச்சரிக்கை கண்டு "அதிர்ச்சியும் ஆச்சரியமும்" அடைந்ததாக டெய்லி ஸ்டார் பத்திரிகையில் கட்டுரையாளர் எழுதினார். இந்த எச்சரிக்கை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமரின் உயிருக்கு ஊறுவிளைவிப்பதாக இருப்பதாகவும், தனிநபர் மரியாதை என்ற பண்பாட்டை மீறுவதாகவும் அவர் குறிப்பிட்டார். பங்களாதேசத்தில் பலகட்சி ஜனநாயகத்தை மீட்டதற்காக ஜெனரல் ஜியாவுர் ரஹ்மானுக்கு கௌரவமான இடம்தரப்பட வேண்டும் என்ற கோரிக்கை தீர்க்கமாக நிராகரிக்கப்பட்டது. "ஜனநாயகத்தை மீட்டவர் என்ற போர்வையில், விடுதலைப் போரின் புனிதக் கோட்பாடுகளை காலஞ் சென்ற சர்வாதிகாரி மறைத்துவிட்டு, சுதந்திரத்தின் எதிரிகள் அரசியல் ஆதிக்கம் செலுத்த வழிவகுத்தார். நியுரம் பெர்க் போன்ற அரசத்துரோகக் குற்றங்களுக்காக சிறைசெல்ல வேண்டிய அல்லது மோசமான தண்டனை பெற வேண்டி பழைய பாகிஸ்தானி மோகம் கொண்ட முஸ்லிம் லீகர்களும். ஜமாத்திகளும் மீண்டும் அரசியலுக்குவந்து தங்களை பங்களாதேஷின் பெரியமனிதர்கள் எனக் காட்டிக் கொண்டனர். இதை பலகட்சி ஜனநாயகம் என்று கூற முடியுமா?" என்று எழுதினார்.

ஜாதிய பிரஸ் கிளப்பில் இவ்வாறு வெளிப்படையாக அரசியல் மோதல்கள் ஏற்பட்டது. குறித்து பத்திரிகையாளர் சமூகத்திலும் பகிரங்கமாகக் கருத்து மோதல்கள் மூண்டன. ஆனால் மஹ்மூத் மட்டுமே வெளிப்படையாக பாரபட்சமான அரசியலில் ஈடுபடவில்லை என்பதால் இந்தக் கவலைகள் யாவும் மறைக்கப்பட்டன. 2009-இல் அவாமிலீகிற்கு விசுவாசமான BFJU குழுவின் தலைவரான இக்பால் சோபன் சௌதாரி, கட்சி டிக்கெட்டில் தேசியத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார். தேசிய பத்திரகையாளர் சங்கத்தின் தலைவர் என்ற முறையிலும், நாட்டின் ஒரு முக்கிய அரசியல் கட்சியின் பொதுவிசுவாசி என்ற முறையிலும் அவருடைய பங்குபணியில் முரண்பாடு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

## எல்லை தாண்டிய பூசல்களின் திறன்

இந்தியாவுடனான உறவில் பங்களாதேசத்திற்கு தொடர்ந்து இருதரப்பு இடர்கள் இருந்துவருகின்றன. இது ஊடகங்களின் செயல்பாடிகளில் ஒரு நீண்ட நிழல்படிந்துள்ளது. அண்மையில், மணிப்பூர் மாநிலத்தின் டிப்பாய் முக் என்ற இடத்தில் அணைகட்ட இந்தியா தீர்மானித்தது. இதனால் பங்களாதேசத்தின் கடைக் கோடி நதிபாயும் பகுதிகளுக்கு இழப்பு ஏற்படும் என பங்களாதேஷ் நீர்வள நிபுணர்கள் மதிப்பிட்டனர். இந்தப் பிரச்சினையை ஊடகங்கள் எடுத்துக் கொண்டன. குறிப்பாக, பங்கலாதேஷில் உள்ள இந்திய ஹைகமிஷனர் பொறுப்பற்றுப் பேசியதாகக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இதனால் அரசு அதிகாரிகளுக்கும், ஊடகங்களுக்கும் இடையே பரஸ்பரம் குற்றச்சாட்டுக்கள் பரிமாறப்பட்டன, உறவு மோசமடைந்தது.

இவைதவிர, இரு நாட்டு எல்லைகள் பற்றிய தகராறுக்கும் தீர்வு காணப்படாமலே உள்ளது. பங்களாதேஷ். பிரதேசத்திற்குள் இருக்கும் பல நிலப் பகுதிகளில் இந்தியாவின் ஆட்சி உரிமை உள்ளது.  ஆனால் இந்த நிலப்பகுதிகள் ஒன்றாகச் சேர்ந்திருக்கவில்லை. அதேபோல, பங்களாதேசத்தின் ஆட்சி உரிமை உள்ள பகுதிகள் இந்திய எல்லைக்குள் இருக்கின்றன. எல்லை வரையறை, குடிமக்களின் விசுவாசம், எல்லைக்காவலர்களின் அதிகாரவரம்பு ஆகியன தொடர்பான நிச்சயமற்ற நிலைமைகளினால் எல்லைகளில் பதற்றம் ஏற்பட்டு ஏதுமறியா உயிர்கள் பலியாயின. இந்தப் பிரச்சினைகள் பற்றி ஊடகங்கள் வெளியிட்டதால், பிரச்சினையின் உண்மை வேர்களும், சாத்தியமான தீர்வுகளும் இருதரப்பிலும் மறைக்கப்பட்டுவிட்டன.

இரு அண்டை நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர உறவுகளை அழிப்பதில் வாணிபம், குடிப் பெயர்வு, எல்லை தாண்டிய கிளர்ச்சிகளைத் தூண்டிவிடுவது, போன்ற பிரச்சினைகள் தொடர்ந்து முக்கிய பங்காற்று கின்றன. தாக்காவில் உள்ள இந்திய ஹைகமிஷன்

6 சையது பத்ருல் அஹ்சான் 'தி மீடியாக்கர் அண்டு தி மேடனிங்', டெய்லி ஸ்டார், மார்ச் 24, 2010, அதே நாளில் எடுக்கப்பட்டது: www.thedailystar.net/newDesign/print_new.php?nid=131302. இங்கு குறிப்பிடப்படுவது பிஎன்பி தேர்தல் கூட்டணியில் இடம் பெற்றமுஸ்லிம் லீக் மற்றும் ஜமாத்-இ-இஸ்லாமி என்றஇரண்டு கட்சிகளைப் பற்றியது.

## அமர் தேஷ் வழக்கு

ஜூன் 1, 2010 அன்று அமர்தேஷ் என்ற வங்க மொழி நாளேட்டின் பதிவுப்பிரகடனத்தை பங்களாதேஷ் அரசு ரத்துசெய்தது. இதற்கு அங்கீகரிக்கப்பட்ட அல்லது அடையாளம் தெரிந்த வெளியீட்டாளர் இல்லாமல் சட்டமீறல் நிகழ்ந்துள்ளது என்று காரணம் கூறப்பட்டது.

சிலநாட்களில் அந்தநாளேட்டின் தற்காலிக செய்தி ஆசிரியர் மஹ்முதுர் ரஹ்மான் கைது செய்யப்பட்டார். அவர் பலநிதி முறைகேடுகளில் ஈடுபட்டதாக பங்களாதேசத்தின் ஊழல் எதிர்ப்பு ஆணையம் குற்றம் சாட்டியது. 1973 ஆம் ஆண்டின் அச்சகங்கள் மற்றும் வெளியீடுகள் (பிரகடனம் மற்றும் பதிவு) சட்டத்தின் கீழ் அமர்தேஷ் நாளேட்டின் பதிவை தாக்கா நகர டெபுடி கமிஷனர் ரத்துசெய்தார். இந்த நாளேடு யார் பெயரில் பதிவு செய்யப்பட்டதோ அவர், தமக்கு இந்த செய்தி ஏட்டுடன் இருந்த தொடர்பு 2010 மார்ச் சுடன் முடிந்துவிட்டதாக தெரிவித்து விட்டார் என்று காரணம் கூறப் பட்டது.

பங்களாதேஷ் மக்களாட்சிக்குத் திரும்பிய உடனே 2009-இல் ரஹ்மான் இந்த நாளேட்டை வாங்கினார். இதன் முன்னாள் உரிமையாளர் இந்த நாளேட்டுடன் தமக்கு உள்ள தொடர்பை துண்டித்துக் கொள்வதாக முறைப்படி உள்ளூர் அதிகாரிகளிடம் தெரிவித்தார். அமர் தேஷ் நாளேட்டின் வெளியீட்டாளராக தம்மைப் பதிவு செய்யுமாறு ரஹ்மான் போட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. அவர்மீது எண்ணற்ற கிரிமினல் வழக்குகள் பதிவுசெய்யப்பட்டிருப்பதால் அவர் தகுதியற்றவர் என்று காரணம் கூறப் பட்டது. இதைப்பதிவு செய்து தாக்கா காவல் துறையின் சிறப்புப்பிரிவு முறைப்படி அறிக்கை அளித்ததும் செய்தி ஏட்டின் பதிவு ரத்துசெய்யப்பட்டது.

அமர்தேஷ் மூடப்பட்டதற்கு அரசு கூறிய காரணத்தை யாரும் நம்பவில்லை. ஆளும் கட்சியினர் மட்டுமே நம்பினர். ஆனால் உயர் அரசு அதிகாரிகளின் முறைகேடுகள் எனக் கூறப்படுபவை பற்றி விமர்சனக் கட்டுரைகளை வெளியிட்டதே ஓரளவுக்குச் சரியான காரணம் என்று பரவலாகப் புரிந்து கொள்ளப் பட்டது.

2009 டிசம்பர் 17 அன்று, பிரதமரின் எரிசக்தி ஆலோசகர் அளித்த குறிப்பான சிபாரிசின் அடிப்படையில் அமெரிக்க எண்ணெய் நிறுவனம் ஒன்றுடன் செய்துகொள்ளப்பட்ட மோசடி பேரம் பற்றி அமர்தேஷ் ஒரு செய்தி வெளியிட்டது. இந்தப் பேரத்தை செய்வதற்காக சட்டவிரோதமாக 5 மில்லியன் அமெரிக்கடாலர் லஞ்சம் தரப்பட்டதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டது. மூன்று நாட்கள் கழித்து. எந்த நிருபரின் பெயரில் இந்தச் செய்தி வெளியிடப்பட்டதோ அவர் தாக்கப்பட்டார். தாக்கா நகரின் நெரிசல் மிகுந்த பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப் பட்டது.

2001-06 வரை பி என்பி தலைமையிலான அரசில் முதலீட்டு வாரியத்தின் தலைவராகவும், எரிசக்தி ஆலோசகராகவும் இருந்த ரஹ்மான் கைது செய்யப்படாமல் தம்மைப் பாதுகாக்க ஐந்து நாட்கள் கழித்து முன்ஜாமீனுக்கு விண்ணப்பித்தார். அடுத்த விசாரணை வரையிலும் ரஹ்மானுக்கு எதிராக மானநஷ்ட வழக்கு எதையும் ஏற்கக் கூடாது என்று கீழ்நீதிமன்றங்களுக்கு நீதிமன்றம் கட்டளையிட்டு, முன்ஜாமீன் வழங்கியது. 2010, பிப்ரவரி 11 அன்று தாக்காவில் ரஹ்மான் தாக்கப்பட்டார். அவருக்குக் காயம் இல்லை. ஆனால் அவர் பயணம் செய்த கார் நொறுக்கப் பட்டது. உடனே இந்தத் தாக்குதல் பத்திரிகைச் சுதந்திரத்தை மீறிய செயல் என்று கூறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆனால் பல முக்கிய பத்திரிகையாளர்கள் இதில் சேரவில்லை. இதை ஒரு அரசியலாக்க பி என் பி முயற்சிப்பதாக அவர்கள் கூறினார்கள்.

2010, ஏப்ரல் 3 அன்று நடந்த கூட்டத்தில் பி என் பி மற்றும் அதன் அரசியல் கூட்டணிக் கட்சியான ஜமாத்-இ-இஸ்லாமியின் சார்புள்ள பத்திரிகையாளர்கள், ஊடகப் பணியாளர்கள் அடக்கப்படுவதாகக் குறைகூறினார்கள். அவர்கள் கோரிக்கை மகஜரை தயாரித்து அரசுக்கு அளித்தனர். 2010 ஜூன் 15-க்குள் தங்கள் கோரிக்கை ஏற்கவேண்டும் என இறுதி எச்சரிக்கை விடுத்ததனர். இதனுடைய அரசியல் சாயம் கண்டு அவாமிலீக் சார்பு பத்திரிகையாளர்கள் விமர்சித்தனர். எடுத்துக்காட்டாக, ரஹ்மான் செய்தி ஆசிரியர்-வெளியிட்டாளர். என்று மிகவும் அண்மைக்

விசா பெறுவதற்கு ஆன்லைன் மூலமே விண்ணப்பிக்க வேண்டும் என்ற புதிய விதி கொண்டுவந்து விட்டதால், இருநாடுகளுக்கும் இடையே பயணம் செய்வது இப்போது சிக்கல் மிகுந்ததாக ஆகிவிட்டது. சமீபத்திய மாதங்களில், பங்களாதேசத்திற்குள் சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்படுவதற்காக போதை மருந்து கடத்திக் கொண்டுவரப்படுவதாக ஐ.நா. போதை மருந்து கட்டுப்பாட்டு முகமை ஓர் அறிக்கையில் சுட்டிக் காட்டியது. இது பங்களாதேச ஊடகங்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது. இத்தகைய போதைமருந்துகள் முக்கியமாக இந்தியாவில் இருந்துதான் கடத்திக் கொண்டுவரப்படுவதாக அடையாளம் காட்டப்பட்டது. இந்திய ஊடகங்களின் கவனத்தை அவ்வளவாக ஈர்க்கவில்லை, ஏனெனில், இந்தியாவுக்கு மிக அருகில் உள்ள மிகப் பெரிய நாடு பங்களாதேஷ் என்றாலும், இந்தியாவின் பன்னாட்டு உறவுகளில் மேல்மட்டத்தில் அது இல்லை. இந்தக் கண்ணோட்ட முரண்பாடுகளை ஊடகங்கள் புரிந்து கொண்டு, எல்லைதாண்டிய பிரச்சினைகள் பற்றிய அறிவார்ந்த பொதுவிவாதத்தை நடத்த வேண்டும்.

### பூசல்களின் ஆதாரம் மற்றும் கிடைக்கும் பரிகாரங்கள்: பத்திரிகையாளர்களின் கண்ணோட்டம்.

நெருக்கடி நிலை ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகளில் பங்களாதேஷ் பத்திரிகையாளர்களிடையே சர்வதேசப் பத்திரிகையாளர் மன்றம் ஒரு ஆய்வு நடத்தியது. அப்போது, "அதிகார அரசியல்தான்" பங்களாதேஷில் ஏற்படும் பூசல்களுக்கு மூல காரணம் என்று பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

மக்களுக்கிடையே ஆக்கப்பூர்வமான தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும், இதற்குப் பத்திரிகையாளர்கள் ஏற்பாடு செய்யலாம் என்று பெரும்பாலான பத்திரிகையாளர்கள் கூறினார்கள் - எல்லாப் பூசல்களின்போதும் "மனிதாபிமானம்"என்பதில் ஊடகங்கள் கவனம் செலுத்தி, "துல்லியமாகவும், பாரபட்சமின்றியும்" செய்திகளை வெளியிட வேண்டும் என்ற உணர்வு அனைவரிடமும் நிலவியது.

மற்ற பொதுமக்கள் சங்கங்களுடன் பத்திரிகையாளர் சங்கங்கள் விரிவான அளவில் கூட்டுவைத்துக் கொண்டால் குறிப்பிடத்தக்க அரசியல் மற்றும் சிவில் பிரச்சினைகளில் இரு தரப்பினரும் இணைந்து செயல்படும் திறன் அதிகரிக்கும் என்று பெரும்பான்மைப் பத்தரிகையாளர்கள் கருத்துத் தெரிவித்தனர். 1990-இல் நடை பெற்ற ஜனநாயக மீட்டிப் போராட்டத்தின்போது பத்திரிகையாளர் சங்கங்களும், மக்கள் அமைப்புக்களும் ஒன்று சேர்ந்து பதினைந்து ஆண்டுகால ராணுவ சர்வாதிகார ஆட்சியைக் கவிழ்த்ததை பலரும் குறிப்பிட்டனர்.

இதே அளவுக்கு சர்வதேசக் கவனத்தை ஈர்க்காத சில உள்ளூர் பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டி இந்த அணுகுமுறையை வலியுறுத்தினார்கள். உதாரணமாக, 2001 ஏப்ரலில், அப்போதைய ஆளும்கட்சியான அவாமிலீகின் உள்ளூற் தலைவர் ஒருவர் சிட்டகாங் நகரின் புர்பாக்கோன் செய்தி ஏட்டை தாக்கினார்.

காலத்தில்தான் கூறிக் கொள்கிறார் என்றும், முதலீட்டு வாரியத்தின் தலைவராகவும், எரிசக்தி ஆலோசகராகவும் பதவிகளை வகித்தபின்னரே அவர் பத்திரிகைத் துறைக்கு கொண்டுவரப்பட்டார் என்பதையும் சுட்டிக் காட்டினார்கள்.

பி என் பி 2007-இல் ஆட்சி அதிகாரத்தை இழந்து விட்ட பின்னர், ரஹ்மானுக்கு எதிராக எண்ணற்ற ஊழல் வழக்குகள் போடப்பட்டன. 2009-இல் அவாமிலீக் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே 2008 ஜூனில், நெருக்கடி நிலை நிர்வாகத்தின்கீழ் செயல் பட்ட ஊழல் எதிர்ப்பு பிரிவு 100 மில்லியன் டாக்கா கையாடல் செய்ததாக அவர்மீது விசாரணை நடவடிக்கைகளைத் தொடங்கியது. இந்த வழக்கு தாக்கா நகரில் ரியல் எஸ்டேட் தொழிலில் ஈடுபட்டிருந்த ஷைன்புக்கார் ஹோல்டிங்ஸ் லிட் என்ற நிறுவனத்தில் அவருடைய உரிமையாளர் என்ற தகுதியுடன் தொடர்புடையது.

2010 பிப்ரவரி 9 அன்று. ரஹ்மான் ஜெர்மனி செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஒரு செராமிக்ஸ் தயாரிப்பு ஆலையின் சொந்தக் காரர் என்ற முறையில் தமது வியாபாரத்திற்கு லாபம் தரக் கூடிய பொருட் காட்சியில் பங்கேற்பதற்காக ஜெர்மனிக்குச் செல்ல வேண்டியுள்ளது என்று அவர் முந்தைய ஏப்ரலில் போடப்பட்ட மானநஷ்ட வழக்கில் குறிப்பிட்டிருந்தார். ஆனாலும் இது பத்திரிகைச் சுதந்திரத்தை மீறிய வழக்கு என்று உள்ளூர் ஊடகங்கள் சில வர்ணித்தன.

இந்த வழக்கும், இது போன்ற மற்றவழக்குகளும் செய்தி ஏடுகளின் சொந்தக் காரர்கள் தங்களுடைய சொந்த நலன்கள் பத்திரகைச் சுதந்திரத்துடன் தொடர்புடையவை என்று கூறும் குழப்பமான நிலையைக் காட்டுகின்றன. ஊடகங்கள் நேர்மையான, நடுநிலையான தகவல் மூலங்களாக அல்லாமல் பாரபட்சமான போர் ஆயுதங்களாகச் செயல்படும் சூழலில் பத்திரிகையாளர்கள் எதிரெதிர் அரசியல் துப்பாக்கிச் சூட்டின் நடுவில் சிக்கும் நிலை ஏற்பட்டு விடுகிறது.

1 இந்தச் செய்திக்கட்டுரையை டெய்லி ஸ்டார், ஜூன் 20, 2008 இதழில் படிக்கலாம். www.dailystar.net/story. php?nid=42890

அப்போது பல்வேறு தொழில் முறையாளர் அமைப்புக்களும், மாணவர் சங்கங்களும், மக்கள் மன்றங்களும் ஒன்றுசேர்ந்து போராடி, குற்றம் இழைத்த வரை நீதியின் முன் நிறுத்தின. பத்திரிகையாளர் சங்கங்களுக்கும், குடிமக்கள் அமைப்புக்களுக்கும் இடையே ஒருங்கிணைந்த செயல்பாட்டுக்குச் சான்றாக தேசிய எண்ணெய், எரிவாயு மின்சாரம், மற்றும் துறைமுகப் பாதுகாப்புக் கமிட்டி, 1980-களில் நிகழ்ந்த குல்னா பல்கலைக் கழக இயக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அதேபோல, தனித்தனி பயங்கரவாதத் தாக்குதல்களில் பத்திரிகையாளர்கள் மாணிக் சகாவும், ஷம்சுர் ரஹ்மானும் கொல்லப்பட்ட போது, விரிவான கூட்டுச் செயல்பாடு மேற் கொள்ளப்பட்டது.

எனினும், நடப்பு அரசியல் சூழலில் இது போன்ற ஒத்துழைப்பு எந்த அளவுக்குப் பயன்படும் என்பது மற்றொரு கேள்வியாகும்.

செய்தி ஆகிரியர்களும், ஊடக உரிமையாளர்களும், இதர பத்திரிகையாளர்களும் சேர்ந்து செயல்படாவிட்டால் ஊடகஉரிமைகள் என்பது உயிரற்ற சொற்களாகவே இருக்கும் என்று நடப்பு ஆய்வில் கருத்துத்தெரிவித்த பலரும் கூறினார்கள். நாட்டின் சுதந்திரம் பறிபோகிறது என்னும் போது. மனித உரிமைகளையும் இயற்கை வளங்களைக் கட்டுப்படுத்தும் இறையாண்மை அதிகாரங்களையும் பாதுகாப்பதற்காக இத்தகைய கூட்டுறவு சாத்தியமாகும். விடுதலைப் போர் இலட்சியங்கள், மதசார்பற்ற ஜனநாயக மாண்புகள், போர்குற்றவாளிகளைப் பொறுப்பாக்குவது போன்ற காரணங்களுக்காகவும் இது போன்ற ஒத்துழைப்பு ஏற்படலாம். இத்தகைய விரிவான கூட்டுறவை நடைமுறை உண்மையாக்கிட, பத்திரிகையாளர்களுக்கு ஊதியக் குழு பரிந்துரைகளை அமல்படுத்துதல், மற்றும் ஊடகங்களுக்கு எதிரான கருப்புச் சட்டங்களை ரத்து செய்தல் என்ற குறைந்தபட்ச செயல் திட்டம் தேவை.

பத்திரிகைத் துறை தனது மாண்புமதிப்புக்களுக்கு ஏற்பச் செயல்படுத்துவதற்குத் தடங்கலாக அரசியல் பிரிவினைகள் உள்ளன.

பங்களாதேசத்தில் பத்திரிகையாளர்களுக்கு மிரட்டல்களும், உயிருக்கு ஆபத்தான கொலைத் தாக்குதல்களும் பெரும் சவாலாக உள்ளன. நாட்டின் ஆறு நிர்வாகக் கோட்டங்களில் ஒன்றான குல்னாவில் பத்திரிகையாளர்களின் பணிநிலைமைகள் மிக மோசமாக உள்ளன. உண்மையில், பத்திரிகையாளர்களைக் குறிவைத்துத் தாக்குவதும், ஆங்காங்கு திடீர்திடீரெனத் தாக்குவதுமான "பயங்கரவாதம்" குல்னாவில்தான் தொடங்கியது என்று பெரும்பாலான பத்திரிகையாளர்கள் கருதுகின்றனர். இஸ்லாமியக் குழுக்களும், இடதுசாரித் தீவிரவாதக் குழுக்களும் ஊடகங்களுக்குப் பாதுகாப்பற்ற உணர்வை ஏற்படுத்துவது இன்றளவும் தொடர்கிறது.

பங்களாதேஷின் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் அதற்கே உரிய பிரச்சினைகள் இருக்கின்றன. கீழ்நிலையில் கிளர்ச்சிகளையும், அவ்வப்போது இனச் சண்டைகளையும் கண்ட சிட்டகாங் கோட்டம் பத்திரிகையாளர்களுக்கு ஆபத்தான பகுதியாக உள்ளது. குறிப்பாக சிட்டகாங் மலைப் பகுதிகளில் உள்ள பத்திரிகையாளர்களும், ஊடகப்பணியாளர்களும் தங்கள் தொழிலுக்குத் தேவையான சாதனங்களும், பொருட்களும் கிடைக்காமல் தவிக்கின்றனர். இதற்கு இந்தச் சாதனங்கள் இனக் கிளர்ச்சியாளர்களுக்கு உதவக்கூடும் என்று காரணம் சொல்லப்படுகிறது.

சர்வதேசப் பத்திரிகையாளர் சம்மேளனம் தொடக்கத்தில் நடத்திய ஆய்வில் பங்கேற்ற பல பத்திரிகையாளர்கள் தகராறுநிலைமைகளைச் சந்தித்தவர்கள். அவர்களில் மூன்றில் இரு பங்கினர் முந்தைய ஆண்டில் தகராறு நிலைமைகள் பற்றி 10 செய்திக் கட்டுரைகளாவது எழுதியவர்கள். 2 சதவிகிதத்திற்கும் குறைவானவர்களே தங்களது தொழிலில் எந்த ஒரு தகராறையும் கண்டதில்லை என்று கூறினார்கள்.

கருத்துத் தெரிவித்தவர்களில் 60 சதவிகிதத்தினருக்கும் அதிகமானவர்கள் தகராறு பற்றி அரசுத் துறைகளும், காவல்துறையும், ராணுவ வட்டாரங்களும் அளித்த தகவல்கள் குறைவானவை என்று கூறினார்கள் 36 சதவிகிதத்தினருக்கும் அதிகமானவர்கள் இந்த வட்டாரங்கள் அளித்த தகவல்கள் “பாரபட்சமானவை” என்று தெரிவித்தனர் பாதிக்கும் மேற்பட்டவர்கள் ஊடகங்கள் பாரபட்சமாக இருப்பதற்கு “வர்த்தக் நோக்கம்” காரணம் என்கின்றனர். ஐந்துபேர்களில் ஒருவர் மட்டுமே ஊடக உரிமையாளர்களின் அரசியல் நாட்டம் காரணம் என்கின்றனர்.

பத்திரிகையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நிறுவனங்கள் மூலம் தீர்வு காண்பது பற்றிய கேள்விக்கு பதிலளித்தவர்களில் பெரும் பாலானவர்கள், துயர்துடைப்பதற்கு உறுதியான முறை எதுவுமே இல்லை என்றனர். சுமார் 80 சதவிகிதத்தினர் உள்ளூர் பத்திரிகையாளர் சங்கக் கிளையிலும். தங்களுடைய சொந்த ஊடக அலுவலகத்திலும், உளளூர் பிரஸ் கிளப்பிலும் புகார் செய்யலாம், ஆனால் சிலபுகார்கள் மட்டுமே கவனிக்கப்படுகின்றன என்று கூறினர், எந்தெந்தச் செய்திகளுக்கு முக்கியத்துவம் தருவது என்று ஊடக உரிமையாளர்கள் தீர்மானிக்கும்போது, பத்திரிகையாளர்களால் அதை மாற்ற முடிவதில்லை.

ஆய்வில் பங்கேற்ற பத்திரிகையாளர்கள் ஏராளமான நிறுவன மாற்றங்கள் பற்றி யோசனைகளைத் தெரிவித்துள்ளனர்:

- தகராறான நிலைமைகளில் பத்திரிகையாளர்களின் உரிமைகள் மீறப்படும் ஒவ்வொரு நிலைமை பற்றியும் கவனிக்கும் வட்டார மற்றும் சர்வதேச அமைப்புக்கள், அதற்குத் தீர்வுகாணும்படி உரிய அதிகாரிகளுக்கும், முகமைகளுக்கும் நெருக்குதல் தரவேண்டும்.

- எல்லா ஊடக நிறுவனங்களுக்குள்ளும் நெறி முறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதையும், செய்தி வெளியிடும் தெரிவுகளையும் மேற்பார்வையிட நடுவர் மன்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.
- உழைக்கும் பத்திரிகையாளர்களின் புகார்களை கவனிக்க பங்களாதேஷ் பிரஸ் கிளப்பில் போதுமான அதிகாரங்களுடனும், வாய்ப்பு வளங்களுடனும் பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.
- ஊடகத் துறையில் மேற்பார்வையிட சிறப்பு கமிஷன் அல்லது ஆணையத்தை ஏற்படுத்தி அதில் பத்திரிகையாளர் அமைப்புக்கள், ஊடக உரிமையாளர்களின் அமைப்புக்கள், அரசு ஆகியோர் இடம்பெற வேண்டும்.
- ஊடகநெறிகள் மற்றும் நேர்மை பற்றி முக்கிய கவனம் செலுத்தி தீவிரமான பயிற்சித் திட்டங்களை பத்திரிகையாளர் அமைப்புக்கள் தொடங்க வேண்டும்.

நாட்டின் இருபெரும் அரசியல் கட்சிகள் மிகவும் ஆக்கப் பூர்வமாகச் செயல்பட்டு, தங்களது பகைமையால் பொதுமக்களின் சமூக நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து இடையூறு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதை இந்தப்பரிந்துரைகள் யாவும் வலியுறுத்துகின்றன என்பதைச் சொல்லத் தேவையில்லை. இதற்கு நாட்டின் அண்மைக்கால வரலாறு பற்றியும், விடுதலைப் போரின் மதிப்பு பற்றியும், பொதுமக்களின் அமைப்புக்களில் தலையிடக் கூடாது என்பது பற்றியும் இரண்டு அரசியல் கட்சிகளுக்கு இடையே குறைந்தபட்ச உடன்பாடு ஏற்பட வேண்டும்.

# இந்தியா

## அடிப்படை வலுவானாலும் பிரச்சினைகள் தொடர்கின்றன

இந்தியாவில் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு பாதுகாப்பாக வலுவான அரசியல் சாசன விதிகளும், நீதிமன்றத் தீர்ப்புக்களும் உள்ளன ஆனால் ஒரு துணைக் கண்டம் போல் பரந்து விரிந்துள்ள நாட்டில் சில வட்டாரங்களில் பத்திரிகைச் சுதந்திரம் என்பது வெற்று முழக்கமாகவே தென்படுகிறது. அதே போல ஊடகங்கள் செயல்படுவதில் கட்டுப்படுத்தப் படாத வர்த்தக நோக்கு பெருகிவிட்டதால் பத்திரிகைச் சுதந்திரம் அச்சுறுத்தப்படும் வட்டாரங்களும் உள்ளன. இந்தியா பெரிய நாடு என்பதால், ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தின் ஊடக சுதந்திரம் பற்றிய பிரச்சினைகள், தேசியப் பொதுக் கருத்து உருவெடுக்கும் தலைநகரில் அல்லது பெரு நகரங்களில் உள்ள பிரச்சினைகளில் எதிரொலிப்பது இல்லை. வெகுதொலைவில் உள்ள இடங்களில் பத்திரிகையாளர்கள் காட்டும் தொழில் முறைத் துணிச்சலுக்கும், கடமைப் பற்றுக்கும், தலைநகரில் ஆதரவைத் திரட்டப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

சர்வதேசப் பத்திரகையாளர் சம்மேளனத்துடன் சார்புடைய இந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் ஒரு கிளையான தில்லி பத்திரிகையாளர் சங்கம் 2010 ஜூலையில், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் ஒருமாதகாலமாக நடந்துவந்த மக்கள் கலவரங்களினால், பத்திரிகைத்




அண்மைக் கலகங்களை ஒடுக்க விதிக்கப்பட்ட எண்ணற்றகட்டுப்பாடுகளை சமாளிக்க காஷ்மீர் பத்திரிகையாளர்கள் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. *(புகைப்படம்: ரீசிங் காஷ்மீர்)*

துறைக்கு ஏற்பட்டுவிட்ட சூழ்நிலையைக் கண்டித்து ஓர் அறிக்கை வெளியிட்டது. காஷ்மீர் பள்ளத்தாக்கில் ஜூன் தொடக்கத்தில் இருந்தே பரவலாக ஆர்ப்பாட்டங்கள். நடைபெற்றதால் அதன் நகரங்களில் ஊரடங்கு உத்தரவு போடப் பட்டிருந்தது. ஜூலை 7 அன்று, ராணுவம் அழைக்கப்பட்டது. பொதுமக்களின் நடமாட்டத்திற்கு கட்டுப்பாடு விதித்து ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்பட்டது. பத்திரிகையாளர்களின் அனுமதிச் சீட்டுக்கள் ஏற்கப்பட மாட்டாது என்றும் செய்தி பரவியது. காஷ்மீரின் எல்லா ஊடகப் பணியாளர்களும் வீட்டிற்குள்ளே அடைபட்டுக் கிடந்தனர். தலைநகர் ...நகரில் உள்ள புகைப்படக் கலைஞர்கள் அன்றைய நிகழ்வுகளைப் படம்பிடிக்க முற்பட்டபோது தாக்கப் பட்டனர். சிலருடைய தொழில்முறை சாதனங்களை பாதுகாப்புப் படையினர் பறிமுதல் செய்தனர்.

இதே நிகழ்வுகள் ஜூலை 6 அன்றும் தொடர்ந்தன. அன்றைய தினம் தேசிய, சர்வதேச மற்றும் உள்ளூர் ஊடகங்களைச் சேர்ந்த 12 புகைப்படக் கலைஞர்கள் ஆர்ப்பாட்டங்களைப் பதிவு செய்தபோது அவர்களை பாதுகாப்புப் படைகள் தாக்கின. ஊடகங்களின் கவனம் இல்லா விட்டால் ஆர்ப்பாட்ட வேகம் விரைவிலேயே தணிந்துவிடும் என்று மூத்த போலீஸ் அதிகாரிகள் பேசுவதைக் கேட்க முடிந்தது.

தலைநகர் தில்லியில் உள்ள இந்திய பிரஸ்கிளப், எடிட்டர்ஸ் கில்டு என்ற இரண்டு முக்கிய அமைப்புகள் காஷ்மீரி பத்திரிகையாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் கூட்டு நடவடிக்கையில் சேர்ந்து கொண்டன. காஷ்மீரில் உள்ள, பத்திரிகையாளர்கள் முன்பு எப்போதும் இருந்திரா வகையில். ஒற்றுமையைக் காட்டியதால்தான் புதுதில்லியைச் சேர்ந்த பத்திரிகைத் அமைப்புக்கள் முனைப்பாகவும், வலுவாகவும் ஆதரவு காட்டின. காஷ்மீர் வட்டாரத்தின் இருபதாண்டுகள் கலவரங்களில் முதல்தடவையாக, ஐந்து வெவ்வேறு அமைப்புக்கள் ஒரேமேடையில் ஒன்று திரண்டு. அடிப்படைத் தொழில் சுதந்திரம் வேண்டுமெனப் பொதுக் கோரிக்கை விடுத்தன. இந்த அமைப்புக்களில் காஷ்மீர் பிரஸ் கில்டு, காஷ்மீர் பிரஸ் அசோஷியேஷன், காஷ்மீர் பிரஸ் போட்டோ கிராபர்ஸ் அசோஷியேஷன், காஷ்மீர் வீடியோ கிராபர்ஸ் அசோஷியேஷன், காஷ்மீர் ஜர்ணலிஸ்ட்ஸ் கார்ப்ஸ் என்பன அடங்கும். இவ்வாறு பலவாக இருந்த அமைப்புக்கள் முன்பு நிலவிய வேற்றுமைகளை எடுத்துக் காட்டின. ஆனால் ஒற்றுமைதான் வலிமை என்பதை இவர்கள் புதிதாகப் புரிந்து கொண்டதல் புதிய பாதை போடும் திறனைப் பெற்றனர்.

இந்த ஒன்றுபட்ட நடவடிக்கையால் ஓரளவுக்கு சர்வதேச ஆதரவும் கிடைத்தது. இந்தியாவின் அதிகாரம் பெற்ற அமைப்புக்களும் கணிசமான நுட்ப உணர்வுடன் செயல்பட்டன. ஊடகங்களின் நடத்தைகளையும், நெறிகளையும் மேற்பார்வை யிடுவதற்காக உருவாக்கப்பட்ட இந்தியபிரஸ் கவுன்சில், ஊடக சுதந்திரம் மற்றும் பத்திரிகையாளர்களின் பாதுகாப்பு பற்றியும் தனது பார்வையைச் செலுத்தியது. அது நிலைமையைப் புரிந்துகொண்டு, எல்லா நிகழ்வுகள் பற்றிய மகஜரைச் சமர்ப்பிக்கும்படி காஷ்மீர் பத்திரிகையாளர் அமைப்புகளிடம் கூறியது. பத்திரிகையாளர்களின் பணிச் சூழல் மேம்படத் தொடங்கியது. ஆனால், 2010 செப்டம்பரில் ஈத் உல்ஃபித்ர் பண்டிகையின்போது தெருக்களில் இறங்கி மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ததால் நிலைமை மோசமடைந்தது. 2008 நவம்பரில் இம்பாலில் இளம் பத்திர்கையாளர் கொன்சம் ரிஷிகாந்த சிங் பாதுகாப்புப் படையினரால் கொலை செய்யப் பட்டதற்கு கண்டனம் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது. இரண்டு நாட்கள் கழிந்து, இருபதாண்டுகளில் இல்லாத மிக அதிகமான பொதுமக்கள் உயிரிழப்பு காஷ்மீர் பள்ளத்தாக்கில் நிகழ்ந்தது. நியுயார்க்கில் இஸ்லாமிய மறைநூல் அவமதிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தெருக்களில் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்த போது போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் ஆர்ப்பாட்டக் காரர்கள் 15 பேர் கொல்லப்பட்டனர்.

தில்லி பத்திரிகையாளர் சங்கம் இந்தியாவின் மத்திய அரசிடம் வன்மையான எதிர்ப்பைத் தெரிவித்துவிட்டு, மணிப்பூர் மாநிலப் பத்திரிகையாளர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடத்தியது. மேலும், இந்திய எடிட்டர்ஸ் கில்டும் தீவிரமாகி, 2010 பிப்ரவரி 17 அன்று மணிப்பூர் மாநில அரசு உள்ளூர் ஊடகங்கள் எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளை அலட்சியப்படுத்துவதாகக் கூறி அதைக் கண்டித்து காட்டமாக ஓர் அறிக்கை வெளியிட்டது. குறிப்பாக, அரசுசாராத ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகளுக்கு எதிராக பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாக்க அரசு அதிகாரிகள் தவறி விட்டதும் தொல்லையைத் தூண்டியது.

## பத்திரிகைச் சுதந்திரத்திற்கு பலமுனை நெருக்குதல்கள்

மணிப்பூர் பத்திரிகையாளர்களின் நிலை குறிந்து ஆழந்த கவலை தெரிவித்த கில்டு, அரசுக்கும் மணிப்பூர், ஊடகங்களுக்கும் இடையே விரியும் இடைவெளியை இணைக்க உடனடிப் பரிகார நடவடிக்கைகல் எடுக்கப்பட வேண்டும் எனக் கோரியது.

2009 நடுவில், மணிபபூர் பத்திரிகையாளர்கள் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளை JFJ விசாரித்தபோது, மாநிலத் தலைநகர் இம்பாலைச் சேர்ந்த மூத்த செய்தி ஆசிரியர் ஒருவர் தமது தற்காப்புக்காக ஆயுதம் வைத்துக் கொள்ள விரும்புவதாகக் கூறினார். அந்தரங்கமாகப் பேசிய அவர், தற்காப்புக்காகக் கூட தாம் ஆயுதம் வைத்துக் கொண்டால், போராளி அல்லாத பொதுமக்களில் ஒருவர் என்று கருதப்படும் உரிமையையும், அதுசார்ந்த பாதுகாப்பு வசதிகளையும் இழக்க நேரிடும் என்பதை அறிந்திருப்பதாகக் கூறினார். ஆனால், இந்தியாவிலேயே தொல்லை சூழ்ந்த ஒருமாநிலத்தில் செய்தி ஆசிரியராக இருப்பதன் நடைமுறை இன்னல்களைப் பார்க்கும்போது, கொள்கைகளைப் பலி கொடுக்கத் தயாராகி விட்டதாக அவர் சொன்னார் 1980-களில் பஞ்சாப் தீவிரவாதம் தொடங்கியதில் இருந்து, செய்தி ஆசிரியர்கள் தங்களது பாதுகாப்புக்காக ஆயுதக் காவலர்களைக் கோரும் பழக்கம் இருந்துவந்துள்ளது. மணிப்பூர் பத்திரிகையாளர்களோ இதுபற்றிப் பேசினாலும், ஆயுதக்காவலை இதுவரை கோரவில்லை என்பது பாராட்டிற்குரியது. இதற்குக் காரணம், மணிப்பூரின் ஒரு மூத்த செய்தி ஆகிரியர் குறிப்பிட்டது போல, பொதுமக்கள் சமூகம் தங்களுக்கு ஆதரவாக நிற்கிறது. ஆயுதம் ஏந்திய தீவிரவாதக் குழுக்களின் அச்சுறுத்தல்களில் இருந்து மக்கள் பாதுகாப்பார்கள் என்ற நியாயமான நம்பிக்கை அவர்களுக்கு உள்ளது.

2010 மே நடுவில், நாகா மக்கள் வசிக்கும் எல்லாப் பகுதிகளையும் உள்ளடக்கி, கிரேட்டர் நாகாலாந்து தனிமாநிலம் கோரி நீண்டகாலமாகப் போராடி வரும் டி. முய்வா, மணிப்பூரில் தமது சொந்த கிராமம் உள்ள உக்ருல் மாவட்டத்திற்குப் போக விரும்பினார். இது மணிப்பூரில் கலந்துவாழும் பல இன மக்களிடையே குழப்பத்தை உண்டாக்கும் முயற்சி எனச் சந்தேகித்த மணிப்பூர் மாநில அரசு தடைவிதித்தது. நாகாலாந்து-மணிப்பூர் எல்லையில் ஆர்ப்பாட்டம் செய்த முய்வா ஆதரவாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இருவர் கொல்லப்பட்டனர். மணிப்பூருக்கு பொருட்களை நாகாலாந்து வழியாகக் கொண்டு செல்லும் சாலையில் முய்வாவின் நாகா தேசிய சோஷலிஸ்ட் கவுன்சில் பொருளாதார முற்றுகை போட்டது. மணிப்பூரில் விரைவிலேயே உணவும், இதர அத்தியாவசியப் பொருட்களும் கையிருப்பு குறைந்தது. ஆயுதக் காவலர் வாகனங்களின் பாதுகாப்புடன் மாற்று வழியில் பொருட்களைக் கொண்டுவர மாநில அரசு வழிகண்டது. ஆனால் ஆயுத நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்திய அரசு அச்சுறுத்தியதை அடுத்து, மூன்றுமாதங்களாக நடந்த முற்றுகை தளர்த்தப்பட்டது. ஆனாலும் இதனால் மணிப்பூர் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. எல்லாப் பிரிவு மக்களைப் போலவே பத்திரிகையாளர்களும் இந்த இயல்புக்கு மாறான பகைமையினாள் துன்பப்பட்டனர். முற்றுகை தொடங்கிய சில வாரங்களிலேயே, மணிப்பூர் நாளேடுகளின் செய்திக் காகிதக் கையிருப்பு குறையத் தொடங்கியது. பல மணிப்பூர் நாளேடுகல் பக்கங்களின் எண்ணிக்கையைக் குறைத்தன. பத்திரிகைகளை மூடிவிடலாமா என்று பல செய்தி ஆசிரியர்கள் சிந்திக்கத் தொடங்கிய வேளையில முற்றுகை தளர்த்தப்பட்டது.

உள்ளூர் பத்திரிகைகளுடன் மணிப்பூர் மக்களுக்கு உள்ள உறவில் பலவகையான மாற்றங்கள் ஏற்பட்டன. மே நடுவில், முய்வாவின் உக்ருல் மாவட்டத்தில் உள்ள மக்கள், அவருடைய வருகைக்கு விதிக்கப்பட்ட தடைக்கு எதிராக ஆதரவைத் திரட்டினார்கள். மலைப்பகுதி பழங்குடிகளின் உணர்வுகளை மணிப்பூர் பள்ளத்தாக்குப் பகுதி பத்திரிகைகள் புரிந்து கொள்ளவில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டினர். என்எஸ்ஸி என் முற்றுகையால் அன்றாட வாழ்க்கை பாதிக்கப் பட்டது. மணிப்பூர் பள்ளத்தாக்கு மக்கள் எடுத்த இந்த எதிர் நடவடிக்கையால் மலை மாவட்டங்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் செல்வது தடுக் கப்பட்டது. இந்தத் தடுக்கப்பட்ட பொருட்களில் செய்திப்பத்திரிக் கைகளும் அடங்கும்.

மணிப்பூர் பள்ளத்தாக்கில் உள்ள தீவிரத் தொண்டர்களின் இந்த எதிர் முற்றுகையால் உக்ருல் பகுதி மக்கள் குழுக்களும், பத்திரிகையாளர் அமைப்புக்களும் ஆத்திரமடைந்தனர் பூர்வ குடிகளுக்கு இடையிலான ஒருமைப் பாட்டை எடுத்துக் காட்டும் வகையில், இம்பாலில் தலைமையிடம் கொண்ட அனைத்து மணிப்பூர் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் மாநிலம் முழுவதும் தனக்குள்ள தொடர்புகளைப் பயன்படுத்தி, செய்தி ஏடுகள் பறிமுதல் செய்யப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்தது. எந்தவகையான தகவல் அல்லது கருத்தாக இருந்தாலும் அவற்றின் பரிமாற்றத்தை இனமோதல்கள் தடுக்கக்கூடாது என்ற பொது உணர்வு வலுவடைந்தது. செய்தி ஏடுகள் தடுக்கப்பட்டதை உக்ருல் மாவட்டபத்திரிகையாளர் சங்கமும் கண்டித்தது.

உக்ருல் மாவட்டத்திற்குள்ளே, பத்திரிகையாளர்களின் கருத்தொற்றுமையால் மக்கள் குழுக்களுக்கு இடையே பதற்றம் தணியவில்லை. நாகா மக்களின் நியாயமான கோரிக்கைகளை மணிப்பூர் மக்கள் அலட்சியப்படுத்துவதாகக் கூறி, மணிப்பூர் பள்ளத்தாக்கிறகு பத்திரிகைகள் செல்லும் பாதையை அடைத்துவிட்டனர். மணிப்பூர் பள்ளத்தாக்கு பத்திரிகைகள் செய்தி வெளியிடும் முறையினால் உக்ருல் மாவட்நாகா பழங்குடிகள் மகிழ்ச்சி அடையவில்லை என்று இம்பால் பிரிபிரஸ் தெரிவித்தது. இந்த வகையில், பத்திரிகையாளர்கள் சாதித்ததற்கு நேர்மாறான கருத் தொற்றுமை கிளர்ச்சியாளர் களிடையே ஏற்பட்டது.

பத்திரிகையாளர்களை எதிர்நோக்கும் மிரட்டல்களில் இருந்து பாதுகாக்க ஒரு முறை தேவை என்று அனைத்து மணிப்பூர் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் நீண்ட காலமாகக் கோரி வந்தது. சமூகக் குழுக்களிடையே வேற்றுமை இருந்தாலும், அடையாளத்தை உறுதிப்படுத்த பலதரப்பட்ட வரலாறுகளும், பண்பாடுகளும், இனங்களும் போராடிய போதிலும் பத்திரிகையாளர்களுக்கு இடையே ஒரு பொது நோக்கு அடிக்கடி ஏற்பட்டு வந்துள்ளது.

2008, நவம்பர் 20 அன்று, மூன்று நாட்களுக்கு முன்பு கொன்னம் ரிஷிகாந்த சிங் என்ற இளம் பத்திரிகையாளர் கொல்லப் பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மணிப்பூர் மாநில பத்திரிகைகள் அனைத்தையும் மூடுவதாக அனைத்து மணிப்பூர் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் அறிவித்தது. ஆறுநாட்கள் கழித்து, இந்த வேலை நிறுத்தம் காலவரம்பின்றி நீட்டிக்கப்பட்டது. 11 நாட்கள் கழித்து, ரிஷிகாந்தா கொலை வழக்கை மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சிபிஐ-யிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற முக்கிய கோரிக்கையை அதிகாரிகள் ஏற்றனர் ஆயினும் 2010 பிப்ரவரி 17 அன்று இந்திய எடிட்டர்ஸ் கில்டு குறிப்பிட்டதைப் போல, ரிஷிகாந்தா கொலையில் குற்றவாளிகளை கண்டுபிடிப்பதில் முன்னேற்றம் ஏற்படவில்லை. நிலைமை அப்படியே தொடர்கிறது. இதற்கு முன்பும், மணிப்பூரில் பத்திரிகைகளின் முழுமையான வேலை நிறுத்ததிற்கு அனைத்து மணிப்பூர் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் அழைப்பு விடுத்திருந்தது. மணிப்பூரில் உள்ள பல்வேறு கிளர்ச்சிக் குழுக்களில் ஏதாவது ஒன்று, தங்களது கோரிக்கைகளை ஆதரிக்கும்படி பத்திரிகையாளர்களுக்கு நெருக்குதல் கொடுத்து வந்துள்ளன. மேலும், அரசின் ஆணைகளை மீறும் கிளர்ச்சிக் குழுக்களுக்கு ஊடகங்கள் மூலமாக பேசும் உரிமை இல்லை என்று மாநிலப் பாதுகாப்பு அதிகாரிகள் கருதுகின்றனர். இது போல, அரசு அதிகாரிகளுக்கும், கிளர்ச்சிக் குழுக்களுக்கும் இடையே பத்திரிகையாளர்கள் சிக்கித் தவிக்கின்றனர்.

மணிப்பூர் பத்திரிகையாளர்கள் 2005 ஜூனில் ஒன்றுபட்டு, நேர்மையாக செய்தி வெளியிடும் நெறிகள் பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள். விரிவான வாதங்களும், எதிர் வாதங்களும் நடத்தி, மணிப்பூர் சூழலில், நிருபர்தொழிலின் நாணயத்தில் அக்கறை கொண்டு இந்தத் தீர்மானம் தயாரிக்கப்பட்டது. (பெட்டிச் செய்திபார்க்க). அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நெறி முறைகள் மற்றும் விதிகள் பற்றி பரவலாக விளம்பரப்படுத்தப்பட்டது. கிளர்ச்சிக் குழுக்களும், பாதுகாப்பு முகமைகளும் தங்களுடைய முரண்பட்ட கோரிக்கைகளை ஊடகங்களால் எந்த அளவுக்கு வெளியிட இயலும் என்பதை அவை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்யப் பட்டது. இந்த வரம்புக்கு மேலே கோரிக்கைகளை வலியுறுத்தினால், மணிப்பூர் மாநில ஊடகங்கள் தங்களுடைய வேறுபாடுகளை மறந்து ஒட்டுமொத்தமாக அவை மூடப்படும் என்று கூறப் பட்டது. எனினும் இந்த நெறிகள் செயல்படுத்தப்பட்ட இரண்டாண்டுகளை மதிப்பிட்டதில் பத்திரிகையாளர்களின் தொழில் நேர்மைக்கு அல்லது உயிருக்கு பாதுகாப்பைத் தருவதில் இந்த நெறிகள் பயனுள்ளவை என்பதை நிரூபிக்க எதுவும் நிகழவில்லை. "பத்திரிகைச் சட்டம் மற்றும் விதிகளை மாற்றாமல் அப்படியே வைத்துக் கொண்டு, தங்களுடைய செய்திகளை எவ்வாறு வெளியிடச் செய்வது என்ற தந்திரத்தைத் தீவிரவாதிகள் நன்கு அறிந்திருந்தனர்". ஊடகங்களின் அன்றாடச் செயல்பாட்டுக்கு கணிசமான இடர்கள் உள்ள இடம் மணிப்பூர். செய்திகள் வெளியாவதைப் பாதிக்கும் வகையில் எண்ணற்ற வெளிநெருக்குதல்கள் அங்கு பத்திரிகைத் தொழிலுக்கு ஏற்பட்டுள்ளன. ஆனால், பத்திரிகையாளர்களுக்கு ஊறுகளை ஏற்படுத்தும் மையமான இடமாக அஸ்ஸாம் இருந்துவருகிறது.

## அஸ்ஸாம்: தண்டனை இல்லாச் சூழல்

2009, ஜூலை 29 அன்று, அஸ்ஸாம் தலை நகர் குவஹாத்தியின் ஒரு விசாரணை நீதிமன்றம், அஸோமிய பிரதிதின் என்ற பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர் பராக் குமார்தாஸை கொலை செய்த ஒரே குற்றவாளியை விடுவித்தது. தாஸ் அனைவரும் அறிந்த ஒரு பத்திரிகையாளர்; பொது அறிவு ஜீவி. அஸ்ஸாமி மொழியில் மிகவும் அதிகமாக விற்பனையாகும் பத்திரிகையின் ஆசிரியர். மனித உரிமைகள் இயக்கத்தில் தீவிரமானவர். அரசின் பாதுகாப்பு உத்திகளை வெளிப்படையாக விமர்சித்தவர். குறிவைத்துக் கொலைகளை நிகழ்த்திட தலைமறைவு சக்திகளைப் பயன்படுத்தும் அரசு அதிகாரிகளின் உத்தியை அவர் குறை கூறினார். அஸ்ஸாமின் தேசிய அடையாளத்திற்காக அவர் தீவிரமாகப் போராடினார். இந்தியக் கட்டுப் பாட்டுக்கு அப்பாற்பட்டு தனியாக ஓர் இறையாண்மையை பெற்றிருக்க அஸ்ஸாமிற்கு உரிமை இருப்பதாக அவர் வாதிட்டார். 1996 மே அன்று அவர் குவஹாத்தியின் நெரிசல் மிருந்த இடத்தில் தமது மகளை பள்ளியில் இருந்து அழைத்துச் சென்றபோது சுட்டுக் கொல்லப்பட்டார். அதே நாளில்தான், அஸ்ஸாமில் புதிய அரசு பதவியேற்றது தற்செயலானது.

அஸ்ஸாம் பத்திரிகையாளர்கள் சார்பாக அஸ்ஸாம் பத்திரிகையாளர் சங்கமும் (JUA), அஸ்ஸாம் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கமும்

1 மணிப்பூரில் உள்ள பத்திரிகையாளர்களைப் பேட்டி கண்டும், சாங்கை எக்ஸ்பிரஸ் மற்றும் இம்பால் ஃப்ரீ பிரஸ் என்றஉள்ளூர் பத்திரிகைகளில் வெளியான செய்திகளின் அடிப்படையிலும் இந்த நிகழ்வுகள் உருவாக்கப்பட்டன. குறிப்பான சில செய்திகள் www.e-pao.net என்றதளத்தில் கிடைக்கின்றன. இவை மணிப்பூர் தொடர்பான பெரும்பாலான முக்கிய செய்திகளை காட்டுகின்றன. பள்ளத்தாக்குப் பத்திரிகைகள் மீது மலைப் பகுதி மக்களுக்கு உள்ள அதிருப்தி பற்றி காண்க சாங்கை எக்ஸ்பிரஸ் செய்திகள் http://www.e-pao.net/GP.asp?src=14..180510. மே 10 மற்றும் http://www.e-pao.net/ GP.asp?src=14..180510.may10. பள்ளத்தாக்கு விதித்த எதிர் முற்றுகை மற்றும் செய்தி ஏடுகள் வினியோகத்தில் அதன் பாதிப்பு பற்றி பார்க்க: http://www.e-pao.net/GP.asp?src=19..230510.may10.

2 அஞ்சுலிகா திங்னம், "மீடியா ஆண்டர் ஸீஜ், ஆயுத மோதல் நிலைமையில் ஊடகச் செயல்பாடு: மணிப்பூர் பற்றிய ஆய்வு" சமூக நடவடிக்கை தொகுப்பு 57, இதழ் 4, அக்டோபர்-டிசெம்பர், பக்கம் 382.

3 Ibid, பக்கம் 391.

## மணிப்பூர்: ஊடக சுயாட்சியைப் பாதுகாப்பது

தீவிரவாதக் குழுக்கள் பல்கிப் பெருகுவதால் மணிப்பூர் பத்திரிகையாளர்கள் ஒன்றுபட்டு 2001 அக்டோபரில் ஒரு நடத்தை நெறியை வகுத்தனர். அதை 2005 ஜூனில் அனைத்து மணிப்பூர் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் (AMWJU)சில திருத்தங்களுடன் உறுதிப்படுத்தியது. பலவகையான குறிக்கோள்கள் இருந்ததால், புதிய செய்திவெளியிடும் நடைமுறையில் பத்திரிகையின் தலையங்க சுதந்திரத்தை வலியுறுத்துவதோடு, எதிர்ப்புக் குரலையும் நியாயமான அளவு வெளியிட்டு, பத்திரிகைகள் வன் செயலுக்கான கருவிகளாக எந்தச் சூழலிலும் கருதப்படவில்லை என்பதை எடுத்துக்காட்ட இந்த நடத்தை நெறி உருவாக்கப்பட்டது.

எந்த எதிர்ப்புக் குரலுக்கு சட்டப்படி அதன்நிலை எதுவாயினும் ஊடகங்களின் வாயிலாக எடுத்துக் கூறுவதற்குரிய நியாயமான கோரிக்கை இருகிறது என்பதைக் கண்டறிவது ஊடகங்களுக்கு முதல் சவாலாக இருந்தது. எனவே எந்த ஓர் அறிக்கைக்கும் அடையாளம் காணக்கூடிய ஆதாரம் இருக்க வேண்டும் என்ற அடிப்படைத் தகுதியை ஊடகநுகள் விதித்தன. ஆதாரம் அடையாளம் காணப்பட்டுவிட்டால், அந்த அறிக்கைக்கு எந்த அளவுக்கு ஊடகங்களில் இடம் தரப்பட வேண்டும் என்பதை செய்தி ஆசிரியர் தீர்மானிப்பார். அதேபோல, செய்தியாளர் கூட்டத்திற்கு விடுக்கப்படும் எந்த ஓர் அழைப்புக்கும் அடையாளம் காணத்தக்க நபர் அல்லது அமைப்பு ஆதாரமாக இருக்க வேண்டும். செய்திக் குறிப்பு உரிய கையெழுத்துடன், அமைப்பின் கடிதத் தாளில் அதன் முத்திரையுடன் வெளியிடப் பட்டிருக்க வேண்டும். எல்லாச் செய்திக் குறிப்புக்களையும், அழைப்பிதழையும் சம்பந்தப்பட்ட அமைப்புக்களே கொடுக்க வேண்டும். எந்த ஒரு நிலைமையிலும் எந்த ஒரு பத்திரிகையாளரோ, ஊடக அமைப்போ அரசியல் குழுவின் சார்பில் பொறுப் பேற்கக்கூடாது. மேற்கண்ட நிபந்தனைகளுக்க உட்பட்டு. மாறுபட்ட அறிக்கைகள் ஒரே நேரத்தில் வருமானால். செய்தி ஆசிரியர் தமது விருப்பு வெறுப்பைப் பயன்படுத்தி, பெரும்பாலான நிலைகளில், மாறுபட்ட இரு அறிக்கைகளுக்கும் சம இடம் தரவேண்டும். எந்த ஓர் அறிக்கையிலும் மனித உயிர்களுக்கு அச்சுறுத்தல் இருக்குமானால், அந்த அறிக்கையில் இருந்து புண்படுத்தும் பகுதியை நீக்கும் உரிமை செய்தி ஆசிரியருக்கு உண்டு.

பரபரப்பான செய்திகள் அல்லது நிகழ்வுகள் அல்லது நபர்களை அறிவற்ற முறையில் சித்தரிக்கும் செய்திகள் வருமானால், இந்திய பிரஸ் கவுன்சில் வகுத்துள்ள பத்திரிகையாளர்களுக்கான நடத்தை நெறிகளை எல்லா ஊடகங்களும், தொழில் முறைப் பத்திரிகையாளர்களும் பின்பற்ற வேண்டும். வெளியிடப்படும் செய்தியின் உள்ளடக்கம் மற்றும் தொனிக்கு, புண்படுத்தக் கூடிய பகுதிகளை நீக்குவது மற்றும் சேர்ப்பது தொடர்பான செயலுக்கு, செய்தி ஆசிரியரே முழுப் பொறுப் பேற்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட செய்தியால், வகுப்புக்கலகம் ஏற்படும் அல்லது ஏதாவது ஒரு சமூகம் புண்படும் என எதிர்ப்பார்த்தால் அல்லது கவலை ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட பகுதிகளை நீக்கும் உரிமை செய்தி ஆசிரியருக்கு உள்ளது. செய்தி ஆசிரியருக்கு கடிதம் எழுதி தீர்க்கப்பட வேண்டிய சிறுசிறு குறைகள் என்றால், குறை கொண்டுவருபவர் முதலில் அனைத்து மணிப்பூர் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தை அணுக வேண்டும். அதை அந்தச் சங்கம் ஒளிவுமறை வற்ற விதிகளின் அடிப்படையில் தீர்க்க வேண்டும். நடத்தை நெறி மீறப்பட்டிருக்கு மானால் உரிய தடைகள் விதிக்கப்பட வேண்டும். நடத்தை நெறி திரும்பத்திரும்ப மீறப்படுவதைத் தடுக்க கூடிய தடைநடவடிக்கைகளை எடுப்பது அனைத்து மணிப்பூர் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்திற்கு மிகவும் கடினமான வேலையாக உள்ளது. மற்றுமொரு கஷ்டம் என்னவென்றால், மாநில அரசும், மாநிலம் முழுவதும் ஈடுபடுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு முகமைகளும் பின்பற்றும் பிடிவாதப் போக்காகும். 2007 ஆகஸ்டில், தடைசெய்யப்பட்ட அமைப்புக்கள் அல்லது ஆட்கள் சம்பந்தப்பட்ட எந்த ஒரு ஊடகப்பொருளையும் பறிமுதல் செய்யலாம் என்ற ஆணையை மணிப்பூர் அரசின் உள்துறை பிறப்பித்தது.

போராடி, வழக்கை சிபிஐ-விசாரணைக்கு மாற்றும்படி மாநில அரசை வற்புறுத்தி வெற்றிபெற்றனர். சிபிஐ உள்ளூர் நெருக்குதல்களுக்குப் பணியாத ஒரு முகமை என்று கருதப்படுவது. ஆனாலும் ஒ ரே குற்றவாளியை விடுதலை செய்த நீதிபதி, தமது தீர்ப்பில் புலனாய்வு முகமையைத் தனியாகக் கவனம் செலுத்தி கண்டித்தார். அது சாட்சிகளை பாதுகாக்கத் தவறியதால், பல முக்கிய சாட்சிகள் சரியாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டனர் என்று கூறி, எண்ணற்ற நடைமுறைக் குறைபாடுகளை நீதிபதி சுட்டிக்காட்டினார். 1990-க்குப் பிறகு கொலை செய்யப்பட்ட 20 பத்திரிகையாளர்களில் தாஸ் முக்கியமானவர்.

அஸ்ஸாமில் ஐக்கிய அஸ்ஸாம் விடுதலை முன்னணி (அல்ஃபா)யும், எண்ணற்ற போடோ குழுக்களும் மிகவும் தீவிரமான கிளர்ச்சி அமைப்புக்களாக உள்ளன. இந்த அமைப்புக்கள் தங்களுடைய அரசியல் மற்றும் பிரதேச செயல் திட்டங்கள் குறித்து கடுமையாக முரண்பட்டிருந்தாலும், நெருக்கடி நிலையில் தங்களுக்குள் ஒத்துழைக்கின்றன. அல்ஃபா அமைப்புக்குள் பல்வேறு பிரிவுகள் தோன்றிவிட்டன. அந்த அமைப்பின் சரணடைந்த உறுப்பினர்கள், அரசின் கிளர்ச்சி ஒழிப்பு முயற்சிகளுக்கு உறுதுணையாக செயல்படுகின்றனர். போடோ குழுக்கள் பிளவுபட்டுள்ளன. ஒரு குழு 2003, இல் மாநில அரசுடனும், மத்திய அரசுடனும் சண்டைநிறுத்த உடன்படிக்கை செய்துகொண்டு, போடோ பழங்குடி பிரதேச சுயாட்சி உடன்படிக்கை பற்றி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. மற்றொரு குழு தொடர்ந்து கிளர்ச்சி நடவடிக்கையில் ஈடுபட்டது. ஆனால் 2008 டிசம்பரில் மீண்டும் பிளவுபட்டது. ஒரு குழு ராணுவ நடவடிக்கை நிறுத்திவைக்கப்பட வேண்டும் எனக் கூறியபோது, இன்னொரு குழு அதற்கு எதிராக இருந்தது.

2008 நவம்பரில் ஜக்ஜித் சைக்கியா, 2009 மார்ச்சில் அனில் மொஜூம்தார் என்ற அஸ்ஸாமின் இரண்டு பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர். இவர்கள் இருவரும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ இந்தக் கிளர்ச்சியாளர்களுடன் தொடர்பு கொண்டிருந்ததாக காவல்துறை நம்புகிறது. இந்தத் தொடர்புகள் பற்றி பரவலாகப் பேசப்பட்டது. ஆனாலும், இந்தப் பத்திரிகையாளர்களைக் கட்டுப் படுத்த பத்திரிகை நிர்வாகங்களோ, உள்ளூர் அதிகாரிகளோ எதுவும் செய்யவில்லை.

பத்திரிகையாளர்களை அரசு முகமைகளும், வணிக நிறுவனங்களும் தடைசெய்யப்பட்ட தலைமறைவுக் குழுக்களுடன் தொடர்பு கொள்ள பயன்படுத்துகின்றன என்ற ஒரு ஆழ்ந்த பிரச்சினையை இது சுட்டிக் காட்டுகிறது. கொலை செய்யப்பட்ட இந்த இரு பத்திரிகையாளர்களும் தலைமறைவுக் குழுக்களுடன் தொடர்பு வைத்திருந்தனர் என்பதற்கு முடிவான சான்றுகள் முன்வைக்கப்படவில்லை. அந்தச் சான்றுகள் கிடைத்தாலும் கொலைக்குப் பொறுப்பானவர்களைத் தேடிக்கண்டுபிடிக்க முடிவதில்லை.

### வாழ்க்கைப் பிரச்சினைகளும், நன்னெறிச் சிக்கல்களும்

இந்தச் சட்டவிவகாரங்களும், நீதிப்பிரச்சினைகளும் தீர்க்கப்பட்ட போதிலும், அவை பத்திரிகைத் தொழிலின் நன்னெறிகள் பற்றிய சிக்கலைச் சுட்டிக்காட்டுகின்றன. இந்தியாவின் பெரு நகரங்களில் உள்ள பத்திரிகையாளர்கள், சிறிய நகர்களில் இருக்கும் தங்களது தோழர்களின் மோசமான ஊதியம், நியமனக் கடிதம் இல்லாதது,






மணிப்பூர் தலைநகரில் 2008 நவம்பரில் ரிஷிகாந்த் சிங்கின் கொலை, எட்டுநாள் போராட்டத்திற்கு வழிவகுத்தது *(புகைப்படம்: சோபாபதி சமோம்)*

பணிநிலைமைகள் வரையறுக்கப் படாதது போன்ற நிலைமைகளைக் கண்டு கொள்வதே இல்லை. மேலும், சிறுநகரப் பத்திரிகையாளர்கள் வெளியிடும் செய்திகள் தொடர்பாக உள்ளூரில் ஏற்படும் பதற்றங்களை எதிர் நோக்கும் நிலையில், ஊடக உரிமையாளர்கள் அவர்களுக்கு ஆதரவு தருவார்கள் என்ற உத்தரவாதமும் கிடையாது.

வன் முறையைத் தீவிரமாகப் பரப்பும் கருத்து தவிர, எந்த ஒரு அரசியல் கருத்தையும் பத்திரிக் கையாளர் கொண்டிருப்பதற்குத் தடை விதிக்கும் தொழில் முறை நடத்தை நெறி எதுவும் இல்லை. ஆனால், சைக்கியாவும், மஜூம்தாரும் கிளர்ச்சிக் குழுக்களுடன் தொடர்பு வைத்ததன் மூலம் பல நடத்தை நெறிகளை மீறி விட்டார்கள் என்பதை அஸ்ஸாம் பத்திரிகையாளர்கள் ஒப்புக் கொள்கின்றனர். அவர்கள் இருவரும் இந்தக் குழுக்களின் சார்பாக நிதிபேரங்களில் ஈடுபட்டிருக்கலாம், அதனால் இவர்கள் தங்களது பத்திரிகையாளர் அடையாளத்தைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கலாம் என்றும் கூறுகின்றனர்.

பத்திரிகையாளர்களுக்கும் தலைமறைவுக் குழுக்களுக்கும் இடையே உள்ள இத்தகைய தொடர்புகள் தவிர, கட்டாயங்களின்பேரில் ஒரு சார்பான நிலை எடுக்கும் தேவையும் பத்திரிகையாளர்களுக்கு உண்டாகிறது. மோசமான ஊதியம், பணிநிலைமை, தரமாள பத்திரிகைத் தொழிலின் தேவைகளை ஊடக நிறுவனங்கள் அலட்சியப்படுத்துவது போன்ற காரணங்களினால், பத்திரிகையாளர்கள் தங்களுக்கு அடிப்படை பொருள் பாதுகாப்பும் பராமரிப்பும் கிடைக்க உத்தரவாதம் தரும் அரசியல் செயல்திட்டங்களுடன் நேரடியாகவோ, மறை முகமாகவோ தொடர்பு கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அண்மைக் காலத்தில் அஸ்ஸாமில் கலவரம் மிகுந்த மாவட்டங்களில் பத்திரிகையாளர்கள் ஊதியமின்றி செயல்படுவது தெரிய வந்துள்ளது. ஏனெனில் பொருள் ஆதாயத்திற்காக ஊடக அடையாளத்தை மறைத்துச் செயல்படும் போது அதிக வருமானம் கிடைக்கிறது.

அஸ்ஸாமில் அல்ஃபா, போடோ குழுக்கள் நீங்கலாக வேறு பல தீவிரவாதக் குழுக்களும் அரசியல் இயக்கங்களும் கலகத்தைத் தூண்டும் ஆற்றலுடன் இயங்கிவருகின்றன. பெரும்பாலான இந்தக் குழுக்கள் இன அடிப்படையில் தோன்றியவை. இவற்றின் விசுவாசங்கள் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கும். பாதுகாப்பாக இருக்கம் விரும்பும் பத்திரிகையாளர்கூட, அதிகாரிகளுடனோ, கிளர்ச்சிக் குழுக்களுடனோ மோதிக் கொள்ளக் கூடாது என்று நினைக்கும் பத்திரிகையாளர் கூட, இவ்வாறு அடிக்கடி மாறும் விசுவாசங்களினால் ஆபத்துக்கு உள்ளாகின்றனர்.

இந்தியாவின் தொலைதூர எல்லைகளில் நடக்கும் இந்த நிகழ்வுகள் தேசிய ஊடகங்களில் பெரிதாக இடம் பெறுவதில்லை. தீவிரவாதக் குழுக்களின் மறைமுக அச்சுறுத்தல்களாலும், ஏதாவது ஒரு பக்கம் சார்பு எடுக்கும் இயற்கையான மனித உணர்வுகளாலும், இந்த மாவட்டங்களில் இருந்து செய்தி அனுப்புவது ஓர் இடையறாத போராட்டமாகும். கிளர்ச்சிக் குழுக்களுடன் தொழில் முறையில் நியாயமான தொடர்பு கொண்டால் கூட, பாரபட்சமாக இருப்பது போன்றஒரு தோற்றம் ஏற்பட்டு விடுகிறது. அந்த அளவுக்கு நிலைமை குழப்பமாக உள்ளது. பிரதேச மற்றும் அரசியல் பிரச்சினைகள் பற்றி அடிக்கடி கிளர்ச்சிக் குழுக்களுடன் அரசு அதிகாரிகள் பேச்சு நடத்துகின்றனர். ஆனால் இந்தக் குழுக்கள் பற்றி பாரபட்ச மற்றதுல்லியமான முறையில் ஊடகங்களில் வெளியிட்டால் கூட, முரண்படும் கட்சிகளினால் அது ஊக்குவிக்கப்படுவதில்லை. எதிர்க்கருத்தை ஒலிக்கும் வாய்ப்பு மறுக்கப்படுகிறது. தீவிரவாத இயக்கங்கள் பற்றி இவ்வாறு பாரபட்சமின்றி சித்தரிக்க முனையும் பத்திரிகையாளர்களுக்கு ஆபத்து ஏற்படுகிறது. இதனால், பொதுவிவாதம் நடத்தி, போட்டிக்குழுக்களை பேசவைத்து பிரச்சினைக்குத் தீர்வுகாணும் ஒரு வழி அடைக்கப்படுகிறது.

## ஜம்மு-காஷ்மீர் : திறக்கும் வாய்ப்புக்கள்

காஷ்மீர் பள்ளத்தாக்கில் தீவிரம் தலைதூக்கியதில் இருந்து இருபதாண்டுகளில், அரசு முகமைகளுடனான ஊடகங்களின் உறவுகளில் பல்வேறு கட்டங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 1996-இல் ஜம்மு-காஷ்மீரில் தேர்தல் நடைபெற்றபோது, பல்வேறு நெருக்குதல்களை சமாளிக்க வேறுவழியின்றி ஊடகங்கள் மூடப்பட்டன. 2002 தேர்தலின்போது, ஓரளவு குறைவான நெருக்குதல்களுக்கு இடையே ஊடகங்கள் செயல்பட்டன.

மத அமைப்பு ஒன்றுக்கு நிலம் கொடுக்கப்பட்டது தொடர்பாக மக்களின் ஆர்ப்பாட்டங்கள் பரவலாக நீண்டகாலம் நடந்த பிறகு 2008 தேர்தல் நடைபெற்றது. காஷ்மீர் பள்ளத்தாக்கில் மக்களின் ஆர்ப்பாட்டங்களுடன் தொடங்கிய அரசியல் சிக்கலில் ஒரு மாற்றம் ஏற்பட்டு, ஜம்மு வட்டாரத்தில் எதிர்நடவடிக்கைகள் தொடங்கின. சிக்கல் தொடங்கிய சில நாட்களில், காஷ்மீர் பள்ளத்தாக்கில் கூடிய மூத்த பத்திரிக்கையாளர்கள், காஷ்மீர் பள்ளத்தாக்கிலும் ஜம்மு

வட்டாரத்திலும் நிகழும் வன்செயல்கள் தொடர்பாக, காஷ்மீர் மக்களிடமும், ஊடகங்களிடமும் முற்றிலும் ஒளிவுமறைவின்றி அரசு நடந்து கொள்ள வேண்டும் எனத் தீர்மானித்தனர்.

எனினும், நிலைமை மோசமடைந்து, ஆகஸ்ட் 23 அன்று பள்ளத்தாக்கில் ஒட்டுமொத்தமாக ஊரடங்கு உத்தரவு போடப்பட்டது. ஸ்ரீநகரில் உள்ள செய்தி ஏடுகள் தொடர்ந்து ஆறு நாட்களாக அச்சிடமுடியாமல், பத்திரிகையாளர்கள் மற்றும் இதர ஊடக ஊழியர்களின் நடமாட்டம் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டது. உள்ளூர் கேபிள் செய்தி சேனல்கள் ஒளிபரப்பை நிறுத்த வேண்டும், அல்லது கேளிக்கை நிகழ்ச்சிகளை மட்டுமே ஒளிபரப்ப வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டன.

ஆகஸ்ட் 24 அன்று சிறப்புப் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட காவலர்கள் குறிவைத்துத் தாக்கியதில் 15 பத்திரிக்கையாளர்களும், ஊடக ஊழியர்களும் காயமடைந்ததாக கூறப்பட்டது. அவர்களில் சிலர் தங்களது பணியிடத்துக்குப் போய்க் கொண்டிருந்த பிடிஐ மற்றும் யுஎன்ஐ என்றஇரண்டு முக்கியமான செய்தி நிறுவனங்களின் பத்திரிக்கையாளர்கள்.

ஸ்ரீநகரின் மூன்று ஆங்கிலப் பத்திரிகைகளான கிரேட்டர் காஷ்மீர், எதாலத், ரைஸிங் காஷ்மீர் ஆகியன ஊழியர்கள் வேலைக்கு வரமுடியாமல் போனதால் பத்திரிகையை வெளியிட முடியவில்லை என்று தங்களது வலைதளங்களில் அறிவித்தன. உருது மொழிப் பத்திரிகைகளும் முடக்கப்பட்டன. ஊரடங்கு நேரத்தில் சில ஊழியர்கள் அலுவலகத்திற்கு உள்ளேயே தங்கி விட்டதால் செய்தி வலைதளங்கள் சற்றேபுதுப்பிக்கப்பட்டன. அதேவேளையில், தாக்குதல்கள் மற்றும் எதிர்த்தாக்குதல்களின் சுழற்சியில் சிக்கி, ஜம்முவில் இருந்து வெளியாகும் 'டெய்லி எக்ஸெல்ஸியர்' என்றபத்திரிக்கையின் இதழ்கள் ஸ்ரீநகரில் ஒரு பகுதியில் எரிக்கப்பட்டன. அந்தப் பத்திரிக்கை காஷ்மீர் பள்ளத்தாக்கு ஆர்ப்பாட்டங்களை அலட்சியப்படுத்துவதாகக் கூறப்பட்டது.

தகராறுகள் நடைபெறும் பெரும்பாலான இடங்களில் இருப்பது போலவே, காஷ்மீரிலும் தங்களின் நலன்களுக்குப் பொருந்தாத மாற்றுக் கருத்துக்களை ஒலிக்கவிடாமல் மறுக்கும் போக்கு காணப்படுகிறது. சாதாரண மக்களின் குரல் ஊடகங்களின் வாயிலாக ஒலிக்க வேண்டுமா அல்லது ஒடுக்கப்பட வேண்டுமா என்றகேள்வி காஷ்மீர் ஊடகங்களிடையே தீவிரவாதமும் கிளார்ச்சியும் பரவத்தொடங்கியதில் இருந்து எழுந்துள்ளது. ஊடகங்களின் மூலம் ஒலிக்கும் மக்களின் குரல் ஓரளவுக்கு ஒடுக்கப்பட்டுவிட்டது என்று காஷ்மீர் பத்திரிகையாளர்கள் கருதுகின்றனர். உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேசச் சித்திரிப்புக்கள் பல ஒன்றுக் கொன்று மாறுபடுவது காஷ்மீர் பத்திரிகையாளர்களுக்கு பெரும் தடங்கலாக உள்ளது. பாகிஸ்தான் நீண்ட நெடுங்காலமாக காஷ்மீரில் அரசியல் குறுக்கீடு செய்வது மற்றும் அந்த நாட்டின் முடிவில்லாத கொந்தளிப்புக்கள் பற்றிய சித்தரிப்புக்கள் இவ்வாறு முரண்படுகின்றன.

பூசல்கள் நிலவும் இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் இருப்பதைப் போலவே, காஷ்மீரிலும் செய்திகளைத் தரும் முக்கிய ஆதாரங்களாக அரசும் பாதுகாப்பு முகமைகளும் உள்ளன. அரசின் கருத்துக்களுக்கு ஏற்ப செய்திவெளியிடுமாறு பத்திரிகையாளர்கள் கட்டாயப் படுத்தப்படுகின்றனர். இதனால் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. ஏனெனில், அதிகாரிகள் தரும் தகவல்கள் அடிக்கடி பத்திரிக்கையாளர்கள் திரட்டும் தகவல்களுக்கு மாறுபட்டவையாக உள்ளன. இதனால் நடத்தை நெறிமுரண்கள் ஏற்படுகின்றன.

இந்த முரண்களை காஷ்மீர் ஊடகங்கள் கடுமையான மொழியைப் பயன்படுத்தி தீர்த்தன. ஆயினும், அவை அதிகாரிகள் நிர்ணயிக்கும் சித்திரிப்புக்களுக்கும் இடம் தர வேண்டியிருந்தது. எனினும், கட்டாயத்தின் பேரில் சில செய்திகள் வெளியிடப்படுகின்றன என்பதைத் தெளிவாகக் காட்டும் வகையில் பத்திரிக்கைகள் செயல்பட்டன. காஷ்மீர் பிரச்சினை உன்னிப்பான சர்வதேசப் பார்வையில் இருப்பதாலும், அரசு முகமைகள் பொதுமக்களின் ஆய்வுக்கு அதிகம் உட்படுவதாலும், அதிகாரிகள் இறங்கிவர வேண்டியிருந்தது. எனினும், இந்தப் பேச்சு வார்த்தை நடைமுறையினால் பத்திரிக்கையாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவில்லை.

காஷ்மீரின் தகுநிலை பற்றி விவாதிக்கும்போது "தாவா" என்பதா, பிரச்சினை என்பதா என்றசொற்றொடர் தொடர்பாகவும், கிளர்ச்சி செய்பவர்களை "பயங்கரவாதி" என்பதா, "தீவிரவாதி" என்பதா என்பது பற்றியும் இந்தப் பதற்றங்கள் தொடங்கின. பத்திரிகை யாளர்கள் அனுப்பும் செய்திகளை ஜம்மு, புது தில்லி போன்ற தொலைவுப் பகுதிகளில் உள்ள பத்திரிக்கை அலுவலகங்களில் அவர்களின் சக பத்திரிகை ஆசிரியர்கள் சுருக்கி, தலைப்பிட்டு, பக்கங்களில் சேர்க்கிறார்கள், அவர்களுக்கு நிருபர்களின் அன்றாட கட்டாயங்கள் புரிவதில்லை.

தீவிரவாதமும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் ஊடகங்கள் மீது தணிக்கையை விதிக்கிறது. தீவிரவாதக் குழுக்களுக்கு ஏற்புடைய தாக இல்லாத செய்திகளை, குறிப்பாக காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தானுக்கு உள்ள ஈடுபாட்டை தட்டிக் கேட்கும் செய்திகளை அவைகடுமையாகக் கட்டுப்படுத்தின. காஷ்மீரின் மரியாதைக் குரிய தலைவர்கள், இந்தியாவையும் பாகிஸ்தானையும் பிரிக்கும் எல்லைக் கோட்டுக்கு அப்பால் சிறுமைப்படுத்தப்படும்போது அல்லது இந்தியா மற்றும் மேலை நாடுகளின் தூதாண்மை நெருக்குதல்களால் தீவிரவாதிகளுக்குப் பயிற்சி தரும் முகாம்கள் மூடப்படும்போது, தீவிரவாதத்தின் லட்சியம் பற்றிய பொதுமக்களின் கருத்துக்களைக் கட்டுக் குலையாமல் பார்த்துக்கொள்ளுமாறு காஷ்மீர் ஊடகங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டன. ஏதாவது ஒரு தரப்பை மகிழ்விக்காத வகையில் செய்தி வெளியிட்டால் கொடூரமான பலம் பயன்படுத்தப்படலாம் என்றஅச்சத்தின் விளைவாக, பத்திரிக்கையாளர்கள் உண்மையைச் சொல்வதற்குப் பதிலாக, தாங்களாகவே சுயதணிக்கை செய்து கொண்டனர்.

காஷ்மீர் பத்திரிகையாளர்கள் அரைகுறைகுற்றச் சாட்டுக்களுக்காக நீண்டகாலம் சிறையில் இருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. நேர்மை, நீதிக்காக பத்திரிகையாளர்கள் கிளர்ச்சியில் ஈடுபட முயற்சித்தால் பழிவாங்கும் மிரட்டல்களும் விடுக்கப்பட்டன. 2004 செப்டம்பரில் "சாட்டன்" என்றநாளேட்டின் மக்பூல் சாஹில் என்பவரை போலீஸ் பிடித்துச் சென்றது. அவர் மீது குற்றச் சாட்டுக்கள் பதிவு செய்யப்படாத போதிலும், அவர் பக்கத்துப் பகைநாட்டுக்காக வேவு பார்த்தார் என்று வதந்தி பரப்பட்டது. அவருக்காக காஷ்மீர் பத்திரிகையாளர்கள் போராடத் தொடங்கினார்கள். ஆனால் அதனால் பெரிய பாதிப்பு ஏற்படாமல் போயிற்று. தேசியத்தலை நகரில் உள்ள ஊடகங்கள் சாஹிலுக்காக குரல் எழுப்பிய போதுதான் அவருக்கு விடிவு பிறந்தது. அதேபோல, காஷ்மீர் டைம்ஸ் என்றநாளேட்டின் தில்லி நிருபர் இஃப்திகார் கிலானி 2002 ஜூனில் தில்லியில் உள்ள அவருடைய வீட்டில் இருந்து கைது செய்யப்பட்டார். மூன்று மாதங்கள் கழித்து, மிகவும் பழமையான அரசு ரகசியச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டது. அவரை குற்றத்தில் சம்பந்தப்படுத்துவதாகக் கூறி கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் ஆவணங்கள், பொது இடங்களில் கிடைப்பவைதான். அவை பல்வேறு வலைதளங்களில் இருந்து எடுக்கப்பட்டவை அவருக்காக காஷ்மீரிலும் தில்லியிலும் உள்ள பல்வேறு பத்திரிகையாளர் குழுக்கள் போராடின. அதையடுத்து 2003 ஜனவரியில் அவர் விடுவிக்கப்பட்டார். அவர் மீது வழக்கு இல்லை என்று அரசு கூறிவிட்டது. கிலானியின் விடுதலைக்கு காஷ்மீர் பத்திரிகையாளர்கள் மேற்கொண்ட இயக்கங்களும், போட்ட மனுக்களும் முக்கியமானதாக இருந்தன. ஆனால் தேசியத்தலை நகரில் இருக்கும் மக்கள் அமைப்புக்களும், பத்திரிகையாளர்களும் சேர்ந்த போதுதான் இந்த இயக்கங்களுக்குத் தேவையான உந்து விசை கிடைத்தது.

## மத்திய இந்தியாவில் மாவோயிசக் கிளர்ச்சி

மத்திய இந்திய சம வெளியில் உள்ள சத்தீஸ்கர், ஒரிசா, ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம், ஜார்க்கண்ட் ஆசிய ஐந்து மாநிலங்கள், பத்திரிகைத் தொழிலுக்கு மற்றொரு ஆபத்து மிகுந்த இடங்களாகி விட்டன. எடுத்துக் காட்டாக, 2009 அக்டோபரில் இந்த வட்டாரத்தில் மிகப் பெரிய கிளர்ச்சியை ஒடுக்கும் நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டது. அப்போது, சத்தீஸ்கரைச் சேர்ந்த மூன்று பத்திரிக்கையாளர்களுக்கு அவர்கள் வெளியிடும் அலல்து ஒலிபரப்பும் செய்திகளுக்கு ஆதாரம் என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று போலீஸ் நோட்டீஸ் அனுப்பியது. அந்த மாநிலத்தின் தென்கோடியில் உள்ள பகுதியில் பாதுகாப்புப் படைகள் நடத்திய கிளர்ச்சி ஒடுக்கும் நடவடிக்கையில் ஏதுமறியா கிராம வாசிகள் கொல்லைப் பட்டார்கள் என்று கூறிய செய்திக்கு ஆதரத்தை வெளியிடுமாறு மிக அதிகமாக விற்பனையாகும் இந்தி நாளேடுகளின் இரண்டு நிருபர்களிடம் கூறப்பட்டது. இன்னொரு தனிவழக்கில், உள்ளூர் அரசியல்வாதி ஒருவர் கொலை செய்யப்பட்டதற்கு மாவோயிசம் பொறுப்பேற்றதை ஒளிபரப்பிய தொலைக்காட்சி நிருபரை காவல் நிலையத்தில் ஆஜராகும்படி காங்க்கெர் மாவட்ட காவல்துறைகூறியது. அண்டை மாநிலமான ஆந்திரப் பிரதேச மாவட்டங்களில் இருந்து கிளர்ச்சி ஒடுக்கும் நடவடிக்கைகள் பற்றி செய்தி சேகரிக்க வரும் நிருபர்களைச் சுட்டுத்தள்ளுமாறு சத்தீஸ்கர் மாநிலத்தின் உயர் போலீஸ் அதிகாரி உத்தர விட்டதாகக் கூறப்படுகிறது.

சத்தீஸ்கர் உழைக்கும் பத்திரிக்கையாளர் சங்கம் அக்டோபர் 12 அன்று கூடி அச்சுறுத்தல்கள் பற்றி விவாதித்தது. தகராறு முற்றிவிட்ட நிலையில் ஊடகச் சுதந்திரம் பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த பெரிய அளவில் இயக்கம் நடத்துவது என அது தீர்மானித்தது.

மாவோயிசக் கிளர்ச்சிப் பகுதிகளில் உள்ள பத்திரிக்கையாளர்களை அரசு அதிகாரிகள் சகித்துக்கொள்ளாமல் அடிக்கடி துன்புறுத்தினார்கள். “சூழ்நிலை நெருக்குதல்களுக்கு நடுவில் ஊடகங்கள் செயல்பட வேண்டியிருப்பதாக” ஜக்தல்பூர் பத்திரிக்கையாளர் ஒருவர் கூறினார்.

2009 செப்டம்பரில், சத்தீஸ்கரின் தென்பகுதியில் உள்ள கச்சன்பள்ளி கிராமத்தில் பெரிய தொரு பாதுகாப்பு நடவடிக்கையை பாதுகாப்பு முகமைகள் நடத்தின. 30 மாவோயிசக் கிளர்ச்சியாளர்களும், 6 பாதுகாப்புப் படைவீர்களும் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டது. சில நாட்கள் கழித்து, 2009 அக்டோபர் 1 அன்று, தண்ட்டேவாடா மாவட்டத்தின் கோம்பட் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் மாவோ கிளர்ச்சியாளர்கள் எனக் கூறப்படும் 12 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த இரண்டாவது சம்பவத்தில் காலில் கடுமையாகக் காயமடைந்த சாட்சி ஒருவரை தில்லியில் உள்ள மருத்துவ மனைக்கு மாற்றும்படி உச்சநீதிமன்றம் உத்தர விட்டது. மாநிலத்தலைநகர் ராய்ப்பூர் வழியாக அந்தப் பெண் கொண்டு செல்லப்பட்டபோது, அவரைக் காண விரும்பிய பத்திரிக்கையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இது பற்றிய புகார்கள் வந்ததாகவும், உள்ளூர் எஸ்பி ஒருவரைக் கொண்டு விசாரித்ததில், அந்த சாட்சிக்கு சிகிச்சை தரும் டாக்டரின் அறிவுரைப்படியே ஊடகங்களை நெருங்க விடவில்லை என்று தெரிய வந்ததாகவும் கிளர்ச்சியால் பாதிக்கப்பட்ட பஸ்தர் பகுதி ஐஜி கூறினார்.

ஜனவரி 17 அன்று, கோம்பட் சம்பவத்திற்கு சாட்சியாக இருந்த இந்தப் பெண்ணும், மற்றஇரு சாட்சிகளும் நடமாட முடியாமல் போலீஸ் கட்டுப்படுத்தியதாக முதன்முதலாக பெரிய தேசியப்பத்திரிக்கையான தி இந்து செய்தி வெளியிட்டது[4]. மேலும், சம்பவம் நடந்த இடத்திற்கும் உள்ளேயும், வெளியேயும் மக்கள் நடமாட முடியாமல் சத்தீஸ்கர் போலீஸ் கட்டுப்படுத்துவதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. தண்ட்டேவாடா நகரில் இருந்து, கோம்பட் கிராமத்திற்கு அருகில் உள்ள வட்டாரத் தலைநகரான கோன்ட்டா வரையிலும் நெடுஞ்சாலை நெடுகிலும் ஆயுத போலீஸ் அணிவகுத்து நின்றதாக ஜனவரி 15 அன்று தி இந்து செய்தி வெளியிட்டது. அவர்கள் வாகனங்களைத் தடுத்து நிறுத்தி, அவற்றில் சென்றவர்களை விசாரித்தனர். தண்ட்டேவாடாவைச் சேர்ந்த அனில் மிஸ்ரா என்றநை துனியா நாளேட்டின் நிருபருடனும், யஷ்வந்த் யாதவ் என்றநவபாரத் நாளேட்டின் நிருபருடனும் பயணம் செய்த தி இந்து நிருபர், வழியில் தடுத்து நிறுத்தப்பட்டார். கோம்பட் கிராமத்தில் பெரியதொரு நக்சல் ஒழிப்பு நடவடிக்கை நடைபெறுவதால் அங்கு யாரும் செல்ல முடியாது என்று அவர்களிடம் கூறப்பட்டது.

மிஸ்ராவும், யாதவும் தன்ட்டேவாடா மாவட்டத்தின் சிஎஸ்பிஎஸ் உறுப்பினர்கள். கோம்பட் சம்பவம் பற்றியும், பின் விளைவுகள் பற்றியும். உள்ளூர் ஊடகங்களினால் தொடர்ந்து செய்தி சேகரிக்க முடியவில்லை. ஏகப்பட்ட தடங்கல்கள் ஏற்பட்டன. முதலில், சம்பவம் நடந்த இடத்திற்குப் போக விடாமல் தடுக்கப்பட்டனர். உண்மையான தகவல்கள் தரப்படவில்லை, இரண்டாவதாக, மாவோ காலகப்பகுதிகளில் பெரிய நடவடிக்கை தொடங்கிய 2009 ஜூலை முதல் குறைகளைச் சுட்டிக்காட்டி செய்தி வெளியிடுவதை ஒடுக்கும் சூழவ் இருந்தது. கடைசியாக, மாவோயிசம் இந்தியாவின் உள்நாட்டுப்பாதுகாப்புக்கு ஒரு சவால் என்று அரசின் செய்தித்தொடர்பாளர் திரும்பத்திரும்ப எச்சரிக்கைகளை விடுத்து, மக்களின் மனங்களில் ஆயுத மோதல்கள் பற்றிய சந்தேகம் வளர்க்கப்பட்டது என்று அவர்கள் கூறினார்கள்.

போதுமான நிதி ஆதாரம் இல்லாத சிறிய உள்ளூர் ஊடகங்களினால் கோம்பட் சம்பவம் பற்றிய செய்திகளை வெளியிடுவதில் உள்ள இடர்களைத் தாங்க முடியாமல் இருந்தபோது பல இடங்களில் இருந்து வெளியிடப்படும் தேசிய நாளேடான தி இந்து அந்த இடர்களை ஏற்க முடிந்தது. இந்த வகையில், நிலைமை மாறி, 2009 ஜூலை கிளர்ச்சி ஒழிப்பு நடவடிக்கை பற்றிய செய்திகளை புதுவேகத்தோடு உள்ளூர் ஊடகங்கள் வெளியிடத் தொடங்கின. 2009 ஜனவரியில், சத்தீஸ்கர் மாநிலத்தின் தென் பகுதியில் உள்ள சிங்காவரம் என்றகிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கை கோம்பட் சம்பவம் போல மாறியது. தீவிரமான கிளர்ச்சியாளர்களுக்குப் பதிலாக ஏதுமறியா பழங்குடி கிராம வாசிகள் குறிவைத்துத் தாக்கப்பட்டனர். அப்போது உள்ளூர் பத்திரிக்கைகள் துருவித்துருவி செய்திகளை வெளியிட்டன. இதனால் ஊக்கம்பெற்றமக்கள் அமைப்புக்கள் உயர் நீதிமன்றத்தில் ரிட்மனுக்களைப் போட்டன. மாநில அரசு பதில் சொல்ல வேண்டும் என அவை கோரின. மாவோ கிளர்ச்சிப் பகுதிகளைச் சேர்ந்த பத்திரிக்கைகள் தங்களது கம்பீரத்தை உணர்ந்து. செயல்படவேண்டிய தேவை ஏற்பட்டது. 2009 ஜூலைக்குப்பின் தோன்றிய பாதுகாப்பற்றஉணர்வினால் பயப்படக்கூடாது என்றநிலை ஏற்பட்டது.

## பாதுகாப்புச் சட்டங்களினால் வளரும் பாதுகாப்பற்றநிலை

பூசல்கள் நிலவும் வட்டாரங்களில் சிறப்பு பாதுகாப்புச் சட்டங்கள் அமலில் உள்ளன. காஷ்மீரில் பொதுப் பாதுகாப்புச் சட்டம், காஷ்மீரிலும், வடகிழக்கு மாநிலங்களிலும் உள்ள ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம், சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள சத்தீஸ்கர் சிறப்புப் பொது பாதுகாப்புச் சட்டம் ஆகியன இவற்றில் அடங்கும். “சட்ட விரோத நடவடிக்கைகள்” நடப்பதாகச் சந்தேகிக்கப்படும் குறிப்பிட்ட நிலைமைகளில் பாதுகாப்புப் படைகள் தண்டனைக்கு இடமின்றிச் செயல்பட உதவுவது இந்தச் சட்டங்களின் பொதுப் பண்பாகும். இதில் ‘சட்ட விரோத நடவடிக்கைகள்’ என்பது விரிவான அர்த்தத்தைக் கொண்டது. தீவிரவாத நடவடிக்கை பற்றி உள்ளது உள்ளபடி செய்தி வெளியிட்டால் கூட, தடை செய்யப்பட்ட ஒரு அமைப்புக்கு “உதவுவதாகவும், தூண்டி விடுவதாகவும்” குற்றம் சுமத்தப்படலாம்.

சில நேரங்களில், மாவோ கிளர்ச்சிப் பிரச்சினை உள்ள வட்டாரங்களில் அரசாட்சி பற்றிய பொதுப் பிரச்சினைகள் குறித்து செய்தி வெளியிட முடியாமல் தடுக்கப்படுவதாக பத்திரிக்கையாளர்கள் கருதுகின்றனர். மாவோயிச கிளர்ச்சி உள்ள பகுதிகளில் அரசாட்சி நிறுவனங்கள் காணப்படவில்லை என்றும், அங்கு பாதுகாப்பு மற்றும் நலவாழ்வுப் பயன்களை அரசு அமைப்புகளினால் வழங்கமுடியாமல் போனது வன்முறைக்குக் காரணமாக இருக்கலாம் என்றும் இந்தியப் பிரதமரும்

4. செய்தியை தி இந்து வலைதளத்தில் பார்க்க http://www.theindu.com/2010/01/17/stories/2010011761241000.htm



**லோக்மத் ஐபிஎன் டிவி, மகாராஷ்ட்ர மாநிலத்தில் ஆளும்கட்சியாக இருந்த ஒரு கட்சியை விமர்சித்து விவாத நிகழ்ச்சியை ஒளிபரப்பியபோது தாக்குதல்கள் தொடர்வதை உணர்ந்தது.** *(புகைப்படம்: தீபக் சல்வி)*

உள்துறைஅமைச்சரும் உட்பட உயர் அதிகாரிகள் ஒப்புக் கொண்டுள்ளனர். இந்த நிலைமையால், தொல்லைகள் மிகுந்த இடங்களில் நியமிக்கப்படும் அதிகாரிகள் பொதுமக்களின் ஆய்வுக்கு உட்படுகின்றனர். இந்தச் சிக்கலைத் தவிர்ப்பதற்கு கிடைக்கக் கூடிய வழிகளை எல்லாம் அவர்கள் பயன்படுத்துகின்றனர். அவற்றில் ஒன்றுதான் குறைகூறி எழுதும் நிருபர்களை மாவோயிச அனுதாபிகள் என்று குற்றம் சாட்டுவது. தகராறுகள் மிகுந்த பகுதிகள் என்று வழக்கமான முறையில் கருதப்படாத இடங்களில் இருந்தும் பத்திரிகையாளர்களுக்கு அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதற்கு ஒரு உதாரணம், வட இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தின் லக்கிம்பூர் கெரி மாவட்டத்தைத் சேர்ந்த அமர் உஜாலா என்னும் இந்தி நாளேட்டின் நிருபர் நிலு எனப்படும் சமியுதீன். 2004-இல் இருந்தே பல தடவை உள்ளூர் போலீஸால் மிரட்டப்பட்ட இவர், 2005 மே மாதம் வேலையில் இருந்து வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தபோது, சிறப்புப் போலீஸ் படையைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோரால் கடத்தப்பட்டார்.

உள்ளூர் போலீசினால் ஏது மறியா மக்கள் துன்புறுத் தப்படுவதாகவும், யதேச்சதிகாரமாக போலீஸ் செயல்படுவதாகவும் பல செய்திகளை சமியுதீன் வெளியிட்டதைத் தொடர்ந்து அவரைத் தொல்லைகள் சூழ்ந்தன. 2006 மே மாதம் அவர் கடத்தப்பட்டது மரணத்தில் முடிந்திருக்கலாம் என்று தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் புலனாய்வில் தெரிய வந்தது. அவர் தமது உயிருக்கு ஆபத்து இருப்பதாக தேசிய மனித உரிமைகள் ஆணையத்திடம் முன்னெச்சரிக்கையுடன் முறைப்படி புகார் பதிவு செய்து விட்டார். இந்த கடத்தல் விவகாரம் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் விசாரணையில் இருப்பதாகத் தெரியவந்ததும் அவர் விடுவிக்கப்பட்டார்.

தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, தனது தீர்ப்பை வழங்கியது. இது ஒரு நிருபரின் செய்தி வெளியிட்டு தகவல் தெரிவிக்கும் உரிமை சம்பந்தப்பட்ட அசாதாரணமான வழக்கு என்று அந்தத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டது. சமியுதீனுக்கு ரூ. 5,00,000 இழப்பீடு வழங்கி, ஆறு வாரங்களுக்குள் அதுபற்றித் தெரிவிக்குமாறு உத்தரப் பிரதேச மாநில அரசுக்கு அது ஆணையிட்டது.

மற்றொரு முக்கிய நடவடிக்கையாக, இந்திய பிரஸ் கவுன்சில் சமியுதீன் வழக்கை விசாரித்தது. அடுத்த ஐந்தாண்டுகளுக்கு அவருடைய பாதுகாப்பு பற்றி ஆறுமாதங்களுக்கு ஒரு முறைஅறிக்கை தர வேண்டும் என மாநில அரசு அதிகாரிகளிடம் அது கூறியது. தனது சொந்த வழியில் இந்த வழக்கை விசாரித்த இந்திய பிரஸ் கவுன்சில், “சமியுதீன் வழக்கு மிகவும் அழர்வமானது. அது பற்றி தீவிர கவனம் செலுத்த வேண்டும்” எனக் கூறியது.

இதன் மூலமும், வேறு பல வழக்குகள் வாயிலாகவும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் மற்றும் இந்திய பிரஸ் கவுன்சிலின் பத்திரிக்கைச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பங்களிப்பு வெளியே தெரியவந்தது. எனினும், இந்த அமைப்புக்களின் அதிகார வரம்புகள் குறித்து ஒரே சீரான தரங்கள் இருக்கவில்லை. உண்மையைக் கண்டறிந்து, மத்தியஸ்தம் செய்துவைப்பதில் இவை நீண்டநெடும் நடை முறையைப் பின்பற்றுவதால் அவசரமான நிலைமைகளில் இவை பயனற்றுப் போயின.

அஸ்ஸாமிலும், இதர வடகிழக்கு மாநிலங்களிலும் ஆயுதம் எந்திய கிளர்ச்சியாளர் குழுக்களிடம் இருந்து பத்திரிக்கையாளர்களுக்கு மிரட்டல்கள் வருவது பீதியூட்டும் அளவுக்கு அதிகரித்தை அடுத்து அங்கு பத்திரிக்கைச் சுதந்திரத்தின் நிலை பற்றி ஆராய 2007-இல் குழு ஒன்றைஇந்திய பிரஸ் கவுன்சில் அமைத்தது. இந்தக் குழுவின் விசாரணை அறிக்கைகளும், விரிவான பரிந்துரைகளும் இந்திய பிரஸ் கவுன்சிலின் 2007-08 ஆண்டறிக்கையில் வெளியிடப்பட்டன.[5]

இந்தியா முழுவதிலும் உள்ள பத்திரிக்கையாளர்கள் தங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க இந்திய பிரஸ் கவுன்சில் மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். சில பகுதிகளில், பத்திரிக்கைச் சுதந்திரம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் மாநில மனித உரிமைகள் அமைப்புக்களும் தலையிட்டுத் தீர்த்து வைக்கின்றன.

## பயங்கரவாதத் தாக்குதல்களும் ஊடகங்களும்

2010 பிப்ரவரி 13 அன்று புணே நகரில் ஒரு பிரபல உணவுவிடுதியில் குண்டுவெடித்தது. இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பர வரலாற்றில் நெருடல்களாக இருக்கும் சிலபிரச்சினைகள் பற்றியாவது பேசித்தீர்க் காலம் என்று மீண்டும் பேச்சுக்களைத் தொடங்கும் நிலையில் இருந்தன. இந்த நல்லிணக்க வாய்ப்புக்களை முறியடிக்கும் ஒரு தீவிர முயற்சியாகத்தான் புணே குண்டுவெடிப்பு நிகழ்த்தப்பட்டது என்று பெரும்பாலான பத்திரிக்கைகள் கருதின.

புணே குண்டுவெடிப்பில் காயமுற்றவர்கள் சிகிச்சை பெற்றமருத்துவமனைகளுக்குச் செல்ல விரும்பிய நிருபர்கள் தடுக்கப்பட்டனர். பயத்தின் பிடியில் சிக்கி வேதனைப்படுகிறவர்களைச் சந்திக்க அவர்களுக்கு அனுமதி இல்லை என்று கூறப்பட்டது.

மறுநாளே, பத்திரிக்கையாளர் கூட்டத்தை நடத்திய புணே காவல்துறைஆணையர் சுருக்கமாகக் கேள்விகளுக்குப் பதிலளித்தார். போலீஸ் செயல்பட்ட விதம் பற்றிய கேள்விகளைத் தடுத்தார். குண்டுவெடிப்புக்களை நேரில் கண்ட சாட்சிகளைச் சந்திக்க பத்திரிக்கையாளர்களுக்கு அனுமதி தரப்படாதது பற்றிய கேள்விகளை நிராகரித்தார். வேண்டுமென்றேஊடகங்களை விலக்கிவைத்ததாக புணே நகரக் காவல்துறைஆணையர் கூறினார். அவ்வாறு அனுமதித்தால் புலன் விசாரணை பாதிப்புக்குள்ளாகும் என்று காரணம் கூறினார். என்னும், போலீஸ் மூலமாகத்தான் பாதிக்கப்பட்டோருக்கு ஏதாவது நிவாரணம் கிடைக்கும் என்பதால் அவர்களுக்கு அனுமதி மறுக்க முடியாது என்றார் அவர்.

5. செய்தி கிடைக்கிறது: http://presscouncil.nic.in/HOME.HTM.

குண்டுவெடிப்புக்கள் நிகழ்ந்து இரண்டு வாரங்கள் கழித்தும், குற்றம் இழைத்தவர்களைக் கண்டறிவதற்கான தடயங்கள் எதையும் புனே போலீசினால் தேடிக்கண்டுபிடிக்க முடியவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டது. மே 24 அன்று சந்தேகத்திற்குரியவர் என்றமுறையில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அவருக்கு ஜூன் 15 அன்று ஜாமீன் விடுதலை வழங்கப்பட்டது. போலீஸ் கொடுத்த சான்றுகளை நம்ப முடியவில்லை என்று அவரை ஜாமீனில் விட்ட செஷன்ஸ் நீதிமன்றம் கூறிவிட்டது.

இந்தியா கடந்த 10 ஆண்டுகளில் மற்றநாடுகளை விட அதிகமாகப் பயங்கரவாதத்திற்கு இலக்காகியுள்ளது. 2001 டிசம்பரில் தில்லியில் நாடாளுமன்றவளாகம் தாக்கப்பட்டது. 2008 நவம்பரில் மும்பை பெரு நகரின் மையப்பகுதியில் கமாண்டோ வகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதிக பட்சம் உயிரிழப் புக்களை ஏற்படுத்தி, மக்களின் நம்பிக்கையைக் குலைப்பதற்கு நகரின் பொதுமக்கள் கூடும் பல இடங்கள் குறிவைத்துத் தாக்கப்பட்டன. இதே ஆண்டுகளில் பொடா (POTA) என்றபயங்கரமான சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றி அதை ரத்தும் செய்து விட்டது. பயங்கரவாதக் குற்றச் சாட்டுக்களின்பேரில் பல தனி நபர்கள் மீது வழக்குகள் போடப்பட்டன. பல அமைப்புக்கள் தடை செய்யப்பட்டன.

மாநிலக் காவல் துறைகள் உட்பட பாதுகாப்பு முகமைகளுக்கு பயங்கரவாத அச்சுறுத்தல்களைச் சமாளிப்பதற்காக சிறப்பு அதிகாரங்கள் தரப்பட்டன. கைது செய்யவும், தகவல் பரிமாற்றத்தைத் தடுக்கவும் அவர்கள் அதிகாரம் பெற்றனர். எனினும், இந்தப் பயங்கரவாதத் தாக்குதல்கள் பற்றி நடைபெறும் புலனாய்வுகள் தொடர்பாக பல செய்திகளை ஊடகங்கள் வெளியிட்டு உண்மையை வெளிப்படுத்த முடிந்தது.

பயங்கரவாத முறியப்பில் ஒரு பெரிய நடவடிக்கையான, 2008 செப்டம்பரில் தில்லியின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள ஜமியா புறநகரில் நிகழ்ந்த ஆயுதமோதல் பற்றி ஊடகங்கள் செய்தி வெளியிட்டதை தில்லி பத்திரிக்கையாளர் சங்கம் ஆய்வு செய்தது[6]. ஊடகங்கள் பயங்கரவாதம் பற்றி செய்தவர்ணனைகள் பெரிதும் முரண்பட்டவையாகவும், ஒரு குறிப்பிட்ட மதச் சமூகத்தின் புகழைக் கெடுப்பதாகவும் இருந்ததாக இந்த ஆய்வு சுட்டிக் காட்டியது. புது தில்லியில் இருந்து புற்றீசல்போல வெளிவரும் பத்திரிக்கைகளில் அண்மைக்கால வரவான காலைச் சிற்றேடு மெயில்டுடே, அந்த ஆயுத என்கவுன்ட்டர் நடந்த சந்தேகத்திற்குரிய சூழ்நிலை பற்றி நேரவரிசைப்படி செய்தி வெளியிட்டது. ஏதுமறியாதவர்களை கொலைசெய்ததை பயங்கரவாதத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்றகட்டுக்கதைகளுடன் மூடிமறைக்க இந்த முயற்சி நடந்திருக்கக் கூடும் என்று கூறுவதாக அந்தச் செய்திகள் இருந்தன.[7]

தகவல்கள் கிடைப்பதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று பாதுகாப்பு மனப்போக்கு கூறும்போது, அதிகத் தகவல்கள் கிடைக்கச் செய்து மக்கள் நலனில் அக்கறையுள்ள ஒரு முகமையாக போலீஸ் செயல்படும்படி செய்ய வேண்டும் என்று குடிமக்களின் மீதுள்ள நாட்டம் விரும்புகிறது.

2008 நவம்பரில் மும்பை நகரின் பல முக்கியமான இடங்கள் தாக்கப்பட்டபோது, இத்தகைய நெருக்கடியான நிலைமைகளைச் சமாளிக்க அரசு அமைப்புக்கள் எந்த அளவுக்கு ஆயத்தமாக உள்ளன என்பதும், ஊடகங்களின் நம்பகத் தன்மையும் கேள்விக் குரியதாகிவிட்டன. பயங்கரவாதத்திற்கு ஊடகங்களின் எதிரொலிப்பு பற்றிய ஆழமான ஆய்வு ஒன்றைதில்லிபத்திரிகையாளர் சங்கம் வெளியிட்டது. மும்பைத் தாக்குதல்களின் முதலாண்டு நிறைவின்போது, மும்பைப் பத்திரிக்கையாளர் சங்கத்தின் ஒரு உறுப்பினர் பொருத்தமான ஒரு கேள்வி கேட்டார். "மோதல்களும் துயரமும் மிகுந்த சுழற்சியை உடைப்பதுதான் நீதி என்றால், அதுபற்றி ஊடகங்கள் எப்போது பேசும்?"[9]

## இந்திய-பாகிஸ்தான் சர்ச்சைகளும், ஊடகங்களும்

எல்லைதாண்டிப்பாயும் சிந்து நதி நீர், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சர்ச்சைக் குரிய பிரச்சினையாகி விட்டது. தொழில்நுட்பச் சிக்கல்கள் காரணமாக, 1960-இல் இரு நாடுகளும் செய்து கொண்ட சிந்து நதி நீர் ஒப்பந்தத்தின் பல்வேறு நுணுக்கங்களை ஊடகங்களினால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் ஹார்வர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நீர்வள நிபுணர் ஒருவர் பின்வரும் கருத்தைத் தெரிவித்தார். "தில்லியில் வசித்துக் கொண்டு இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் வேலை செய்வதால் எனக்கு ஒரு முரண்பாடு தோன்றியது. ஒரு நாடு துடிப்பான ஜனநாயக நாடு. இன்னொன்று ராணுவ ஆட்சியில் உள்ள நாடு. ஆனால், பாகிஸ்தானிப் பத்திரிகைகள் நதி நீர் பிரச்சினை பற்றிய இந்தியாவின் கருத்துக்களை விருப்பு வெறுப்பின்றி வெளியிட்டபோது, இந்தியப் பத்திரிக்கைகள் ஒருபோதும் அவ்வாறு செய்ய வில்லை."[10]

இருநாட்டு பரஸ்பர உறவுகள் தொடர்பாக இருநாடுகளின் அரசுகளும் பிறப்பிக்கும் ஆணைகளை இருநாட்டு ஊடகங்களும் எந்த அளவுக்கு ஏற்கின்றன என்பதை இந்தக் கருத்து புலப்படுத்துகிறது. 2010 பிப்ரவரியில் இந்தியாவும் பாகிஸ்தானும் தங்களது தொடர்புகளில் புதிய கட்டத்தை எட்டியபோது, ஊடகங்களின் எதிரொலிப்பு எதிரிடையாக இருந்தன. இருநாட்டு வெளியுறவு அமைச்சகங்களின் உயர் அதிகாரிகள் பிப்ரவரி 25 அன்று நிகழ்த்திய சந்திப்பினால் பெரிதாக எதுவும் எதிர்பார்க்கப்படவில்லை. எதுவும் ஏற்படவும் இல்லை. இதனால் இருநாடுகளின் ஊடகங்கள் குறைவான எதிர்பார்ப்புக்களின் கொடுமை பற்றி தங்களுடைய மக்களை எச்சரித்து விட்டனவோ என்றகருத்து உண்டாகிறது.

சுவையான ஒரு திருப்பமாக, 2010 புத்தாண்டுப் பிறப்பன்று இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் உள்ள செய்திப் பத்திரிக்கை வாசிக்கும் மக்களுக்கு "சமாதான வேட்கை" தூண்டப்பட்டது. இந்தியாவின் டைம்ஸ் ஆப் இந்தியாவும், பாகிஸ்தானின் ஜங் பத்திரிக்கைக் குழுமமும் இந்த இயக்கத்தைத் தொடங்கின. இந்த இரண்டு செய்தி ஏடுகளும் தத்தமது நாடுகளில் செய்தி ஏடுகள், டிவி, வானொலி என்று பல்வகை ஊடகங்களில் பரவியிருக்கின்றன. இவை தொடங்கிய இயக்கம் எவ்வாறு உருவெடுக்கும் என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும். ஆனால் மக்களின் மனப்போக்கு இது குறித்து சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது. இந்த முன்முயற்சி மக்களின் சமாதான வேட்கையை உண்மையிலேயே பரதிபலிக்கிறதா என்றஎண்ணம் ஏற்பட்டுவிட்டது, இது லாபம் ஈட்டும் ஒரு நடவடிக்கையோ என்று கூடக் கருதப்பட்டது.

6 ஆய்வின் பகுதிகள் கிடைக்கும் தளம்: http://www.thehoot.org/web/home/searchdetail.php?sid=3360&bg=1 மற்றும் http://www.thehoot.org/web/home/searchdetail.php?sid=3367&bg=1

7 மெயில் டுடே 2008 அக்டோபர் மாதம் முழுவதும் அரசுத் தகவல்களை எதிர்த்து எண்ணற்றசெய்திகளை வெளியிட்டது. இவற்றை www.mailtoday.in என்றதளத்தில் பார்க்கலாம்.

8 பார்க்க அஞ்சலி தேஷ்பாண்டே மற்றும் எஸ்.கே. பாண்டே, "திரீ டேய்ஸ் ஆஃப் மும்பை டெரர் ரிப்போர்ட்டிங்", http://www.thehoot.org/web/home/searchdetail.php?sid=3490&bg=1. முழுக்கட்டுரையின் ஒரு பகுதியை அலுவலகத்தில் கோரிப் பெறலாம்.

9 கீதா சேஷு "26/11 மித் மேக்கிங்: டு வாட் பர்ப்பஸ்?", பார்க்க : http://www.thehoot.org/web/home/searchdetail.php?sid=4219&bg=1.

10 ஜான் பிரிஸ்கோ, "வார் ஆர் பீஸ் ஆன் தி இன்டஸ்", எடுக்கப்பட்டது : http://thesouthasianidea.wordpress.com/2010/04/03/war-or-peace-on-the-indus/.

# நேபாளம்

## புத்திளம் ஜனநாயகத்தைப் பேணிக்காப்பது

நேபாளத்தில் பல்லாண்டுகால ராணா வமிசத்தின் யதேச்சதிகார ஆட்சியையும், மன்னராட்சியிடம் அதிகாரத்தைப் பெற்றபஞ்சாயத்து முறையையும் தொடர்ந்து ஜன ஆந்தோளன் எனப்படும் மக்கள் இயக்கம் மூலமாக 1990-இல் ஜனநாயகம் ஏற்படுத்தப்பட்டதால் தனியாருக்குச் சொந்தமான ஊடகங்கள் உருவெடுத்தன. இந்தப் பல கட்சி ஜனநாயக பரிசோதனை விரைவில் முடிவுக்குவரும் வகையில், மக்கள் போர் என்னும் கிளர்ச்சியை 1996-இல் நேபாள மாவோயிச கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கியது. இந்தக் கொந்தளிப்பான சம்பவங்களின்போது, சுதந்திர ஜோதி அணையாமல் பாதுகாக்க நேபாளத்தின் ஊடகங்கள் கடும் இன்னல்களுக்கு இடையில் தீவிரமாகப் போராடின. பரந்து விரிந்த புவியியல் அமைப்பு, அல்லது எட்டமுடியாத மலைப்பகுதிகள், மோசமான கட்டமைப்புக்கள், பரவலான எழுத்தறிவு இன்மை, மிதமிஞ்சிய வறுமை ஆகியன இந்த இன்னல்கள்.

2001 ஜுலையில் இருந்து 31 ஊடக ஊழியர்கள் தங்களது வேலையுடன் தொடர்புடைய நேரடி விளைவாகக் கொல்லப்பட்டனர் என்று நேபாள பத்திரிகையாளர் சங்கம் தொகுத்த புள்ளி விவரங்கள் கூறுகின்றன. 2005 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த சமாதான உடன்படிக்கை எட்டப்பட்ட பிறகு, மோதல்களின் உச்சகட்டத்தில் அதே அளவு ஊடக ஊழியர்கள் கொல்லப்பட்டனர். 2006-இல் ஜனநாயகம் திரும்பியதைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் குழப்பங்களினால் ஊடகங்களுக்கு வேலை எளிதாக இல்லை. பத்தாண்டுகால கிளர்ச்சியினால் ஏற்கனவே ஊடகங்களின் திறன் சோதிக்கப்பட்டுவிட்டது.

இப்போது ஜனநாயகத்தை நோக்கி நிகழ்ந்து வரும் மாற்றங்களும் சுமுகமாக இருக்கவில்லை. முன்னாள் மாவோ போராளிகள் இன்னமும், அரசின் பாதுகாப்புப் படைகளுடன் இணைக்கப்படவில்லை. புதிய அரசியல் சாசனத்தை வரையும் தொந்தரவு பிடித்த வேலையும் இன்னமும் கவனிக்கப்படாமலேயே உள்ளது. உறுதியான அரசியல் தலைமை இல்லாததால், தற்போது நிலவும் அரசியல், சமூக மற்றும் பொருளாதார குழப்பங்கள் மோசமடைந்து விட்டன.

அண்மையில், தெற்கில் உள்ள சமவெளிப் பகுதிகளில் ஊடக உரிமையாளர்கள் கொல்லப்பட்டது சட்டம். ஒழுங்கு சீர்கேட்டைப் பிரதிபலிக்கிறது. 2010 ஜுலை 22 அன்று ரேடியோ துளசிப்பூர் எஃப்எம் நிறுவனத்தின் தலைவர் தேவி பிரசாத் திட்டால் அடையாளம் தெரியாத கொலையாளிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் ஆறுமாதங்களில் நேபாளத்தில் கொல்லப்பட்ட மூன்றாவது ஊடக உரிமையாளர் ஆவார். அதற்கு முன்பாக, பிப்ரவரியில் சேனல் நேபாள் டெலிவிஷன் மற்றும் செயற்கைக்கோள் ஸ்பேஸ் டைம் நெட்வொர்க்கின் தலைவர் ஜமீம்ஷா காட்மண்டு நகரின் சந்தடிமிக்க சாலையில் முகமூடி அணிந்தவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். பிறகு ஒருமாதம் கழித்து, ஜனக்பூர் டுடே செய்தி நாளேட்டை வெளியிடும் டுடே குழுமத்தின் தலைவரும், அதே பெயரில் வானொலி நிலையம் வைத்திருப்பவருமான அருண் சிங்கானியா, தமுஷா மாவட்டம் ஜனக்பூரில் உள்ள தமது வீட்டிற்கு வெளியே மோட்டார்சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத கும்பலால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அரசு அதிகாரிகளின் சினத்திற்கு நேபாளப் பத்திரிக்கையாளர்கள் தொடர்ந்து இரையாகி வருகின்றனர். அண்மையில், மாவோயிசக் கிளர்ச்சியாளர்கள் மற்றும் சமவெளிப்பகுதியின் பல்வேறு ஆயுதம் ஏந்திய குழுக்களின் கோபமும் சேர்ந்து கொண்டது. இந்தக் கிளர்ச்சியாளர்களுக்கு வெகு எளிதில் கோபம் தொற்றிக் கொள்கிறது. நேபாள பத்திரிக்கையாளர் சங்கத்தின் பயூத்தன் கிளையின் துணைத் தலைவரும், மாண்டவி எஃப்எம் ரேடியோவின் நிருபருமான கேசவ் பொஹாரா 2010 ஜுனில் கடத்தப்பட்டது, பத்திரிக்கையாளர்கள் அன்றாடம் எதிர்நோக்கும் இடர்களுக்கு ஒரு உதாரணமாகும். குறிப்பாக, மாவட்டங்களில் உள்ள பத்திரிக்கையாளர்கள் பெரும்பாதிப்புக்கு உள்ளாகி விட்டனர். இதற்கு ராஜ்தானி நாளேட்டின் நிருபர் டிக்கா பிஸ்ட்டா ஒரு உதாரணம். ஐந்திதாரா என்றஉள்ளூர் நாளேட்டில் மாவோயிஸ்ட்டுகளைக் குறைகூறி செய்தி வெளியிட்டதைத் தொடர்ந்து 2009 டிசம்பரில் பிஸ்ட்டா கத்தியால் வெட்டப்பட்டு, ஒரு பாறைஉச்சியில் இருந்து கீழே தள்ளப்பட்டார். நேபாளத்தின் மேற்குப் பகுதியில் ருக்கும் என்றஊரில் அவருடைய வீட்டிற்கு அருகில் பிஸ்ட்டா சாகும்படி விடப்பட்டார். இந்தக் கொடூரமான தாக்குதல் நிகழ்ந்ததற்கு ஓராண்டுக்கு முன்பாக, உமா சிங் என்றதுணிச்சல் மிக்க இளம் பத்திரிக்கையாளர் ஜனக்பூர் நகரில் மிருகத்தனமாகக் கொல்லப்பட்டார். சிலர் கைது செய்யப்பட்ட போதிலும், இந்தக் கொலையின் பின்னணியில் இருப்பவர்கள் இன்னமும் தலைமறைவாகவே உள்ளனர்.



**மன்னராட்சி காலத்தில் பத்திரிகையாளர்கள் எதிர்கொண்ட அன்றாடக் கடுமையான நிலைமைகள்** *(புகைப்படம்: பிகாஷ் கார்க்கி)*

### மன்னராட்சியில் இருந்து மாவோயிசம் : ஊடகங்களுக்குத் தொடரும் வேதனைகள்

1996-க்குப் பிறகு நேபாள அரசியலில் மாவோ கிளர்ச்சி ஆதிக்கம் செலுத்தியது. பிராச்சந்தா எனப்படும் புஷ்பகமல் தஹால் தலைமையிலான இந்தக் கிளர்ச்சியாளர்கள் நேபாளத்தின் வறுமையும், புறக்கணிப்பும், கல்வியறிவு இன்மையும் மிகுந்த எட்டாத் தொலைவு கிராமங்களில் இருந்து செயல்பட்டனர்.

காட்மண்டுவில் அரச குடும்பத்தின் இல்லமான நாராயண் ஹிட்டி அரண்மனையில் 2001 ஜுனில் மிகவும் பயங்கரமான சம்பவம் நடந்தது. அப்போது ஆட்சிபுரிந்த மன்னர் பிரேந்திராவும், அவருடைய மனைவி ஐஸ்வர்யாவும், அரச குடும்பத்தின் எட்டு உறுப்பினர்களும் கொலை செய்யப்பட்டனர். மன்னரின் மகனும்,




**ஊடக உரிமையாளர் அருண் சிங்கானியா கொல்லப்பட்டதற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின்போது காத்மாண்டுவில் கலகப் போலீசுடன் கைகலக்கும் பத்திரிகையாளர்கள்.** *(புகைப்படம்: ரஜேஷ் துங்கானா)*

அடுத்து அரியாசனம் ஏறவேண்டியவருமான திபேந்திர இந்தக் கொலைகளைச் செய்துவிட்டு, தன்னைத்தானே சுட்டுக் கொண்டதாகச் சொல்லப்பட்டது. மூன்று நாட்கள் கழித்து பட்டத்து இளவரசர் இறந்து போனார். அதனால் அவருடைய சித்தப்பா ஞானேந்திரர் மன்னராக முடிந்தது. இந்தக் கொலைகள் பற்றிய எண்ணற்றசதித்திட்டங்கள் வெளிவந்தன. அரசு நடத்திய விசாரணையில் திபேந்திராதான் கொலைக் குற்றவாளி என்று கூறப்பட்டது.

அரண்மனைப் படுகொலைகளைத் தொடர்ந்து அரசுக்கும். மாவோ கிளர்ச்சியாளர்களுக்கும் கிடையே சுருக்கமான சண்டைநிறுத்தம் குலைந்தபிறகு, அரசு நெருக்கடி நிலை அறிவித்தது. இதைத் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக சிவில் உரிமைகளுக்கு நெருக்குதல்கள் ஏற்பட்டன. நேபாளத்தில் மனித உரிமைகள் சீர் கெட்டன. பத்திரிக்கைச் சுதந்திரமும், கருத்துவெளியீட்டுச் சுதந்திரமும் நெருக்குதலுக்கு உள்ளாயின.

2002 அக்டோபர் 4 அன்று நாடாளுமன்றஅரசை மன்னர் ஞானேந்திரா கலைத்தார். பின்னர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட பிரதமர் ஷேர் பகதூர் தியூபாவையும் அவருடைய அமைச்சரவையையும் மீண்டும் ஆட்சியில் அமர்த்தினார். ஆனால் பாதுகாப்புத் துறையை தன் வசம் வைத்துக் கொண்டு, மாவோ கிளர்ச்சியாளர்களை ஒடுக்கும் உரிமை பெற்றார். 2003-இல் சண்டை நிறுத்தத்தின்போது கூட, நேபாளத்தில் மனித உரிமைகள் சீர்குலைந்தன. பத்திரிக்கைச் சுதந்திரமும், கருத்து வெளியீட்டுச் சுதந்திரமும் பாதிக்கப்பட்டன.

மன்னராட்சிக்கும், மாவோயிசக் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே ஊடகங்கள் சிக்கிக் கொண்டு நசுங்கின. ராணுவமும், கிளர்ச்சியாளர்களும் இழைத்த அட்டூழியங்களுக்கு பத்திரிக்கையாளர்கள் பலியானார்கள். கொடூரமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்வதும், ஆள்கடத்தலும், திடீர் திடீரென மாயமாக மறைவதும், சித்திரவதைகளும் கொலைகளும் சர்வசாதாரணமாக நிகழ்ந்தன. 2002 ஆகஸ்ட் 29 அன்று நெருக்கடிநிலை நீக்கப்பட்ட பிறகும் நிலைமை சீரடையவில்லை. 2003 ஆகஸ்ட் 27 அன்று மற்றொரு சண்டை நிறுத்தம் குலைந்த பிறகு, மோதலில் ஈடுபட்ட இருதரப்புக்களின் அச்சுறுத்தல்களால் பத்திரிக்கையாளர்கள் தாங்கள் வேலை செய்த இடங்களை விட்டு வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டது. 2004-இல் ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பு ஏற்படுத்திய கட்டாயத் தலைமறைவு பற்றிய அலுவல்குழு, முதல்நோக்கு சான்றுகள் உள்ள 130 வழக்குகள் பற்றி அரசுக்கு அறிக்கை அளித்தது. அந்த ஆண்டில் எந்த நாட்டிலும் இந்த அளவுக்கு தலைமறைவுகள் நிகழ்ந்ததில்லை. நேபாள வரலாற்றிலேயே மிகவும் மோசமான அடக்குமுறைநிகழ்வுகளை மெய்ப்பிக்கும் வகையில் இந்தக் காலகட்டத்தின் சட்டம் ஒழுங்கு சீர்கேடு இருந்தது.

## அரண்மனைப் புரட்சி : சுதந்திரமான ஊடகங்களுக்குச் சோதனை

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு கிளர்ச்சியை ஒடுக்க எதுவுமே செய்ய வில்லை, ஞானேந்திரா 2005 பிப்ரவரி 1 அன்று எல்லா அதிகாரங்களையும் எடுத்துக் கொண்டு அரசியல் தலைவர்களைக் காவலில் வைத்தார். பத்திரிக்கைச் சுதந்திரத்தை உடனடியாக நிறுத்தினார். செய்தி அறைகளுக்குள்ளும், தனியாருக்குச் சொந்தமான தொலைக் காட்சி மற்றும் வானொலி நிலையங்களுக்கு உள்ளேயும், ராணுவம் நுழைந்து வேலையை உடனே நிறுத்தும்படி உத்தரவிட்டது. மூன்று நாட்களுக்கு தொலைபேசி மற்றும் இணையதள சானல்கள் துண்டிக்கப் பட்டன. மொபைல் போன்கள் பல வாரங்களுக்கு முடக்கப்பட்டன. இந்தத் தகவல் இருட்டிப்பை முறியடிக்க தனிநபர்கள் செய்திக் கட்டுரைகளை தங்களுக்குத் தெரிந்த வழிகளில் கடத்தினர். இரண்டு நாட்கள் கழித்து அரண்மனையில் இருந்து பின்வரும் எச்சரிக்கை வெளியானது.

“தேச மற்றும் தேசிய நலன்கள் கருதி, 2005 பிப்பரவரி 1 அன்று வெளியிடப்பட்ட அரண்மனைப் பிரகடனத்திற்கு மாறாக அல்லது நேரடியாகவோ, மறைமுகமாகவோ பேரழிவுக்கும் பயங்கரவாதத்திற்கும் ஆதரவாகவும் எந்த ஒரு பேட்டி, கட்டுரை, செய்தி, அறிவிப்பு, கருத்து அல்லது சொந்த அபிப்ராயம் வெளியிடப்படுவதை மேன்மை தாங்கிய மன்னரின் அரசு ஆறுமாதங்களுக்குத் தடை செய்கிறது.”

பின்னர் கடுமையான தணிக்கை முறைகள் அமலுக்கு வந்தன. பச்சைச் சீருடை அணிந்த ராணுவ வீரர்களுக்குப் பதிலாக ராணுவ உளவாளிகள் செய்தி ஆசிரியரின் அலுவலகங்களுக்குள் நுழைந்தனர். எனினும், நேபாள ஊடகங்கள் பயனுள்ள எதிர்ப்பைக் காட்டின. கேலிக்கட்டுரைகளும், அங்கதச் செய்திகளும் வெளியிடப்பட்டன. நேபாளத்தில் மிக அதிகம் விற்பனையாகும் ஆங்கில நாளேடான காட்மண்டு போஸ்ட், ‘சமூகத்தில் சாக்ஸ்’ என்றதலைப்பில் ஒரு கேலித் தலையங்கம் வெளியிட்டது. நேபாளம் போன்றஏழைநாட்டில் ஓட்டைகள் இல்லாத சாக்ஸ் ஒரு அந்தஸ்து அடையாளம் என்று அது எழுதியது. நேபாளி டைம்ஸ் மற்றும் ஹிமால் கபர் பத்திரிகா என்றபத்திரிக்கைகள் செய்திகள் தணிக்கை செய்யப்பட்ட இடங்களைக் காலியாக விட்டன. தேஷாந்தர், பிமார்ஷ் போன்றவார ஏடுகள் தலையங்கப் பகுதிகளை காலியாக விட்டன. இந்த மீறல்களைக் கண்ட காட்மண்டு மாவட்ட ஆட்சி அதிகாரி ஐந்து செய்தி ஆசிரியர்களை வரவழைத்து விசாரித்தார். அழைக்கப்படும்போது வருவதாக அவர்கள் எழுத்து மூலம் உத்தரவாதம் அளித்த பிறகு விடுவிக்கப்பட்டனர்.

தலையங்க இடம் காலியாக விடப்படுவது தடுக்கப்பட்டதும், மற்றொருவகை கிளர்ச்சியை “சங்கு” என்னும் நேபாளி வார இதழின் ஆசிரியர் தொடங்கினார். அவர் “ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்” என்றஇடத்தில் தமது பெயரைப் போடாமல் காலியாக விட்டார். “நான் எனது சொந்த வெளியீட்டிற்கு இனிமேலும் ஆசிரியர் அல்ல” என்று அப்போது அவர் கூறினார். “எனது செய்திக் கட்டுரைகளைத் தணிக்கை செய்யும் பாதுகாப்பு அதிகாரி தமது பெயரைத் தெரிவித்தால் அதை ‘உண்மையான’ ஆசிரியர் என்று போடுவேன்” என்றார்.

விளம்பரங்களைக் கட்டுப்படுத்தி அரசின் ‘வழிகாட்டிநெறிகளுக்கு’ கட்டுப்படும்படி நெருக்குதல் தரப்பட்டது. 2005 செப்டம்பர் நடுவில் விளம்பரங்களைக் கொடுப்பதற்கு ஒற்றைச் சாளர முறைகொண்டுவரப்பட்டது. குறைகூறும் பத்திரிக்கைகளுக்கு அரசுவிளம்பரங்கள் மறுக்கப்பட்டன. பாதுகாப்புப்படைகளின் கட்டுக்கோப்பை வளர்ப்பதில் ஆக்கப் பூர்வமான ஈடுபாடு

காட்டுவது அரசு விளம்பரங்களைப் பெறுவதற்கான தகுதி என்று கூறப்பட்டது. இவ்வாறு செய்யா விட்டால், வருவாய் கிடைக்கும் முக்கிய வழி அடைக்கப்பட்டது. இதனால் சிறுவார இதழ்களும், இருவார செய்தி ஏடுகளும் பாதிக்கப்பட்டன. பெரும்பாலான தனியார் விளம்பரங்கள் நாளேடுகளுக்குத்தான் கிடைத்தன. 2 பில்லியன் நேபாள ரூபாய் (சுமார் 26.5 மில்லியன் அமெரிக்க டாலர்) மதிப்புள்ள விளம்பரப் பணத்தில் 30 முதல் 40 சதவிகிதத்தை அரசு கட்டுப்படுத்துகிறது. பல சிறு செய்தி ஏடுகளும், வானொலி நிலையங்களும் மூட வேண்டிய நிலை ஏற்பட்டது.




காத்மண்டுவில் தெருவன்முறையில் காயமுற்றபெண்ணுக்கு உதவும் செய்தி புகைப்படக் கலைஞர் *(புகைப்படம்: கிரண் பாண்டே)*

## பத்திரிக்கைச் சுதந்திரத்திற்காகப் போராடும் யூனியன்கள்

வழக்குரைஞர்கள், ஆசிரியர்கள், பொறியாளர்கள் போன்றதொழில் முறையாளர்களின் அமைப்புக்கள் எதிர்ப்பைக் காட்டின. ஜனநாயக ஆதரவுக் கூட்டணிகள் உருவாக்கப்பட்டன. நேபாள பத்திரிக்கையாளர் சம்மேளனம் (FNJ) என்றபாரபட்சமற்றஅமைப்பின் கீழ் பத்திரிக்கையாளர்கள் முன்னணியில் ஒன்று திரண்டனர். பிரஸ் சௌத்தாரி, நேபாள் பிரஸ் யூனியன் (NPU), கிராந்திகாரி பத்ரகார் சங் மற்றும் பிறகட்சி சார்புடைய சங்கங்களும் தீவிரமாகச் செயல்பட்டன. ஆயினும் கைதுக்குப் பயந்து இந்தத் தீவிரத் தொண்டர்கள் தலைமறைவானார்கள். "அந்த நேரத்தில் துணிச்சலுடன் குரல் எழுப்புவது மிக முக்கியமானதாக இருந்தது," என்று சிவா குணாளே கூறினார். இவர் முக்கியமான 2002-2004 காலகட்டத்தில் FNJ பொருளாராகவும், 2005-08-இல் துணைத் தலைவராகவும் இருந்தவர், மன்னரின் நடவடிக்கையைக் குறைகூறும் ஒரு செய்தி அறிக்கையை வெளியிடும் சிறு செயல்கூட துணிச்சலான நடவடிக்கையாகக் கருத்தப்பட்டது. அதன் கீழ் பத்திரிக்கைச் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் நேசிப்பவர்கள் ஒன்று திரண்டனர். ஊடக நிறுவனங்களும் அமைதி மற்றும் ஜனநாயகத்திற்கான தொழில் முறைக் கூட்டனி (PAPAD) என்றபெயரில் ஜனநாயக சக்திகளை ஒன்று திரட்டின.

நேபாள பத்திரிக்கையாளர் சம்மேளனத்தின் கீழ் பத்திரிக்கையாளர் அமைப்புக்கள் மிகவும் செல்வாக்கு பெற்றிருந்ததால், அவற்றின் ஒருமைப்பாட்டைப் பலவீனப்படுத்த அரண்மனையில் இருந்து திரும்பத்திரும்ப முயற்சிகள் செய்யப்பட்டன. அரண்மனை அனுதாபிகளைக் கொண்டு தேசிய பத்திரிக்கையாளர் சம்மேளனம் என்றொரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, அதற்கு தாராளமாக நிதியுதவி செய்யப்பட்டது. பத்திரிக்கையாளர் சமூகத்தில் பிளவை ஏற்படுத்தும் இந்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. தேசிய செய்தி ஏஜன்சி மற்றும் ரேடியோ நேபாள் போன்றஅரசுக்குச் சொந்தமான ஊடகங்களில் இருந்து பல பத்திரிக்கையாளர்கள் இந்தப் புதிய அமைப்பில் சேரமறுத்ததால் வேலையில் இருந்து நீக்கப்பட்டனர். "பத்திரிக்கையாளர்களின் போராட்டம் ஜனநாயகத்திற்கு வழிதுலக்கிய போதிலும் கருத்து வெளியீட்டுச் சுதந்திரத்திற்கு இன்னமும் உத்தரவாதம் கிடைக்காதது முரண்பாடாக உள்ளது" என்று நேபாள பத்திரிக்கையாளர் சம்மேளனத்தின் தலைமைச் செயலர் போஷன் கே.ஸி. கூறினார்.

2005 ஏப்ரல் 29 அன்று நெருக்கடிநிலை நீக்கப்பட்ட போதிலும், அதனால் பத்திரிக்கைச் சுதந்திரம் மேம்படவில்லை. நாடெங்கிலும், குறிப்பாகத் தொலைவில் உள்ள மாவட்டங்களில் பத்திரிக்கையாளர்கள் கொல்லப்பட்டனர், வன் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டன, துன்புறுத்தப்பட்டனர், விரட்டப்பட்டனர், அரசும், மாவோயிச கிளர்ச்சியாளர்களும் குறிவைத்துத் தாக்கினார்கள்.

மாவட்டங்களில் உள்ள உள்ளூர் ஊடகப் பணியாளர்களின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. நேபாள ராணுவத்திற்கும், மாவோ கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே சிக்கிக் கொண்டு தவித்தனர். செய்தித் தணிக்கை அல்லது செய்தியை மாற்றும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். நேரடி மிரட்டல்கள் விடுக்கப்பட்டன. ஊடக வசதிகளும், கட்டமைப்புத் தொடர்புகளும் மூடப்பட்டன. இரண்டு போர்க்குழுக்களில் ஏதாவது ஒன்று இந்த வசதிகளை வேண்டுமென்றேசேதப்படுத்தின அல்லது அகற்றின. சுயேச்சையான செய்திகளின் உற்பத்தி மற்றும் வினியோகச் சங்கிலித் தொடரமைப்புக்கள் துண்டிக்கப்பட்டன. சமாதான நடவடிக்கைகளுக்கு முன்பாக சில இடங்களில், குறிப்பாகச் சமவெளிப்பகுதிகளில் ஆயுதக் கண்காணிப்புக் குழுக்கள் உருவெடுத்து ஊடக ஊழியர்களுக்குப் பெரும் அச்சுறுத்தல்களாக இருந்தன.

## கொடூரமான சட்டங்களும் முனைப்பான நீதித் துறையும்

2005 அக்டோபர் 9 அன்று கொடூரமான ஊடக அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, 2006 ஏப்ரலில் புதுப்பிக்கப்பட்டது. ஊடகச் சுதந்திரத்தை ஒடுக்கவும், சுயேச்சையான தகவல்களைப் பெறநேபாளக் குடிமக்களுக்கு உள்ள உரிமையைக் கட்டுப்படுத்தவும். அரசு மேற்கொண்டகட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு இது சட்ட அங்கீகாரம் கொடுத்தது. ரேடியோ சட்டம் 1958, தேசிய ஒலிபரப்புச் சட்டம் 1992, பிரஸ்கவுன்சில் சட்டம் 1992, பத்திரிக்கை மற்றும் வெளியீட்டுச் சட்டம் 1992, தேசிய செய்தி ஏஜன்சி சட்டம் 1962, அவதூறு மற்றும் மானநஷ்டச்சட்டம் 1959 ஆசிய சட்டங்களை இந்த அவசரச் சட்டம் திருத்தியது. வானொலி நிலையங்களில் திடீர் சோதனைகள் நடத்தப்படுவதையும், வானொலி டிரான்ஸ்மிட்டர்கள் பறிமுதல் செய்யப்படுவதையும், செய்தி அறிக்கைகளைக் கட்டுப்படுத்துவதையும், பத்திரிக்கையாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டு துன்புறுத்தப்படுவதையும் நியாயப்படுத்திய இந்த அவசரச் சட்டத்தை எதிர்த்து நேபாள பத்திரிக்கையாளர் சம்மேளனம் குரல் எழுப்பியது. இந்த அவசரச் சட்டம் 1990 ஆம் ஆண்டின் அரசியல் சாசனத்தை, குறிப்பாக் கருத்துவெளியூட்டுச் சுதந்திரத்திற்கு உத்தரவாதம் தருவதை மீறுகிறது என்று கூறி விட்டது. 2006 மே மாதம் ஜனநாயக இயக்கத்துக்கு. மன்னர் அடிபணிந்து, நாடாளுமன்றத்தை திரும்பக் கொண்டுவந்த பின்னரே அவசரச் சட்டம் ரத்து செய்யப்பட்டது.

2001-இல் பிறப்பிக்கப்பட்ட பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) அவசரச் சட்டம் (தடோ), 2005-லும். மீண்டும் 2006-லும் நீட்டிக்கப்பட்டது. இந்த அவசரச் சட்டம் சுயேச்சையாகச் செய்தி தரப்படுவதை கிரிமினல் நடவடிக்கையாக மாற்றியது. விசாரணையின்றி காவலில் வைக்க வகை செய்யும் இந்த அவசரச் சட்டம், ஊடக ஊழியர்களை தன்னிச்சையாகத் துன்புறுத்தி சிறையில் அடைக்க பயன்படுத்தப்பட்டது. 1989 ஆம் ஆண்டின் பொதுப் பாதுகாப்புச் சட்டமும் (பிஎஸ்ஏ) கருத்துவெளியீட்டுச் சுதந்திரத்தையும், ஒன்று சேரும் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்த பயன் படுத்தப்பட்டது. 2006 ஏப்ரலில் ஜன ஆந்தோளன் என்னும் மக்கள் இயக்கம் தொடங்கிய

## உயிர்களைக் காப்பாற்றிய நற்பணிகள்

கிளர்ச்சியின்போது, குறிப்பாக 2005 அரண்மனைப் புரட்சிக்குப் பின்னர், மாவோயிஸ்ட்டுகளாலும் அரசினாலும் பத்திரிக்கையாளர்கள் இன்னலுக்கு உள்ளாயினர். தணிக்கை, தடை, கிரிமினல் துன்புறுத்தல்கள், ஆள்கடத்தல், தலைமறைவாக்குதல் போன்றவை வாடிக்கையாகிவிட்டன. சில நேரங்களில் கொலை தாக்குதல்களும் நடத்தப்பட்டன. தனித்தனி பத்திரிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்காகவும், சுயேச்சையான ஊடகத்தின் தேவைகளை புரியவைப்பதற்காகவும் மாவோயிச மத்தியக் கமிட்டித் தலைவர்களுடன் நேபாளப் பத்திரிகையாளர் சம்மேளனம் பேச்சு நடத்தியது. ஆங்க்கா என்றவார இதழின் ஆசிரியர் சோம் சர்மாவை விடுவிக்க வைப்பதற்காக நேபாள பத்திரிகையாளர் சம்மேளனத்தின் அன்றைய மத்திய கமிட்டி உறுப்பினர் பூர்ண பாஸ் நெட் தலைமையில் ஒரு குழு பேச்சு நடத்தியது. இலம் என்றஇடத்தைச் சேர்ந்த இந்தப் பத்திரிக்கையாளர் 2005 மே 13 அன்று கடத்தப்பட்டார். அவர் மாவோயிஸ்டுகளைக் குறைகூறி எழுதியதாகக் கூறப்பட்டது. சர்மா, மாவோயிஸ்டுகளின் ‘மக்கள் காவலில்’ வைக்கப்பட்டிருப்பதாகவும், அவர் கொல்லப்படலாம் என்றும் அவருடைய குடும்பத்தினருக்கு கிடைத்த கடிதம் தெரிவித்தது. வெவ்வேறு தலைவர்களுடன் மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி மூலமாக உரையாடிய பிறகு, சர்மாவைப் பிடித்து வைத்திருந்தவர்கள் பேச்சுவார்த்தைக் குழுவைச் சந்தித்தனர், பிறகு 55 நாட்கள் வைத்திருந்துவிட்டு சர்மாவை விடுவித்தனர். தகராறுகளில் இருந்து பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் முதலாவது குறிப்பிடத்தக்க நடவடிக்கையாகும் இது. “இந்த வெற்றிகரமான மீட்புக்குப்பிறகு, நாடெங்கும் பத்திரிகையாளர்களிடையே நம்பிக்கை வளர்ந்தது” என்று பாஸ்நெட் கூறினார். “நேபாளப் பத்திரிகையாளர் சம்மேளனத்தின் நம்பகத்தன்மையும் உயர்ந்தது. ஏனென்றால், ஓராண்டுக்கு முன்புதான் தேகேந்திர தாப்பா என்பவர் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார். அவரை விடுவிக்க மாவோயிஸ்டுகளுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள் பலிக்கவில்லை.”

இந்த அனுபவம் தந்த தெம்பினால், இத்தைய தலையீடுகளைத் தொடர்வதற்காக கமிட்டி ஒன்றைநேபாள பத்திரிகையாளர் சம்மேளனம் ஏற்படுத்தியது. பல மீட்பு முயற்சிகளுக்கு பாஸ்நெட் தலைமை ஏற்றார், பல்வேறு மாவட்டங்களில் இந்தக் காலகட்டத்தில் 18-க்கும் மேற்பட்ட இத்தகைய நற்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சில முக்கிய நற்பணிகள் வருமாறு: ராணுவக் காவலில் இருந்து காந்திபூர் நிருபரை விடுவித்த தைலேக் நிகழ்ச்சி; சிந்துலியில் தலைமை மாவட்ட அதிகாரியிடம் இருந்து மரண மிரட்டல் வந்ததை அடுத்து குடிபெயர்ந்த இரண்டு பத்திரிக்கையாளர்களுக்கு மறு வாழ்வு; காஞ்சன்பூர் என்றஇடத்தில் ராணுவக் காவலில் இருந்து கேம் பண்டாரி என்றஉள்ளூர் செய்தி ஏட்டின் ஆசிரியர் விடுவிக்கப்பட்டார்; டப்ளேகஞ்ச் என்றஇடத்தில் மாவோயிஸ்ட் தொண்டர்களால் காந்திபூர் நிருபர் தாக்கப்பட்டது பற்றிய வழக்கு தீர்த்துவைக்கப்பட்டது.

அரசு நடத்தும் ரேடியோ நேபாளின் பத்திரிகையாளர் தேகேந்திர ராஜ் தாப்பா மேற்கு மலை மாவட்டத்தில் இருந்து கடத்தப்பட்ட ஆறு வாரங்கள் கழித்து மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்களால் 2004 ஆகஸ்ட் 14 அன்று கொல்லப்பட்டார். தாப்பாவின் சார்பாக வேண்டுகோள் விடுக்க நேபாள பத்திரிகையாளர் சம்மேளனத்தின் பிரதிநிதிக் குழு ஒன்று மாவோகிளர்ச்சியாளர்களை தைலேக் என்றஇடத்தில் சந்தித்தது. தாப்பா வேவு பார்த்ததற்காக அவரைக் கொன்றுவிட்டதாக அவருடைய கிராமத்தில் கிளர்ச்சி யாளர்கள் நோட்டீஸ் ஒட்டியிருந்தனர். அண்டை மாவட்டங்களில் மேலும் 10 பத்திரிகையாளர்களைக் கொல்ல விரும்புவதாக உள்ளூர் மாவோயிஸ்ட் கமாண்டர்கள் அறிவித்தனர். தாப்பா கொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆகஸ்ட் 18 அன்று காட்மண்டு தெருக்களில் ஆர்ப்பாட்டம் செய்தனர். மாவோயிஸ்ட் செய்தித் தொடர்பாளர் கிருஷ்ண பகதூர் மஹாரா முதல் தடவையாக செப்டம்பரில் நேபாள பத்திரிகையாளர் சம்மேளனத்திற்கு ஒரு கடிதம் எழுதி, இந்தக் கொலை ஒரு கொள்கை மீறல் என்றும், கொலை பற்றி விசாரிப்பதாகவும் தெரிவித்திருந்தார். இதேபோல, ராஷ்ட்ரிய சமாச்சார் சமிதியில் பணியாற்றிய ஞானேந்திர கட்கா என்றஆரிசியரின் கொலையும் கொள்கை மீறல் என்று பின்னர் மாவோயிக் கிளாச்சியாளர்கள் ஒப்புக் கொண்டனர். அவர் 2003 செப்டம்பரில் சிந்துபால் சவுக்கில் கொல்லப்பட்டார். ஆனால் அவர்கள் எழுத்து மூலமான மன்னிப்பு கேட்கவில்லை.

பின்னர். 2008 பெய்ச்சிங் ஒலிம்பிக்கிற்கு எதிர்ப்புத்தெரிவித்த நூற்றுக் கணக்கான திபெத்தியர்களைக் கைது செய்ய பயன்படுத்தப்பட்டது.

கிளர்ச்சியின்போதும், ஜனநாயக மீட்பு மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கான போராட்டத்தின்போதும் நேபாள உச்ச நீதிமன்றம் சிறப்பான பங்காற்றியது. சட்ட விரோதக் கைதுகள் மற்றும் காவலில் வைத்தல், சித்திரவதை மற்றும் நீதிக்குப் புறம்பான கொலைகள், தொடர்பான எண்ணற்றவழக்குகளில், ஆள் கொணர்வு மனுக்கள் மூலமாக, சட்டவிரோதமாக சிறையில் அடைக்கப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும்படி அரசு கட்டாயப்படுத்தப்பட்டது. சுதந்திரமான நீதித்துறைமட்டும் இருந்திராவிட்டால் கொல்லப்பட்ட மற்றும் மாயமாய் மறைந்துபோன பத்திரிக்கையாளர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருந்திருக்கும் என்று பீமார்ஜுன் ஆச்சார்யா, திக்காரம் பட்டாரை என்றவழக்குரைஞர்களும், நேபாள பத்திரிக்கையாளர் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர்களான பிஷ்ணு நிஷ்தூரியும், தாராநாத் தஹாலும் கூறுகின்றனர். 100-க்கும் மேற்பட்ட பத்திரிக்கையாளர்கள் ஆள் கொணர்வு மனுக்கள் மூலமாக உச்சநீதி மன்றத்திலும், 16 மேல் முறையீட்டு நீதிமன்றங்களிலும் நீதித்துறையால் பாதுகாக்கப்பட்டனர். அவர்களுக்கு ஆதரவாகத் தீர்ப்புக் கூறப்பட்டது.

நேபாளத்தில்தான் மிக அதிகமாக ஆட்கள் மறைக்கப்படுகிறார்கள். 2003 மற்றும் 2004-இல் உலகெங்கிலும் அரசாங்கக் காவலில் இருந்து மறைந்தவர்களின் எண்ணிக்கை நேபாளத்தில்தான் அதிகம் என்று ஐ.நா.வின் கட்டாயத் தலைமறைவு அலுவல் குழு தெரிவித்துள்ளது. இத்தகைய சூழலில் நேபாளத்தின் நீதித்துறைமுக்கிய பங்காற்றியுள்ளது. “நேபாள உச்சநீதிமன்றம் நீண்டகாலமாகக் கடைப்பிடித்துவந்த மரபுசார்ந்த நிதானமான போக்கை கைவிட்டு, 2007-இல் ஒரு சிறப்பான தீர்ப்பைக் கூறியது. அது நகராட்சி மற்றும் சர்வதேச சட்டங்களின் கண்ணோட்டத்தின்படி, நாட்டின் அரசியல் நிர்வாகத்தில் ஒரு நீண்டகால விளைவை ஏற்படுத்தியது” என்கிறார் கிஷோர் உப்ரேட்டி என்றவழக்குரைஞர். 2007 ஜூன் 1 அன்று அந்தத் தீர்ப்பை நீதிபதிகள் கிலாராஜ் ரெக்மி மற்றும் கல்யாண் சிரேஷ்டா அடங்கிய உச்சநீதிமன்றப் பிரிவு வழங்கியது. 83 ஆள் கொணர்வு மனுக்களை விசாரித்த நீதிபதிகள், (i) அரசினால் கட்டயமாக மறைக்கப்பட்ட நபர்களின் 83 குடும்பங்களுக்கு இழப்பீடு தரப்படவேண்டும் (ii) கட்டாயத் தலைமறைவு ஒரு கிரிமினல் குற்றம் என அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட வேண்டும், (iii) காவல் மையங்களில் மக்கள் கொல்லப்பட்டதில் ஈடுபட்டவர்களை விசாரணைக் கமிஷன் அமைத்து கண்டறிந்து தண்டிக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கினார்கள். நீதிமன்றத்தின் இந்த உத்தரவுக்கு ஏற்ப, 2008 நவம்பரில் கட்டாயத் தலைமறைவுச் சட்டமுன்வரைவு தயாரிக்கப்பட்டது. ஆனால் அது இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. மாவோயிஸ்ட் தலைமையிலான அரசு (இப்போது ஆட்சியில் இல்லை) தலைமறைவு நபர் (குற்றம் மற்றும் தண்டனை) அவசரச் சட்டத்தையும், உண்மை மற்றும் சமரசக் கமிஷன் அவசரச் சட்டத்தையும் 2009 ஜனவரியில் பிறப்பித்தது. ஆனால் அவற்றின் நிலை இன்னமும் விவாதத்திற்கு உரியதாகவே இருக்கிறது.

நீதித்துறையின் தலையீட்டால் கருத்துவெளியீட்டு உரிமையும் பாதுகாக் கப்பட்டது. கிளர்ச்சியின்போதும், மன்னர் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியபோதும் எஃப்எம் வானொலி மற்றும் ஊடகநிறுவனங்களுக்கு ஆதரவாக நீதிமன்றங்கள் சட்டவிளக்கம் அளித்து தகவல் உரிமையையும், பேச்சுரிமையையும் நிலைநாட்டின. தேசியமனித உரிமைகள் ஆணையம் பலவீனமாக இருந்த ஒரு நேரத்தில் இது மிகவும் முக்கியமானதாகும். 2001-இல் ஒரு முக்கியமான வழக்கில் வானொலியையும் சேர்த்து, நேபாளத்தில் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு உச்சநீதிமன்றம் புது

1 உப்ரேட்டி கே. 2008. “Against Enforced Disappearance: the Political Detainees’ Case before the Nepal Supreme Court”. சீன சர்வதேசச் சட்ட இதழ் தொகுப்பு 7. எண் 2. பக்கம் 429-457.

விளக்கம் அளித்தது. 2005 ஜூனில் தகவல்தொடர்புக்கான ரேடியோ கார்னர் மூடப்படாமல் தடுத்தது. அதே ஆண்டில் ஆகஸ்டில் ஊடக அடக்குமுறைஉச்சகட்டத்தில் இருந்தபோது, எஃப்எம் வானொலியில் செய்தி ஒலிபரப்புக்கு அரசு விதித்ததடை சட்ட விரோதமானது என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. அதேபோல, டிரான்ஸ்மிட்டர்களைப் பறி முதல் செய்து எஃப்எம் நிலையங்களை மூடும் அரசின் உத்தரவும் உச்சநீதிமன்றம் தலையிட்டதைத் தொடர்ந்து நிறுத்திவைக்கப்பட்டது.



நேபாளப் பத்திரிகையாளர்கள் எவ்வளவோ அச்சுறுத்தல்களையும் சவால்களையும் எதிர் கொண்டாலும், உடனுக்குடன் செய்திகளை வெளியிட சம்பவ இடங்களுக்கு விரைகின்றனர். *(புகைப்படம்: கிரண் பாண்டே)*

## வானொலிப் புரட்சி

வானொலி ஒலிபரப்பின் வீச்சிலும், உள்ளடக்கத்திலும் தெற்காசியாவில் நேபாளம் முன்னணியில் உள்ளது. மற்றநாடுகளில் அரசுகளும், பெரிய கார்ப்பரேஷன்களும் அலைவரிசைகளை தொடர்ந்து கட்டுப்படுத்திவரும்போது, தனியார் அல்லது சமூகத்திற்குச் சொந்தமான எஃப்எம் நிலையங்கள் கேளிக்கை நிகழ்ச்சிகளை மட்டுமே ஒலிபரப்புகின்றன. நேபாளத்தில் சுயேச்சையான எஃப்எம் நிலையங்கள் பலவகையான செய்திகள், நடப்பு விவகார நிகழ்ச்சிகள், கேளிக்கை நிகழ்ச்சிகள் ஆகியவற்றைத் தயாரிக்கின்றன. இப்போது நேபாளத்தில் 186 வானொலி நிலையங்கள் இயங்கி வருகின்றன. 323 நிலையங்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.[2]

நேபாளத்தில் வானொலியின் வரலாறு 1950–இல் தொடங்கியது. அப்போது பிரபுத்துவ ராணா வமிச யதேச்சதிகாரத்தை எதிர்த்து நேபாளி காங்கிரஸ் கட்சி போராடி வந்தது. “விடுதலைப் போராட்ட வீரர்கள்” பிரஜாதந்திர நேபாள் வானொலியை (ஜனநாயக நேபாள் வானொலி) சிபுக்கு சமவெளிப் பகுதியின் விராட் நகரில் தொடங்கினார்கள். ஜனநாயக அரசியலைக் கொண்டுவரும் கட்சியின் செயல் திட்டத்தைப் பரப்ப வானொலி பயன்படுத்தப்பட்டது. ராணாவின் அதிகார ஏகபோகம் முடிந்தவுடன் புதிய அரசு இந்த வானொலி நிலையத்தை காட்மண்டுக்கு மாற்றியது. அதன் பெயரை நேபாள் ரேடியோ என்றும், பின்னர் ரேடியோ நேபாள் என்றும் மாற்றியது. எனினும், படிப்படியாக இந்த வானொலி நிலையம் அன்றைய அரசுடன் அடையாளம் காணப்பட்டு, அதனுடைய செய்தி ஆதாரம் நம்பகத்தன்மையை இழந்துவிட்டது.

1997–இல் ஒருசில நேபாளி ஊடகத் தொண்டர்களும் பத்திரிகையாளர்களும் சேர்ந்து நாட்டின் (தெற்காசியாவின்) முதலாவது சமூக வானொலியைத் தொடங்கினார்கள். இந்த சமூக வானொலி நிலையம் காட்மண்டு நகரின் ஒரு சிறிய ஸ்டூடியோ அறையில் செயல்பட்டது. அந்த ரேடியோ சாகர்மத்தா வானொலிப் புரட்சிக்கு கட்டியங்கூறி, “பொதுநல சேவை ஒலிபரப்பு” என்றபழக்கத்தைக் கொண்டு வந்தது. எஃப்எம் ஒலிபரப்பு அரசின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டதும், ஒருசில ஆண்டுகளில் சுமார் 50 எஃப்எம் நிலையங்கள் தொடங்கப்பட்டன. இவை மியூசிக் தொழிலுக்கு ஒரு ஏற்றம் தந்ததோடு, பல சமயங்களில் ஒரே செய்தி ஆதாரமாகத் திகழ்ந்தன. இதற்குச் சட்டபூர்வ தகு நிலையைத் தரும் வகையில், வானொலிக்கு செய்தி ஒலிபரப்பும் உரிமை உண்டு என 2001–இல் உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்புக் கூறியது.

2005 அரண்மனைப் புரட்சிக்குப் பின்னர், ஆறுமாதங்களுக்கு செய்திகளையும், செய்தி தொடர்பான நிகழ்ச்சிகளையும் வனொலி ஒலிபரப்புவதற்கு அரசு தடைவிதித்தது. எஃப்எம் வானொலி நடப்பு நிகழ்வு நிகழ்ச்சிகளில் செய்திகளையும், தகவல்களையும் ஒலிபரப்ப ஏற்பாடு செய்தது. மேலும் “பத்திரிகைகள் என்ன கூறுகின்றன” என்றநிகழ்ச்சியில் செய்தி ஏடுகளை மக்கள் அடைவதற்கு வானொலி ஏற்பாடு செய்தது. எஃப்எம் செய்திகளைக் கிடைக்கவிடாமல் செய்த மன்னர், நேபாளி மக்களுக்கு சுயேச்சையான செய்திகளைப் பெறும் வழியை அடைத்துவிட்டார். சுமார் 70 சதவிகித எழுத்தறிவு இன்மையும், மலைப்பகுதிகளுக்கு சாலை மற்றும் வான்வழித்தொடர்பு மோசமாக இருப்பதாலும் மக்களுக்கு செய்திகள் கிடைக்கவில்லை. இப்போது பிபிசி நேபாளி ஒலிபரப்பு மட்டுமே, தகவல் பெறுவதற்கு துடிக்கும் மக்களுக்கு ஒரே செய்தி ஆதாரமாக உள்ளது. சிற்றலை ரேடியோக்களை வாங்க மக்கள் வரிசையில் காத்திருக்கின்றனர்.

“பத்திரிகையாளர்களின் ஒரு குழுவினர் நேபாள எல்லையை ஒட்டிய இந்திய நகரங்களில் தொடரமைப்பை உருவாக்கிக் கொண்டனர். நாட்டில் செய்தி ஊடகங்களை அரசு தடை செய்யுமானால், செய்தி ஏடுகளையும், வானொலி ஒலிபரப்புக்களையும் நடத்த இருந்தத் தொடரமைப்பை பயன்படுத்த விரும்பினர்” என்று காட்மண்டு போஸ்ட் ஆங்கில நாளேட்டின் அன்றைய ஆசிரியர் பிரதீக் பிரதான் கூறினார். எனினும் இந்த மாதிரி எதிர்ப்பினால் மேலும் மேலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

மக்களுக்கு சுயேச்சையான செய்திகள் கிடைக்கும். ஆதாரம் பறிக்கப்பட்டதோடு, மிகவும் பிரபலமான விளம்பரதாரர் நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப முடியாமல் தடுக்கப்பட்டதால், விளம்பர வருமானம் குறைந்து பல வானொலி நிலையங்கள் மூடப்பட்டன. நாடெங்கும் உள்ள எஃப்எம் நிலையங்களில் பணியாற்றிய சுமார் 1000 பத்திரிகையாளர்கள் வேலை இழந்தனர்.

அரண்மனை புரட்சி மற்றும் அதைத் தொடர்ந்த நெருக்கடி நிலையினால் பத்திரிகையாளர்களும் ஊடக நிறுவனங்களும் ஒன்று சேர்ந்து செய்தித் தணிக்கைக்கும், ரேடியோ நிலையங்கள் மூடப்பட்டதற்கும் எதிராகப் போராடினர், சமூக வானொலி நிலையங்களின் கூட்டமைப்பான நேபாள் சமூக வானொலி ஒலிபரப்பாளர் சங்கம், நேபாள் ஒலிபரப்புச் சங்கம், காட்மண்டு பள்ளத்தாக்கு எஃப்எம் ஒலிபரப்பாளர் மன்றம், சுயேச்சை வானொலி பாதுகாப்பு இயக்கம் போன்றஅமைப்புக்களின் மூலம் வானொலிப் பத்திரிக்கையாளர்கள் எதிர்ப்பு இயக்கத்தைத் தொடுத்தனர்.

வலிமை பெறத் தொடங்கிய ஜனநாயக ஆதரவு இயக்கத்திலும் வானொலிப் புரட்சி முன்னணியில் நின்றது. வானொலிக்காக ஒப்பாரி வைப்பது, மரணச் சடங்குகளைச் செய்வது, ஒலிபெருக்கி மூலமாக செய்திகளை குறுகிய வட்டத்துக்குள் ஒலிபரப்புவது, தெரு முனைகளில் நின்று செய்திகளை வாசிப்பது என்பன போன்றபுதுமையான முறைகள் மக்களின் கற்பனையைத் தூண்டி விட்டன. வானொலிப் பத்திரிகையாளர்கள் நடத்திய புதுமையான எதிர்ப்பும், மறுப்பும் நாடெங்கும் உள்ள ஜனநாயக ஆர்வலர்களுக்கு உணர்வூக்கம் அளித்தது.

2 பார்க்க வானொலி நிலையத் தகவல் : http://www.nepalradio.org/p2_information.htm பெற்றதேதி செப்டம்பர் 16, 2010.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் வானொலி தொடர்ந்து செல்வாக்கு செலுத்தி வருகிறது. கிராமப்புறங்களில் தொலைக் காட்சியைவிட வானொலியை விரும்புவோரின் எண்ணிக்கை 2:1 விகிதம் என்று அண்மையில் நடத்தபட்ட ஒரு ஆய்வு தெரிவிக்கிறது.[3] இன்றைக்கு வானொலிப் பெருக்கத்தினால், வானொலி நிலையங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதோடு, உயர் சக்தி ஒலிபரப்புக் கோபுரங்கள் மேலும் மேலும் நிறுவப்பட்டன. வானொலிகளிடையே விளம்பர வருவாய்பெறகடுமையான போட்டி நிலவுகிறது. நீடித்த வறுமையில் சிக்கித்தவிக்கும் நிலம் சூழந்த நேபாளப் பொருளாதாரத்தில், 12 ஆண்டுகால கிளர்ச்சிக்கும், அரசியல் நிலை குலைவுக்கும் பின்னர் பொருளாதாரம் புத்துயிரூட்டப்படுவதற்காகப் போராடும் போது, இந்தப் போட்டி சுயேச்சையான ஊடகங்களுக்கு ஒரு துயரகரமான சோதனையாக உள்ளது. மற்றொரு பிரச்சினை என்ன வென்றால் பயிற்சி பெற்றிராத பலர் இத்துறையில் நுழைவதால், தொழில் முறைபத்திரிகை இயலுக்காக நடத்தை நெறிகளையும், வழிகாட்டு நெறிகளையும் வகுக்க வேண்டியுள்ளது. இந்த சுய ஒழுங்கு முயற்சியில் 2008-இல் தயாரிக்கப்பட்ட வானொலி ஒலிபரப்பாளர் நடத்தை நெறி மற்றும் செயல்பாட்டு வழிகாட்டு நெறி கையேடு ஒரு தனிச் சிறப்பான நடவடிக்கையாகும்.

## சர்வதேச ஒருமைப்பாடு

சமாதான நடைமுறைகளில் சர்வதேச முகமைகள் முக்கிய பங்காற்றுகின்றன. எடுத்துக் காட்டாக, முன்னாள் கிளர்ச்சியாளர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள கன்டோன்ட்மென்ட் பகுதிகளை ஐ.நா. தொடர்ந்து கண்காணிக்கிறது. இது தவிர மனித உரிமை மற்றும் பத்திரிக்கைச் சுதந்திர மீறல்கள் பற்றி எடுத்துக் கூறுவதிலும் சர்வதேச ஒருமைப்பாடு மிக முக்கிய பங்காற்றியுள்ளது.

அரண்மனைப் புரட்சிக்குப் பிறகு, நேபாளி பத்திரிக்கையாளர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காகவும் அதிகாரிகளுக்கு நெருக்குதல் தரவும் ஐந்து சர்வதேச பத்திரிகைச் சுதந்திரக் குழுக்கள் நேபாளத்திற்கு வருகை தந்தன. கூடவே, சர்வதேச பத்திரிக்கையாளர் சங்கத்தின் வட்டாரத் தொடரமைப் புக்களான தெற்காசிய ஊடக ஒருமைப்பாட்டுத் தொடரமைப்பு போன்றவை, பத்திரிகையாளர்களிடையே எல்லை தாண்டிய ஒருமைப்பாடு மூலம் தேசிய ஆட்சியாளர்களுக்கு எவ்வாறு வலுவாக நெருக்குதல் தரமுடியும் என்பதைக் காட்டி விட்டன.

சண்டைகளினால் இடம்பெயர நேரிட்ட பத்திரிக்கையாளர்கள் அல்லது அவர்கள் எழுதியதால் ஆபத்துக்கு இலக்கான பத்திரிகையாளர்கள் சர்வதேச மற்றும் வட்டாரத் தொடரமைப்புக்களின் துணையுடன் இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். நேபாளி அரசியலில் இந்தியா ஆற்றி முக்கியமான பங்கு அங்கீகரிக்கப்பட்டது. புது தில்லியில் உள்ள இந்தியாவின் பாதுகாப்பு நிறுவனங்களில் நேபாளி ஆதரவுப் பிரச்சாரம் நடத்தப்பட்டது. மேலும் பிரபலமான தெற்காசியத் தலைவர்களின் ஆதரவும் நாடப்பட்டது. இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஐ.கே. குஜ்ரால், மூத்த பத்திரிகையாளரும், முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினருமான குல்தீப் நய்யார், பாகிஸ்தானின் மனித உரிமைகள் ஆணையத் தலைவர் அஸ்மா ஜெஹாங்கீர், பாகிஸ்தானின் டெய்லி டைம்ஸ் நாளேட்டின் ஆசிரியர் நஜம் சேத்தி போன்றவர்கள் நேபாளத்தில் ஜனநாயக மீட்புக்காகவும், பத்திரிகைச் சுதந்திரத்திற்காகவும் அறிக்கைகளை வெளியிட்டு வந்தனர்.

“சர்வதேசத் தொடரமைப்பு என்பது நேபாளப் பத்திரிகையாளர் சம்மேளனத்திற்குக் கிடைத்த மிகப் பெரிய சொத்து, அதை மன்னராட்சிக் காலத்தில் முழுமையாகப் பயன்படுத்தினோம்” என்று அரண்மனைப் புரட்சியின்போது சிறையில் அடைக்கப்பட்டிருந்த நேபாளப் பத்திரிக்கையாளர் சம்மேளனத்தின் பொதுச் செயலர் பிஷ்ணு நிஷ்ட்டூரி கூறினார்.

சர்வதேசத் தலையீட்டின் முதலாவது வெளிப்படையான அடையாளமாக, மன்னராட்சி தொடங்கிய ஒரு வாரம் கழித்து, சர்வதேசப் பத்திரிகையாளர் சம்மேளனத்தின் ஒரு பிரதிநிதிக் குழு அன்றைய தலைவர் கிறிஸ்டோபர் வாரன் தலைமையில் நேபாளத்திற்கு வந்தது. கோப்பன்ஹேகனில் சர்வதேச ஊடக ஆதரவு (ஐஎம்எஸ்) என்றஅமைப்பு ஆதரவு கொடுத்தது. அடுத்த சில மாதங்களில் நிலைமை மோசமடையவே, சுமார் 12 அமைப்புக்களின் கூட்டுப் பிரதிநிதிக் குழு 2005 ஜுலையில் நேபாளத்திற்கு மற்றொரு பத்திரிகைச் சுதந்திரப் பயணத்தை மேற்கொண்டது. அதைத் தொடர்ந்து, 2006 மார்ச் மற்றும் செப்டம்பரிலும், 2008 ஜனவரி மற்றும் ஏப்ரலிலும், 2009 பிப்ரவரியிலும் இதேபோன்றபயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. நேபாளத்தில் கருத்துவெளியீட்டுச் சுதந்திரத்தையும், ஊடக உரிமைகளையும் பாதுகாப்பதும், வலுப்படுத்துவதும், நேபாளி ஊடகங்களுக்கு ஆதரவு தருவதும் அந்தப் பயணங்களின் நோக்கமாக இருந்தது. எல்லா அமைப்புக்களும் ஒரே குரலில் பேசி, ஒரே வழியில் ஒரே குறிக்கோளைப் பின்பற்றவேண்டிய தேவை இருந்தது.[6]

மிகவும் தனிமைப்படுத்தப்பட்ட சூழலில், முதல் பயணத்தினால் நேபாளப் பத்திரிக்கையாளர்களின் கட்டுக்கோப்பு ஏற்றம் பெற்றது. அவர்களின் ஜனநாயக மற்றும் பத்திரிகைச் சுதந்திரக் கோரிக்கை நியாயமாக்கப்பட்டது. நேபாளி ஜனநாயக இயக்கத்தை சர்வதேசிய மயமாக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாக இருந்தது. ஏனெனில் அப்போது சில மேலை நாடுகள் மன்னரை ஆதரித்தன. மாவோ தீவிரவாதத்தை மன்னரால்தான் அடக்கமுடியும் என்று அவை கருதின.

முதல் மூன்று பயணங்களும் தீவிரமான அச்சுறுத்தல்களுக்கு எதிர்வினையாக அமைந்தன. ஊடக வளர்ச்சிக்கான நீண்டகாலப் பரிந்துரைகளுக்காக மதிப்பீட்டு முயற்சியாக 2008 ஜனவரி பயணம் இருந்தது. நேபாள அரசியல் சாசன நிர்ணய சபைத் தேர்தலின்போது கண்காணிப்பதற்காகவும், ஊடக உரிமைகளைப் பாதுகாக்கவும் 2008 ஏப்ரலில் பயணம் மேற்கொள்ளப்பட்டது. ஊடகங்களுக்கு எதிரான வன்முறைகள் வெடித்ததால் உடனடி எதிர்வினையாக 2009 பிப்ரவரி பயணம் இருந்தது.

மிஷன் மதிப்பீட்டு அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டதுபோல, “ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தும்படி அரசை உடனடியாக இணங்கவைக்க முடியவில்லை. ஆனால் அரசின் மீது ஒட்டுமொத்த நெருக்குதலை உருவாக்க முடிந்தது. இதனால் பெரிய அளவிலான கட்டுப்பாடுகள் தடுக்கப்பட்டன.”[7]

## தண்டனை விலக்கம் : நீதியை நிலைநாட்டுதல்

பத்தாண்டு கால கிளர்ச்சியின்போது சித்திரவதை முதல் தலைமறைவாக்குதல் மற்றும் நீதிக்குப் புறம்பான கொலைகள் வரை எண்ணற்றமனித உரிமை மீறல்கள் நிகழ்ந்தன. ராயல் நேபாள் ராணுவமும், மாவோயிச மக்கள் விடுதலை ராணுவமும் இந்த மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பாகும். இந்தக் காலகட்டத்திலும் தொடர்ந்த காலத்திலும் பல பத்திரிகையாளர்கள் கொல்லைப்பட்டனர், சித்திரவதை செய்யப்பட்டனர், தலைமறைவாக்கப்பட்டனர். போர், முறைப்படி முடிந்த பின்னரும் கூட, விரிவான சமாதான உடன்படிக்கை கையெழுத்தான பின்னரும் கூட, உடனடியாக வன்முறைமுடியவில்லை. போர் முடிந்தபிறகு கொல்லப்பட்டவர்களில் மிகவும் முக்கியமானவர் 2009 ஜனவரியில் கொல்லப்பட்ட உமாசிங். பாரா என்றஇடத்தைச் சேர்ந்த அவென்யூ டிவி பத்திரிகையாளர் பிரேந்திர ஷாவின் சடலம் 2007 நவம்பரில் கிடைத்தது. அவர் 2007 அக்டோபரில் கடத்தப்பட்டவர். இந்தக்

3 பார்க்க ஒலிபரப்பு நேயர் ஆய்வறிக்கை (2006-2007) http://www.nepalradio.org/p3_audience_reports.htm பெற்றதேதி செப்டம்பர் 16, 2010.

4 பார்க்க வானொலி ஒலிபரப்பாளர் நடத்தை விதி & செயல்பாட்டு வழிகாட்டு நெறிகள் 2008 http://www.nepalradio.org/p2_coc.htm பெற்றதேதி செப்டம்பர் 16, 2010.

5 பிரிவு IXI, பத்திரிகையாளர் பாதுகாப்புக் கமிட்டி, சர்வதேச பிரஸ் இன்ஸ்டிடியூட், பிரஸ் இன்ஸ்ட்டியூட் ஆஃப் இந்தியா, எல்லைகளைக் கடந்த நிருபர்கள், தெற்காசிய சுதந்திர ஊடகச் சங்கம், யுனெஸ்கோ, உலக சமூக வானொலி ஒலிபரப்பாளர் சங்கம், உலக செய்தி ஏடுகள் சங்கம், உலக பத்திரிகைச் சுதந்திரக் கமிட்டி.

6 பட்டாரை, பினோத், 2008, மிஷன்: பிரஸ் ஃப்ரீடம்: சர்வதேச பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் நேபாளத்தில் கருத்து வெளியீட்டுச் சுதந்திரம் பற்றிய விவரம், இன்டர் நேஷனல் மீடியா சப்போர்ட், கோப்பன்ஹேகன்.

7 மேலது

## சட்டாம்பிள்ளையின் நீளமானகை

மே 27, 2010 அன்று இந்தியாவின் வருவாய் புலனாய்வுத் துறைதென் கொரியா மற்றும் கனடாவில் இருந்து காட்மண்டுவுக்கு அனுப்பப்பட்ட 1000 டன் இறக்குமதி செய்தித்தாள் காகிதத்தை வழியில் கைப்பற்றியது. அதன் 39 பெட்டகங்களை விசாரணைக்காக நிறுத்திவைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. நேபாளியிலும் ஆங்கிலத்திலும் மிக அதிகமாக விற்பனையாகும் காந்திப்புர் மற்றும் காட்மண்டு போஸ்ட் நாளேடுகளின் உரிமை யாளரான காட்மண்டுவின் காந்திப்பூர் குழுமத்துக்குப் போய்ச் சேர வேண்டிய அந்தச் செய்திக்காகிதம் ஒரு மாதத்ததிற்கும் மேலாக கொல்கத்தாவில் பிடித்து வைக்கப்பட்டிருந்தது. அந்த நாளேடுகளின் உரிமையாளர்கள் காட்மண்டுவில் உள்ள இந்தியத் தூரதரகத்துடன் பேச்சுநடத்திக் கொண்டிருந்தனர்.

வாணிப மற்றும் பொருள் கடப்பு ஏற்பாடுகளின் கீழ் தனது இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பொருட்களை இந்தியா வழியாகத் தடங்கலின்றிக் கொண்டுசெல்ல உரிமை பெற்றிருந்தது. இந்த வசதி தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதற்குச் சான்று இருந்தாலன்றி, ஸீலிடப்பட்ட கன்ட்டெய்னர்களை நேரடியாக நேபாளி பிரதேசத்தில் உள்ள ஒரு உலர் துறைமுகத்திற்குக் கொண்டு செல்ல முடியும். இந்த நடவடிக்கையில் தீயநோக்கு இருப்பதாகக் கூறப்படுவதை காத்மண்டுவில் உள்ள இந்தியத் தூதரகமும், இந்திய வெளியுறவு அமைச்சகமும் மறுத்தபோதிலும், காந்திப்புர் குழுமப் பத்திரிகைகளில் இந்தியாவின் நலன்களுக்கு எதிரான செய்திகள் வெளியிடப்பட்டன என்பது தெளிவான காரணமாகத் தெரிந்தது.

இந்தியாவின் அஸ்ஸாம் – மேகாலயா வட்டாரத்தில் நேபாளி பேசுவோர் தாக்கப்படுவது பற்றியும், இந்தியாவும் நேபாளமும் பகிர்ந்து கொள்ளும் கோனி நதியின் ஒரு வாய்க்கால் பணியால் நேபாளி கிராமங்கள் பாதிக்கப்படுவதாகவும் பத்திரிகைகளில் வெளியான செய்திகளால் இந்தியத் தூதரகம் எரிச்சலடைந்திருக்கலாம் என்று நம்பப்பட்டது. மேலும் மாதவ் குமார் நேபாள் அரசுக்கு எதிரான காந்திப்புர் தலையங்கங்களுக்கு இந்தியாவின் ஆதரவு இருப்பதாகப் பரவலாகக் கருதப்பட்டது. தவிரவும், இந்தியாவில் வளரும் மாவோயிசநெருக்கடி பற்றி காந்திப்புர் பத்திரிகைகளில் வெளியான செய்திகளும் இந்த எரிச்சலுக்குக் காரணமாக இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. திரைமறைவுப் பேச்சுவார்த்தைகள் பலன்தராமல் போகவே, செய்திக்காகிதம் பறிமுதல் செய்யப்பட்டதை காந்திப்புர் பத்திரிகைகள் முதல் பக்கச் செய்திகளாக வெளியிட்டன. இதனால் பத்திரிகைச் சுதந்திரத்தை ஆதரிக்கும் பலரும் அக்கறைகாட்டினார்கள்.

இதற்குப் பதிலடியாக, இந்தியத் தூதரகம் காரசாரமாக ஒரு அறிக்கை வெளியிட்டது. வழக்கமான சுங்கப் பரிசோதனைக்கு உள்நோக்கம் கற்பிக்கப்படுவதாகவும், திரித்துச் செய்தி வெளியிடுவதால் சுங்கப் பரிசோதனை பிரச்சினை விரைவில் தீராது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டது. ஆனால் இந்தப் பிரச்சாரம் மற்றும் நெருக்குதல்களால் ஜுன் 27 அன்று செய்திக்காகிதப் பெட்டகங்கள் விடுவிக்கப்பட்டன.

அத்துடன் பிரச்சினை முடிந்திருக்க வேண்டும். ஆனால் ஆகஸ்ட் 27 அன்று காட்மண்டுவில் உள்ள இந்தியத் தூதரகம் ஒரு செய்திக் குறிப்பை வெளியிட்டது. அதில், "நேபாளத்தில் இந்தியாவின் கூட்டுமுயற்சியுடன் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு எதிராக சில பத்திரிகைகளும், தொலைக் காட்சி ஊடகமும்" செய்தி வெளியிடுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தச் செய்திகளில் மிரட்டும் நோக்கம் இருப்பதாக தூதரகம் கூறியது. "கூட்டுமுயற்சி நிறுவனங்கள் சில, தங்களிடம் விளம்பரம் கோரி ஊடகங்கள் அணுகியதாகவும், கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் எதிரிடையான பிரச்சாரம் செய்யப்படும் என்று மிரட்டியதாகவும் தூதரகத்திடம் தெரிவித்ததாக" செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து எதிர்ப்புக்கள் வெடித்தன. இந்தியத் தூதரகம் தூதாண்மை நெறிகளை மீறி, நேபாள ஊடகங்களின் சுதந்திரம் மற்றும் தன்னாட்சி உரிமைக்கு அவமதிப்பான முறையில் செயல்படுவதாகக்கூறி பத்திரிகையாளர் சங்கங்களும், ஊடக நிறுவனங்களும், நேபாள பிரஸ் கவுன்சிலும் கண்டித்தன. தூதரகத்தின் அறிக்கை "பொருத்தமற்றது" என்று கூறிய நேபாள பத்திரிகையாளர் சம்மேளனம், இந்தச் சம்பவம் பற்றி விரிவாக ஆய்வு நடத்தப் போவதாகக் கூறியது. மேலும் நேபாள டெலிவிஷன் ஒளிபரப்பாளர் சங்கம். நேபாள ஊடகங்கள் சங்கம், நேபாள ஒலிபரப்புச் சங்கம், சமூகவானொலி ஒலிபரப்பாளர் சங்கம் ஆசிய அமைப்புக்களும் இந்தியத் தூதரகத்திற்கு எதிராகக் களத்தில் இறங்கின.

ஆனால், ஊடகங்களிடையே நிலவுவதாக கூறப்படும் நெறிமுறையற்றநடைமுறைகளைக் கவனித்தால் இந்த அமைப்புக்களுக்கு நம்பகத்தன்மை ஏற்படும் என்று கூறும் அறிக்கையை இந்தியத் தூதரகம் வெளியிட்டது.

அரசியல் தகராறுகளைத் தீர்ப்பதற்காக காந்திப்புர் குழுமம் இறக்குமதி செய்த செய்திக் காகிதத்தைப் பிடித்துவைத்த இந்திய அரசின் முடிவை சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் இந்தியாவில் உள்ள தனது சார்பு அமைப்புக்களுடன் சேர்ந்து குறைகூறியது. இந்தப் புதிய உரசல்கள் ஏற்பட்ட நிலையில், சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினரும் இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் நேபாள பிரஸ் கவுன்சிலின் மத்யஸ்தத்திற்கு விட வேண்டும் என்று சர்வதேசப் பத்திரிகையாளர் சம்மேளனம் நேபாளத்திலும், இந்தியாவிலும் உள்ள தனது சார்பு அமைப்புக்களுடன் சேர்ந்து வற்புறுத்தியது. இந்த மாதிரியான நடவடிக்கையால், நேபாள ஊடகங்களுக்கு ஒரு நிறுவன ஏற்பாடு கிடைக்கும் என்றும், ஊடகங்களின் நடத்தை நெறி மற்றும் தொழில்முறைநடத்தைகள் தொடர்பாக எதிர்கால முடிவுகளுக்கு வழி காட்டியாக இருக்கும் என்று சர்வதேசப் பத்திரிகையாளர் சம்மேளனமும், அதன் சார்பு அமைப்புக்களும் கருதின.

கொலையாளிகள் இதுவரை தண்டிக்கப்படவில்லை.

போரின்போதும், அதன்பின்னரும் பத்திரிகையாளர்களும் ஊடக ஊழியர்களும் தாக்கப்பட்டதற்கு தண்டனை தரப்படாத ஒருபண்பு நிலவியது, இந்தத் தண்டனை விலக்கத்திற்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்பது மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் பத்திரிகைச் சுதந்திர ஆதரவாளர்களின் முக்கியமான அலுவல்களில் ஒன்றாக இருந்தது. எனினும், ஒரே சீராக வாதாடிய பிறகு, போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக நிதியம் ஒன்றைஅமைக்கும்படி அரசைக் கட்டாயப்படுத்தவதில் நேபாள பத்திரிகையாளர் சம்மேளனம் வெற்றி கண்டது. மேலும், மாவட்டங்களில் தண்டனை விலக்கத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு முறையைத் தோற்றுவிக்க அரசு இணங்கியது மற்றொரு முன்னேற்றமாகும். மாவட்டங்களில் மேற் கொள்ளப்பட்ட இந்த இயக்கம் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டது.

பத்திரிக்கையாளர்களின் உடலுக்குப் பாதுகாப்பு இல்லாததோடு, அவர்களின் வேலைக்கும் மரியாதை இல்லாமல் போய்விட்டது. சில நேரங்களில் உயிருக்கும் ஆபத்தாக முடிகிறது என்று நேபாள பத்திரிகையாளர் சம்மேளனத்தின் இப்போதைய தலைவர் தர்மேந்திர ஜா கருதுகிறார். "விரைந்து வழக்கு விசாரணை நடத்தி, குற்றம் இழைத்தவர்களைத் தண்டிக்க வழிகாணுமாறு நமது வழக்குரைஞர் நண்பர்களைத் தூண்ட வேண்டும். குறைபாடுடைய நீதி வழங்கும் முறைசீரமைக்கப்படாவிட்டால், மனித உரிமைகள் மீறல்வழக்கில் அவை செயல்படாவிட்டால், தண்டனையில் தப்பிக்கும் நடைமுறைக்கு முடிவுகட்ட முடியாது" என்றஅவர் கூறுகிறார்.

இதுவரையிலும், மாறுதல் செய்வதில் அதிகாரிகள் தீவிரம் காட்டியதாக ஒரு வழக்கு கூட இல்லை. மாவோயிச ஆதரவுப் பத்திரிகை ஜனாதிஷா ஆசிரியர் ஜே.பி. ஜோஷி 2008 அக்டோபர் 8 அன்று கடத்தப்பட்டார். அவருடைய சடலம் நவம்பர் 28 அன்று காணப்பட்டது. ஒரு விசாரணைக் கமிஷன் போடப்பட்டது. எனினும், அந்தக் கமிஷன் 3 மில்லியன் நேபாள ரூபாய் செலவழித்து அமர்வுகளை நடத்தியபோதிலும் அறிக்கை எதுவும் வெளியாகவில்லை என்பதை நேபாள பத்திரிகையாளர்

சம்மேளனத்தின் மத்திய கமிட்டி உறுப்பினர் ராம்ஜி தஹால் போட்ட தகவல் உரிமை விண்ணப்பத்திற்குக் கிடைத்த பதில் காட்டுகிறது.

அதேபோல, 2007-இல் பிரேந்திர ஷா கடத்தி கொலை செய்யப்பட்ட வழக்கிலும், குற்றம் இழைத்ததாக சந்தேகிக்கப்படுவோர் மீது வழக்கு தொடுக்கப்படவில்லை. மாறாக அவர்களுக்குப் பரிசுகள் கிடைத்ததாகக் கூறப்படுகிறது. மாவோயிஸ்ட் தொண்டர்கள்தான் ஷாவைக் கொன்றார்கள் என்று நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) ஒப்புக் கொண்டது. கீழ் மட்டத் தொண்டர்களின் அராஜகப்போக்கும், தனிநபர் அணுகுமுறையுமே இதற்குக் காரணம் என்று அது கூறியது. எனினும்-மனித உரிமைகள் ஹைகமிஷனர் அலுவலகம் 2009 நவம்பரில் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டது போல திரும்பத்திரும்ப அழைப்பு அனுப்பியபோதிலும் அவர்களை ஆஜர்படுத்தாமல், ஷாவைக் கொன்றவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நால்வரில் இருவரை லால்பகதூர் சௌத்ரி, குந்தன் பௌஜ்தார் என்பவர்களை கட்சியின் பாரா மாவட்டக் கமிட்டியின் செயலகப் பதவிகளுக்கு நியமித்தது.

## ஜன ஆந்தோளன் II மற்றும் நடப்பு சவால்கள்

2006 ஏப்ரலில் தொடங்கிய இரண்டாவது ஜன ஆந்தோளன் இயக்கம் மன்னராட்சிக்கு முடிவுகட்டி, நாடாளுமன்றத்தை மீண்டும் நிலைநாட்டுவதில் வெற்றி கண்டது. மாறுதல் காணும் எல்லா இயக்கங்களிலும் சமாதானம், ஜனநாயகம், கூட்டாட்சி, உள்ளடக்கிய வளர்ச்சி, இனப் பிரதிநிதித்துவம் ஆகிய பிரபலமான இலட்சியங்கள் பிரதிபலித்தன. பிரதிநிதித்துவம் கோரும் இந்தப் புதிய வேட்கையினால் உந்தப்பட்ட நேபாள பத்திரிக்கையாளர் சம்மேளனம் தலித்துகளுக்கும், இனச்சிறுபான்மையினருக்கும், பெண்களுக்கும் பிரதிநிதித்துவம் தருவதற்காக தனது அமைப்புச் சட்ட விதிகளைத் திருத்தியது. எனினும், இந்தப் போக்கிற்கு எதிரான கருத்துக்களும் மக்களிடையே எழும்பின. தொழில்முறைஅடையாளங்களைக் காட்டிலும் இன அடையாளத்தை ஊக்கப்பட்டுத்தும் போக்கிற்கு ஒரு தொழில்சார் அமைப்பு பணிந்துவிடக் கூடாது என்று சில விமர்சகர்கள் கருதினார்கள். பத்திரிகை, ரேடியோ அல்லது ஆன்லைன் பத்திரிகையாளர்களுக்கு கோட்டா முறைஇல்லாவிடில், நாட்டில் இன அடிப்படையில் இட ஒதுக்கீடு இயலாமல் போகலாம் என்றகருத்து ஒருபுறம் நிலவியது. இன்னொரு புறம், இன உள்ளடக்கத்தின் அடிப்படையில் சமூகத்தை நேபாள பத்திரிகையாளர் சம்மேளனம் பிரதிபலிக்க வேண்டும், குரல் எழுப்ப முடியாமல் கிடக்கும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களையும் அரவணைக்க வேண்டும் என்று விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையின் ஆதாரவாளர்கள் கூறினார்கள்.

2007 ஏப்ரலில் நேபாளத்தின் அரசியல் சாசன சபைக்கு நடந்த தேர்தலில், பேரவையில் தனிப்பெரும் கட்சியாக முன்னாள் கிளர்ச்சியாளர்கள் வெற்றி பெற்றனர். இதனால் அவர்களுக்கு கூட்டணி அரசுக்குத் தலைமை ஏற்கும் வாய்ப்பு கிடைத்தது. ஏகப்பட்ட நம்பிக்கைகளோடு ஒரு குடியரசாக நேபாளம் அறிவிக்கப்பட்ட போதிலும் இனக் கூட்டாட்சி, முன்னாள் போராளிகளை ஒருங்கிணைப்பது, ஆயுதப் படைகளைவிட மக்களின் மேலோங்கிய நிலை என்பன போன்றசர்ச்சைக் குரிய கருத்துக்களால் உறுதிப்பாடு குலைந்து, அரசில் இருந்து நேபாள கம்யூநிஸ்ட் (மாவோ) கட்சி 2009 மே மாதம் வெளியேறியது.

இப்போது கூட்டணி அரசுக்குத் தலைமை ஏற்கும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (யுஎம்எல்) கருத்து முரண்களிலும், உள்கட்சிப் பூசல்களிலும் சிக்கித் தவிக்கிறது. புதிய அரசியல் சாசனம் வரையப்படும் நிலையில், இனக் கூட்டாட்சிக் குழுக்களின் கோரிக்கைகள் நேபாள அரசியலைத் தொடர்ந்து உலுக்கி வருகின்றன. பொருளாதார சிக்கல்களுக்கு நடுவில், அடிப்படை ஜனநாயக சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாக கடுமையான பொருள் தட்டுப்பாடும், பெருகும் சட்டச்சீர் குலைவும், சமவெளிப் பகுதியின் கலகங்களும் திகழ்கின்றன. நடப்பு அரசியல்மாறுதல் கட்டத்தில், வெவ்வேறு அரசியல் சக்திகளுக்கு இடையில் ஊடகங்கள் சிக்கித் தவிக்கின்றன. பால் மற்றும் இன அடிப்படையிலான அடையாளங்கள் குறிப்பாகப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. தொலைவுப் பகுதி மாவட்டங்களிலும், சமவெளிப் பகுதிகளிலும் பணியாற்றும் பத்திரிகையாளர்கள், மாதேசிக் கிளர்ச்சியினால் ஆபத்துக்கு இலக்காகியுள்ளனர். தற்போதைய சூழலில் தொழில் முறைத் தொலைவு எட்ட முடியாதது. அரசு அமைப்பதிலும், அமைதியை நிலைநாட்டுவதிலும் ஊடகங்களின் பங்களிப்பு தொடர்ச்சியாக இல்லை. அதேபோல, பொறுப்பாக்குவது மற்றும் தண்டனை விலக்கத்திற்கு முடிவுகட்டுவதற்கான குரலும் ஓங்கி ஒலிக்கவில்லை.

2007-இல் உழைக்கும் பத்திரிகையாளர் சட்டமும், தகவல் அறியும் உரிமைச் சட்டமும் நிறைவேற்றப்பட்ட போதிலும் அவை இன்று வரை சரிவரச் செயல்படுத்தப் படவில்லை. கருத்துவெளியீட்டுச் சுதந்திரத்திற்கு இடைக்கால அரசியல் சாசனம் உத்தரவாதம் வழங்கினாலும் அதற்கான சட்டங்களும் நிறைவேற்றப்பட வில்லை. அதேபோல, ஒரு கமிட்டி மூலம் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்ட போதிலும் பத்திரிகையாளர்களுக்கும், ஊடகப் பணியாளர்களுக்கும் அது ஒரே சீராக அமல்படுத்தப்படவில்லை. மன்னராட்சியின் போதும், ஜனநாயக ஆதரவுப் போராட்டத்தின் போதும் ஊடக உரிமையாளர்களும், பத்திரிகை ஆசிரியர்களும், பத்திரிகையாளர்களும், இதர ஊடக ஊழியர்களும் ஒன்றுபட்டு, ஜனநாயகத்தை மீட்கும் ஒரே நோக்குடன் போராடினார்கள். சமாதான முயற்சிகள் தொடங்கிய பின்னர், முரண்பாடுகள் தீவிரமடைந்தன. ஊதியம் மற்றும் தொழிலாளர் பிரச்சினைகளால் நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையே பிளவுகள் தோன்றின. வேலைப் பாதுகாப்பு, பணிக்காலப் பயன்கள், காப்பீடு மற்றும் இதர பிரச்சினைகள் தொடர்ந்து புகைந்து கொண்டே இருக்கின்றன. முதலில் அரசியல் சாசனம் வரையப்பட வேண்டும், அதன் பின்னரே இந்தப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. கிளர்ச்சிக்குப் பின்னர் பொருளாதாரத்தைச் சீரமைக்கும் சவாலும் ஊடகங்களைப் பாதித்துவிட்டது. ஊடகங்களில் குறைவான ஊதியமும், பாதுகாப்பற்றபணி நிலைமையும் விதிகளாகிவிட்டன.

இரண்டாவது ஜன ஆந்தோளன் கால கட்டத்திற்குப் பிறகு புதிய உத்திகளை உருவாக்க வேண்டிய தேவையை வலியுறுத்திய நேபாள பத்திரிகையாளர் சம்மேளனத்தின் துணைத் தலைவர் கோவிந்த் ஆச்சார்யா, “தெருக்களில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்வதில் நாங்கள் வலுவாக இருக்கிறோம், ஒரே நாள் அறிவிப்பில் ஆயிரக்கணக்கான பத்திரிகையாளர்களை தெருவில் இறக்க முடிகிறது. இதனால் ஆட்சியில் உள்ள அரசுக்கு நெருக்குதலைத் தரமுடிகிறது. எனினும், மீண்டும் பழைய நிலைக்குமாறிவிடுகிறது. இதனால் நெடுங்கால மாற்றத்திற்கான உத்திகளை வகுக்க வேண்டியுள்ளது” என்று கூறினார்.

இதை ஒப்புக்கொண்ட சிவா கௌன்லே, “நேபாள பத்திரிகையாளர் சம்மேளனம் போன்றபத்திரிகையாளர்களின் அமைப்புக்கள் தொழில் முறையில் இயங்கி, உறுப்பினர்கள் பத்திரிகைத் துறையின் சீரிய மாண்புகளைப் பின்பற்றவேண்டும்” என்று கூறினார்.

சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து ஏற்பட்ட உற்சாகத்தில், அரசுக்குச் சொந்தமான ஊடகத்தை பொதுச்சேவை ஊடகமாக மாற்றும் பிரச்சினைக்கு போதிய கவனம் செலுத்தப்படவில்லை. கோர்க்கா பத்ரா, ரைஸிங் நேபாள் போன்றஅச்சு ஊடகங்களும், ரேடியோ நேபாள், நேபாள் டிவி போன்றமின்னணு ஊடகங்களும், ராஷ்ட்ரிய சமாச்சார் சமிதி போன்றசெய்தி ஏஜன்சிகளும் இப்போது கட்டுப்பாடுகள் அதிகமின்றி இருக்கின்றன. இவை ஜனநாயகத்திற்கு ஆதரவாக ஒலிக்கின்றன. ஆனால், இது தற்போதைய அரசியல் சூழலினால் ஏற்பட்ட விளைவுதான். நிறுவனக் கண்காணிப்பு முறைகளினால் ஏற்பட்டதல்ல.

அரசியலில் கிரிமினல்களின் ஆதிக்கமும், குற்றங்களுக்கு அரசியல் சாயம் பூசப்படுவதும் பத்திரிகைச் சுதந்திரத்திற்குப் பேராபத்தாக உள்ளன. சமாதான நடைமுறைகளுக்குப் பிறகு ஏற்பட்டுவிட்ட விளம்பரவருவாய் போட்டியும், வர்த்தக நலன்களின் செல்வாக்கும் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதிக்கின்றன. முன்பு அச்சமின்றி செயல்பட்ட பத்திரிகையாளர்கள் தாங்களாகவே சுய தணிக்கைகு உட்படுகின்றனர். எனினும், பரவும் நம்பிக்கைகளும், ஜனநாயக வெறியும் எதிர்வரும் ஆண்டுகளில் நேபாள ஊடகச் சமூகத்தை நிலைத்திருக்கச் செய்யலாம். அரசியல் சாசனம் வரையப்படும் வரை இது தொடரக்கூடும்.



பாகிஸ்தானுக்கு அண்மையில் சென்றசர்வதேச பத்திரிகைச் சுதந்திர குழுக்கள், உள்ளூர் யூனியன்களுக்கும், உலக யூனியன்களுக்கும் இடையே ஒருமைப்பாட்டுக்கு அடித்தளம் அமைக்க முயன்றன. *(புகைப்படம்: PFUJ)*

## பாகிஸ்தான்

# இன்னல்களுக்கு இடையில் பத்திரிகைத் துறை

தனது ஆயுளில் பாதியை ராணுவ ஆட்சியின் கீழ் கழித்துவிட்ட பாகிஸ்தான், பத்திரிகைத் துறைவலுவாக இருந்தாலும் ஜனநாயகம் பலவீனமாக இருந்தால் பத்திரிகையாளர்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களை எடுத்துக் காட்டுகிறது. பாகிஸ்தான் தோன்றியதில் இருந்து ஜனநாயகத்திற்காகவும், பொறுப்பாக்குவதற்காகவும் நடக்கின்றபோராட்டத்தில் ஊடகங்கள், குறிப்பாகப் பத்திரிகையாளர்கள் முன்னணியில் இருந்து வருகின்றனர். ஊடகமும் ராணுவமும் மட்டுமே பாகிஸ்தானில் சரிவு காணவில்லை என்று பத்திரிகையாளர்கள் கூறுகின்றனர். எனினும், சர்வாதிகார ஆட்சிகளுக்கு கட்டுப்பாடும் கண்காணிப்பும் இல்லாத நிலையில் பத்திரிகையாளர்கள்தான் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

“பாகிஸ்தான் முழுவதுமே ஒரு போர் மண்டலம்” என்று கூறுகிறார் முதுபெரும் பத்திரிகையாளரும், பாகிஸ்தான் பெடரல் பத்திரிகையாளர் சங்கத்தின் முன்னாள் தலைமைச் செயலருமான மஸர் அபாஸ். ஊடக நிறுவனங்கள் தங்களது ஊழியர்களின் பாதுகாப்புக்காக போதுமான அளவு செயல்படவில்லை என்கிறார் அவர். “பணிப் பாதுகாப்பு கொஞ்சம் கூட இல்லை. காப்பீட்டு வசதியும், பாதுகாப்புப் பயிற்சியும் தரப்படவில்லை. மத்திய அரசின் நிர்வாக்ததில் உள்ள பழங்குடிப் பகுதிகள், பலுச்சிஸ்தான், வடமேற்கு எல்லை மாகாணம் போன்றபோர் மண்டலங்களில் பணியாற்றும் பத்திரிகையாளர்களுக்கு குணடுதுளைக்காத சட்டை போன்றபாதுகாப்பு உடைகள் தரப்படவே இல்லை” என்று அவர் சுட்டிக்காட்டுகிறார்.

ராணுவச் சட்டத்தின் கீழ், குறைகூறுவது அல்லது ராணுவத்தின் பங்கு பணிபற்றி எழுதுவது தடுக்கப்பட்டதாகும். இவை கடுமையான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவை. பாகிஸ்தானில் அமெரிக்காவின் பங்கை குறைகூறுவது கூட அரசுக்கு, குறிப்பாக 2001 செப்டம்பர் நிகழ்வுகளுக்குப் பின்னர் ராணுவ நடவடிக்கைகளுக்கு சங்கடத்தைத் தருவதாகும். இந்த ராணுவ நடவடிக்கை 2007 நடுவில் தீவிரமடைந்தது. எனினும், ஜெனரல் பெர்வேஸ் முஷாரப் ஆட்சியில் இருந்து இறங்கியபிறகு. 2008 தொடக்கத்தில் ஜனநாயக அரசு பதவியேற்றது. அதன்பிறகு ஊடகங்களின் நிலை மாறிவிட்டது. அன்றாட அரசு விவகாரங்களில் ராணுவத்தின் குறுக்கீடு குறைந்தது. அமெரிக்காவும் போற்றப்படுவதில்லை. அதனுடைய நடவடிக்கைகள் ஊடகங்களின் கூர்மையான விமர்சனங்களுக்கு உள்ளாகின்றன. உலகெங்கும் 28 நாடுகளில் அமெரிக்காவின் பங்களிப்பு பற்றிய பொது மக்களின் கண்ணோட்டம் மேம்பட்டபோதிலும், துருக்கியிலும் பாகிஸ்தானிலும் மட்டுமே அமெரிக்கா பற்றிய கண்ணோட்டம் குறைந்துவிட்டதை 2010 ஏப்ரலில் பிபிசி நடத்திய கருத்துக் கணிப்பு புலப்படுத்தியது.

இன்றைக்கு பாகிஸ்தானிப் பத்திரிகையாளர்களுக்கு அரசு அல்லது ராணுவத்திடம் இருந்து அச்சுறுத்தல் வராமல், தீவிரவாதக் குழுக்களிடம் இருந்தது அச்சுறுத்தல் வருகிறது. “தாலிபான்கள் நபர்கள் அல்ல, நிழலைப்பேன்றவர்கள்” என்கிறார் சமா டிவியின் லாகூர் குழுத்தலைவர் ஹபீப் அக்ரம், “போலி முகவரிகளில் இருந்து மின்னஞ்சல்கள் வருகின்றன. தெரியாத எண்களில் இருந்து தொலைபேசி அழைப்புக்கள் வருகின்றன. சமுதாயம் முழுவதுமே பல்வகை மிரட்டல்களை எதிர்நோக்கியுள்ள வேளையில், இந்த அச்சுறுத்தல்களைப் பத்திரிகையாளர்கள் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை” என்று அவர் சொல்கிறார்.

பாகிஸ்தானின் போர் மண்டலங்களில் பத்திரிகையாளர்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட ஒரு செயல் முறைஇல்லை. ஸ்வாட் பள்ளத்தாக்கு போன்றபாகிஸ்தானி ராணுவம் புதிதாகக் கைப்பற்றிய பகுதிகளுக்கு ஊடக் குழுவை அழைத்துச் செல்லும் பழக்கம் உள்ளது. ஆனால் எல்லா இடங்களுக்கும் எளிதில் செல்ல முடியாமல் இருப்பதால், ஒரு செய்தியை அதன் எல்லாக் கோணங்களில் இருந்தும் தெரிவிக்க முடிவதில்லை. ஒரு சமநிலையைப் பேண முயற்சிக்கும் ஒரு மாற்றம் தெரிவதாக மூத்த பத்திரிகையாளர் ஃபஹ்த் ஹுசைன் கூறுகிறார். “ஓராண்டுக்கு முன்புவரை ஊடகங்களில் தெளிவற்றஒருபோக்கு இருந்தது. தாலிபான் எதிர்ப்பு – ஆதரவு சக்திகளுக்கு இடையே அது பிரிந்திருந்தது. ஆனால் 2009 மார்ச்–ஏப்ரலுக்குப் பின்னர், ஸ்வாட் பள்ளத்தாக்கில் பெரிய தொரு ராணுவ நடவடிக்கை நடந்த




பாகிஸ்தானில் உள்ள யூனியன்களில் பெண் பத்திரிகையாளர்களின் எண்ணிக்கை சீராக அதிகரித்தது. ஆனால் அதற்காகத் தீவிரமாகப் போராட வேண்டியிருந்தது. *(புகைப்படம்: PFUJ)*

பிறகு ஊடகங்களின் செயல்பாட்டில் ஒரு பெருத்த மாற்றம் ஏற்பட்டுவிட்டது. திடீரென தாலிபான்கள் நெருங்கிவந்து இஸ்லாமாபாதுக்கு 60 கி.மீ. தொலைவில் உள்ள புனேர் நகருக்குள் நுழைந்ததும், அது ஊடகங்களை உலுக்கியது. அதேபோல, பொது இடத்தில் பெண்ணுக்கு கசையடி கொடுக்கப்பட்ட வீடியோ காட்சியைக் கண்டதும் இந்தப் புனிதப்போராளிகள் பற்றிய மக்களின் கண்ணோட்டம் அடியோடு மாறிவிட்டது" என்று அவர் கூறினார்.

2009-இல் ஸ்வாட் பகுதியில் இருந்து மக்கள் வெளியேறி அகதி முகாம்களில் நுழைந்தபோது, அப்பகுதி மக்களுடன் நேரடியாகக் கலந்துரையாடும் வாய்ப்பு முதன்முதலாகக் கிடைத்தது. ஸ்வாட் பள்ளத்தாக்கைச் சேர்ந்த பல பத்திரிகையாளர்களும் குடிபெயர்ந்து, வாழவழியின்றித் திண்டாடினார்கள். முதல் தடவையாக, ஸ்வாட் பகுதியின் சாதாரணமக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் பற்றிக் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் தேசிய ஊடகங்களுக்கு ஏற்பட்டன. இந்த நேரடி அனுபவத்தினால் தீவிரவாதம் பற்றிய ஊடகங்களின் கண்ணோட்டம் மாறியது.

2001 செப்டம்பர் 11-க்குப் பிறகு உலகின் கவனம் பாகிஸ்தான் மற்றும் அதன் பழங்குடிப் பகுதிகளின் மீது திரும்பியபோது, உள்ளூர் தொலைக் காட்சியால் சமாளிப்பதற்கு போதியவசதிகள் இல்லை என்று டெய்லி டைம்ஸ் நாளேட்டின் பெஷாவர் குழுத்தலைவரும், எல்லைகள் இல்லா நிருபர்கள் என்றஅமைப்பின் பிரதிநிதியுமான இக்பால் கட்டாக் கூறினார். “போதிய பயிற்சி இல்லாமல் பத்திரிகையாளர்கள் அனுப்பப்பட்டனர். பல பத்திரிகையாளர்கள் பணியின்போது உயிரைப் பலிகொடுக்க நேர்ந்தது” என்று அவர் கூறினார். பாதுகாப்பான தொலைவில் இருந்து படம்பிடிக்க ஜூம் லென்ஸ் போன்றதொழில்நுட்ப முன்னேற்றங்களும், சாதாரண பாதுகாப்புப் பயிற்சியும் கொடுத்திருந்தால் விலைமதிப்பற்றபல உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும் என்று கட்டாக் கூறினார். பழங்குடிப் பகுதிகளில்தான் பத்திரிகையாளர்களுக்கு அதிக ஆபத்து இருந்தது. அங்கு தீவிரவாதம் மற்றும் போர்க் குழுக்களின் பாதிப்போடு, ஊதியம், பணிநிலைமை போன்றபாதுகாப்பற்றநிலைமைகளும் இருந்தன என்கிறார் அவர். 2009 ஸ்வாட் தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கை போன்றநெருக்கடியான நேரங்களில், பாகிஸ்தான் பெடரல் பத்திரிகையாளர் யூனியனின் சார்பு அமைப்பான கைபர் பத்திரிக்கையாளர் யூனியன், அல்லப்படும் பத்திரிக்கையாளர்களுக்கு உதவிட முனைப்பாகச் செயல்பட்டது.

2008 பிப்ரவரி முதல் 2010 மே வரையிலும் பணியின்போதோ, எதிரெதிர் துப்பாக்கிச் சண்டைகளிலோ கொல்லப்பட்ட ஊடக ஊழியர்கள் தவிர, ஒன்பது பத்திரிக்கையாளர்கள் குறிவைத்துக் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் பெடரல் பத்திரிகையாளர் யூனியன் கூறியது. 2010 மே, சிந்து மாகாணம், வாஹி பாந்தி என்றஇடத்தில் டெய்லி சிந்து நிருபர் குலாம் ரசூல் பிர்ஹாமணி; 2010, பிப்ரவரி, கைர்புர் என்றஇடத்தில் மெஹ்ரான் டிவி நிருபர் ஆஷிக் அலி மாங்கி; 2009 ஆகஸ்ட், கைபர் ஏஜன்ஸி ஜம்ருத் என்றஇடத்தில் ஷம்ஷாத் டிவியின் பெஷாவரில் உள்ள ஆப்கன் சுயேச்சை பத்திரிகையாளர்; 2009, பிப்ரவரி, ஸ்வாட்டில் ஜியோ டிவி மற்றும் தி நியூஸின் முஸா கான் கேல்; 2009, ஜனவரி, கோஹாட்டில் அவாமி இன்குலாப் நாளேட்டின் ஆமர் வக்கீல் 2008 நவம்பர், பஞ்சாபில் ராயல் டிவியின் அப்துல் ரஸாக் ஜோரா; 2008 மே, பஜௌர் பழங்குடிப் பகுதியில் உள்ள கார் என்றஊரில் எக்ஸ்பிரஸ் டிவி மற்றும் டெய்லி எக்ஸ்பிரஸின் மொகமது இப்ராஹிம்; 28 ஏப்ரல், பலுச்சிஸ்தானில் கபரெய்ன் பத்திரிக்கையின் காதிம் ஹீசைன் ஷேக்; 2008 பிப்ரவரி பலுச்சிஸ்தானில் உள்ள குவெட்டாவில் அக்பர்-இ-ஜெஹான் பத்திரிக்கையின் சிஸ்தி முஜஹீத் ஆகியோர் இவ்வாறு கொல்லப்பட்டவார்கள்.

பத்திரிகையாளர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டதோடு அவர்களுடைய குடும்பத்தினரும் தாக்கப்பட்டார்கள். 2006 நவம்பரில் தெற்கு வஜிரிஸ்தானில் பிபிசி நிருபர் திலாவர்கான் வஜுர் என்பவரின் 16 வயது தம்பி தைமூர்கான் சித்திரவதை செய்யப்பட்டு, கொல்லப்பட்டார். 2005 டிசம்பரில், அவுஸாப் என்றஉருது நாளேட்டின் மற்றும் நேஷன் பத்திரிகையின் வடக்கு வஜிரிஸ்தான் செய்தியாளரும், ஐரோப்பிய பிரஸ் போட்டோ ஏஜன்சியின் புகைப்படப் பத்திரிக்கையாளருமான ஹயத்துல்லாகான் மூத்த அல் கயிதா உறுப்பினர் மாஸா ரபியா கொல்லப்பட்ட குண்டுவெடிப்பு பற்றி செய்தி வெளியிட்டதைத் தொடர்ந்து கடத்தப்பட்டார். 2006 ஜூனில் ஹயத்துல்லா கொலை செய்யப்பட்டு கிடந்தார். அதைத் தொடர்ந்து அவருடைய தம்பியும், மனைவியும் கொல்லப்பட்டனர்.

2002 முதல் மே 2010 வரை 32 பத்திரிகையாளர்கள் பணியின்போது கொல்லப்பட்டிருப்பதாக கட்டாக் கூறிகிறார். முறையான புலன் விசாரணை எதுவும் நடத்தப்படவில்லை. ஹயத்துல்லா கொலை பற்றி மட்டும், பாகிஸ்தானி பெடரல் பத்திரிகையாளர் யூனியன் நெருக்குதல் கொடுத்ததால் நீதி விசாரணை நடத்தப்பட்டது. அதன் அறிக்கை வெளியிடப்பட வில்லை. பழங்குடிப் பகுதிகளில் முறையான புலன் விசாரணை நடத்தப்படுமானால் கொலையாளியைக் கண்டுபிடித்துவிடலாம் என அந்த விசாரணைக் கமிஷன் பரிந்துரைத்தது என்று அதிகார பூர்வமாக வெளியிடப்படாத தகவல் தெரிவித்தது. எனினும், பெஷாவர் உயர் நீதிமன்றத்திற்கு பழங்குடிப் பகுதியில் விசாரணை வரம்பு கிடையாது. அதேபோல, முஸா கான் கேல் கொலை வழக்கிலும் விசாரணைக் கமிட்டியின் அமர்வு எதுவும் நடைபெறவில்லை. 2002 பிப்ரவரியில் கடத்திக் கொல்லப்பட்ட வால் ஸ்டிரீட் ஜர்னல் பத்திரிகையின் தெற்காசியக் குழுவின் தலைவரான அமெரிக்கர் டோனியல் பேர்ள் வழக்கில் மட்டும், 2002 ஜூலையில் அகமது ஓமர் சயீத் ஷேக் என்பவர் தண்டிக்கப்பட்டார். அமெரிக்கா கொடுத்த நெருக்குதலினால் அந்த வழக்கு விசாரணை விரைவு நீதிமன்றத்தில் முஷாரப்பின் நேரடி மேற்பார்வையில் நடத்தப்பட்டது.

குறிவைக்கப்பட்ட பத்திரிகையாளர் கஸின் குடும்பத்தினருக்கு ஏகப்பட்ட நெருக்குதல்கள் தரப்படுகின்றன. கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர்களின் குடும்பத்தினரின் வாயடைக்கச் செய்வதற்கு அல்லது அவர்களை வழக்கைப் பின்தொடர விடாமல் தடுப்பதற்கு நிர்ப்பந்தங்கள் தரப்படுகின்றன. இதனால் அந்தக் குடும்பங்களுக்குப் பாதுகாப்பும், இழப்பீடும் தரப்பட வேண்டும் என்று பாகிஸ்தான் பெடரல் பத்திரிகையாளர் யூனியன் வற்புறுத்தியது.

குற்றவாளிகளைத் தண்டிக்க அதிகாரிகள் தவறுவது, சட்டத்தின் ஆட்சியும் நல்ல நிர்வாகமும் இல்லாமல்போனதற்கு அறிகுறியாகும். எல்லா நிறுவனங்களிலும் பொறுப்பாக்கும்

## ஊடகங்களுக்குக் கசையடி

முதலாவது ராணுவ ஆட்சியாளர் அயூப்கான் தொடங்கி (1959–68), குறிப்பாக ஜியா காலத்தில் முதல் அடி பத்திரிகையாளர்களுக்குத் தான் விழுந்தது. 1977–இல் ராணுவச் சட்ட ஆட்சியைக் குறைகூறிய முற்போக்குச் செய்தி ஏடுகளை மூடுவதற்கு ஜெனரல் ஜியா முனைந்தார். முதலில் முஸாவத் மற்றும் ஹர்மாத் என்றஉருது நாளேடுகள் மூடப்பட்டன. டெய்லி டைம்ஸ் மற்றும் அல் ஃபத்தா, மெயார் என்றவார இதழ்களும் மூடப்பட்டன. நூற்றுக் கணக்கானோர் வேலை இழந்தனர், பாகிஸ்தான் பெடரல் பத்திரிகையாளர் யூனியன் மற்றும் APNEC ஏற்பாட்டில் பத்திரிகையாளர் சமூகம் துடிப்போடு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இறங்கியது. உண்ணாவிரதம், பேரணிகள், உள்ளிருப்பு மறியல், வலுவில் கைதாவது என்றவகையில் போராட்டங்கள் தொடர்ந்து நடந்தன. இந்த இயக்கத்தின்போது, நான்கு பத்திரிகையாளர்களுக்கு 21 கசையடிகள் தண்டனை தரப்பட்டது. இது அரசியல் காவல் கைதிகளுக்கு இதற்கு முன்பு ஒருபோதும் தரப்படாத தண்டனையாகும். மசூதுல்லா கான் என்றபத்திரிகையாளர் ஊனமுற்றவர் என்பதால் அவருக்கு கசையடி தண்டனை நிறைவேற்றப்படவில்லை. மற்றமூவருக்கும் கசையடிகள் தரப்பட்டன. அவர்கள் துணிச்சலுடன் அதை எதிர்கொண்டனர். கசையடி தரப்பட்டவர்களில் கவர் நயீம் ஹாஷ்மீ ஒருவர். டெய்லி நியூஸைச் சேர்ந்த நஸீர் சைய்டி, கசையடி தண்டனைக்குப் பணிந்து விடவில்லை. அவருடைய எலும்பும்தோலுமான மெலிந்த உடல்மீது கசையடிகள் ஒவ்வொன்றும் சரமாரியாக இறங்கியபோது, அவர் அஞ்சாமல் ஜியா எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பினார். ஜியா ஆட்சிக் காலத்தில்தான் சிறைக்கு வெளியேபொது இடத்தில் தூக்கிலிடும் பழக்கம் வந்தது. அதற்கு முன்னரும், அதன் பின்னரும் இந்தப் பழக்கம் இல்லை. அதேபோல, காவலில் வைக்கப்பட்ட பத்திரிகையாளர்களிடையே கூட்டணி உருவாகக் கூடாது என்பதற்காக மற்றகைதிகளைக் கொண்டு அவர்களுக்குக் கசையடிகள் தரப்பட்டன. கராச்சியில் டெய்லி சன் நாளேட்டின் நிருபரான 22 வயது இளைஞர் இக்பால் ஜாஃப்ரி இவ்வாறு கசையடி தரப் பட்டவர்களில் ஒருவர். இப்போது நவா–இ–வக்த் என்றபத்திரிகையில்



*(புகைப்படம்: லட்சுமி மூர்த்தி)*

பணியாற்றும் அவர், (படத்தைப் பார்க்க) "இயக்கம் தொடங்கியபோது, கைது செய்து சிறையில் அடைப்பதன் மூலம் எங்களைப் போன்றவெள்ளைச் சட்டை ஆர்ப்பாட்டக் காரர்களை பணியவைத்து விடலாம் என நினைத்தனர். ஆனால் அது நடக்காதபோது, தொடர்ந்து எதிர்ப்பவர்களை கடுமையாக எச்சரிக்கை கசையடிகள் தரப்பட்டன. அது எதிரிடையான விளைவுகளை ஏற்படுத்தின. இயக்கம் வேகம் பெற்றது" என்று கூறினார். பாகிஸ்தான் பெடரல் பத்திரிகையாளர் சம்மேளனம் தீவிரமான நெருக்குதல் கொடுத்தபிறகு பல செய்தி எடுகள் திரும்பவும் தொடங்கப்பட்டன. ஊடக சமூகத்தினர் காட்டிய துணிச்சலினாலும், வெளிப்படையாகப் பேசியதாலும் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக அரசியல் மற்றும் சிவில் இயக்கங்கள் வேகம் பெற்றன. ஜனநாயகத்திற்கு ஆதரவாக ஊடக சமூகம் இயக்கங்களுக்குத் தலைமை ஏற்பது அன்றில் இருந்து தொடர்கிறது. இதற்கு ஜெனரல் முஷாரப்பின் ராணுவ ஆட்சியின்போது ஏற்பட்ட நிகழ்வுகளே சான்று.

முறைமேம்படுத்தப்படாவிட்டால், பத்திரிகையாளர்களை வாயடைக்கச் செய்வோர் தங்களது குற்றங்களுக்காகத் தண்டிக்கப்படாமல் போவார்கள். இதனால், ராணுவச் சட்ட ஆட்சியின்போது எதிரியை எளிதில் கண்டு கொள்ள முடிவதுபோல, ஜனநாயக ஆட்சியில் கண்டுகொள்ள முடிவதில்லை. எனவே ஜனநாயகத்தில் பொறுப்பாக்கும்படி வற்புறுத்துவது ஒரு பெரிய சவாலாகவே இருக்கும்.

### பத்திரிகையாளர்களின் உரிமைகளுக்காக யூனியனின் வரலாற்றுச் சிறப்பு மிக்க போராட்டம்

துணைக்கண்டத்தில் காலனி ஆதிக்கத்திற்கு எதிரான இயக்கங்களுக்கு பத்திரிகைகள் துடிப்பான பங்களிப்பு தந்தன. சுதந்திர நாடுகளான இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் அவை முக்கிய பங்காற்றி வருகின்றன. முகமது அலி ஜின்னா ஏற்படுத்திய டான் அல்லது மன்ஷூர், ஹமீத் நிஜாமியின் நவா இ வக்க், மியான் இஃப்திகாருதீன் தலைமையிலான புரொகிரஸிவ் பேப்பர்ஸ் லிட் (PPL) வெளியீடுகள் மிகவும் தேசிய உணர்வுடன், வலுவான காலனி ஆதிக்க எதிர்ப்பு நிலை எடுத்தன, உயரிய பத்திரிகைத் தொழில் தரங்களை நிலைநாட்டின. நாட்டு விவகாரங்களில் பத்திரிகைகள் முனைப்பாகவும் துடிப்பாகவும் ஈடுபட்டன. குறிப்பாக, ஜனநாயக நிறுவனங்களும் இதர அமைப்புக்களும் பலவீனமாக இருந்தபோது இவை பெரும் பங்காற்றின். வலுவான அரசியல் எதிர்க்கட்சி இல்லாதபோது, அல்லது புதிதாக உருவாக்கப்பட்ட நாடுகளில் அரசுகள் முரட்டுத்தனமாகவும், தன்னிச்சையாகவும் அதிகாரத்தை பயன்படுத்திய நிலையில் பொறுப்பாக்கும் அமைப்பு எதுவும் இல்லாதபோது, பத்திரிகைகள் துடிப்புடன் செயல்பட்டன.

பாகிஸ்தான் அரசியல் சாசன நிர்ணய சபை நிறைவேற்றிய பாதுகாப்புச் சட்டத்தை கண்டித்த முதல் அமைப்பு பாகிஸ்தான் பெடரல் பத்திரிகையாளர் யூனியன். அது 1953 அக்டோபரில் நிறைவேற்றிய தீர்மானத்தில் இந்தச் சட்டத்தின் கொடூரமான விதிகளைச் சுட்டிக்காட்டியது. "பாகிஸ்தானின் வெளியுறவு விவகாரங்களுக்கு ஊறுவிளைவித்தார் என்ற தெளிவற்றகுற்றச் சாட்டின் பேரில் எவரையும் விசாரணையின்றி காவலில் வைப்பதற்கு அல்லது பழிவாங்குவதற்கு நிர்வாகத்திற்கு அதிகாரங்களை நிர்வாகத்திற்கு வழங்குகிறது. இது போன்றவரையறுக்கப்படாத குற்றத்திற்கு எதிரி நாட்டு அரசு கூட தனது யதேச்சதிகாரச் சட்டங்களின் கீழ் தண்டிப் பதில்லை... சட்டத்தின் சிறப்புவிதிகள் தேசியப் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தக்கூடியவை... வெளியுறவு விவகாரங்கள் பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்க விடாமல் கட்டுப்படுத்த அரசுக்கு அதிகாரங்களைத் தருகிறது. செய்திக்கு ஆதாரத்தைத் தராவிட்டால் சிறைசெல்ல வேண்டியிருக்கும் என்றஅச்சத்தில் சரியான தகவலைத் தெரிவிக்கவிடாமல் கட்டுப்படுத்தப்படும். நிர்வாகத்திற்கு இதுபோன்றதன்னிச்சையான அதிகாரங்களைத் தரும் ஒரு நாட்டில் சுதந்திரமான பத்திரிகைகள் இருக்க முடியாது. சுதந்திரமான பத்திரிகைகள் இல்லாவிட்டால் உண்மையான ஜனநாயகம் இருக்கமுடியாது என்பது பாகிஸ்தான் பெடரல் பத்திரிகையாளர் யூனியனின் கருத்தாகும். எனவே இந்த பயங்கரமான சட்டத்தை ரத்து செய்யவேண்டும் என இந்தக் கூட்டம் கோருகிறது."

பாகிஸ்தான் தோன்றிய இருபதாண்டுகள் கூட நிறையாதபோது, பாகிஸ்தான் பெடரல் பத்திரிகையாளர் யூனியனுக்கும், எல்லா மக்கள் சமூக அமைப்புக்களுக்கும் முதலாவது பெரிய சவாலாக, 1958 அக்டோபர் 8 அன்று ராணுவ தளபதி ஜெனரல் அயூப்கான் ராணுவச் சட்டத்தைப் பிறப்பித்தார். தேசிய சட்டப்பேரவை கலைக்கப் பட்டுவிட்டது. அரசியல் சாசனம் ரத்து செய்யப்பட்டது. அரசியல் கட்சிகள் தடை செய்யப்பட்டன. இந்த "ரத்தம் சிந்தா புரட்சி" தொடங்கிய ஒருவாரத்தில், லைலோ நஹார் என்றவார இதழின் ஆசிரியர் சையது சிப்தே ஹாசன், இம்ரோஸ் ஆசிரியர் அகமது நதீம் காஸ்மி, கவிஞரும் பாகிஸ்தான் டைம்ஸின் தலைமைச் செய்தி ஆசிரியருமான ஃபயஸ் அகமது ஃபயஸ் (இவையாவும் பிபிஎல் வெளியீடுகள்) ஆகியோர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்கைது செய்யப்பட்டனர். நீதித்துறைதலையிட்டதை அடுத்து ஐந்து மாதங்கள் கழித்து அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் சுதந்திரப் பத்திரிகைகளை கட்டுப்படுத்தவும், தணிக்கை செய்யவும் "ஆலோசனை" அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அயூப் கான் ஒருபடி மேலே சென்று, பிபிஎல் நிறுவனம் அரசுக்கு ஆதரவு தர மறுத்தபோது, அந்த பத்திரிகை நிறுவனத்தை அரசுக் கட்டுப்பாட்டில்




**பெஷாவர் பத்திரிகையாளர்கள் முஸாகான் கேல் கொலையை எதிர்த்து ஒன்று திரண்டனர், பிப்ரவரி 2009**
*(புகைப்படம்: குர்ரம் பெர்வேஸ்)*

எடுக்க முனைந்தார். சில வழக்குகளில் நிர்வாகம் ஊழியர்களைக் கட்டுப்படுத்தியது. அரசுக் கட்டுப்பாட்டில் எடுக்கும் நடவடிக்கையை எதிர்த்து பாகிஸ்தான் பெடரல் பத்திரிகையாளர் யூனியன் தீர்மானம் நிறைவேற்றியது.

பத்திரிகைகளின் மீது அரசின் கட்டுப்பாட்டை மேலும் இறுக்குவதற்காக 1963–இல் தேசிய பிரஸ் டிரஸ்ட் மற்றும் தேசிய பப்ளிகேஷன்ஸ் லிட் ஏற்படுத்தப்பட்டபோது, பாகிஸ்தான் பெடரல் பத்திரிகையாளர் யூனியன் மீண்டும் எதிர்ப்பைத் தொடுத்தது. இது சுயேச்சை ஊடகங்களுக்கு மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் என அது எச்சரித்தது. குறிப்பிட்ட செய்தி எடுகளும் தங்களுக்குரிய முறையில் எதிர்ப்பைக் காட்டின. “பிரஸ் இன் செயின்ஸ்” (தளை பூட்டப்பட்ட பத்திரிகைகள்) என்றபுத்தகத்தை எழுதிய ஸமீர் நியாஸி குறிப்பிட்டதைப்போல, 1963 செப்டம்பர் டான் ஏடு ஒரு செய்திக்குறிப்பை ஒருவரி கூட மாற்றாமல் வெளியிட்டது. அதில்: பாகிஸ்தான் பத்திரிகைத் தகவல் துறை, ராவல்பிண்டி; போன்: 62276, கராச்சி 2674, டாக்கா; 3050: வெளியீடு இ.எண்: 1221 கே என்று குறிப்பிடப்பட்டிருந்தது. பிறகு தாளின் உச்சியில் தரப்பட்ட தலைப்புச் செய்தி அச்சிடப்பட்டிருந்தது. அதன் இறுதியில் சுருக்கெழுத்தாளார்-தட்டச்சாளார் பெயரும், நேரமும், தேதியும் போடப் பட்டிருந்தது. இது ஒரு எளிமையான, புதுமையான, சக்திவாய்ந்த எதிர்ப்பு வடிவம். இது புதிய சட்டத்தை கேலிக்கூத்தாக்கிவிட்டது. புதிய அவசரச் சட்டத்தை டான் நாளேடு முழுமையாகப் பின்பற்றியது. அவசரச்சட்டத்தின் ஒரு பிரிவு “செய்திக்குறிப்புக்களும், வெளியீடுகளும் வார்த்தை பிசகாமல், முழுமையாக, எதையும் நீக்கவோ, திருத்தவோ செய்யாமல் அச்சிடப்பட வேண்டும் என்று கூறுகிறது. பாகிஸ்தான் பெடரல் பத்திரிகையாளர் யூனியன் துடிப்புடன் எதிர்ப்புக் காட்டியதால், 1963 ஆம் ஆண்டின் பத்திரிகைகள் மற்றும் வெளியீடுகள் அவசரச் சட்டம் 10 நாட்களிலேயே நிறுத்தி வைக்கப்பட்டது. ஓரளவு குறைவான கட்டுப்பாடுகளுடன் புதிய சட்டம் கொண்டு வரப்பட்டது. போராட்டம் எந்த வகையிலும் ஓயவில்லை.

பத்திரகைச் சுதந்திரத்திற்காக பாகிஸ்தான் பெடரல் பத்திரிகையாள் யூனியன் நடத்தும் போராட்டத்தில் 1968–ஆம் ஆண்டு மிக முக்கியமானது என்று பாகிஸ்தானின் தொழிற்சங்க இயக்க வரலாற்றை எழுதிய முதுபெரும் பத்திரிகையாளர் மின்ஹாஜ் பர்னா குறிப்பிடுகிறார். "1968 ஆம் ஆண்டு முழுவதும், ஜெனரல் யாஹ்யா கானின் ராணுவ ஆட்சி முடிவடைந்த 1969–ஆம் ஆண்டின் தொடக்கமும், ஜெனரல் அயுப்கானின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிரான மக்களின் மாபெரும் எழுச்சியாக ஆட்சிக்கு இருந்தது- இதனால் விரக்திய டைந்த அயூபின் ஆட்சி மேலும் மேலும் அடக்கு முறைகளைப் பின் பற்றியது. பத்திரிகைகளின் கழுத்தை சுருக்கு இறுக்கியது" என்று கூறுகிறார். 1966–இல் "இத்திஃபாஹ்" என்ற நாளேட்டைத் தடை செய்த பிறகு, டாக்காவில் புர்பானி என்ற வரை இதழை அரசு மூடியது. டாக்கா, முன்பு கிழக்கு பாகிஸ்தானில் இருந்தது-இப்போது பங்களாதேஷின் தலைநகராக உள்ளது. பத்திரிகையாளர்கள் விசாரணையின்றி சிறையில் அடைக் கப்பட்டனர். சில செய்தி ஏடுகளுக்கு அரசு விளம்பரங்கள் நிறுத்தப்பட்டன. லாகூரின் நவா-இ-வக்த், ஹைதராபாதின் இப்ராத், டாக்காவின் பாகிஸ்தான் அப்சர்வர், ஆஸாத் சங்கட் என்ற பத்திரிகைகளுக்கு தரப்பட்ட அரசு விளம்பரங்கள் விலக்கிக் கொள்ளப்பட்டன. பாகிஸ்தான் பெடரல் பத்திரிகையாளர் யூனியனின் மத்திய நிர்வாகக் குழு 1968 டிசம்பர் 15 முதல் 17 வரை கராச்சியில் கூடியது. “இது தேசிய பத்திரிகைகளுக்கு ஏற்பட்டுள்ள மாபெரும் அபாயம் என்று கருதுவதாகவும், எனவே பத்திரிகைச் சுதந்திரத்தை மீட்க வேண்டிய தேவை முன்பைவிட அதிகம் ஏற்பட்டுள்ளது” என்று அந்தக் கூட்டத்தில் கூறப்பட்டது.

அதைத் தொடர்ந்து கிழ்கு பாகிஸ்தானில் மாபெரும் எழுச்சி வெடித்தது. அது விடுதலைப் போராக மாறி, 1971–இல் பங்களாதேஷ் பிறந்தது. எனினும், அரசுக்கட்டுப்பட்டில் உள்ள ஊடகங்கள் உண்மையை பாகிஸ்தானி மக்களிடம் இருந்து மறைத்தன. "எல்லாமே ம கட்டுப் பாட்டில் இருக்கிறது" என்ற மாயத் தோற்றத்தை உருவாக்கின. 1971 டிசம்பர் 17 அன்றுதான் கண்டை நிறுத்த ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது என்றும், நாட்டுப்பிரிவினை நடக்கப் போகிறது என்றும் திடீரென மக்களிடம் தெரிவிக் கப்பட்டது.

பாகிஸ்தானிப் படைகளின் தோல்வியும, அவை பங்களாதேஷ் மக்கள் மீது இழைத்த அட்டூழியங்களும் மெல்ல மெல்ல மக்களுக்குத் தெரியவரவே பத்திரிகைகள் மீது ஒரு அவ நம்பிக்கை வளர்ந்தது.

இருப்பினும், ராணுவச் சட்டம் நீக்கப்பட்ட பின்னரும் கூட சவால்கல் தொடர்ந்தன. 1970-களில் நான்கு ஊடகப் பிரதிநிதி அமைப்புக்கள் இருந்தன. 1950–இல் பாகிஸ்தானி பெடரல் பத்திரிகையாளர் யூனியன் ஏற்படுத்தப்பட்டது, 1976–இல் அனைத்து பாகிஸ்தான் செய்தி ஏடு ஊழியர் இணையம் (APNEC) அமைக்கப்பட்டது, 1953–இல் செய்தி ஏடுகளின் உரிமையாளர்களுக்காக அனைத்து. பாகிஸ்தான் செய்தி ஏடுகள் சங்கம் (APNEC). 1957–இல் பாகிஸ்தானி செய்தி ஏடு ஆசிரியர்கள் கவுன்சில் (CPNE) ஆகியன ஏற்படுத்தப்பட்டன. இவற்றில் APNS மற்றும் CPNE என்ற இரு அமைப்புக்களும் ராணுவ ஆட்சியுடன் சமரசம் செய்துகொண்டன. PFUJ மட்டுமே போராட்டத்தை தொடர்ந்து நடத்தியது "என்று கூறுகிறார் பேராசிரியர் தௌஸீஃப் அகமது. இவர் பாகிஸ்தானில் ஊடகச் சங்கங்களின் வரலாற்றைத் தொகுத்தவர்.

1971 டிசம்பரில் கிழக்கு பாகிஸ்தான் பிரிந்த பிறகு பதவியேற்ற ஜூல்பிகார் அலி புட்டோ அதிபராக இருந்தபோது, ஊடகங்களை ஒடுக்கும் முயற்சிகளை எதிர்த்து பத்திரிகையாளர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தினார்கள். கொடூரமான சட்டங்களை, குறிப்பாக பத்திரிகைகள் மற்றும் வெளியீடுகள் அவசரச் சட்டத்தை ரத்து செய்வதாகவும், தேசிய பிரஸ் டிரஸ்ட்டை கலைப்ப தாகவும், அரசுக் கட்டுப்பாட்டில் இருந்து மின்னணு ஊடகங்களை விடுவிப்பதாகவும் கொடுத்த வாக்குறுதிகளை புட்டோவும், அவருடைய கட்சியும் நிறை வேற்ற வில்லை. "அரசு ஆட்சிக்கு வந்த பின்னர், அரசியலில் ஜனநாயகம் என்பது அதன் முக்கிய முழக்கமாக இருந்தது. ஆனால் இரண்டுமாதங்கள் கழித்து லாகூரின் இரண்டுவார இகழ்கள் மற்றும் ஒரு மாத இதழான பஞ்சாப் பாஞ்ச், உருதுடைஜஸ்ட், ஜிந்தஹி என்ற பத்திரிகைகள் ராணுவச் சட்ட உத்தரவின் கீழ் தடை செய்யப்பட்டன. (அப்போது புட்டோ நாட்டின் அதிபராகவும், தலைமை ராணுவச்சட்ட நிர்வாகியாகவும் இருந்தார்) அந்த உத்தரவின் கீழ் இந்த பத்திரிகைகளின் ஆசிரியர்கள் சிறையில் அடைக்கப்பட்ட

# பிரஸ் கிளப்கள்: ஊடகச் சமூகத்திற்கு ஒரு மேடை

பாகிஸ்தானின் பத்திரிகை வரலாற்றில் பிரஸ் கிளப் முன்னணியில் நின்று குறிப்பிடத்தக்க பங்காற்றியிருக் கிறது. இன்றைக்கும் கூட, பெரும்பாலான பத்திரிகையாளர் யூனியன்கள், நிதிவசதி இல்லாமல் திண்டாடுகின்ற வேலையில், அவற்றுக்கு கூட்டம் நடத்தி விவாதிக்க இடவசதியும், இணக்கமான சூழலும் பிரஸ் கிளப் தருகிறது. 1958 இல் ஏற்படுத்தப்பட்ட கராச்சி பிரஸ் கிளப் இத்தகைய முதல் நிறுவனமாகும், சமூக மற்றும் பண்பாட்டு இடம் தரவேண்டும் என்பது இதன் நோக்கமாக இருப்பினும், தொழில் திறனை மேம்படுத்தி, நலவாழ்வு நடவடிக்கைகளைப் பெருக்குவது இதன் குறிக் கோளானாலும், குறிப்பாக கராச்சி பிரஸ் கிளப்பும், பொதுவாக மற்ற பிரஸ் கிளப்புகளும், காலப் போக்கில் அரசியல் மேடையாக மாறிவிட்டன என்பதில் ஐயமில்லை. அவை ராணுவ ஆட்சியின் போது முக்கிய பங்காற்றின. பொது இடங்களில் கூட்டங்களை நடத்தத் தடை விதிக்கப் பட்டிருந்தபோது, கிளப்களில் அரசியல் கூட்டங்கள் நடந்தன. நாடெங்கும் உள்ள பிரஸ் கிளப்கள், மிகவும் முக்கியமாக கராச்சியிலும், லாகூரிலும் உள்ளவை, கடுமையான ஒடுக்கு முறையின் போது, சர்ச்சைக்கு இடமில்லாத வகையில் ஊடகங்களின் அரசியல் கருத்துக்களை ஒன்றுதிரட்டுவதற்கு ஒரு முன்னணியாகத் திகழ்ந்தன. 1967-இல் வரலாற்றுச் சிறப்புமிக்க கராச்சி பிரஸ் கிளப்பில் இருந்துதான் ஜூல்பிக்கார் அலி புட்டோ, ஜனநாயக ஆதரவு இயக்கத்தைத் தொடங்கினார். பிரஸ்கிளப்பில் தீவிரமாகச் செயல்படுவது, யூனியனில் முனைப்பான முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது. அங்கு உள்ளூர் யூனியனுக்கு ஓர் அறை தரப்பட்டிருந்தது. இப்போது பிரஸ் கிளப் வளாகத்திற்கு உள்ளேயே, கராச்சி பத்திரிகையாளர் யூனியன் தனது அலுவலகத்தைக் கட்டிக் கொண்டுள்ளது.

மேலும், பிரஸ் கிளப்பில் கவிஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், பிரஸ் அட்டாச்சிகள், ஊடகத்தொழில் உறுப்பினர்கள் என்று பல்வகைப்பட்ட ஊடகங்களுடன் தொடர்புடைய மனிதர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். முற்போக்கு அரசியல்வாதிகளுடனும், ஜனநாயக இயக்கத்தில் தீவிரமாக இருந்த மக்கள் சமூக அமைப்புக்களுடனும் ஊடகங்கள் ஒரு தொடர்பை ஏற்படுத்துவதற்கு பிரஸ்கிளப்கள் ஒருவாய்ப்பாக இருந்தன. கராச்சி பிரஸ் கிளப்பின் பாரம்பரியச் திறப்புடைய



கராச்சி பிரஸ் கிளப்பின் பாரம்பரிய அமைப்பிலேயே ஊடகச் சுதந்திரத் தீவிரம் துடிப்பாக உள்ளது *(புகைப்படம்: லட்சுமி மூர்த்தி)*

கட்டிடத்திற்கு வெளியே ஏராளமான ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், தர்ணாக்கள் நடைபெறும் அளவுக்கு அது ஜனநாயக இயக்கத் தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. அவற்றை பல்வேறு நியாயங்களுக்காக குரல் கொடுக்கும் பத்திரிகயாளர்கள் உடனுக்குடன் செய்திகளை வெளியிட்டனர். 2009 டிசம்பரில், ஊடக வரலாற்றில் முதல் தடவையாக பெஷாவர் பிரஸ் கிளப் தாக்கப்பட்ட போது, முந்தைய மிரட்டல்கள் இருந்த போதிலும், இந்த கிளப்களின் சக்தி என்ன என்பது மக்களுக்கு நினைவூட்டப்பட்டது.

சில நிலைகளில், யூனியன்களினால் முடியாத போது அவற்றின் உறுப்பினர்களுக்கு பிரஸ் கிளப்கள் உதவி செய்தன. உதாரணமாக, பெஷாவர் பிரஸ் கிளப் மோட்டார் சைக்கிள் வாங்க நிதியுதவி செய்யும் திட்டத்தை வெற்றிகரமாகத் தொடங்கியது. இந்த வசதியை கிளப் உறுப்பினர்கள் அனைவருமே பயன்படுத்திக் கொண்டனர்-பாகிஸ்தானில் பத்திரிகையாளர்கள், போலீஸ் மற்றும் வழக்குரைஞர்களுக்கு வங்கிக் கடன்கள் கிடைக்காது என்ற நிலையில் இது சிறப்புமிக்க திட்டமாகும். மற்றொரு வெற்றிகரமான திட்டம் லேப்டாப்புகள் வாங்க கடன்தருவது ஆகும். உறுப்பினர்கள் யூனியன் கூட்டங்களுக்காவும், கருத்தரங்குகளுக்காகவும் வேறு ஊர்களுக்குப் பயணம் செய்வதற்கும் பிரஸ் கிளப்கள் உதவி செய்தன.

தோடு, 10 ஆண்டுகளுக்கு எந்தப் பத்திரிகைக்கும் ஆசிரியராக இருக்க முடியாது என்றும் தடுக்க ப்பட்டனர்.

இதுபோன்ற நடைமுறைக் கேற்ற முன்முயற்சிகளினால் தனிப்பட்ட பத்திரிகையாளர்களின் ஈடுபாடு ஆழமடைந்தது. ஊடக சமூகத்தினருக்கு இடையே ஒருமைப்பாடு வலுவடைந்தது. பாகிஸ்தானின் பொதுவான சட்டங்களின்கீழ் வெளிப்படையான நீதிமன்றங்களில் அவர்களை விசாரிக்க வாய்ப்பு தரப் படவில்லை. அரசின் நடவடிக்கையை பாகிஸ்தானி பெடரல் பத்திரிகையாளர் யூனியன் கண்டித்து பத்திரிகைகள் மீதான தடையை நீக்கி, அவற்றின் ஆசிரியர்களை விடுதலை செய்யுமாறு வற்புறுத்தியது. பத்திரிகை ஆசிரியர்கள் விடுதலை செய்யப் பட்டனர், தடை செல்லாது என்று அறிவிக்கப்பட்டது. “எதிர்ப்பைக் காட்டும் புதுமையான நடவடிக்கையாக ஜிந்தகி என்ற பத்திரிக்கை ஒவ்வொரு வாரமும் வெவ்வேறு பெயர்களில் வெளியிடப்பட்டு, தடை மீறப்பட்டது” என்று பஞ்சாப் பத்திரிகையாளர் யூனியனின் தலைவர் ராய் ஹுஸ்நைன் கூறினார்.

எதிர்ப்புக்காட்டும் பத்திரிகைகளுக்கு நேரடியாக தடை விதிக்கப்பட்டதோடு, புட்டோ காலத்தில் செய்திக் காகிதம் மற்றும் விளம்பரங்கள் மீதான கட்டுப்பாடுகள் இறுக்கப்பட்டன. அவை இரண்டுமே பத்திரிகைகள் உயிர்வாழ இன்றிய மையாதவை. 1977-இல் ஜியா உல் ஹக் தலைமையில் ராணுவ ஆட்சி திரும்பியபோது, ஜனநாயக முறைப்படி காட்டப்படும் எதிர்ப்பை ஒடுக்க மிகவும் முரட்டுத்தனமான முறைகளும் திரும்ப வந்தன. பத்திரிகை ஆசிரியர்களும், மூத்த மத்திரிகையாளர்களும் கைது செய்யப்பட்டு, கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. சிலருக்கு கசையடிகள்கூட தரப்பட்டன. இந்த அடக்கு முறைக் காலகட்டத்தில் பாகிஸ்தான் பெடரல் பத்திரிகையாளர் யூனியனும், APNEC போன்ற மற்ற அமைப்புக்களும் காட்டிய எதிர்ப்பு மறக்க முடியாதது. 1977 நவம்பர் இறுதியில் கராச்சியில் இந்தப் போராட்டம் தொடங்கியது. ஜியா பதவிக்கு வந்த ஐந்து மாதங்களுக்கு உள்ளாகவே போராட்டம் வெடித்து விட்டது. கராச்சியில் இருந்து வெளியாகும் முஸாவாத் என்ற நாளேடு வெளியிடப்படுவதை அரசு தடை செய்ததால் பாகிஸ்தான் பெடரல் பத்திரிகையாளர் யூனியனின் போராட்டம் தூண்டப்பட்டது. தடையை நீக்கும்படி ராணுவ ஆட்சியாளர்களுடன் நடத்தப் பட்ட பேச்சுக்கள் பலனளிக்காமல் போகவே, 1977 டிசம்பர் 1 முதல் கராச்சியில் PFUJ மற்றும் APNEC அமைப்புக்கள் உண்ணாவிரதத்தைத் தொடங்கின. இதில் பாகிஸ்தான் முழுவதிலும் இருந்து பத்திரிகையாளர்களும், பத்திரிகைத் தொழிலாளர்களும் பங்கேற்றனர். இதன் விளைவாக தடை நீக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் மேலும் தடைகள் விதிக்கப்பட்டதால், போராட்டம் தீவிரமடைந்தது. யூனியனை ஒடுக்க முடியாமல் தோற்றுப்போன ஜியா, போட்டி யூனியன் ஒன்றைத்

தனக்கு விசுவாசமாக இருக்க ஏற்படுத்தினார். பத்திரிகையாளர் சமூகத்தை பிரித்து, இதில் சேர்க்க முயற்சிக்கப்பட்டது. இந்த போட்டி யூனியன் ரஷீத் சித்திக்கி குழு எனப்பட்டது.

1989 முதல் அக்டோபர் 12, 1999 வரை பாகிஸ்தான் பேநஸீர் புட்டோ மற்றும் நவாஸ் ஷெரீஃப் தலைமையிலான சிவிலியன் அரசின் ஆட்சியின் கீழ் இருந்தது, ஒவ்வொருவரும் தலா இரண்டு பதவிக்காலங்கள் ஆண்டனர். இந்தக் காலகட்டத்தில் எந்த ஒரு சிவிலியன் அரசுமே முழுப் பதவிக் காலமும் நீடிக்க முடியவில்லை. இந்தக் காலகட்டம் பத்திரிகைகளுக்கு கவலை தருவதாக இல்லை. மூன்று ராணுவ அரசுகளின் ஆட்சிக் காலங்களில் இருந்ததைப் போன்றே இவற்றிலும் அரசின் அத்துமீறல்களும், முரட்டுத்தனங்களும் மிகுந்திருந்தன. "பாகிஸ்தான் மக்கள் கட்சி அரசின் இரண்டாவது பதவிக் கால்ததில் கராச்சியின் பல நாளேடுகள் (அவாம், குவாமி அக்பார், பப்ளிக் ஈவ்னிங் ஸ்பெஷல்) பொது ஒழுங்கு பராமரிப்பு அவசரச் சட்டத்தின்கீழ் தடை செய்யப் பட்டன. சில நாட்களிலேயே தடை நீக்கப்பட்ட போதிலும் அது இரண்டு கருத்துக்களை நிருபித்தது. ஒன்று,பாகிஸ்தானின் சிவிலியன் அரசுகள் என்னதான் ஜனநாயகம் மற்றும் பத்திரிகைச் சுதந்திரம் பற்றி பேசியபோதிலும். அவற்றின் தவறான நிர்வாகம் அம்பலப்படுத்தப்பட்ட போது, அவற்றினால் விமர்சனங்களைத் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. இரண்டு, அருவருக்கத் தக்க பிரஸ் மற்றும் பப்ளிகேஷன்ஸ் அவசரச்சட்டத்துடன் கூடவே, பத்திரிகைகள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு எதிராக, அரசின் தன்னிச்சையான நடவடிக்கைகளினால் MPO போன்ற வேறுபல ஜனநாயக விரோதச் சட்டங்களும் உள்ளன. அதேபோல, 1998 ஆகஸ்ட் முதல் ஜங் குழும செய்தி ஏடுகளின் நிர்வாகம் துன்புறுத்தப்பட்டது. 1999 மே 8 அன்று ஃபிரைடே டைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியர் நஜம் சேத்தி கைது செய்யப்பட்டு, நவாஸ் ஷெரீப் அரசினால் காவலில் வைக்கப் பட்டார். இது பாகிச ஆட்சிகளின் நடை முறையை நினைவூட்டியது. இந்தப் பழிவாங்கும் நடவடிக்கைகளை PFUJ மற்றும் APNEC இரண்டுமே கண்டித்ததோடு, நாடெங்கும் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தின. கடைசியில் அரசு தனது நடவடிக்கைகளைக் கைவிடும்படி கட்டாயப் படுத்தப் பட்டது, என்று மின்ஹாஜ் பர்ணா கூறினார்.

1999-இல் ராணுவப்புரட்சி மூலம் பிரதமர் ஷெரீப்பை, முஷாரப் அகற்றிய போது எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் எதுவும் நடத்தப்படவில்லை. ஏனெனில், 1997 முதல் நவாஸ் ஷெரீப் எந்த ஓர் அமைப்பின் சுதந்திரத்தையும் தாங்கிக் கொள்ளமுடியாமல், முரட்டுத்தனமாக நடந்து கொண்டார். இதனால் நீதி, அதிகாரிகள், நாடாளுமன்றம், பத்திரிகைகள் என்ற அமைப் புக்களின் சுதந்திரம் பாதிக்கப்பட்டது. முஷாரப் ஆட்சியில் தனியார் ஊடகங்கள் குறிப்பாக எஃப்எம் ரேடியோ, மற்றும் தனியார் தொலைக் காட்சிகளின் எண்ணிக்கை அதிகரித்தன இதனால் சுயேச்சையாக செய்திகள் கிடைக்கும் ஆதாரமும் பெருகியது. உண்மையில், தொடக் கத்தில் சுதந்திர ஊடகத்தை முஷாரப் ஓரளவு நன்றாகவே சகித்துக் கொண்டார். ஆனால் அவருடைய பிரச்சினைகள் பெருகத் தொடங்கவே சர்வாதிகாரி போல நடந்து கொண்டார். குறிப்பாக 2001-இல் பயங்கரவாதத்திற்கு எதிரான போரும், 2002-இல் மக்கள் கருத்துக் கணிப்பும் நடத்தப்பட்ட பிறகு இநதப் போக்கு வேகம் பெற்றது.

தாக்குதல்களும், துன்புறுத்தல்களும் அதிகரிக்க அதிகரிக்க, கொடூரமான சட்டங்கள் மற்றும் சட்டவிரோத தணிக்கையின் விளைவாக ஊடக சுதந்திரம் சுருங்கத் தொடங்கியது. 2007 நவம்பரில் தேசிய நெருக்கடி நிலை பிறப்பிக்கப் படவே, சுதந்திரமான ஊடகங்கள் ஒடுக்கப் பட்டன. அரசுக்குச் சொந்தமான பிடிவி மட்டுமே கட்டுப்பாடின்றி செய்திகளை வெளியிட அனுமதிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து வழக்குரைஞர்களும், பத்திரிகையாளர்களும் நடத்திய ஜனநாயக மீட்பு இயக்கத்தினால் அடிப்படை அரசியல் சுதந்திரம் மீட்கப்பட்டது. 2008-இல் நடந்த தேர்தலினால் இந்த வெற்றிகள் உறுதிப் படுத்தப்பட்டன. அந்தத் தேர்தலில் பிரதமர் யூசுப் ராஸா கிலானி தலைமையில் பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆட்சிக்கு வந்தது 2007 டிசம்பரில் முன்னாள் அதிபர் பேநசீர் புட்டோ கொல்லப்பட்டதால் ஏற்பட்ட அனுதாப அலை இந்த அரசை ஆட்சிக்குக் கொண்டு வந்தது. ஆனால் பெரும்சவால்கள் ஏற்பட்டன. 2010 ஜூலை தொடங்கி நாடெங்கும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, நொறுங்கிய பொருளாதாரம், தாறுமாறாக உயர்ந்த அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி, பெருகும் வேலையில்லாத் திண்டாட்டம், பழங்குடிப் பகுதிகளில் தீவிரவாதம் ஆகிய பிரச்சினைகளினால் நிலைமை மிகவும் மோசமடைந்தது.

இதன்விளைவாக, பாகிஸ்தானில் இஸ்லாமியக் கட்சிகளின் பழமைவாதிகளுக்கும், முதலில் முஷாரப் கொண்டுவந்த, நாகரிக சமுதாயத் தின் ஆதரவு பெற்ற அறிவுத்தெளிவு பெற்ற மிதவாதிகளுக்கும் இடையே நடந்த சித்தாந்தப் போரைப் பிரதிபலிக்கும் வகையில் பெரிய ஊடகப்பரப்பில் ஒருசில வேறுபாடுகளே தென்பட்டன. PFUJ மிகவும் பகுத்தறிவுமிக்க ஒரு அலுவல்திட்டத்தைக் கொண்டிருந்தது. இந்தக் குறுகலான நோக்கில் விவாதம் நடக்க அனுமதிக்கவில்லை.

## கீழ்மட்ட இயக்கங்கள், மாறுபட்ட ஆர்ப்பாட்டங்கள்

PFUJ தனது அமைப்புச்சட்டத்தை 1950 ஏப்ரலில் கராச்சியில் நடந்த பாகிஸ்தான் உழைக்கும் பத்திரிகையாளர் மாநாட்டில் நிறை வேற்றியது. இதன்மூலம் நாட்டில் ஜனநாயத்திற்கான குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. எத்தனையோ இன்னல்களுக்கு இடையிலும் இந்த அமைப்பு ஒன்றுபட்டு இருந்தது. அன்றில் இருந்து பத்திரிகையாளர்களின் உரிமைகளுக்காகப் போராடுவதில் PFUJ முதல்வரிசையில் நிற்கிறது. கீழ்மட்டத்தில் ஜனநாயக நெறிகளைச் செயல்படுத்த நிறுவனங்கள் எதுவும் இல்லாத நிலையில், அந்த வேலையை பெடரல் யூனியன் செய்கிறது. PFUJ மற்றும் அதன் மாவட்ட, நகர மற்றும் மாகாண சார்பு அமைப்புக்கள் பத்திரிகையார்களின் துயரங்களை எடுத்துரைக்கும் மேடைகளாக மாறின. நெருக்கடியான நேரங்களில் யூனியன்கள் மிகச்ச் சிறப்பாகச் செயல் பட்டன. பாதகமான நிலைமைகளிலும் அவை நன்கு இயங்கின. சர்வாதிகாரத்தின் கை நீளும்போது, யூனியன்கள் பயனுள்ளவையாக இருக்க முடியும் என்பதை முஷாரப் கண்டு கொண்டார். ஏனெனில், அவற்றுக்கு தேர்ந்தெடுக் கப்பட்ட பிரதிநிதிகளைப் போல அதிகாரம் இருந்ததால், அவற்றின் பேச்சு எடுபட்டது. பாதகமான நிலைமைகளில், வட்டாரத்தொடரமைப்புக்களையும், சர்வதேச் தொடரமைப்புக் களையும் சென்று எட்டுவது பயனுள்ளதாக இருந்தது.

"நிறுவனங்களை உருவாக்காத ஒரு நாட்டில் தாலுகாவின், வார்டு கமிட்டிகளில் இருந்து, மாவட்டங்கள் கோட்டங்கள், மாகாணங்கள் என்ற நிலையில் இந்த அமைப்பு பரவியிருந்ததாக" பாகிஸ்தானின் முன்னணி செய்தி தொலைக்காட்சியான ஆஜ் டிவி-யின் நிர்வாக இயக்குநர் சையது தலத் ஹுசைன் கூறினார். PFUJ யூனியனின் அமைப்பு உத்திகான பயன் முஷாரப் காலத்தில் வெளிப்படையாகத் தெரிந்தது. உள்ளூர் வழக்குரைஞர் கவுன்சில்கள், பிரஸ் கிளப்புகள், பத்திரிகையாளர் யூனியன்கள் ஆகியன திரட்டியதால் வழக்குரைஞர்களும் பத்திரிகையாளர்களும் தெருக்களில் இறங்கினர். மக்களின் மனப்போக்கை உருவாக்கினார்கள். இந்த நிலையில் சர்வாதிகார ஆட்சி செயல்பட முடியாமல் தவித்து. மாறுபட்ட கருத்துடையவர்களை ஒன்று சேர்த்து, ஒதுக்கப் பட்ட பத்திரிகையாளர்களை பெருநகரப் பத்திரிகையாளர்களுடன் ஒன்றிணைத்துச் செயல் படுவதில் பத்திரிகையாளர் அமைப்புக்கள் வெற்றி கண்டன. கராச்சி அல்லது லாகூர் பிரஸ் கிளப்புகள் மூடப்பட்டால் டோபா டேக்சிங் சுக்கூர், குவெட்டா ஆகிய ஊர்களில் உள்ள உள்ளூர் யூனியன்கள் ஆர்ப்பாட்டத் தீயை அணையவிடாது என்ற நம்பிக்கை இருந்தது. இந்தக் காரணத்திற்காகவே, கோஹாட் அல்லது ஸ்வாட் போன்ற எட்டாத்தொலைவுப் பகுதிகளில் ஒரு பத்திரிகையாளர் இறந்தால் கூட, அது அறியப்படாமல் போனதில்லை. இந்தக் கூட்டான அடையாளத்தின் மூலமாக, தனித்தனிப் பத்திரிகையாளர்களின் மதிப்புக்கு அங்கீகாரம் கிடைத்தது.

எதிர்ப்பு முறைகள் மாறுபட்டவையாக இருந்தன. 2007 நவம்பர் 3 அன்று முஷாரப் நெருக்கடிநிலை அறிவித்தபோது, உடனுக்குடன் கருப்பு சனி ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதை PFUJ தலைவர் பெர்வெய்ஸ் ஷவுக்கத் நினைவுகூர்கிறார். "பிரபலமான டாக் ஷோக்களும், செய்தி நிகழ்ச்சிகளும் நிறுத்தப் பட்டபோது, நாங்கள்

1. http://pfuj.pk/history-of-pfuj/, பெற்றதேதி செப்டம்பர் 18, 2010

கொடுத்த ஊக்கத்தினால் தலத் ஹுசைன், ஃபஹத் ஹுசைன், மற்றும் பலர் தங்களது நிகழ்ச்சிகளை தெருக்களில் நடத்தினார்கள். பேரணிகளின் முன்னால் நடத்தினார்கள், எதிர்ப்புக் குரலை ஒலித்த இந்த, ஷோக்கள் நேரடியாக மக்களின் வீடுகளுக்குள் காட்டப்பட்டன," என்று அவர் கூறினார் ஆர்ப்பாட்டப் பேரணிகள், தர்ணாக்கள் மற்றும் தெருவோர ஆர்ப்பாட்டங்களில் தொடங்கி, கைகளில் கரும்பட்டை அல்லது வாய்ப்பட்டை அணிதல் போன்ற எதிர்ப்புக்கள் நடை பெற்றன. தேசிய சட்டப்போவையில் இருந்து வெளிநடப்பு மற்றும் நாடாளுமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணிப்பது என்று வெவ்வேறு அணுகுமுறைகளை PFUJ பின்பற்றியது இதனால் யூனியன் தலைவர்களுடன் பேசி சமரசம் காணுமாறு எதிர்க்கட்சித் தலைவர்களை சபாநாயகர் வற்புறுத்தினார். சில நடவடிக்கைகளுக்கு நாங்கள் அரசுநிதியை ஏற்றபோதிலும் ராணுவச் சட்டத்திற்கு எதிர்ப்பைக் காட்டும் வகையில், ஜியா உல் ஹக் மற்றும் முஷாரப் ஆட்சியுடன் தொடர்புடைய அரசியல் தலைவர்களை பிரஸ் கிளப்பின் மாநாடு போன்ற பதவியேற்பு நிகழ்ச்சிகளுக்கு அழைக்காமல் புறக்கணித்தோம், "என்று கூறுகிறார் லாகூர் பிரஸ் கிளப்பின் தலைவர் சர்மத் பஷீர் ஊடக சமுகத்தின் குரலை ஓங்கிஒலிகரும் மிகவும் வெளிப்படையான அமைப்பாகும் லாகூர் பிரஸ் கிளப்.

PFUJ தோற்றுவிக்கப்பட்டதில் இருந்து பத்திரிகைச் சுதந்திரமும் பணிப்பாதுகாப்பும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று கூறி வருகிறது. ஊதியத் திருத்த தீர்ப்புக்கள் மற்றும் அவற்றைச் செயல்படுத்துவதற்காகவும் தணிக்கைக்கு எதிராகவும், ஊடகங்களைச் சேர்ப்பதற்காகவும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்காகவும் ஆதரவு திரட்டிவருகிறது. ஊதியக்குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தி, உரிய ஊதியம் தராத செய்தி எடுகளுக்கு ரு 980 மில்லியன் பாகிஸ்தான் பணம் (11 மில்லியன் அமெரிக்க டாலர்) மதிப்புள்ள விளம்பரங்களை PFUJ கொடுத்த நெருக்குதலினால் அரசு நிறுத்திவைத்தது. இந்தியாவில் உள்ள பத்திரிகையாளர் சங்கங்களும் இதே அணுகுமுறைப் பின்பற்றும்படி அரசை வற்புறுத்தின. ஆனால் இந்தியாவில் நிலைமை வேறாக இருப்பதால், இதே போன்ற நடவடிக்கைகள் அவ்வளவாகப் பயனளித்திராது.

## யூனியன்களில் பெண்கள்

1970-களிலும், 1980-களிலும் பாகிஸ்தானில் மிகுந்த அரசியல்தன்மையுடைய பத்திரிகையாளர் இயக்கங்கள் நடைபெற்றன. சில பெண்கள் அதில் முக்கிய பங்காற்றினார்கள். உதாரணமாக 1978-இல் ஜியா ஆட்சிக்கு எதிரான இயக்கத்தின் போது, லாலா ருக் என்ற பெண் தமது ஒரு வயது மகனுடன் சிறையில் அடைக்கப்பட்டார். ஷின் ஃபரூக், மெஹ்னாஸ் ரெஹ்மான், ஃபரிதா ஹஃபிஸ் போன்ற துடிப்பான பெண்பத்திரிக்கையாளர்கள் முன்னணியில் நின்றனர். சிலர் பத்திரிகையாளர் அமைப்புக்களிலும், ஊடகநிறுவனங்களிலும் தலைமைப் பொறுப்பு ஏற்றனர் அவர்களில் PFUJ யின் தலைமைச் செயலரான ஃபாஸியா ஷஹித், கராச்சிபிரஸ் கிளப்பின் துணைத்தலைவரான உமைரா அத்தார், ஹெரால்டு பத்திரிகையின் ஆசிரியர் ரஸியா பட்டி குறிப்பிடத்தக்கவர்கள், துனியா டிவியைச் சேர்ந்த அனீலா ஷகீன் 2010-இல் கைபர் பத்திரிகையாளர் யூனியனின் பொதுச்செயலராகத தேர்ந்தெடுக்கப்பட்டது, பெண்களுக்கு ஊக்கம் அளித்தது. குறிப்பாக பத்திரிகை யாளர்களுக்கு மிகவும் ஆபத்தான இடமான கைபரில் இந்த யூனியன் இயங்கியது. எனினும் இந்தப் பெண்கள் விதிவிலக்கானவர்கள். பொதுவாக, யூனியன்களில் உறுப்பினர்களாகவும், நிர்வாகிகளாகவும் பெண்களின் பிரதிநிதித்துவம் மிகவும் குறைவாகவே இருப்பது வழக்கம்.

ஆனால் 2006-இல் PFUJ நடத்திய ஒரு ஆய்வில், பாகிஸ்தான் முழுவதிலும் சுமார் 300 முழுநேரப் பெண்பத்திரிகையாளர்கள் உறுப்பினர்களாக இருப்பது தெரிய வந்தது என்கிறார் மஸர் அபாஸ். முன்பு யூனியனில் இருந்த பெண்கள் இடதுசாரி சார்புடைய அரசியல் பின்னணியைக்கொண்டிருந்தார்கள். இன்றோ, பெண்கள் அதிக அளவில் பத்திரிகைத்துறையில் நுழைவதற்கு தொலைக் காட்சி ஒருவழியாக இருப்பதால், டிவி தரும் கவர்ச்சி மற்றும் உடனடி அங்கீகாரத்தினால் அரசியல் சார்பு குறைவான இளம் தொழில் முறைப் பத்திரிகையாளர்களாகப் பெண்கள் நுழைந்தனர். குழுத் தலைவர்களாக அல்லது நிருபர்களாக மிகச்சில பெண்களே இருக்கின்ற வேளையில், பெரும் பாலான தொகுப்பாளர்களாகவும், டாக்ஷோ நடத்துகிறவர்களாகவும், தயாரிப்பாளர்களாகவும் பெண்கள் இருக்கிறார்கள். ஆனால் யூனியன் என்று வரும்போது பெண்கள் "முறையான" பத்திரிகையாளர்களாகக் கருதப்படுவது இல்லை. எனவே அவர்களை உறுப்பினர்களாக்குவது இல்லை. இவ்வாறாக, ஊடகங்களில் வெளிப்படையாகத் தெரிந்த பெண்களின் அதிகரிப்பு, யூனியன் உறுப்பினர் பொறுப்பில் பிரதிபலிக்கவில்லை.

மாறும் ஊடகச் சூழலுக்கு ஏற்ப, பாகிஸ்தானில் யூனியன்கள் ஈடுகொடுக்கவில்லை என்பதை ஒப்புக்கொண்ட ஆஜ் டிவியின் செய்திப் பிரிவு இயக்குநர் சையது தலத் ஹுசைன், யூனியன்கள் இன்னமும் கிளர்ச்சிமனப் போக்கிலேயே உள்ளன. புதிய சூழலில் தங்களுடைய கொள்கைகள் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை ஆராய்ந்து பார்க்கவில்லை என்று கூறினார். பத்திரிகையாளர்களுக்கு அரசு வழங்கும் நிலங்கள் ஒதுக்கப்படுவதிலும்கூட டெலிவிஷன் பத்திரிகையாளர்கள் சேர்க்கப் படுவது இல்லை என்றார் அவர். பொதுவாக பெண்பத்திரிகையாளர்கள் சர்ச்சைக் குரிய அமைப்புக்களைத் தவிர்க்க விரும்புகின்றனர் என்றும் அவர் கூறினார். தங்களது பணியிலேயே கவனம் செலுத்த விரும்புவோர் யூனியன்களில் சேருவது அவசியம் என்று கருதவில்லை. ஏனெனில், தொழில் முறையில் வளர்ச்சிபெற யூனியன்கள் தேவைப்படுவதாக அவர்கள் நினைக்கவில்லை. மேலும், யூனியன்கள் இன்னமும் ஆணாதிக்கத்திலேயே இருக்கின்றன. அவற்றில் இருப்பவர்கள் ஆர்ப்பாட்டங்கள், நிர்வாகத்துடன் சண்டையிடுவது, தெருக்களில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்வது என்பன போன்ற விரும்பத்தகாத "நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியுள்ளது. அன்றாட வீட்டுவேலைச் சுமைகளை ஏற்றுள்ள பெண்கள் இத்தகைய நடவடிக்கைளில் ஈடுபடத் தயங்குகின்றனர். பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல், அல்லது பின்னிரவுப் பணி முடித்து வீடுதிரும்ப போக்குவரத்து வசதி, தனித்தனிக் கழிப்பறைகள் என்ற கோரிக்கைகள் போன்ற பெண்களின் சிற்ப்புத் தேவைகளை யூனியன்கள் கவனிக்காதபோது இந்தத் தயக்கம் வலுவடைகிறது.

யூனியன்களின் நிர்வாகக் குழுக்களில் ஆண்-பெண் சமத்துவம் சில நிர்வாகிகளுக்கு அக்கறை உடைய பிரச்சினையாக உள்ளது. மஸர் அபாஸ் தமது பதவிக்காலத் தின்போது, நிர்வாகக் குழுவில் குறைந்தது நான்கு அல்லது ஐந்து பெண்கள் இருக்க வேண்டும் எனக் கோரி PFUJ அமைப்பு விதிகளைத் திருத்த முயன்று தோற்றார். இவ்வாறு இட ஒதுக்கீடு தருவதும், பெண்களின் பங்கேற்பை அதிகரிக்கும் முனைப்பான நடவடிக்கையும் பயன்தருமா என்ற விவாதம் இன்னமும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. ஒதுக்கீட்டை எதிர்ப்பவர்களின் கைமேலோங்கி உள்ளது.

## மின்னணு ஊடகங்கள் : முன்வரிசை 24X7

மின்னணு ஊடகங்கள் மிக நெருக்கமாக இருந்து உடனுக்குடன் செயல்பட வேண்டியிருப்பதால், அவற்றில் பணியாற்று வோருக்கு அச்சுறுத்தல்களும், ஆபத்துக் களும் உடனுக்குடன் உண்டாகின்றன என்கிறார் ராவல்பிண்டி இஸ்லாமாபாத் பத்திரிகையாளர் யூனியனின் பொதுச் செயலர் ஜமீல் மிர்ஸா, "முன்வரிசையில் நிற்கும் புகைப்படக் கலைஞர்கள்தான் முதலில் பலியாகின்றனர் என்று கூறும் அவர்," பத்திரிக்கையாளர்களுக்கு குண்டுதுளைக்காத சட்டை தருவதாக உள்துறை அமைச்சர் ரெஹ்மான் மாலிக் ஆறுதடவை வாக்குறுதி அளித்தும் எதுவும் நடக்கவிலை என்கிறரர்.

2001 செப்டம்பர் 11-க்குப் பிறகு, பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் வட்டாரம் உல களாவிய கவனத்தை ஈர்த்தது. அதன் விளைவாக செய்தித் தயாரிப்பு என்பது குறிப்பாக மின்னணு ஊடகங்களுக்கு ஒரு மிகப்பெரிய தொழில் முறை நடவடிக்கையாக மாறிவிட்டது. சர்வதேச வெளியீடுகளுக்காகச் செய்திகளை அனுப்புவோரின் எண்ணிக்கையும் பெருகிவிட்டது. ஆங்கில ஊடகங்களுக்காகப் பணியாற்றுவோரின் ஊதியமும், பணிநிலைமையும் சற்றே மேம்பட்டன ஆனால் உருது ஊடகங்களுக்காகப் பணிபுரிவோரு க்கு, குறிப்பாக தொலைவுப்பகுதிகளில் பணியாற்றும் நிருபர்கள் மற்றும் பகுதிநேர நிருபர்களுக்கு சர்வதேச கவனத்தின் உடனடி கவனிப்பு கிடைக்கவில்லை. மாறாக, முஷாரப் ஆட்சியில் மின்னணு ஊடகத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் புதிய சிகரத்தை எட்டின.

2005, மே 16 அன்று, பாகிஸ்தான் மின்னணு ஊடக ஒழுங்குமுறை ஆணையத் திருத்த (2004) மசோதாவை தேசிய சட்டப் பேரவை நிறைவேற்றியது. இந்தச் சட்டத்தின்கீழ் உருவாக்கப் பட்ட ஆணையம், 27-வது விதியின்கீழ் தேசியநலன், பாதுகாப்பு, பாகிஸ்தான் சித்தாந்தத்திற்கு ஆதரவு, ஆபாசத்தடுப்பு ஆகிய காரணங்களுக்காக தொலைக்காட்சி அலைவரிசைகளுக்குத் தடைவிதிக்கமுடியும். சட்ட மீறலைத் தண்டனைக் குரிய குற்றமாக இந்த ஆணையம் ஆக்கியது. மூன்றாண்டுகள்வரை சிறைத் தண்டணையும், பாக் ரூ. 10 மில்லியன் (சுமார் 16 8000 அமெரிக்க டாலர் பெருந்தொகை அபராதமும் விதிக்க வகை செய்யப்பட்டது. இந்தச் சட்டம் 2007-இல் மேலும் திருத்தப்பட்டு, டெலிவிஷன் சேனல்களை தடைசெய்யவும், சாதனங்களைப் பறிமுதல் செய்யவும் கண் மூடித்தனமாகப் பின்பற்றப் பட்டது. இந்தக் கொடூரமான சட்டத்திற்கு எதிராக முஷாரப் ஆட்சிக்காலம் முழுவதும் ஊடக அமைப்புகள் குரல் எழுப்பி வந்தன. 2008-இல் ஜனநாயகம் மீட்கப்பட்டதை அடுத்து சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட ஆணையம் கலைக்கப்பட வேண்டும்; அதற்குப் பதிலாக எல்லா ஊடகப் பிரதிநிதிகளையும் கொண்டு சுய ஒழுங்கு அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை யூனியன் வலியுறுத்தியது. இதன் ஒரு பகுதியாக, 2008 ஆகஸ்டில் 26 அம்ச நடத்தை நெறி ஒன்றை PFUJ உருவாக்கியது. அதில் பொதுநலன் கருதி அடிப்படை பத்திரிகை இயல் விதிகள் வருக்கப்பட்டன. அந்த நடத்தை நெறி வரைவு இன்னமும் விவாதநிலையிலேயே உள்ளது. அதேபோல, ஊடகப் புகார் ஆணையம் ஒன்றை சுய எழுங்கு அமைப்பாக ஏற்படுத்தலாம் என்ற யோசனையும் பல ஆண்டுகளாக விவாதிக்கப் படுகிறது.

தொழிலாளர் நலச் சட்டங்களும் மின்னணு ஊடகப் பிரிவுக்கு பயன்படுத்தப்படுவது இல்லை. ஓரளவு நியாயமான அளவு ஊதியம் என்றாலும், இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறைதான் தரப்படுகின்றன. பெரும்பாலான தொலைக்காட்சி நிறுவனங்கள் சாத்தியக்கூறு மதிப்பீடு செய்யாமலேயே 24x7 செய்தி அலை வரிசைகளைத் தொடங்கிவிட்டன. இதனால பல அலை வரிசைகள் மிகவிரைவில் மூடப்பட்டன. கடந்த இரண்டு - மூன்று ஆண்டுகளில் சுமார் 400 முதல் 500 பத்திரிகையாளர்கள் வேலை இழந்தனர் என்று மஸ் அபாஸ் கூறுகிறார். மின்னணு ஊடகங்களில் வேலைக்கு அமர்த்துவதைக் கண்காணிக்க சட்டங்கள் எதுவும் இல்லாத நிலையில், நீதிமன்றங்களுக்குப் போகவும் வழியில்லை. யூனியன் கோரிக்கைகளுக்கு சிற்சில தொலைக்காட்சி நிறுவனங்கள் இணங்கிய போதிலும்-உரிமையாளர்களுடன் பேரம்பேசும் திறன் தொழிலாளர்களுக்குக் கிடையாது.

வெகுவேகமாக மாறும் ஊடக நிலையை எதிர்கொள்வது யூனியன்களுக்கு மிக முக்கியமாக உள்ளது, உழைக்கும் பண்பு மாறிவிட்டது. அதேபோல, உரிமையாளர் பண்பும், பணியிட நிலைமையும் மாறிவிட்டன. தனியார் மயமாக்கப் பட்டதும், அலைக்கற்றைகளின் மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டதும், மின்னணு ஊடகங்களுக்கும் இன்ட்டர்நெட்டுக்கும் புதிய சவால்களைத் தோற்றுவித்தன. யூனியன்களுக்கு முழுமையான பத்திரிகைச் சுதந்திரத்திற்காக வாதாடுவதற்கும் - மக்களின் மதநம்பிக்கைகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் இடையே சமநிலை காண்பது கடினமாக இருந்தது. சர்ச்சைக்கும் இடமளித்தது. உதாரணமாக, 2010-ஏப்ரலில் இஸ்லாமுக்கு எதிரான அவதூறான கருத்துக்கள் பரப்பப்படுவதாகக் கூறி சமுக நெட்வொர்க்கிங் தடை செய்யப்பட்டதற்கு யூனியன் ஆதரவு அளிக்க வேண்டியிருந்தது.

## பத்திரிகைச் சுதந்திரமும் பணிப்பதுகாப்பும்

பாகிஸ்தானில் உள்ள பத்திரிகையாளர்கள் தான் நாட்டிலேயே மிகவும் குறைவாக ஊதியம் பெறுகிறவர்கள். மின்னணு ஊடகங்களில் இருக்கும் சிலர் நீங்கலாக, மற்றவர்கள் அனைவருமே தங்களுடைய உயிரையும், உடல் உறுப்புக்களையும் பணயம்வைத்து மிகக் குறைவான ஊதியத்திற்காக வேலை செய்கின்றனர். பத்திரிகையாளர்களுக்கும்-எல்லா ஊடகப்பணியாளர்களுக்கும் நியாயமான ஊதியம் மற்றும் பணிப்பாதுகாப்பு கிடைப்பதற்காக PFUJ மற்றும் APNEC இடைவிடாது வாதாடி வருகின்றன.

2001 அக்டோபர் அன்று, பத்திரிக்கையாளர்களுக்காக சட்டபூர்வமான ஊதிய விகிதங்களையும் பணியிட நிலைமைகளையும் ஏழாவது ஊதியக் குழு வரையறுத்தது. அவற்றை 2000 அக்டோபர் முதல் அமல்படுத்த வேண்டும் எனக் கூறப்பட்டது. அதன் பிறகு ஒன்பதாண்டுகள் ஆகியும் இன்னமும் அமல் படுத்தப்படவில்லை. இப்போது எட்டாவது ஊதியக் குழுவின் தீர்ப்பு வந்தாகவேண்டும். பாகிஸ்தானில் உள்ள பத்திரிகைகளில் 85 சதவிகிதம் இன்னமும் ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல் படுத்தவில்லை. பெரும்பாலான பத்திரிகையாளர்களும், ஊடகப் பணியாளர்களும் இப்போது சட்ட விரோதமான காண்ட்ராக்டுகளின் கீழ் அல்லது நியமன உத்தரவின்றி வேலை செய்கின்றனர். பலருக்கு தினக்கூலி அடிப்படையில் சம்பளம் தரப்படுகிறது. கொள்கை அளவிலும், சட்டபூர்வநிலையிலும், அமல்படுத்துவதிலும் ஏற்பட்டுள்ள தேக்கநிலையால், செயல்நோக்கு உத்திகளை மறு ஆய்வு செய்து, வேறுபட்ட அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. முஷாரப் ஆட்சியில் தனியார் ஊடகங்கள் செழித்தோங்கின. இப்போது அவை சரியத் தொடங்கிவிட்டன. பலநூறு பத்திரிகையாளர்கள் வேலை இழந்துவிட்டதாகத் தெரிகிறது.

அரசோ, தீவிரவாதக குழுக்களோ கொண்டுவரும் செய்தித் தணிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக, ஊடக உரிமை யாளர்களுக்கு உழைக்கும் பத்திரிகையாளர்களின் ஆதரவு தேவைப்படுகிது. செய்தி ஏடுகளை மூடுவதாலோ, செய்திகளை ஒடுக்குவதாலோ தங்களுடைய வேலைக்குத்தான் ஆபத்து என்பதை முற்றிலுமாக அறிந்திருந்தும் உழைக்கும் பத்திரிகையாளர் கள் தெருக்களில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். நெருக்கடி யான நேரங்களில், குறிப்பாக அண்மைக் காலத்தில் முஷாரப் ஆட்சியில் போராட்டம் நடந்தபோது, ஊடக உரிமையாளர்கள் பத்திரகையாளர்களைச் சேர்த்துக் கொண்டு, கூட்டாக எதிர்த்தனர் ஆனால் ஆர்ப்பாட்டங்கள் முடிந்தபிறகு, இந்த ஒற்றுமையில் பிளவு உண்டானது. முரண்பாடுகள் முன்னணிக்கு வந்தன.

"பத்திரிகைச் சுதந்திரத்திற்கான போராட்டத் தினால் நமக்கு என்ன கிடைத்தது? பத்திரிகை சுதந்திரம் உரிமையார்களுக்கு, உழைக்கும் பத்திரிகையாளர்களுக்காக அல்ல" என்ற கேள்வி பாகிஸ்தான் பெடரல் பத்திரிகையாளர் யூனியனின் பேரவைக் கூட்டத்தில் எழுப்பப்பட்டதாக மஸர் அபாஸ் கூறினார். அரசின் அடக்கும்படி பேரளவக் கூட்டத்தை இணங்கவைப்பது யூனியனுக்கு மிகவும் சிக்கலாக இருந்தது. உரிமையாளர்கள் தங்களுடைய குறுகிய சொந்த நலன்கள் என்று வரும்போது PFUJ யூனியனை மட்டுமே அங்கீகரிக்கின்றனர். இந்த கருத்துவேறுபாடுகளினால், ஊதியம் மற்றும் பணிநிலைமைகளுக்காக PFUJ பேரணிகளை நடத்தியபோது, அதுபற்றிய செய்திகளை செய்தி ஏடுகள் வெளியிடவில்லை.

பத்திரிகை இயல் உள்பட எல்லாத்துறைகளிலும் நிரந்தரமான வேலை என்பது மெல்ல மெல்ல மறைந்துவரும் நிலையில், காண்ட்ராக்ட் முறையினால் பணிப்பாதுகாப்பும், யூனியனின் வளர்ச்சியும் மிகமேசமாகப் பாதிக்கப்படுகிறது. ஏனெனில், குறுகியகால காண்ட்ராக்டில் வேலையில் சேர்கிறவர்கள் யூனியனில் சேரத் தயங்குகின்றனர். உண்மையில் தங்களுடைய முதன்மையான போராட்டம் அரசுக்கு எதிராக அல்ல என்பதை பத்திரிகையாளர்கள் இன்று உணர்கின்றனர். தங்களுடைய தொழிலின் சுய அதிகாரத்தைப் பாதுகாக்க உரிமையாளர்களை எதிர்த்துப் போராட வேண்டும் என்று கருதுகின்றனர். இப்போதுள்ள கிலானி அரசு போன்ற குறிப்பிட்ட சில அரசுகள் பத்திரிகையாளர் யூனியனின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கும் போது, உரிமையாளர்கள் இணங்குவதாக இருந்தாலும்சரி, அல்லது கூட்டு நடத்தைநெறிக் கமிட்டிகளில் அமர்வதாக இருந்தாலும் சரி, உழைக்கும் பத்திரிகையாளர்களைச் சமமாக நடத்த உரிமையாளர்கள் தயாராக இல்லை.

இவ்வாறாக, பாகிஸ்தானில் ஊடக ஊழியர்கள், பத்திரிகையாளர் அமைப்புகள், செய்தி ஏடுகளின் உரிமையாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு இடையே வெளிப்படையான ஒருமைப்பாடும் கூட்டாளியும் தோன்றினாலும், இந்த ஒருமைப்பாடு நிலையானதல்ல. தணிக்கைமுறை அல்லது சர்வாதிகார ஆட்சிக்கு எதிராகப் போராடும் போது மட்டுமே இந்த ஒருமைப்பாடு இருக்கிறது. எனவே,பத்திரகைச் சுதந்திரத்திற்காகவும், பத்திரிகையாளர்களின் பணிநிலைமைகளுக்காகவும் நடத்தப்படும் இயக்கங்களுக்கு இடையே வலுவான இணைப்பு ஏற்படுத்தப்படவேண்டும் என்பதை தகவல்பெறும் சுதந்திரத்திற்கான கூட்டு இயக்கம் உணர்த்துகிறது.

# இலங்கை

## போருக்குப்பிந்தைய சவால்களும், பிரிந்து நிற்கும் ஊடகங்களும்




**2009-இல் கொலை வெறித்தாக்குதலுக்கு இலக்கான பொதள ஜயந்தா, 2006 ஜூலையில் கொழும்பில் பத்திரிகையாளர் சம்ப்பா லக்மல் டி சில்வா கொலைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை ஏற்கிறார்.** *(புகைப்படம்: புத்திகா வீரசிங்கா)*

இலங்கையின் 26 ஆண்டுகால உள்நாட்டுப்போர் 2009 மே மாதம் முடிவுக்கு வந்தது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் நடத்திய பிரிவினைப் போரில் அரசுப் படைகள் இறுதிவெற்றி பெற்றுவிட்டதாக முறைப்படி அறிவிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்த நாட்களில், நீண்டகாலமாகத் தள்ளிப் போடப்பட்டு வந்த நல்லிணக்கம், சமாதானம், ஒளிவுமறைவற்ற அரசாட்சி ஆகியவற்றை வளர்த்திட அரசியல் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படும் என்ற எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தது. இந்தக் காலகட்டத்தில் ஒடுக்கப்பட்ட, தவறாகப் பயன்படுத்தப்பட்ட, தாக்கப் பட்ட ஊடகங்களும் புதிய அமைதி சகாப்தத்தில் கருத்து வெளியீட்டுக்கு அதிக சுதந்திரமும் எதிர்ப்பைத் தெரிவிக்க வாய்ப்புவசதியும் அதிகம் கிடைக்கும் என்று நம்பிக்கையோடு இருந்தன. எனினும், 2010 ஜனவரியில் நடந்த அதிபர் தேர்தலுக்கும், அதைத் தொடர்ந்து ஏப்ரலில் இலங்கை நாடாளுமன்றத்திற்கு நடந்த தேர்தலுக்கும் பிரச்சாரம் நடைபெற்ற போது ஏற்பட்ட காட்டமான பிரிவினைகளினால் இந்த நம்பிக்கை மடிந்தது. தொடர்ந்துவந்த காலகட்டங்களில் தொடக்ககால எதிர்பார்ப்புகளுக்கு மேலும்பல பேரடிகள் விழுந்தன. ஊடகப் பணியாளர்கள் மற்றும் பத்திரிகை அமைப்புக்கள் தாக்கப்படுவது புது வேகம் பெற்றன. அரசுக்கட்டுப்பாட்டை வலுப்படுத்திட புது முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. இவற்றில் மிக முக்கியமானதாக, பிரஸ் கவுன்சிலை புதுப்பிக்கவும், ஊடக வளர்ச்சி வாரியத்தை உருவாக்கவும் முயற்சிகள் நடந்தன. ஊடக நடத்தைநெறிகளை மேம்படுத்திட உள்ளூர் ஊடக நிறுவனங்களுக்கு உதவிட இவ்வாறு செய்வதாகக் கூறப்பட்டது. "தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்களைக் கண்காணிக்கவும், ஊடக வழிகாட்டு விதிகளை வெளியிடவும், இத்துறையில் உரிமங்களை வழங்கவும்" ஒலிபரப்பு ஆணையத்தை அமைக்கவும் திட்டமிடப்படுகிறது. புதிய தனியார் தொலைக்காட்சி நிலையங்களுக்கும் விதிகளை இன்ட்டர்நெட் சேவை நிறுவனங்களுக்கும் தொலைபேசித் தொடரமைப்புகளுக்கும் உரிமம் வழங்குவதற்கான ஒழுங்கு முறை விதிகளை ஏரசு ஏற்கனவே அறிவித்துள்ளது. இவை 2009-ஆம் ஆண்டின் இறுதியில் அறிமுகப் படுத்தப்படுவதாக இருந்த சர்ச்சைக்குரிய ஒழுங்குவிதிகளின் வேகம் குறைந்த வடிவமாகும். முந்தைய விதிகள் புதிய ஒளிபரப்புக்களுக் கும், இன்ட்டர்நெட் மூலமாக இதர விஷயங்களைப் பரப்புவதற்கும் கட்டுப்பாடுகளை விதிப்பதாக இருந்தன.

அரசியல் சீர்திருத்தங்களுக்கும் ஊடகச் சுதந்திரத்திற்கும் மற்றொரு பேரடியாக 2010 செப்டம்பர் 8 அன்று அரசியல் சாசனத்தின் 18-வது திருத்தத்திற்கு ஒப்புதல் வழங்கி நாடாளு மன்றம் வாக்களித்தது. ஊடக அமைப்புக்கள், மக்கள் சமுகக் குழுக்கள், தொழிற் சங்கங்கள் எதிர்க்கட்சிகள் ஆகியனவற்றின் பரவலான எதிர்ப்புக்களுக்கு இடையே ஓர் அவசர கால மசோதாவாக இந்தத்திருத்தம் எடுக்கப்பட்டது. இது எந்த ஒரு தனிநபரும் அதிகாரம்மிக்க நிர்வாக அதிபர் பதவியை இரண்டுபதவிக் காலங்களுக்குத்தான் வகிக்கலாம் என்று இருந்த கட்டுப்பாட்டை நீக்கியது. மேலும், 17-வது திருத்தத்தின் கீழ் தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட்ட எல்லா பொது நிறுவனங்களையும் அதிபரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இது கொண்டுவந்தது. இதனால், தேர்தல், பொதுச்சேவை, காவல்துறை, மனித உரிமைகள், பொதுமக்களுக்கு முன்பு பொறுப்பாக்கல், நீதிப்பணிகள் ஆகியவற்றை மேற்பார்வையிடும் ஆணையர்களை நியமிக்கும் பெருவாரியான அதிகாரங்கள் அதிபரிடம் தரப்பட்டன. உயர் சட்ட த்துறை அதிகாரிகளையும், தேசியத் தணிக்கை முகமையின் தலைவரையும் நியமிக்கும் கட்டுப்பாடற்ற அதிகாரத்தையும் அதிபர் பெற்றார். மேலும் அவர் நாடாளுமன்றத்தின் தலைமைச் செயலரை நியமிக்க தமக்குள்ள அதிகாரத்தின் மூலம் சட்டமன்ற அலுவல்களை எவ்வாறு நடத்த வேண்டும் எனக் கட்டாயப்படுத்தும் அதிகாரத்தையும் மறை முகமாகப் பெற்று விட்டார்.

இந்தச் சட்ட விதிகள் யாவும், ஜனநாயகத்தை அரித்து, நல்லாட்சியைச் சீர்குலைக்கக் கூடியவை என்று பரவலாக நம்பப்படுகிறது. இது நாடாளுமன்றத்தில் ஓர் அவசரமசோதாவாக கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட விதத்தைப் பார்க்கும் போது, இது மக்களின் அடிப்படைச் சுதந்திரத்தை எவ்வாறு பாதிக்கும் என்பது தெளிவாகத் தெரிகிறது. எனினும், தேர்தலின்போது அரசு ஊடகங்களும், தனியார் ஊடகங்களும் பின்பற்றவேண்டிய வழிகாட்டி விதிகளை வெளியிடும் அதிகாரம் மூன்று உறுப்பினர் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டிருப்பது சுதந்திர ஊடகத்திற்கு குறிப்பாக கவலை தரக்கூடியது.

17-வது திருத்தத்தின்கீழ், அரசு ஊடகங்களுக்கு வழிகாட்டி விதிகளை வழங்கும் அதிகாரத்தை தேர்தல் ஆணையம் பெற்றிருந்தது. ஆனால் 18-வது திருத்தமோ இந்த அதிகாரத்தை தனியார் ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும் நீட்டித்து விட்டது. இந்தத் தேர்தல் ஆணையத்தை நியமிக்கும் அதிகாரத்தை அதிபர் பெற்றிருப்பதால் எந்த ஓர் எதிர்ப்புக் குரலுக்கும், தேர்தல் நேரத்தின் போது எதிர்த் தரப்பின் குரலுக்கும் சாவுமணியடிப்பதாக ஆகிவிட்டது. ஆட்சியில் இருக்கும் அரசுகள் அரசு ஊடகங்களைத் தவறாகப் பயன் படுத்தும் தற்போதைய போக்கைப் பார்க்கும் போது, அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள ஊடகங்களை பொதுச் சேவை ஊடகமாக மாற்றவேண்டும் என்ற நீண்டகாலக் கோரிக்கையைப் பார்க்கும் போது, இந்தப் பிரச்சினை முக்கியத்துவம் பெறுகிறது.

பொதுச் சேவை ஊடகம் பற்றிய ஒரு ஆசிய மாநாடு 2003-இல் கொழும்பில் நடைபெற்றது சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் தனது இலங்கைக் கிளையுடன் சேர்ந்து நடத்திய இந்த மாநாட்டில், பற்பல கொள்கை களுக்கு ஏற்ப அரசுக் கட்டுப்பாடு ஊடகங்களைச் சீர்திருத்த வேண்டியதன் தேவை வலியுறுத்தப்பட்டது. பொதுச் சேவை ஊடகங்கள் மீது எல்லா வகையான நேரடி அரசியல் கட்டுப்பாடுகளை நீக்குவதும் - சர்வதேசத் தரங்களுக்கு ஏற்றதாக நன்னெறி, பொறுப்பேற்றல், ஒளிவு மறைவற்ற நிதிநிர் வாக முறை

1. பார்க்க: *Media Development Authority: Another name for media control in Sri Lanka?* at http://www.groundviews.org/2010/07/28/media-development-authority-another-name-for-media-control-in-sri-lanka/
2. பார்க்க: *Sri Lanka to set up Broadcasting Authority* at http://blogs.rnw.nl/medianetwork/sri-lanka-to-set-up-launch-broadcasting-authorityservices

என்ற அடிப்படையில் அதன் நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதும் இவற்றில் அடங்கும். இந்த மாநாடு நடை பெற்ற காலத்தில் இலங்கையில் உள்நாட்டுச் சண்டைநிறுத்தம் முறைப்படி அறிவிக்கப்பட்டிருந்தது. பேச்சுவார்த்தைகளினால் நிலையான அரசியல் தீர்வு பிறக்கும் என்ற நம்பிக்கை மிருந்திருந்த காலம் அது.

## விமர்சனச் செய்திகளுக்கு வாய்ப்பு மறுப்பு

போர் முடிந்தபிறகு அரசியல் சூழல் இருவேறு துருவங்களாகப் பிரிந்துவிட்ட நிலையில், பல்வேறு நிகழ்வுகள் நிகழ்ந்துவிட்டன, நிகழ்ந்து வருகின்றன, போர் பற்றியும், போருக்குப்பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு இலங்கையில் நிகழ்பவை பற்றியும், குறிப்பாக குடிபெயர்ந்தோரின் அவல நிலை மற்றும் நல்லிணக்க முயற்சிகள் பற்றியும் துருவித்துருவி விமர்சனச் செய்திகளை வெளியிடுவதற்கு வாய்ப்பு வசதிகள் மிகவும் தீவிரமாக மறுக் கப்படுகின்றன.

பகைமைச் சூழல் சிறிதுகூட குறையாத சூழ்நிலையில் நாடெங்கும் உள்ள ஊடகப் பணியாளர்கள் தங்களது சொந்தப் பாதுகாப்புக்காக சுயதணிக்கையைப் பின்பற்றத் தொடங்கி விட்டனர். சுயப்பாதுகாப்புக்கான விதிகளைப் பின்பற்றத் தவறியோர். மிரட்டல்களுக்கு உள்ளாகின்றனர். பத்திரிகையாளருக்கு எதிராக வன்முறை, துன்புறுத்தல், கொலை ஆகியவை போரின் போது, குறிப்பாக போரின் கடைசிக் கட்டத்தில் மிகவும் மோசமாக இருந்தன.



கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் லஸந்தா விக்கிரமதுங்காவுக்காக மெழுகுவர்த்தி ஏற்றி கண்காணிப்பு, கொழும்பு, ஜனவரி 2009 *(புகைப்படம்: ராபர்ட் ஷா)*

குறிப்பாக இந்தக் காலகட்டத்தில் தமிழ்மொழி ஊடகங்கள் கடுமையான நெருக்குதல்களுக்கு உள்ளாயின. யாழ்ப்பாணத்தில் இருந்த வெளியாகும் உதயன் நாளேடு மற்றும் கொழும்பில் இருந்து வெளியாகும் அதன்சார்பு ஏடான சுடர் ஒளியின் அலுவலகங்கள் அடிக்கடி குறிவைத்துத் தாக்கப்பட்டன. தனது போர்க் கொள்கையை ஆதரிக்காதவர்கள் பயங்கரவாதத்தை எதிர்ப்பவர்கள் என்று கூறி ஊடகங்களின் வாயை அரசு மூடச் செய்தது. பத்திரிகையாளர்கள் சுயதணிக்கை செய்ய வேண்டியிருந்தது. இல்லாவிட்டால் போர்முயற்சிகளை கண்ணை முடிக்கொண்டு அங்கீகரிக்க வேண்டியிருந்தது.

சுயேச்சையாக போர்பற்றிய செய்திகளை வெளியிடுவதற்குத் தடை விதிக்கப்பட்டது. அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள இரண்டு தொலைக்காட்சி நிலையங்களையும் போரை ஆதரிக்கும் ஒரு தனியார் தொலைக் காட்சி நிலையத்தையும் சேர்ந்த ஊடகப் பணியாளர்கள் மட்டும் போர் பற்றிய செய்திகளை சேகரிப்பதற்கு அரசு அனுமதித்தது. அவர்கள் பாதுகாக்கப்பட்ட நிருபர்களாகக் கருதப்பட்டனர். அரசும், எல்டிடிஈ அமைப்பின் பிரச்சாரப் பிரிவும் போர் பற்றிய செய்திகளையும், காட்சிப் படங்களையும் அவ்வப் போது ஒழுங்காக வினியோகித்து வந்தன. போரினால் சேதமடைந்த மக்கள் பற்றி சுயேச்சையான முறையில் சரிபார்க்க இயலவில்லை. போர்முடிந்து ஓராண்டு ஆனபிறகும், சுயேச்சையான முறையில் சரிபார்க்க இயலவில்லை.

போர் முடிந்து ஓராண்டு ஆனபிறகும், சுயேச்சையான ஊடகங்களுக்கு கடைசிக்கட்டப் போர் நடந்த இடங்களுக்குச் செல்ல வாய்ப்பு தரப்படவில்லை. வடக்குமாகாணத் தலைநகரான யாழ்ப்பாணம் போர்நடந்த ஆண்டுகளில் மிகவும் மோசமான செய்தித் தணிக்கையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதுநாள் வரையும், வெளிநாட்டு ஊடக வியலார் எவரும் தன்னிச்சையாக இந்த நகருக்குச் செல்ல அனுமதி கிடையாது.

## குடிபெயர்ந் தோரின் குரல் ஒடுக்கப்பட்டது

அடக்குமுறைச் சூழல் மற்றும் சுயதணிக்கை முறையினால் மனிதாபிமானப் பிரச்சினைகள் பற்றிய செய்திகளைச் சேகரித்து வெளியிடுவது பெரியதொரு சவாலாக இருந்தது. வடக்கு இலங்கையில் காவல் முகாம்களில் அடைக்கப்பட்டிருந்த உள்நாட்டில் குடிபெயர்ந்த சுமார் 3 லட்சம் மக்களின் நிலைமை பற்றி விருப்பு வெறுப்பின்றி நேர்மையாகச் செய்திதர முடியவில்லை . மிகவும் பயத்துடனும் பரபரப்பாகவும் பேசப்பட்ட மாணிக் பண்ணைக்கு அரசு அதிகாரிகளும், வெளிநாட்டுப் பிரமுகர்களும் சென்றுபார்ப்பதற்காக மிகவும் கவனத்துடன் ஏற்பாடுசெய்யப் பட்ட சுற்றுப் பயணங்களில் பெரும்பாலும் அரசு ஊடகப் பத்திரிகையாளர்களே அழைத்துச் செல்லப்பட்டனர். செய்தி சேகரிப்பது என்பது இதோடு முடிந்தது.

பொதுவாக, உள்நாட்டில் குடிபெயர்ந்தோர் பிரச்சினையில் பத்திரிகைகள் கவனம் செலுத்துவதும் வெவ்வேறு வகைப்பட்டதாக இருந்தது. இந்தப் பிரச்சினையில் தமிழ்ப் பத்திரிகைகள் மிகுந்த கவலையுடன் கவனம் செலுத்தின. ஆங்கில ஊடகங்களின் கவனம் ஓரளவே இருந்தது. சிங்கள ஊடகங்களோ இதில் அக்கறை காட்டவே இல்லை. தமிழ்பத்திரிகைகளிலும் புதிய உதயன் குழுமத் தைச் சேர்ந்த யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் உதயன் மற்றும் கொழும்பில் இருந்து வெளியாகும் சுடர் ஒளி என்ற இரட்டைச் செய்தி ஏடுகளிலும் உள்நாட்டில் குடிபெயர்ந்தோர் நிலைமைபற்றி மிகவும் நேர்மையான முறையில் செய்திகள் வெளியிடப் பட்டன. இந்தச் செய்திகள் முகாம்களில் வசிப்பவர்களிடம் இருந்தே பெறப்பட்டன. அவர்களுடைய அடையாளங்களும் பாதுகாக்கப்பட்டன.

உள்நாட்டில் குடிபெயர்ந்தோர் முகாம்கள் ஆள்கடத்தலுக்கான வயல்களாக மாறிவிட்டன என்றும், நெறிமுறையற்ற அரசு ஊழியர்கள் பணத்திற்காக மக்களின் அவலத்தைச் சுரண்டும் மோசடித்தலங்களாகவும் மாறி விட்டன என்றும் 2009, செப்டம்பர் 6 அன்று சண்டே டைம்ஸ் இரண்டு குறிப்பிடத்தக்க செய்திகளை வெளியிட்டிருந்தது. எனினும், இதற்கு பொதுமக்களின் எதிர்வினை குறைவாகவே இருந்தது என்று இந்தத் துயரத்தை அம்பலப்படுத்திய செய்தியாளர்கள் கூறினர். இதற்குக் காரணம் சிங்கள மொழிப் பத்திரிகைகள் அலட்சியமாக இருந்துவிட்டன. இவ்வளவு முக்கியமான செய்திகளை வெளியிட்ட போதிலும் இவற்றை அனுப்பிய வவுனியா மற்றும் மன்னாரைச் சேர்ந்த செய்திஏட்டின் இரண்டு சிறப்புச் செய்தியாளர்கள் தங்கள் பெயர்களை வெளியிட விரும்பவில்லை.

---

3 "Scandalous Plunder of a Battered People" மற்றும் "The High Price of Freedom" என்றதலைப்பிலான இரண்டு கட்டுரைகளும் *சண்டே டைம்ஸ்* நிருபர் குழுவால் விசாரித்து எழுதப்பட்டது. அவை கிடைப்பது: http://www.sundaytimes.lk/090906/News/nws_02.html மற்றும் http://www.sundaytimes.lk/090906/News/nws_24.html

4 "The Shame of Menik Farms" என்றதலைப்பிலான ஆகஸ்ட் கட்டுரை கிடைப்பது : http://www.groundviews.org/2009/08/23/the-shame-of-menik-farm/ மற்றும் அக்டோபர் அறிக்கை: http://www.groundviews.org/2009/10/13/breaking-news-flooding-and-unrest-again-at-menik-farm/.

உள்நாட்டில் குடிபெயர்ந்தோர் முகாம்களின் நிலைமைகளைப் பற்றி கிரவுண்ட் வியூஸ் வலைதளம் மிகவும் திடுக்கிடச் செய்யும் தகவல்களை தொடக்காலத்தில் வெளியிட்டது. 2009 ஆகஸ்டிலும், அக்டோபரிலும் பெய்த பெருமழையைத் தொடர்ந்து முகாம்களில் மோசமடைந்த நிலைமை பற்றி தேசிய மற்றும் சர்வதேசக் கருத்துக்களை இது விழிப்படைச் செய்தது. வலைதளத்தின் செய்திகளோடு, முகாம்களின் நிலைமையில் முக்கிய பத்திரிக்கைகள் எந்த அளவுக்கு அக்கறை காட்டுகின்றன என்ற கலக்க மூட்டும் கருத்துரைகளும் வெளியிடப்பட்டன.

குடிபெயர்ந்தோர் முகாம்களின் பிரச்சினை பற்றிய செய்திகளை முக்கிய ஊடகங்கள் வெளியிடாமல் மௌனம் காத்தன. நவம்பரில் முகாம்கள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து குடிபெயர்ந்த பலர் தங்களுடைய சொந்தக் கிராமங்களுக்கு திரும்பியது வரை முக்கிய பத்திரிகைகளின் அலட்சியம் நீடித்தது. இந்த மௌனம் வளரவளர, கிரவுண்ட் வியூஸ் வலைதளம் மற்றொரு செய்தி வெளியிட்டது, அதில், குடிபெயர்ந்தோர் முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்ட ஆட்களைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்கள் தங்களுடைய சொந்த ஊர்களுக்குத் திரும்பிப் போய் வாழ்க்கையை மீண்டும் தொடங்க பட்ட கஷ்டங்கள் விவரிக்கப்பட்டிருந்தன. போரினால் பாதிக்கப்பட்ட இந்த மக்களின் அவலநிலை பற்றி முக்கிய ஊடகங்கள் அமைதியாக இருக்கவே, கிரவுண்ட் வியூஸ் வலைதளம் இவ்வாறு செய்தி வெளியிட்டது.

"பல குடும்பங்களில் திடகாத்திரமான ஆண்களும், பெண்களும் இல்லை. அவர்கள் போரின்போது (போருக்கு முன்பே கூட) கொல்லப் பட்டுவிட்டனர் அல்லது வலுவில் கடத்தப்பட்டு சிறையில் அடைக்கபட்டனர். இந்தக் குடிபெயர்ந்தோர் வீடுகளுக்குத் திரும்புவது எவருக்குமே விரும்பக் கூடியதாக, மகிழ்ச்சி தருவதாக இல்லை. பல குடும்பங்களில் பெண்களும், சிறு குழந்தைகளும், முதியவர்களும் மட்டுமே இருக்கக் கண்டோம். சரியான உறைவிடம், மருத்துவமனை, போக்குவரத்து, பள்ளிகள், குடிநீர், மின்சாரம், வாழ வசதி போன்றஅடிப்படை வசதிகள் எதுவுமே கூட கிடைக்காமலும், இந்தக் குடிபெயர்ந்த மக்கள் வீடுகளுக்குத் திரும்பி என்ன பயன் என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது".[5]

2009 நவம்பரில் பெரும்பாலான குடிபெயர்ந்த மக்களை காவல் முகாம்களில் இருந்துவிடுவித்து, அவர்களுடைய வீடுகளுக்குத் திரும்ப அனுமதித்து விட்டதாக அரசு கூறியது. பல பாதுகாப்புச் சோதனைச் சாவடிகள் இருந்தபோதிலும், யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையே பயணம் செய்ய முன் அனுமதி பெற்றாக வேண்டும் என்றவிதி விலக்கிக் கொள்ளப்பட்டது. எனினும், வடக்கு மாகாணத்தில் வாழ்க்கை இயல்பாக இருக்கவில்லை.

## சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் சவால்கள்

2010 ஜனவரி 16 அன்று, எல்டிடி ஈ-யுடனான போர் முடிந்துவிட்டது என்று அறிவிக்கப்பட்டு எட்டுமாதங்கள் கழித்து, இலங்கையில் சக்திவாய்ந்த அதிபரைத் தேர்ந்தெடுக்க நாடு தழுவியதேர்தல் நடைபெற்றது. முடிவில் தற்போதைய அதிபர் மகிந்தா ராஜபச்சா தமது முதன்மைப் போட்டியாளரான, போரின் கடைசிக்கட்டத்தில் ராணுவத்தலைவராக இருந்த சரத் ஃபொன் சேகாவை அமோக வாக்கு வித்தியாசத்தில் வென்றார். அதிபருடனும், அவருக்கு நெருக்கமான வட்டாரத்தினருடனும் தகராறு செய்து வெளியேறியது வரை, பொன்சேகாவை ராணுவ வெற்றியின் கூட்டுச் சிற்பி என வர்ணித்தனர்.

தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட சிலநாட்கள் கழித்து, சர்ச்சைக்குரிய சூழலில் சரத் பொன்சேகா குறிப்பிடப்படாத குற்றங்களுக்காகக் காவலில் வைக்கப்பட்டார். அதன் பிறகு அவருக்கு எதிராக இரண்டு ராணுவ நீதிமன்றங்களில் வழக்கு விசாரணை நடத்தப்பட்டது. ராணுவத் தலைவர் பதவியில் இருந்தபோது அரசியலில் ஈடுபட்டார் என்றும், ஆயுதங்கள் கொள்முதலில் ஊழல் செய்தார் என்றும் அவர் மீது குற்றங்கள் சுமத்தப்பட்டன. இரண்டு குற்றச் சாட்டுக்களை பொன்சேகா மறுத்தார். ஆனால் முதல் ராணுவ நீதிமற்ன விசாரணை, 2010 ஆகஸ்டில், நீதிமன்றத்தின் விடுதலைக் காலத்தில், எதிர்த்தரப்பு வழக்குரைஞர்கள் கூட இல்லாமல் நடத்தப்பட்டு, ராணுவச் சீருடையில் இருந்தபோதே அரசியலில் ஈடுபட்டதாகக் குற்றம் நிரூபிக்கப்பட்டு, ராணுவப் பதவி, பதக்கங்கள், ஓய்வூதியம் அனைத்தும் பறிக்கப்பட்டன. 2009-இல் விடுதலைப் புலிகளுக்கு எதிராக வெற்றி பெற்றதை அடுத்து, நான்கு நட்சத்திர ராணுவ அந்தஸ்து பெற்றமுதலாவது அதிகாரியின் பணிநிலைமை இவ்வாறு கசப்பாக முடிந்தது.

தேர்தல் முடிவு தீர்க்கமானதாக இருந்த போதிலும், வாக்களிப்பு முறையில் ஆங்காங்கு வேறுபாடுகள் இருந்தன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், 1990-இல் இருந்து மிக மோசமான போர் நடைபெற்றஇடங்களில் பொன்சேகா பெரும்பாலான மாவட்டங்களில் வெற்றி பெற்றிருந்தார். கொழும்பிலும் அவருக்கு கணிசமான வாக்குகள் கிடைத்திருந்தன. இவ்வாறு இருவேறு துருவங்களாக வாக்காளர்கள் பிரிந்திருக்க, அதன்பின்னர் ஏற்பட்ட நிகழ்வுகளும் சேர்ந்து, ஆழமடையும் விரோதத்தைத்தான் புலப்படுத்தின. நல்லிணக்கமான உணர்வு தகர்ந்தது. "இலங்கைத் தீவில் ஆதிக்கம் செலுத்தும் சிங்களப் பெரும்பான்மையினரின் நீரோட்ட அரசியலில் புதியதோரு போட்டி உணர்வு ஏற்படக்கூடும்" என்று முக்கியமான ஊடக விமர்சகர் ஒருவர் கூறுகிறார்.[6]

ஊடகநோக்கில் பார்க்கும்போது, வடக்கு இலங்கையில் வாக்காளர்கள் வாக்களிக்க வந்த போக்கும் கவலை தருவதாக உள்ளது. வடக்குப் பகுதியில் பொன்சேகா தீர்க்கமாக வெற்றி பெற்றபோதிலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பதிவு பெற்றவாக்காளர்களில் 26 சதவிகிதத்தினர் மட்டுமே வாக்களித்துள்ளனர். வன்னி மாவட்டத்தில் வாக்களித்தவர்களின் எண்ணிக்கை பரவாய் இல்லை. ஆனால் 40 சதவிகிதமான அந்தவாக்கு எண்ணிக்கை 74.5 சதவிகிதம் என்றதேசிய சராசரியை விட மிகவும் குறைவானதாகும். குடிபெயர்ந்த மக்கள் முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்பட்டபோதிலும், தேர்தல் நாளன்று யாழ்ப்பாணம் மற்றும் வன்னி முகாம்களில் முறையே 15,602 மற்றும் 29,940 பதிவு பெற்றவாக்காளர்களே இருந்தனர். ஆனால் வாக்குப் பதிவு விகிதமும் குறைவாகவே இருந்தது. அவை முறையே 65.04 மற்றும் 51.42 சதவிகிதம்.

இந்த மாவட்டங்களில் குறைவான வாக்காளர் பங்கேற்பைப் பார்க்கும்போது, உள்நாட்டுப் போரினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நலன்களையும், அரசியல் விருப்பங்களையும் எந்த அளவுக்கு இலங்கை ஊடகங்கள் எடுத்துக் கூறியிருக்கும் என்றகேள்வி எழுகிறது. தேர்தல் பிரச்சாரத்தின்போது தமிழ் மக்களின் குரல் கேட்கப்பட வில்லையோ என்றும், அவர்களுடைய நியாயமான அக்கறைகள் கவனத்தை ஈர்க்காமல் போகலாம் என்றும் கவலையைத் தோற்றுவிக்கின்றன.

தேர்தல் காலத்தில் அரசு ஊடகங்கள் பரவலாகத் தவறாகப் பயன் படுத்தப்பட்டதையும், சுயேச்சையான ஊடகங்கள் புது வேகத்துடன் ஒடுக்கப்பட்டதையும் காண முடிந்தது. அரசு ஒலிபரப்பு நிறுவனங் களில் பல பத்திரிகையாளர்களும், மற்ற பணியாளர்களும் அதிபர் தேர்தல் முடிந்ததும் வேலை நீக்கம் செய்யப்பட்டனர் அல்லது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை நோட்டீஸ் தரப்பட்டது. தேர்தல் ஆணையர் வகுத்த நேர்மையான தேர்தல் நடத்தை நெறிகளை அரசு ஊடகங்கள் பின்பற்றவேண்டும் என அவர்கள் வற்புறுத்தியதே அவர்கள் இழைத்த குற்றம் என்று கூறப்படுகிறது. பொன்சேகாவிற்கு ஆதரவாக இருந்த பல வலைதளங்கள் தடுக்கப் பட்டன. இலங்கைக்குள் வலைதளங்களைப் பயன்படுத்துவோருக்கு அவை கிடைக்கவில்லை. லங்கா என்றவார இதழின் ஆசிரியர் கைது செய்யப்பட்டார். அவருடைய அலுவலகத்திற்கு


5 "180 days after the end of war, the return of the IDPs: an eye-witness account", கிடைப்பது: http://www.groundviews.org/2009/11/18/180-days-after-end-of-war-the-much-anticipated-return-of-idps-an-eyewitness-account/#more-2026

6 பார்க்க, பிரபல அரசியல் அறிஞர் தயன் ஜயதிலகெயின் கருத்துரை, "Sarath Fonseka Affair: Political Cannibalism Must Cease in Sri Lanka!", February 15, 2010, கிடைப்பது: http://www.groundviews.org/2010/02/15/sarath-fonseka-affair-political-cannibalism-must-cease-in-sri-lanka/.

## திஸ்ஸநாயகத்தின் தண்டனை

ஆகஸ்ட் 31, 2009 அன்று சண்டேடைம்ஸ் பத்திரிகையில் தொடர்ந்து கட்டுரை எழுதிவரும் அனைவராலும் விரும்பிப் படிக்கப்படும் அச்சு மற்றும் ஆன்லைன் பத்திரிகையாளரான ஜே.எஸ். திஸ்ஸநாயகத்தை பயங்கரவாதக் குற்றங்களுக்காக கொழும்பு உயர்நீதிமன்றம் 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து தண்டித்தது. திஸ்ஸநாயகம், அவருடைய வெளியீட்டாளர் வி. ஜஸ்ஸிகரன், ஜஸ்ஸிகரனின் தோழி வளர்மதி ஆகியோருக்கு எதிராக 2008 ஆகஸ்ட் 25 அன்று பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து ஐந்து மாதங்களுக்கும் மேல் காவலில் வைக்கப்பட்டிருந்தார். மூவரும் மார்ச் தொடக்கத்திலேயே பிடித்துச் செல்லப்பட்டதால், இலங்கையில் அமலில் இருந்த 'நெருக்கடி நிலை விதிகளின்' கீழ் உள்ள காலத்திற்கும் மேலாகச் சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். ஆனால் திஸ்ஸநாயகம் வழக்கு மற்றவர்களின் வழக்குகளில் இருந்து பிரிக்கப்பட்டு தனியாக விசாரிக்கப்பட்டது. இதற்கு என்ன காரணம் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

2006-இல் அவர் இரண்டு கட்டுரைகளை எழுதியது தவிர, அவர் தாமாக முன்வந்து கையொப்பமிட்டதாகக் கூறப்படும் ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் அரசுத்தரப்பு வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த ஒப்புதல் வாக்கு மூலம் கட்டாயப்படுத்தி பெறப்பட்டிருக்கலாம் என்பதை நீதிபதி நிராகரித்தார். அதைப் பதிவு செய்த இரண்டு போலீஸ்காரர்களின் சாட்சியங்களை மட்டுமே நம்பினார். அந்தக் கட்டுரைகளினால் சமூகங்களுக்கு இடையே விரோதமோ, வெறுப்போ உருவாகாது என்று திஸ்ஸநாயகம் சார்பில் வைக்கப்பட்ட வாதத்தை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டு, கட்டுரையில் உள்ள வார்த்தைகளினால் "சாதாரண மனிதனிடம்" பாதிப்பு ஏற்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று காரணம் கூறியது. அந்தக் கட்டுரைகள் அரசியல் சாசனத்தில் உத்தரவாதம் தரப்பட்டுள்ள பேச்சு சுதந்திர வரம்புக்குள்தான் வருகின்றன என்று சட்ட நிபுணர்களும், பல பொதுப்பிர முகர்களும் அளித்த சாட்சியங்கள் ஒதுக்கித்தள்ளப்பட்டன.




**பயங்கரவாதக் குற்றச் சாட்டில் திசை நாயகம், ஜஸிகரன், வளர்மதி சிறையில் அடைக்கப்பட்ட 300 நாட்களைக் குறிக்கும் வகையில் சுதந்திர ஊடக இயக்கம் தயாரித்த சுவரொட்டி.**

மேல் முறையீடு நிலுவையில் இருக்க 2010 ஜனவரியில் திஸ்ஸநாயகத்திற்கு ஜாமீன் விடுதலை வழங்கப்பட்டது. அவருக்கு அதிபர் மன்னிப்பு அளிப்பார் என்று உலக பத்திரிகைச் சுதந்திர தினமான மே 3 அன்று இலங்கையின் வெளியுறவு அமைச்சர் வெளிப்படையாக வாக்குறுதி அளித்தைத் தொடர்ந்து, ஜுன் மாதத்தில் அவர் இலங்கைக்கு வெளியே விமானத்தில் கொண்டு செல்லப்பட்டார். விடுதலைக்கான நிபந்தனை விதிகள் வெளியிடப்படவில்லை.

2009 அக்டோபர் 13 அன்று பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் ஜஸ்ஸிகரன், வளர்மதி ஆகியோரின் வழக்கு விசாரணை தனியாக நடத்தப்பட்டது. அவர்களை விடுவிக்கலாம், ஆனால் தங்களுடைய அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருப்பதாக உச்சநீதிமன்றத்தில் போடப்பட்டுள்ள மனுவைத் திரும்பப்பெறவேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது.

சீல்வைக்கப்பட்டது. கடைசியில், நீதிமன்றஉத்தரவின்கீழ் இந்த இரு நடவடிக்கைகளும் ரத்து செய்யப்பட்டன.

பொன்சேகாவை மிகவும் தீவிரமாக ஆதரித்த ஒரு செய்தி வலைதளத்தின் ஆசிரியரான பிரகீத் எக்நெலி கோடா என்றபத்திரிகையாளர் ஜனவரி 24 அன்று பணியில் இருந்தது வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது மாயமாய் மறைந்து விட்டார். இதுநாள் வரை அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஐநா மனித உரிமைகள் கவன்சிலுக்கு 2010 மார்ச் 6 அன்று ஆண்டறிக்கை அளித்த மனித உரிமைகள் ஆணையர் நவநீதம்பிள்ளை இலங்கை நிலவரம் பற்றி இவ்வாறு கூறுகிறார். "இலங்கையில் பத்திரிகையாளர்களும், மனித உரிமைகளின் ஆதரவாளர்களும், அரசைக் குறைகூறுகிறவர்களும் நடத்தப்படும் முறையினால், சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான வாய்ப்பு கெட்டுவிட்டது. போரின் போது எல்லாத் தரப்பினரும் இழைத்த படுமோசமான மீறல்களை முழுமையாகக் கணக்கிட வேண்டும், இதற்கு சர்வதேசச் சமூகம் உதவலாம்" என்று குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக, 2006-இல் மனித உரிமைகள் கவுன்சிலுக்குப் போட்டியிட்ட இலங்கை அரசு, பத்திரிகைச் சுதந்திர மீறல்கள் பற்றிய புலன் விசாரணை நடத்திட சிறப்புப் பிரதி நிதியை அழைப்பதாக வாக்குறுதி அளித்தது. 2009 ஆகஸ்டில், சிறப்புப் பிரதிநிதி இலங்கை வர அனுமதி கோரினார். இதுவரை இந்தக் கோரிக்கைக்கு இலங்கை அரசு பதில் தரவில்லை.

### ஊடக சுதந்திர இயக்கத்தைச் சூழ்ந்த பகைமைகள்

இருண்ட காலமான 1980-களின் பிற்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், அமைதிக்காப்பாளர்களாக வந்த இந்தியப் படைவீரர்களுக்கும் இடையே நேருக்கு நேராகடும் சண்டை நடந்தது. தெற்கு இலங்கையில் சிங்களத் தேசியத்திற்காக இடதுசாரி அரசியல் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனா நடத்திய கிளர்ச்சி மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டது. அதன் பிறகு போரின் இறுதிக்கட்டம் இலங்கைப் பத்திரிகையாளர்களுக்கு மிகவும் துயரகரமான காலகட்டமாக இருந்தது. 2005 ஏப்ரலில், ஒரு சமயத்தில் தமிழர் அரசியல்குழு ஒன்றின் தலைவராக இருந்தவரும், புகழ்பெற்றவிமர்சகரும், ஆய்வாளருமான டி. சிவராம் "தாரகி" கொழும்பில் நெரிசலான இடத்தில் இருந்து கடத்தப்பட்டார். மறுநாள் காலையில் தோட்டாக் காயங்களுடன் அவருடைய சடலம் கிடைத்தது. குறிப்பாக தமிழர்களின் அரசியல் இலட்சியத்திற்குச் சார்பாக உள்ள பத்திரிகையாளர்களும், ஊடக நிறுவனங்களும் குறிவைத்துத் தாக்கப்படுவது திரும்பத்திரும்ப நிகழ்ந்தது. ஊடகச் சமூகத்தினருக்கும், ஆட்சியாளர்களுக்கும் இடையே நீண்ட நெடுங்காலமாக பதற்றம் நிலவியபோது, 2009 ஜனவரி ஒரு திருப்பு முனையாக இருந்தது. போர்க்களத்தில் வெற்றி பெற்றமதப்பில் அரசு இருந்தது. எதிர்ப்புக்கு இடம் தரப்படவில்லை. சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியரும், இலங்கையின் பிரபலமான இயக்கம் நடத்தும் பத்திரிக்கையாளருமான லஸந்தா விக்கிரமதுங்கா

கொல்லப்பட்டார். அது ஊடகத்திற்கு எதிரான மிகவும் கோரமான குற்றமாக அமைந்தது. 2009 ஜனவரியில் கொழும்பில் சிரஸா டிவி ஸ்டுடியோவில் தீ குண்டுகள் வீசப்பட்டன. பொதுவாக அரசின் உத்தரவுகளுக்கு அடிபணியும் சிங்கள நாளேடு ஒன்றின் ஆசிரியர் உப்பாலி தென்னக்கூன் மீது மிருகத்தனமாக கத்திக்குத்து தாக்குதல் நடைபெற்றது.

*சுடர் ஒளி* ஆசிரியர் என். வித்யாதரன் 2009 பிப்ரவரி 27 அன்று ஒரு குடும்ப இறுதிச் சடங்கு நிகழ்ச்சியின்போது ஆள்கடத்தல் பாணியில் கைது செய்யப்பட்டார். ஐந்து மணி நேரம் மட்டுமே காவலில் வைக்கப்பட்டிருந்தார் என்று கூறப்பட்டது. சில நாட்கள் கழித்து, ஆஸ்திரேலிய செய்தியாளர்களைச் சந்தித்த பாதுகாப்புச் செயலர், வித்யாதரனைப் பற்றிய கேள்விகளைக் கேட்பதே பயங்கரவாதத்திற்கு துணை போகும் செயல் என்று எச்சரித்தார். "நீங்கள் வித்யாதரனைப் பற்றி கேள்வி கேட்டால் உங்களுடைய கரங்களில் ரத்தம் இருக்கும். ஏனென்றால், அவர் பயங்கரவாதி என அறியப்பட்டவர்" என்று கூறினார். இந்தப் பேட்டியின் ஒலிப்பதிவு மார்ச் 11 அன்று சிபிசி நியூஸ் அலைவரிசையில் ஒளிபரப்பட்டது. கைது செய்யப்பட்டவர் பிப்ரவரி 20 அன்று கொழும்பில் நடந்த வான் தாக்குதலில் முக்கிய பங்காற்றினார் என்பதற்கு சான்று இருப்பதாக அவர் கூறினார். இரண்டு மாதங்களுக்குப் பின்னர் வித்யாதரன் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட்டார். அவருக்கு எதிரான குற்றச் சாட்டுக்களை காவல்துறை, திரும்பப் பெற்றது எந்த ஒரு தவறுடனும் அவரை இணைப்பதற்கு சான்று இல்லை என்று நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டது.

பத்திரிகையாளர்கள் எவ்வாறு பாதிப்புக்கு உள்ளாகின்றனர் என்பதற்கு ஜே.எஸ். திஸ்ஸ நாயகம் வழக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். 2008 மார்ச்சில் கைது செய்யப்பட்டு, 2009 ஆகஸ்டில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 20 ஆண்டுகளுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். அவர் கைது செய்யப்படுவதற்கு முன்பு இரண்டு கட்டுரைகளை எழுதி, தற்போது வெளியீடு நின்றுபோன நார்த் ஈஸ்டர்ன் மன்த்லி என்றபத்திரிக்கையில் வெளியிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது. ராணுவம் இழைத்த மனித உரிமை மீறல்களைப் பட்டியலிட்டதும், குடிபெயர்ந்தோர் எதிர்கொண்ட மனிதாபிமான நெருக்கடிகளைப் பட்டியலிட்டதும் அவர் செய்த குற்றமாகும். தீவிரமான சர்வதேச இயக்கத்திற்குப் பிறகு, 2010 ஜனவரியில் திஸ்ஸநாயகம் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். மே 3 அன்று அதிபரின் மன்னிப்பு அவருக்குக் கிடைத்தது. அதன் பிறகு நாட்டை விட்டு அவர் வெளியேறிவிட்டார். அரசுடன் மோதினால் என்னவாகும் என்பதற்கு மற்றபத்திரிகையாளர்களுக்கு திஸ்ஸநாயகம் ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார்.

நாட்டின் சிறுபான்மைத் தமிழர்களுக்கும் சிங்களர்களுக்கும் இடையிலான இனப்பதற்றங்களுடன், போரும் சேர்ந்து நூறாயிரம் உயிர்களுக்கும் மேல் பலி கொண்டுவிட்டதாக ஐ.நா. மதிப்பிட்டுள்ளது. இதன் பாதிப்பு ஊடகங்களின் மீதும் விழுந்தது. இன அடிப்படையிலும், அரசியல் கருத்துக்களின் அடிப்படையிலும் ஊடகங்கள் பிரிந்து நிற்கின்றன. ஆனால் ராஜபக்சாவுக்கும், பொன் சேகாவுக்கும் இடையே நடந்த அரசியல் போரின் தீவிரத்தால், ஊடகங்களுக்கு இடையிலான பிரிவினை உச்சகட்டத்தை அடைந்து, அதன் விளைவாக சில பத்திரிகையாளர்கள் புதிய அபாயங்களுக்கு உள்ளானார்கள்.

தாக்குதல்களின் தீவிரத்தால் ஊடகச் சுதந்திரம் என்றஇயக்கம் 2009-இல் பெரும் சரிவைக் கண்டது. கொழும்பில் சுதந்திர ஊடக இயக்கம் (FMM) தலைமையில் ஊடக உரிமை குழுக்கள் நடத்தி வந்த பாதுகாப்பு இல்லங்களும், ஊடக மையமும் மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. கருத்து வெளியீட்டு உரிமைகள் மீறப்பட்டது தொடர்பான அறிக்கைகள் எப்போதாவதுதான் எவளியிடப்பட்டன. அரசியல்வாதிகளின் ஊடக எதிர்ப்புப் பேச்சுக்களைத் தட்டிக்கேட்க வெரும் இல்லை. அரசு ஊடகங்களோ தொடர்ந்து ஊடக சுதந்திர அமைப்புக்கள் மற்றும் ஊடக ஆர்வலர்களுக்கு எதிராகக் குற்றச் சாட்டுக்களைச் சுமத்திவந்தன. உள்ளூர் ஊடக சுதந்திர இயக்கம் பலவீன மடைந்துவிட்ட நிலையில், 2009 முழுவதும் இலங்கையில் ஊடக சுதந்திரத்தை ஆதரிக்கும் பெரும் சக்தியாக சர்வதேச ஊடக சுதந்திர ஆதரவாளர்கள் திகழ்ந்தனர். 2009 மே மாதம். சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் தனது தெற்காசிய ஆண்டறிக்கையை வெளியிட்டது. "எரியும் தீ, தெற்காசிய பத்திரிகைச் சுதந்திர அறிக்கை 2008-2009" என்றதலைப்பில் அது இலங்கை நிலவரம் பற்றி விரிவாக விவரித்தது. அதே ஆண்டு நவம்பரில், சர்வதேச பத்திரிகைச் சுதந்திர பயணக்குழு தனது நான்காவது இலங்கைப் பயணத்தை சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனத்தின் தலைமையில் மேற்கொண்டது. 2010 ஜனவரியில் ஊடகங்களுக்கும், அரசுக்கும் தனது பரிந்துரைகளை அந்தக் குழு வெளியிட்டது. 2009 மார்ச், ஜூன் மற்றும் செப்டம்பரில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் கூட்டங்களில் பல அரசுகளும், அரசுசாரா அமைப்புக்களும் இலங்கையில் சீரழிந்துவரும் ஊடக சுதந்திர நிலை பற்றி கவலை வெளியிட்டன. ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிகரிக்கப்பட்ட சலுகை வாணிப வசதிகள் இலங்கைக்குக் கிடைக்க வேண்டுமானால், மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பாக்குவதை மீண்டும் தொடங்க வேண்டும் என்று நிபந்தனை விதித்த ஐரோப்பிய ஒன்றியம் ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியது. 2009 முடிவில், அதிபர் தேர்தல் பிரச்சாரம் ஏற்படுத்திய அரசியல் இடவசதியின் காரணமாக, ஊடக சுதந்திரத்துடன் தொடர்புடைய சில உள்நாட்டு அமைப்புக்கள், ஓரளவு வலிமை பெற்று, அதிபர் தேர்தலில் போட்டியிட்ட எல்லா வேட்பாளர்களிடமும் சீர்திருத்தங்களுக்கான அலுவல் பட்டியலைச் சமர்ப்பித்தன. அரசுக் கட்டுப்பாட்டின் கீழ் பிரஸ் கவுன்சில் ஏற்படுத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த இலங்கையின் ஊடகச் சமூகம், மீண்டும் செயல் நோக்கு ஒற்றுமை பெற்றது. இந்தப் புதிய உணர்வு "ஊடக சுதந்திரம் மற்றும் ஊடகப் பொறுப்புக்கான கொழும்புப் பிரகடனத்தின்" 10-வது ஆண்டு நிறைவின்போது பிரதிபலித்தது.

## பாதுகாப்புக்காகத் தப்பி ஓடிய பத்திரிகையாளர்கள்

எனினும், ஊடகங்களின் கட்டுக்கோப்பு சரிவதில் இருந்து மீட்சி கிடைக்கவில்லை. பல பிரபல பத்திரிகையாளர்களும், ஊடக உரிமை ஆர்வலர்களும் உயிருக்குப் பயந்து நாட்டைவிட்டு தப்பியோடி விட்டனர். நீண்ட கால விளைவுகளைப் பற்றியோ, நாட்டிற்கு வெளியே தங்களாலும், தங்களுடைய குடும்பத்தாலும் தாக்குப்பிடிக்க முடியுமா என்று நினைத்துப் பார்க்கக் கூட நேரமின்றி, தப்புவதற்கு எளிதான வழியை அவர்கள் கண்டனர். 2009-இல் குறைந்தது 34 ஊடக ஊழியர்கள் நாட்டை விட்டுவெளியேறியதாக ஊடக சுதந்திர இலங்கை (MFSL) என்றபுதிய அமைப்பு மதிப்பிட்டுள்ளது. இவர்களில் 24 பேர் மேலை நாடுகளில் அரசியல் அடைக்கலம் கோரி விண்ணப்பித்தனர். மேலும் 10 பேர் 2010-இன் முதற்பாதியில் நாட்டைவிட்டு ஓடினார்கள். மேலும் பலர் அடக்குமுறைதொடருமானால் தப்பித்துச் செல்லப் போவதாகக் கூறியுள்ளனர்.

2009-இல் தப்பியோடிய பலரில் பொதள ஜயந்தா குறிப்பிடத்தக்கவர். 2009 ஜூன் அன்று இவர் சில மணி நேரம் சிறைப்பிடிக்கப்பட்டு காட்டுத்தனமாகத் தாக்கப்பட்டார். ஒரு கால் ஒடிந்து முடமானார். முன்னாள் FMM அமைப்பாளரான சுனந்தா தேசப்பிரியா, இப்போது நாடுகடந்து ஜெனிவாவில் வசிக்கிறார். அவரும் 2009-இல் அரசினர் வலைதளங்களில் துரோகி என வர்ணிக்கப்பட்டு, அழைப்பு வானொலி நிகழ்ச்சிகளில் மோசமாகக் கண்டிக்கப்பட்டதால் நாட்டை விட்டு ஓடினார்.

லங்கா-இ-நியூஸ் ஆசிரியர் செந்தருவன் செனதீரா, 2010-இல் பிரகீத் எக்னலிகோடா திடீரென காணாமற்போனதை அடுத்து, நாட்டை விட்டு வெளியேறினார். இவர் இப்போது லண்டனில் வசிக்கிறார். ஐந்தாண்டுகளில் வலைதளம் நடத்தினார். இவரை அடிக்கடி போலீஸ் விசாரித்தது. ஆனால் நீண்டகாலம் சிறையில் அடைக்கவில்லை. எந்தக் குற்றமும் சுமத்தப்படவில்லை. "சட்ட நடவடிக்கைகள் இருந்துபோது நான் கவலைப்பட வில்லை. நான் தவறு ஏதும் இழைக்கவில்லை" என்று நாட்டை விட்டு வெளியேறும் முன்பு செனதீரா கூறினார். "ஆனால் பிரகீத் எக்னலி கோடாவை



லஸந்தா விக்கிரமதுங்காவின் சவப்பெட்டியை ஏந்திச் செல்லும் சுதந்திர ஊடக இயக்கத் தொண்டர்கள் *(புகைப்படம்: FMM)*

அவர்கள் பிடித்தபோது, உலகம் மாறிவிட்டது என்பதைத் தெரிந்து கொண்டேன். இலங்கையில் அந்தக் காலம் முடிந்துவிட்டது. சட்டங்களினால் எந்தப் பயனும் இல்லை என்பதைப் புரிந்து கொண்டேன். எனக்கு மூன்று வழிகள் தெரிந்தன. வலைதளத்தைக் கைவிடுவது, அரசை எதிர்த்துப் போராடுவது, அல்லது தலைமறைவாகி விடுவது. நான் தோற்றுவிட்டதாக நினைக்க வில்லை. ஆனால் சலிப்படைந்து விட்டேன்" என்றார்.

சில பத்திரிகையாளர்கள் நிரந்தரமாக நாட்டைவிட்டு நீங்கினர். வேறுசிலரோ நிலைமையின் தீவிரம் குறையட்டும் தாயகம் திரும்பலாம் என்று காத்திருக்கின்றனர். 2010 மார்ச் மாதம், நாட்டைச் சீரமைக்க பத்திரிக்கையாளர்கள் தேவை என்பதால், நாட்டை விட்டுச் சென்றவர்கள் திரும்பிவர வேண்டும் என்று அட்டர்னி ஜெனரல் மோகன் பெய்ரிஸ் வற்புறுத்தினார். பத்திரிகையாளர்கள் நாட்டைவிட்டு வெளியே இருந்து கொண்டு, அரசைத் 'தாக்குவதால்' பயனில்லை என்று கூறினார். "அவர்கள் திரும்ப வந்து, எம்முடன் சேர்ந்து உழைத்து, ஒன்றுபட்டு பாடுபடத் தேவையான அமைப்பை உருவாக்கி, பரஸ்பரம் மரியாதை செய்திட உதவ வேண்டும்" என்றார். நாடுகடந்து வாழும் பத்திரிகையாளர்கள் இலங்கைக்குத் திரும்பிவந்தால் பாதுகாப்புத் தரப்படும் என்று பெய்ரிஸ் உறுதி கூறினார்.

எனினும், இலங்கையில் ஜனநாயகத்திற்காகப் பத்திரிகையாளர்கள் (JDS) என்றஅமைப்பு பெய்ரிஸின் வாக்குறுதியை வரவேற்று, ஊடக சுதந்திரத்தில் அவருக்கு தீவிரமான அக்கறைஇருப்பதை நிரூபிக்க உடனடி நடவடிக்கைகளை எடுக்கும்படி வற்புறுத்தியது. ஒரு முதல் நடவடிக்கையாக, எக்னலிகோடா எங்கிருக்கிறார் என்றதகவலை வெளியிட்டு, மகிந்தா ராஜபக்சா ஆட்சியில் ஊடக ஊழியர்களுக்கு எதிரான பல தீர்க்கப்படாத குற்றங்கள் பற்றிய புலன் விசாரணையை விரைந்து நடத்தி, காரணமானவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று கோரியது. "இலங்கையில் பணியாற்றும் பத்திரிகையாளர்களின் அச்சங்களை அகற்றிடவும், தண்டனை விலக்க பண்பை ஒழிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால், அட்டர்னி ஜெனரலின் வார்த்தைகள் மற்றொரு வெற்று வாக்குறுதியாகவே முடியும், நாட்டை நேசிக்கும் நாடுகடந்த பத்திரிகையாளர்கள் திரும்புவது தொலை தூரக் கனவாகவே இருக்கும்" என்று ஓர் அறிக்கையில் JDS கூறியது.

## ஊடகச் சமூகத்தினரின் ஒற்றுமைப் போராட்டமும், உத்திகளும்

ஊடக உரிமைகளையும், பத்திரிகைச் சுதந்திரக் கோட்பாட்டையும் பாதுகாக்கும் ஊடகச் சமூகத்தின் முயற்சிகள் 1992 லேயே தொடங்கிவிட்டன. அப்போது பத்திரிகையாளர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் அடங்கிய ஒரு குழு FMM என்றஓர் அமைப்பை ஏற்படுத்தியது. கொழும்பில் நடைபெற்றஅதன் தொடக்கக் கூட்டம் பரவலான விளம்பரம் பெற்றது. இனச்சண்டை-குழுச் சண்டை என்றவிஷச் சுழலில் இருந்து வெளியேறலாம் என்று பலரிடையே நம்பிக்கையை உண்டாக்கியது. இதனால் ஊக்கம் பெற்ற FMM "மக்கள் உண்மையை அறிய உரிமை பெற்றவர்கள்" என்பதை வலியுறுத்த நாடெங்கும் பொதுக்கூட்டங்களுக்கு FMM ஏற்பாடு செய்தது. ஊடகங்கள் சிறப்புச் சலுகைகள் எதையும் கோரவில்லை, அறிவதற்கு மக்களுக்கு உள்ள உரிமை. மட்டுமே பேசப்படுகிறது என்பது இதன் மையக் கோட்பாடாக இருந்தது.

1990-ஆம் ஆண்டுகள் சிவில் உரிமைகளுக்கும் ஊடகச் சுதந்திரத்திற்கும் நடந்த இயக்கங்களில் இழந்த வாய்ப்புக்களாகவும், ஏமாற்றப்பட்ட எதிர் பார்ப்புக்களாகவும் இருந்தன. 1994-இல் ஜனநாயக அரசியலுக்குப் புத்துயிரூட்டி, தகராறுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதாக வாக்குறுதியளித்து புதிய அரசு தேர்ந்தெடுக்கப்பட்டது. புதிய அரசு கவனம் செலுத்திய முக்கிய பிரச்சினைகளில் கருத்துவெளியீட்டுச் சுதந்திரமும் ஒன்றாக இருந்தது. ஊடகச் சட்ட சுதந்திரம் பற்றியும், இதர பிரச்சினைகள் பற்றியும் ஆராய அரசு நியமித்த நான்கு கமிட்டிகள் விரிவாகப் பரிந்துரைகளை அளித்தன. கட்டுப்பாடற்றபேச்சுரிமையின் விளைவுகளை அவை ஆராய்ந்தன. அரசு போர் முயற்சிகளில் மும்முரமாக இருந்தால் பரிந்துரைகள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை. ஆயினும் கமிட்டியின் பரிந்துரைகள் பொருத்தமானவையாக இருந்தன.

FMM தனது பிரச்சார இயக்கங்களில் ஊடகச் சட்டம், தகவல் பெறும் உரிமைச் சட்டம், அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள ஊடகங்களை பொதுச் சேவை ஊடகமாக மாற்றுவது ஆகிய மூன்று முக்கிய சீர்திருத்தங்களில் கவனம் செலுத்தியது. 2003-இல் அன்றைய பிரதமர் ரணில் விக்கிரம சிங்க மானநஷ்டத்தை கிரிமினல் குற்றமாக்காமல் இருக்க சட்டம் கொண்டுவந்து, அதை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றச் செய்தார்.

உள்ளூர் பத்திரிகையாளர்களுக்கும், சர்வதேசப் பத்திரிகையாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட ஒத்துழைப்பினால், இலங்கை பிரஸ் இன்ஸ்டிடியூட் (SLPI) ஏற்படுத்தப்பட்டது. அது பத்திரிகை புகார் ஆணையத்தையும், இதழியல் கல்லூரியையும் நடத்துகிறது. SLPI 1998-இல் ஏற்படுத்தப்பட்டது. இதற்காக FMM, எடிட்டர்ஸ் இல்டு, இலங்கை செய்திஏடு சங்கம் ஆகியன சேர்ந்து ஊடகச் சுதந்திற்கான இலங்கைப் பிரகடனத்தில் கையொப்பமிட்டன. 3 நாள் மாநாட்டிற்குப் பின்னர் பிரகடனம் கையொப்பமானது. அரசுக்காக ஊடகச் சட்ட சீர்திருத்த அலுவல்பட்டியலை இந்தப் பிரகடனம் நிர்ணயித்தது. மேலும், அச்சு ஊடகங்களுக்காக நடத்தை நெறிகளையும், சுய ஒழுங்கு முறைஒன்றையும் ஏற்படுத்தியது. இந்தக் கிளையில் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் 2007-இல் சேர்ந்து கொண்டது. SLPI மற்றும் PCCSI இரண்டும் 2003-இல் பதிவு பெற்றன. நார்டிக்நாடுகளின் கொடையாளிகளிடம் இருந்து கணிசமான நிதி ஆதரவும் பெற்றன.

2002-இல், சர்வதேசப் பத்திரிகையாளர் சம்மேளனம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களுடன் கூட்டுறவுக்கு ஒரு உருப்படியான வடிவம் கிடைத்தது. 2000 தொடக்கத்தில், சர்வதேசப் பத்திரிகையாளர் சம்மேளனமும் FMM அமைப்பும் சேர்ந்து இலங்கையில் பத்திரிகையாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி இரண்டு நாள் மாநாட்டை நடத்தின. சமூக அடிப்படையில் பிரிந்திருந்த பத்திரிகையாளர்கள் ஒன்று சேர்ந்து, இரண்டு உடனடிப் பிரச்சினைகள் பற்றி விவாதித்தனர். அவை ஒன்று,

பத்திரிகையாளர்களின் உரிமைகளை உறுதிசெய்வதற்காக ஒற்றுமை. இன்னொன்று, மக்களின் தகவல் அறிவதற்கான உரிமையில் கவனம் செலுத்தும் நல்ல இதழியலை மேம்படுத்துவது. சர்வதேசப் பத்திரிகையாளர் சம்மேளனமும், இலங்கையில் உள்ள கூட்டாளி அமைப்புக்களும் விரிவான நெடுங்கால உத்திகளை வகுக்க இந்த விவாதம் உதவியது.

2003 ஆகஸ்டில், பல மொழிகள் மற்றும் இனக்குழுக்களைச் சேர்ந்த ஊடக அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து பாரபட்சமற்ற, பொறுப்பேற்கும் ஊடகங்களுக்காக இரண்டு நாள் மாநாட்டை நடத்தின.

சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுவதாக இருந்த முக்கியமான காலகட்டத்தில் இந்த மாநாடு நடத்தப்பட்டது. இதில் பங்கேற்றஅமைப்புக்கள் அனைத்தும் சர்வதேசப் பத்திரிகையாளர் சம்மேளனத்தின் நடத்தை நெறிகளை அடிப்படை விதிகளாகக் கருதி, அவற்றைஉறுப்பினர்கள் மற்றும் சார்பு அமைப்புக்களிடையே மேம்படுத்திட உடன்பட்டன.

தொடக்கத்தில், போருடன் தொடர்புடைய நுண்ணுணர்வு மிக்க செய்தி சேகரிப்பை சமாளிப்பது தொடர்பான திட்டங்கள் பத்திரிகையாளர் அமைப்புக்களை ஒன்று சேர்த்தன. இந்தத் திட்டத்தை 2004-இல் சர்வதேசப் பத்திரிகையாளர் சம்மேளனம் செயல்படுத்தியது. அதைத் தொடர்ந்து, போரில் ஊடகங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. பொது நலன் பத்திரிகை இயல் இதில் சேர்க்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது.

பின்னர் இலங்கையின் பத்திரிகையாளர் அமைப்புகள் அந்தந்தப் பகுதிகளில் உள்ள சிவில் உரிமைக் குழுக்களுடன் கலந்து பேசின. 2004-இல் கொழும்பில் மாற்றுக் கொள்கை மையம் என்றஒரு ஆய்வு அமைப்பு எல்லாக் கருத்துக்களையும் ஒன்று திரட்டி, பொதுச் சேவை ஊடகச் சட்டவரைவை வரைந்தது. அந்த வரைவு விக்கிரமசிங்க அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் 2004-இல் நடத்தப்பட்ட இடைக்காலத்தேர்தலில் அரசு தோற்றுப் போனதால் முயற்சியில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

2005 அக்டோபரில், FMM, SLWJA, ஊடகஊழியர் தொழிற்சங்க சம்மேளனம், ஆகியன இலங்கை தமிழ் ஊடகக் கூட்டமைப்பு (SLWJA) மற்றும் இலங்கை முஸ்லிம் ஊடக மன்றம் (SLWJA) என்றஇரண்டு அமைப்புக்களுடன் சேர்ந்து, வேறு 22 மாகாண பத்திரிகையாளர் சங்கங்களின் துணையுடன் தொலங்கமுவா என்றமத்திய நகரில் கூடி விவாதித்தன. ஜனநாயக மற்றும் பன்முக ஊடகப்பண்வுக்காகவும், இலங்கையில் ஊடக மற்றும் பத்திரிகைகளின் தொழில் உரிமைகளுக்காகவும் ஊடக சாசனத்தை நிறைவேற்றின. தேசிய அளவில் இலங்கையின் ஐந்து ஊடக நிறுவனங்கள் இந்த சாசனத்தின் அடிப்படையில் தங்களுடைய ஒற்றுமையை வலுப்படுத்தி, கூட்டு நடவடிக்கைத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த இணங்கின.

இந்த 5 ஊடகங்களும் 2004-2006 ஆம் ஆண்டில் நடத்திய பொதுச் சேவை பத்திரிகையியல் திட்டம் நல்லபத்திரிகைப் பண்பை மேம்படுத்துவதிலும், நாடெங்கும் பத்திரிகையாளர்களின் தொடரமைப்புக்களை உருவாக்குவதிலும் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. முதல் தடவையாக, பொதுச் சேவை பத்திரிகையியல் மாண்புகளைக் கொண்டாடும் வகையிலும், குறிப்பிடத்தக்க வகையில் செயலாற்றியவர்களை அங்கீகரிக்கும் வகையிலும் 2006-இல் விருது வழங்கும் விழா நடத்தப்பட்டது. இது அடுத்த இரண்டாண்டுகளுக்குத் தொடர்ந்தது. சமூக வேறுபாடுகளுக்கு இடையே சகிப்புத்தன்மையுடன் செய்திகளை வெளியிடுவதன் சிறப்பை இது அங்கீகரித்து. 2008-இல், பொதுச்சேவை பத்திரிகையியல் விருதுடன் கூடவே, மனித உரிமைகள் விருதும் வழங்கப்பட்டது. இலங்கையின் மொழி மற்றும் வட்டார வேறுபாடுகளை அங்கீகரிக்கும் வகையில் எண்ணற்றவிருதுகள் நிறுவப்பட்டன. இதனால் இலங்கை முழுவதும் உள்ள பத்திரிகையாளர்களுக்கு பங்கேற்பு மற்றும் சாதனை உணர்வு ஏற்பட்டது.

எதிர்வரும் ஆண்டுகளில், இலங்கையின் கருத்துவெளியீட்டுச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் 5 ஊடக அமைப்புக்களின் ஒற்றுமை அடிப்படை வலுவாக இருக்கும்.

## போர் முடிந்தும் நிம்மதி இல்லை

போர் நடைபெற்றமிக மோசமான காலகட்டத்தில், 5 ஊடக அமைப்புக்கள் துடிப்புடன் செயல்பட்டு ஊடக சமூகத்தினரிடையே விமர்சன நோக்கை உருவாக்கியது. இதற்காக பத்திரிகை இயலின் பல்வேறு அம்சங்கள் பற்றிய பயிலரங்குகளும், பயிற்சித் திட்டங்களும் நடத்தப்பட்டன. ஊடகச் சட்ட சீர்திருத்தம், நன்னெறிகளுடன் கூடிய பத்திரிகை இயல், பத்திரிகையாளர்களின் உரிமைகள் ஆகியன இந்த நடைமுறையின் முப்பெரும் தூண்களாகும். ஆனால் அடிக்கடி ஆட்சியாளர்களுடன் மோத வேண்டிய இந்தத் திட்டத்தில் மக்கள் சமூகத்தையும் சேர்த்துக் கொள்ளும் முயற்சிக்கு, 2005-இல் ராணுவ நடவடிக்கை மீண்டும் தீவிரமாகத் தொடங்கியபோது பின்னடைவு ஏற்பட்டது.

இந்த அறிக்கையைத் தயார் செய்வதற்காக முக்கிய பங்கேற்பாளர்களை பேட்டி கண்டு, 5 ஊடக அமைப்புக்களின் துடிப்பையும், போராட்டத்தையும் மதிப்பிட்டபோது, பல்வேறு கண்ணோட்டங்கள் உருவெடுத்தன :

2005-இல் கடைசிக்கட்ட போர் தொடங்கியபோது, 5 ஊடக அமைப்புக்களின் இந்த ஒற்றுமையும், போராட்டமும் பேருதவியாக இருந்தன என்று கூறுகிறார் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தமிழ்ப் பத்திரிக்கையின் முன்னாள் ஆசிரியர் ஒருவர். ஆனால், ஊடகத்துறையினரை அச்சம் சூழ்ந்துகொண்டதால் உழைக்கும் பத்திரிக்கையாளர்களால் 2005 ஊடக சாசனத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டபடி நேர்மையாகவும், சமமாகவும் செய்தியளிக்க முடியவில்லை.

ஒலிபரப்பு ஊடகத்தில் செய்தி ஆசிரியராகப் பணியாற்றிய பத்திரிகை இயல் பயிற்சியாளர் ஒருவரின் கருத்துப்படி, எந்த ஒரு தகராறுக்கும் பல பக்கங்கள் உண்டு, எல்லாப் பக்கங்களையும் பற்றி செய்தி வெளியிடுவதே முக்கிய சவால் என்றகருத்தை ஊடகத்துறையினர் மற்றும் பத்திரிகையாளர்களின் மனங்களில் பதியவைப்பதில் 5 ஊடக அமைப்புக்கள் வெற்றி கண்டன. இந்த வகையில், போர் பற்றிய ஊடகங்களின் விவாதங்களை மாற்றுவதற்கு 5 ஊடக அமைப்புக்களின் திட்டம் உதவியது. மாற்றம் நிகழ சிறிது காலம் பிடிக்கும். இந்தச் சம்பவத்தில் மாறுதலை உண்டாக்கும் திறன் 5 ஊடக அமைப்புக்களிடம் இருந்தது. ஆனால் அதை அரசின் முனைப்பான அடக்குமுறைஒடுக்கிவிட்டது.

பத்திரிக்கையாளர்களிடையே உருவான புதிய விழிப்புணர்வினால் ஏற்படும் அபாயத்தை உணர்ந்த போர் அணியினர் திட்டமிட்டு அடக்கு முறைகளைச் செயல்படுத்தினார்கள் என்று மற்றொரு ஊடக ஆர்வலர் கூறுகிறார். “5 ஊடக அமைப்புக்கள் செயல்படுத்திய திட்டங்களினால் நாட்டில் ஊடகங்களின் போக்கில் மாற்றம் ஏற்பட்டது. எந்த ஒரு செய்தியையும் வெளியிடும்போது அதனுடைய நன்னெறித்தரம் பற்றிய விவாதம் நடத்தப்பட்டது. போர், மனித உரிமைகள், ஆண்-பெண் பிரச்சினைகள், சிறுபான்மையினரின் பிரச்சினைகள் போன்றவை பற்றிய செய்திகளை வெளியிடும் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த 5 ஊடகங்களின் அமைப்பு மேற்கொண்ட முயற்சிகளினால் இலங்கையின் ஊடகப் பணியில் ஒரு நிரந்தரமான மாற்றம் ஏற்பட்டது” என்றார்.

5 ஊடகங்கள் அமைப்பின் தொண்டர்கள் உருவாக்கிய ஊடகக் குறிப்பேடுகள் மாறிய சூழலிலும் கூட முக்கியமான ஆதாரமாக இருக்கும் என்று இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் முன்னாள் நிர்வாகி ஒருவர் கூறுகிறார். 2005-இல் போர் மீண்டும் தொடங்கியதைத் தொடர்ந்து நிகழ்ந்த தீவிரமான ஊடக அடக்குமுறைகளைப் பார்க்கும்போது, இந்தக் குறிப்பேடுகள் எவ்வளவு பரவலாக வாசிக்கப்பட்டுள்ளன, விவாதிக்கப்பட்டுள்ளன என்பது மறைந்துவிடுமோ என்றஅச்சம் ஏற்பட்டது. ஆனால், இலங்கையின் வரலாற்றில் புதிய கட்டத்தின் சவால்களைப் பத்திரிக்கையாளர்கள் எதிர்கொள்ள வேண்டிய தேவை ஏற்படும்போது இந்தக் குறிப்பேடுகள் கிடைத்துவிடும் நிலை இருக்கிறது.

## மௌபீமா: அனைவருக்காகவும் செய்தி வெளியிட்டதற்காகப் பலி

நவம்பர் 2006-ல் மௌபீமா என்றசிங்கள வார இதழுக்காகப் பணியாற்றிய முனுசாமி பரமேஸ்வரி என்ற23 வயது சுதந்திரத் தமிழ் பத்திரிக்கையாளர் இலங்கை காவல்துறையின் பயங்கரவாதப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டார். அந்தப் பெண் நான்கு மாதங்கள் காவலில் வைக்கப்பட்டிருந்தார். உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊடகங்களில் பரவலாகக் கண்டனங்கள் எழுந்ததைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்டார். ஏற்கனவே ஒரு முறைஇந்தப் பெண் பத்திரிகையாளர் அரசு அமைச்சர்கள் மற்றும் அரசு ஊடகங்களின் இடைவிடாத பிரச்சாரத்தினால் துன்புறுத்தப்பட்டவர்.

அரசியல் ஆதரவுடன் தலைமறைவுக் கும்பல்கள் நடத்தும் ஆள் கடத்தல் மோசடி பற்றி செய்தி வெளியிட்டதற்காக பரமேஸ்வரி கைது செய்யப்பட்டார். பல மனித உரிமை மீறல்களில் ஒன்றான ஆள்கடத்தல் போரின் கடைசிக் கட்டத்தின்போது மனித உயிர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்தது. பரமேஸ்வரி கைது அந்தச் செய்தி ஏட்டின் வெளியீட்டாளருக்கு ஒரு தெள்ளத்தெளிவான அறிகுறியைத் தெரிவித்தது. அதிபர் மகிந்தா ராஜபக்சாவின் நெருங்கிய அரசியல் சகாவான டிரன் அல்லெஸ், அதிபர் திரும்பத் திரும்பகேட்டுக் கொண்டபோதிலும் தாம் புதிதாகத் தொடங்கிய செய்தி ஏட்டின் சுதந்திரமான தலையங்கப் போக்கை மாற்றிக் கொள்ள மறுத்து விட்டார். உண்மையில், மௌபீமா பத்திரிகை மனித உரிமைகள் பிரச்சினையில் கவனம் செலுத்தும் செய்தி மற்றும் தலையங்கக் கொள்கையைப் பின்பற்றியது. இலங்கையின் மிகவும் ஆழமான இன வேறுபாட்டை இணைக்கும் மிகவும் நம்பகமான பாலமாகக் கருத்தப்பட்டது. மிகவும் குறுகிய காலத்திற்குள் மிகவும் அதிகம் விற்பனையாகும் இரண்டாவது பெரிய சிங்கள நாளேடு என்றபுகழ் பெற்றுவிட்டது. குறுகிய காலத்திற்கு, விற்பனை அடிப்படையில் சிங்கள மொழி நாளேடுகளிடையே இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்தது.

2007 பிப்ரவரியில், மௌபிமா நாளேடு மற்றும் அதன் சார்புப் பத்திரிகைகளின் செய்தி விவகார இயக்குநருக்கு ஒரு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது. அதிபருக்கோ, அரசியலில் தீவிரமாக உள்ள அவருடைய சகோதர்களுக்கோ விரோதமாக கட்டுரைகளை வெளியிடக்கூடாது என்று அவர் எச்சரிக்கப்பட்டார். இந்தச் செய்தி ஏடுகளை வைத்துள்ள ஸ்டாண்டர்டு நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்திற்கு விளம்பரங்களைத் தரவேண்டாம் என்றும் பல விளம்பர நிறுவனங்களை அதிபர் வற்புறுத்தியதாகக் கூறப்படுகிறது. அந்த வெளியீட்டு நிறுவனத்தின் நிதித்துறைஇயக்குநர் 2007 பிப்ரவரியில் கைது செய்யப்பட்டார். தமிழ்ப் பிரிவினை வாதிகளுக்குப் பணம் கொடுத்தாக கம்பெனி மீது குற்றம் சாட்டப்பட்டது. சகிக்கமுடியாத அளவு மோசமான நிலைமையில் அவர் 71 நாட்களுக்குக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

பயங்கரவாதத் தடுப்பு புலனாய்வுத் துறையின் அலுவலகத்திற்கு டிரன் அல்லெஸ் வாரத்தில் இரண்டு மூன்று தடவை வாக்குமூலம் பதிவு செய்வதற்காக அழைக்கப்பட்டார். 2007, மார்ச் 5 அன்று அவருடைய அலுவலகத்தில் திடீர் சோதனை போடப்பட்டு, எல்லா நிதி ஆவணங்களும், கடிதத் தொடர்புகளும் கைப்பற்றப்பட்டன, ஒரு நாள் கழித்து, அல்லெஸ் வணிகக் குழுவுக்குச் சொந்தமான ஒரு கம்பெனி வடக்கிலும், கிழக்கிலும் வைத்திருந்த மொபைல் போன் வினியோக உரிமை நிறுத்தி வைக்கப்பட்டது. இரண்டு நாட்கள் கழித்து செய்தி ஏடு மற்றும் அது தொடர்பான கம்பெனிகளின் வங்கிக் கணக்குகளை அரசு முடக்கியது.

மௌபிமா மற்றும் சண்டே ஸ்டாண்டர்டு பத்திரிகைகளின் கடைசி இதழ் 2007 மார்ச் 7 அன்று வெளியானது. அவை இரண்டும் ஓராண்டுக்கும் குறைவாகவே வெளியிடப்பட்டன. 2007 மே வரை அல்லெஸ் தொடர்ந்து விசாரணக்கு அழைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டார். கடைசியில் கைது செய்யப்பட்டார், குற்றச் சாட்டு எதுவும் தொடுக்கப்படாமல் இரண்டு வாரங்களில் நீதிமன்றஉத்தரவுப்படி விடுதலை செய்யப்பட்டார்.

### முறைகள் மற்றும் தவறுகள் பற்றிய மதிப்பீடு

2005-இல் தொடங்கிய ஊடக அடக்கு முறையின் உச்சகட்டத்திற்கு ஈடுகொடுக்க 5 ஊடகங்கள் அமைப்பு தவறிவிட்டதாகக் கூறுவது முழுமையான விளக்கம் அல்ல. புதிய துன்புறுத்தல் சூழலுக்கு போதுமான அளவுக்கு எதிர்வினை ஏற்படாதது ஏன் என்பதையும் ஆராய வேண்டும். இதனால் அச்சம் ஏன் அகலவில்லை என்பதையும் சிந்திக்க வேண்டும். இங்கு இரண்டு விஷயங்களைக் குறிப்பிட்டாக வேண்டும். பத்திரிகையாளர்களுக்கும், ஊடகத் தொழில்துறையினருக்கும் இடையே பரவலான ஒருமைப்பாடு ஏற்படாமல் போனது; இன்னொன்று, சர்வதேச ஒருமைப்பாட்டை இலங்கையின் பயங்கரவாத முறியடிப்பு முயற்சிகளுக்கு எதிரானது என்று சித்தரிக்கும் அதிகாரிகளின் திறமை.

இலங்கை பிரஸ் இன்ஸ்டிடியூட் (SLPI) தொடங்கப்பட்டதில் இருந்து அது ஊடக சுதந்திரத்திற்காகவும், தொழில் தரங்கள் மேம்படவும் வாதாடிவருகிறது. எனினும், இதில் பங்குதாரர்களாக உள்ள இலங்கையின் முக்கியமான ஊடக நிறுவனங்கள் இது எப்படிச் செயல்பட வேண்டும் என்பதில் கருத்து வேறுபட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, 2007-இல் மௌபீமா நிருபர் முனுசாமி பரமேஸ்வரி பழிவாங்கப்பட்டபோது. SLPI மற்றும் எடிட்டர்ஸ் கில்டு இரண்டுமே சரியானமுறையில் செயல்படத் தவறிவிட்டன. செய்தி ஏடு கம்பெனியும், இதனுடைய உரிமையாளர்களும் துன்புறுத்தப்பட்டு, இறுதியில் இரண்டு செய்தி ஏடுகளும் மூடப்பட்டபோது இவை உறுதியான நிலை எடுக்கத் தவறிவிட்டன. சண்டே லீடர் பத்திரிகையின் அச்சகம் 2007 நவம்பரில் தீவைத்துக் கொளுத்தப்பட்டபோது, பத்திரிகைச் சுதந்திரத்திற்கு ஆதரவான முறையில் SLPI செயல்படவில்லை. இந்த் தாக்குதலுக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்கும்படி இலங்கை ஆட்சியாளர்களை வற்புறுத்துவதற்கு இடையூறாக பாரபட்சமான, அரசியல் விசுவாங்கள் இருந்தன.

2008 மேமாதம், நேஷன் என்றஆங்கிலவார இதழில் அனைவரும் விரும்பி வாசிக்கும்படி பாதுகாப்பு விஷயங்களைப் பற்றி எழுதிய கெய்த் நொயகர் கடத்தப்பட்டு, மிகவும் கடுமையாகத் தாக்கப்பட்டார். அவருடைய உடம்புக்கு மோசமான பாதிப்பு ஏற்படாமல் 5 ஊடகங்கள் அமைப்பு காப்பாற்றி யிருக்கலாம். போலீஸ் உடனே தலையிட்டது. உலகளாவிய ஆதரவுத் தொடரமைப்பை எச்சரித்தது. அடுத்த மாதத்தில், சிங்கள மொழிப் பத்திரிகையாளரும், இலங்கை பிரஸ் இன்ஸ்டிடியூட்டின் துணைத் தலைவருமான நமல் பெரைரா தமது நண்பருடன் கொழும்பின் புறநகரில் காரில் போய்க் கொண்டிருந்தபோது தாக்கப்பட்டார். இவருக்கும் கடுமையான காயங்கள் ஏற்பட்டன. அவர்கள் தாக்கப்பட்டது ஒரு ஆள்கடத்தல் முயற்சி. ஆனால் அந்த இடத்தில் மக்கள் கூட்டம் திரண்டதும் தாக்கிவிட்டுத் தப்பி விட்டனர். இந்த இரண்டு தாக்குதல்களுக்கும் முண்பு ஒருபோதும் இருந்திராத முறையில் SLPI எதிர்வினை ஆற்றியது. அந்த ஆண்டு அக்டோபரில் இலங்கைக்கான சர்வதேசப் பத்திரிகைப் பாதுகாப்பு மிஷனின் உறுப்பினர்களைச் சந்தித்த மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவர், பத்திரிகைகள் மீதான தாக்குதல்களுக்கு சரிவர எதிர்வினை ஆற்றாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை விளக்கினார். முந்தைய ஆண்டுகளிலும் தாக்குதல்கள் நிகழ்ந்தன என்றாலும், அவற்றில் இலங்கையின் இனச் சிறுபான்மையினர்தான் சம்பந்தப்பட்டிருந்தனர். அவை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களாக இல்லாமல், நடைபெறும் உள்நாட்டுப் போரின் பக்க விளைவுகளாகவே கருத்தப்பட்டன. நொயகரும், பெரைராவும் தாக்கப்பட்டபோது உண்மைநிலை என்ன என்பது தெளிவாகி விட்டது. பலியாகிறவரின் இனம் எதுவாக இருந்தாலும், அல்லது சம்பந்தப்படும் நிறுவனத்தின் அரசியல் கொள்கை எதுவாக இருந்தாலும், பத்திரிகைச் சுதந்திரம் காக்கப்படவேண்டும் என்பதே நோக்கமாக இருந்தது என்றார்.

# முடிவுரையும் பரிந்துரைகளும்

தெற்காசியாவில் ஜனநாயகத்திற்காகவும், கருத்து வெளியீட்டு உரிமைக்காகவும் பத்திரிகையாளர்கள் தங்களுடைய யூனியன்கள் மற்றும் சங்கங்கள் மூலமாக முன்னணிப் பங்கு வகித்துள்ளனர். இந்த ஆய்வில் இடம்பெற்றுள்ள நாடுகளில் கூட்டு நடவடிக்கைகளின் முறைகளும், அவற்றின் விளைவுகளும் வெவ்வேறாக உள்ளன. போர் மற்றும் அரசியல் கொந்தளிப்பின்போது, பத்திரிகையாளர்களின் தொழில் சுதந்திரம்தான் முதலில் ஒடுக்கப்படுகிறது. இதற்காக அடிக்கடி வன்முறைகளும், இதர துன்புறுத்தல்களும் பின்பற்றப்படுகின்றன. பத்திரிகையாளர்களுக்கு யூனியன் பலம் உள்ள நாடுகளில் அவர்கள் இந்த நெருக்கடியை எதிர்த்து நின்று, இத்தகைய கட்டுப்பாடுகளை முறியடிக்கும் சமூக நடவடிக்கையில் முன்வரிசையில் நிற்கின்றனர்.

இந்த அடிப்படை அம்சங்கள் தவிர, தெற்காசியாவில் பத்திரிகையாளர் போராட்டங்களில் பல பொது அம்சங்கள் உள்ளன. அவற்றைக் கண்டறிவதன் மூலம், இந்த நாடுகளுக்குள்ளும், எல்லை தாண்டியும் எதிர்காலத்தில் கூட்டு நடவடிக்கைகளுக்கு ஆயத்தம் செய்யமுடியும்.

முதல் படிப்பினையாக, பத்திரிகையாளர்கள் தங்களுடைய தொழில்முறைசமூகத்தின் சார்பாக பேசவும், செயல்படவும் பிரதிநிதித்துவ அமைப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இதற்கு நாடெங்கும் பரந்துவிரிந்த அளவில் தொடர்புகளை ஏற்படுத்தி, ஜனநாயக முறையில் பங்கேற்பை ஊக்கப்படுத்த வேண்டும். பத்திரிகையாளர் சமூகம் ஒன்றுபட்டு நிற்கும் நாடுகளில் வெற்றி வெளிப்படையாகக் கிடைக்கிறது.

இரண்டாவதாக, வேறுபட்ட மக்கள் சமூகப் பிரதிநிதிகளுடன் கூட்டுச் சேர்ந்து செயல்படும்போது வலு ஏற்பட்டு, அதிக விளைவுகள் உண்டாகின்றன. நேபாளத்தில் 2006-இல் சர்வாதிகார மன்னராட்சிக்கு எதிராகவும், பாகிஸ்தானில் 2008-இல் ராணுவ யதேச்சதிகாரத்திற்கு எதிராகவும் இந்தமாதிரி விரிந்த அளவில் கூட்டுவைத்து போராடியது நல்ல விளைவுகளைத் தந்தது. இலங்கை, இனங்களுக்கு இடையிலான பத்திரிகையாளர் ஒத்துழைப்புக்கு ஒரு எடுத்துக் காட்டாக அமைந்தது. அங்கு பாதகமான அரசியல் சூழல் குறுக்கிடுவதற்கு முன்பாக, ஜனநாயகம் மற்றும் பத்திரிகைச் சுதந்திரத்திற்காக பொது இயக்கம் நடத்துவதில் மக்கள் சமூகத்தை பத்திகையாளர்கள் ஒன்று திரட்டமுடிந்தது. எதிர்காலத்தில் எந்த ஒரு நேரத்திலும் தங்களுடைய நடவடிக்கைகளுக்கு ஊக்கம் தரக்கூடியவகையில் சிவில் சமூகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்துவது பத்திரிகையாளர் யூனியன்களுக்குப் பெரும் சவாலாக இருந்தது.

உள்ளூர் இயக்கங்களுக்கு பன்முகப் பலம் தந்து பயனளிக்கும் சர்வதேசத் தொடரமைப்பு தேவை என்று வலியுறுத்தப்படுகிறது. உள்நாட்டு எல்லைகளுக்கு அப்பாலும் தாக்குப் பிடிக்கக் கூடிய யூனியன் அல்லது சங்கம் ஒரு நாட்டில் இருக்குமானால் சர்வதேசப் பரிமாணம் வெற்றிபெறும். மேலும், உள்ளூர் இயக்கங்கள் பற்றி சர்வதேச அமைப்புக்கள் நன்கு அறிந்திருந்து, தொழில்தடைகளைக் கடந்தால்தான் சர்வதேசத் தொடரமைப்பு வெற்றிபெறும் என்பதை அனுபவம் காட்டுகிறது. ஏனெனில், பத்திரிகையாளர் அமைப்புக்களுக்கு இடையே தொடர்பு ஏற்பட மொழி ஒரு தடையாக இருக்கிறது. மேலும், உள்ளூரில் உள்ள நன்கு நிலைநாட்டப்பட்ட பிரதிநிதித்துவ அமைப்புக்களான யூனியன்களுடன் சேர்ந்து செயல்படும்போது, இயக்கம் பயனுள்ளதாக இருப்பதற்கு வேண்டிய நம்பகமான தகவல்கள் கிடைக்கின்றன. உள்ளூர் சமூகங்களுடன் ஏற்படும் இந்த ஆழ்ந்த தொடர்பை சர்வதேச அளவில் புரிந்து கொள்வதற்கு வழிகாண வேண்டும்.

ஆரம்பத்திலேயே உறுதியான தொடர்ச்சியான ஆதரவை சர்வதேச அமைப்பு வழங்கிடும் வகையில் நீண்டகாலமாக இருந்துவரும் தொடர்புகள் முக்கியமானவை. ஒருமைப்பாட்டு நடவடிக்கைகள் மூலமும், தேசிய அல்லது உள்ளூர் பிரச்சினைக்கு விரிவான வட்டார மற்றும் சர்வதேச நெருக்குதல்கள் மூலமும் தார்மீக ஆதரவு வழங்கிட வட்டார மற்றும் சர்வதேச தொடரமைப்புக்கள் தேவைப்படுகின்றன.

2002-இல் யூனியன்களையும், பத்திரிகைச் சுதந்திர அமைப்புக்களையும் ஒன்று சேர்த்து தெற்காசிய ஊடக ஒருமைப்பாட்டுத் தொடரமைப்பு (SAMSN) ஒன்றைசர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனத்தின் ஆசிய-பசிபிக் கிளை ஏற்படுத்தியது. இந்த வட்டாரத் தொடரமைப்பு உறுப்பினர்களுடன் தகவல்களையும், அனுபவங்களையும், திறன்களையும் எல்லைதாண்டிப் பகிர்ந்துகொண்டு, பலவகையான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் உறுப்பாக உள்ள யூனியன்கள் மற்றும் சங்கங்களின் திறனும், வாதாடும் முயற்சிகளும் மேலும் திறம்பட உயர்ந்தன. அண்மைக் காலத்தில், காஷ்மீர், சத்தீஸ்கர், வடகிழக்கு இந்தியா போன்றஇந்தியப் பகுதிகளில் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு ஆதரவாக கொள்கைகள் மற்றும் பிரச்சார உத்திகளில் விரிவான கருத்தொற்றுமை ஏற்பட பத்திரிகையாளர்களிடேயே கூட்டு முயற்சிகளை SAMSN ஏற்படுத்தியது.

தகவல்கள் முழுமையாகவும் உடனுக்குடனும் கிடைத்தால்தான் வட்டார மற்றும் சர்வ தேசத் தொடரமைப்பினால் பயன் ஏற்படும் என்பதை SAMSN மற்றும் சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனத்தின் ஆசிய-பசிபிக் கிளை தந்த அனுபவம் காட்டிவிட்டது. சர்வதேச ஆதரவும், ஒருமைப்பாடும் கோரி உள்ளூர் யூனியன் முதலில் விடுக்கும் அழைப்பு சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாக இருக்கவேண்டும். ஏனென்றால், எந்த ஒரு பிரச்சினையிலும் ஒருநிலை எடுப்பதற்கு முன்னால் உரிய விவரங்கள் அனைத்தையும் ஆராய்ந்த ஒரு நம்பிக்கை உலகளாவிய அமைப்புக்களுக்கு ஏற்படவேண்டும்.

ஆதரவு திரட்டுவதற்காக நடத்தப்பட்ட இயக்கங்கள் வெற்றி பெற்றதாலும் அல்லது வெற்றி பெறாமல் போனதாலும் கிடைத்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதால், நெடுங்காலப்போக்கில் நல்ல பலன் ஏற்பட்டுள்ளது. தெற்காசிய நாடுகளில் உள்ள சில யூனியன்களும், சங்கங்களும் ஆபத்தில் இருக்கும் பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதிலும், ஊடகச் செயல்பாடுகளுடன் தொடர்புடைய சட்டங்களை நிறைவேற்றும்படி செய்வதிலும், போரின்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட நிதிநிரட்டுவதிலும் பெரும்வெற்றி கண்டுள்ளன. மேலும், கொடையாளி அமைப்புக்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் நிதி உதவி வாக்குறுதிகளை அளிக்க வேண்டியிருப்பதால், நிதி விவகாரங்களில் யூனியன்கள் ஒளிவு மறைவின்றி இருக்கவேண்டியுள்ளது.

சர்வதேசக் கொடையாளி அமைப்புக்களுக்கும் இங்கு ஒரு செய்தி உள்ளது. அவை பெரும்பாலும் தங்களது ஆதரவை தேசிய வட்டார எல்லை என்றவரம்புக்குள் நிறுத்திக் கொள்கின்றன. பொதுவான வரலாறுகளைக் கொண்ட தெற்காசியா போன்றசிக்கல்கள் மிகுந்த பகுதியில், எல்லா செயல் நோக்கு நடவடிக்கைகளிலும் உள்ளமைப்பு எல்லை கடந்த அம்சம் இருக்க வேண்டும். ஏனென்றால் தெற்காசியாவில் பாகிஸ்தானில் உள்ள கைபர் பக்டுன்க்வா தொடங்கி நேபாளத்தின் சமவெளிப் பகுதி மற்றும் வடகிழக்கு இந்தியா வரை எல்லா வட்டாரங்களுமே பிரச்சினைக்குள்ளானவை என்று கருதப்படுகின்றன. ஏனென்றால், இங்கு குவிமைய அரசியலும், அரசுக்கட்டுப்பாடுகளும் சேர்ந்து எல்லை கடந்த ஒற்றுமை ஏற்படுவதை தடுக்கின்றன.

ஊடகக் கொள்கை மற்றும் சட்டம் தொடர்பாக யூனியன்கள் மிகவும் தீவிரமாகச் செயல்பட வேண்டியுள்ளது. பெரும்பாலான நாடுகளில் முன்பு அரசின் ஏகபோக ஒலிபரப்புக் கட்டுப்பாடுகளினால் உருவான சிக்கல்கள், தனியார் ஊடகங்கள் செழித்தோங்கி வளர்ந்ததால் பொருத்தமற்றுப்போய்விட்டன. ஆயினும், ஒழுங்குமுறைவிதிகள் மற்றும் நடத்தை நெறிகள் தொடர்பான பிரச்சினைகள் அப்படியே இருக்கின்றன. தனியார் ஒலி-ஒளிபரப்பு தரத்துக்கு உத்தரவாதம் தருவதாகவோ, பொது நலன்களைக் கவனிப்பதாகவோ இல்லை என்பதை இந்திய அனுபவம் காட்டுகிறது. மாற்று அலைவரிசைகள் பல்கிப்பெருகுவதால் அரசு

ஊடகங்கள் தவறாகப் பயன்படுத்தப்படும் போக்கும் மறைந்துவிடாது என்பதை இலங்கை அனுபவம் காட்டுகிறது. நேபாளத்தில், ஒலிபரப்பு உரிமங்களை வழங்குவதில் அரசின் முழுக்கட்டுப்பாடுகளைப் போக்கவும், ஒலிபரப்பு ஊடகங்களுக்குத் தன்னாட்சி அதிகாரம் தருவதற்காக 1992–ஆம் ஆண்டின் தேசிய ஒலிபரப்புச் சட்டத்தைத் திருத்தவும் தேவை இருப்பதை உணர்த்துவதில் பத்திகையாளர் யூனியன்கள் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளன. கொள்கை அளவில் இந்த ஒப்புக்கொள்ளப்பட்ட வெற்றியை உறுதிப்படுத்திட, அதைச் செயல்படுத்தும்படி யூனியன்கள் செய்ய வேண்டும்.

இந்த அறிக்கையுடன் தொடர்புடைய எல்லா நாடுகளிலும் ஒலிபரப்புக்கு ஏராளமான வாய்ப்புக்கள் உள்ளன. ஆனால், நேபாளம் நீங்கலாக, ஓரளவுக்கு பங்களாதேஷையும் தவிர்த்து, சமூக வானொலி தொடர்பான சட்டங்கள் கட்டுப்படுத்தக் கூடியவையாகவே உள்ளன. பொது மக்களின் முயற்சிகளையும் ஈடுபாட்டையும் ஒடுக்குவதில் குறியாக உள்ளன. எல்லா மக்கள் அமைப்புக்களும் சமூகவானொலித் துறையில் பங்கேற்கும்படி செய்திட யூனியன்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். அதே வேளையில், பதிவு மற்றும் உரிமங்கள் தொடர்பான சட்டங்களைப் பயன்படுத்தி, வெளியீடுகளையும், ஒலிபரப்பையும் நிறுத்தும் அதிகாரத்தை ஒடுக்கவேண்டும். இதுபோன்றமுடிவுகள் யாவும் நேர்மையான சட்டவிதிகளுக்கு உட்பட்ட, ஒளிவு மறைவற்றமத்யஸ்தத்திற்கு இணங்கியதாக இருக்கவேண்டும்.

தொழில்முறைப் பத்திரிகை இயலுக்காக நடத்தை நெறிகளையும், வழிகாட்டு விதிகளையும் ஊடக அமைப்புக்களும் யூனியன்களும் தொகுக்க வேண்டும். இது தொடர்பாக, இந்த அறிக்கையுடன் தொடர்புடைய நாடுகளில் உள்ள யூனியன்கள் அனைத்தும் முக்கியமான முன்னேற்றம் கண்டுள்ளன. ஐந்து நாடுகளிலும் இந்த முயற்சிகளுக்கு உயர் முன்னுரிமை கொடுத்து, ஜனநாயக நெறிகளுக்கு, நிறுவக வடிவம் கொடுத்து, அரசியல் கட்சிகள் மற்றும் சுயநல வணிகர்களின் நெருக்குதலுக்கு எதிர்ப்பு ஆற்றலை உருவாக்கவேண்டும். இந்த நாடுகளில் தலைமறைவுக் கும்பல்களும், கிரிமினல் குழுக்களும் அச்சத்தை உண்டாக்கி ஊடகங்களின்மீது செல்வாக்கு செலுத்துகின்றன என்பது சொல்லப்படாத உண்மையாகும். இத்தகைய அச்சுறுத்தல்களை, தொழில் நோக்குடன் ஒன்றுபட்டு, பத்திரிகையாளர்களுக்கென அறிவிக்கப்பட்டுள்ள நடத்தை நெறிகளைப் பின்பற்றுவதன் மூலமே முறியடிக்க முடியும் என்பதை அனுபவம் காட்டுகிறது.

எல்லா ஐந்து நாடுகளிலும் ஊடகஊழியர்களையும், பத்திரிகையாளர்களையும் கொல்லுதல் தாக்குதல், கடத்துதல் ஆகியன சர்வசாதாரணமாக நிகழ்கின்றன. இதனால் கருத்துவெளியீட்டுச் சுதந்திரம் உறைந்துபோகிறது. இவ்வாறு நிகழும் ஒவ்வொரு சமயத்திலும் ஊடகப் பணியாளர்களிடையே வேற்றுமைகள் நீங்கி, இத்தகைய செயல்கள் தண்டிக்கப்படாமல் போகாது என்றஉறுதி ஏற்பட்டது. ஆனால் தண்டனை விலக்கம் என்பது தெற்காசியக் கலாச்சாரத்தில் ஊறிப்போனதாகும். இதைப் போக்குவதற்குப் பத்திரிகையாளர்கள் ஒரு வழி கண்டாக வேண்டும். ஊடக உரிமைகள் மீறப்படும் செயல்களை துப்புத்துலக்கி, வழக்குத் தொடுக்கும்படி அதிகாரிகளைத் தூண்டுவதற்கு நடவடிக்கைகளை பத்திரிகையாளர் அமைப்புக்கள் மேற்கொள்ளவேண்டும்.

பிலிப்பீன்ஸ் மற்றும் இந்தோனேசியா போன்று வட்டாரத்திற்கு வெளியில் இருந்தும் படிப்பினைகளைக் கற்கலாம். அங்கு முதலில் உள்ளூர் அளவிலும், பின்னர் சர்வதேச நிலையிலும் சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனத்தின் ஆதரவுடன் வலுவான உள்ளூர் யூனியன்கள் இயக்கங்களை உருவாக்கின, தண்டனைவிலக்கத்திற்கு ஒரு முடிவு கட்டவேண்டும். தெற்காசியா முழுவதிலும் தண்டனை விலக்கமுறைபற்றி ஆராய்ந்து, ஒற்றுமைகளைக் கண்டறிந்து, பொதுநடவடிக்கைகளை எடுக்கவேண்டும். ஊடக மற்றும் சட்ட நிபுணர்களைக் கலந்தாலோசித்து இயக்கம் நடத்துவதற்கான வழிமுறைகளைக் காணவேண்டும்.

தெற்காசியாவில் உள்ள தொழில்முறைஊடகப் பணியாளர்கள் அனைவரும், அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள ஒலி–ஒளிபரப்பு நிறுவனங்கள் உருவாக்கிய வாய்ப்புவளங்களை பொதுக்கட்டுப்பாட்டுக்கு மாற்றுவது பற்றி விவாதிக்க வேண்டும். பொதுநலன்களை அரசு கவனித்துக் கொள்ளும் என்றவழக்கமான சிந்தனைப்போக்கு மாறவேண்டும். பொதுச் சேவை ஒலிபரப்பு பற்றிய விவாதத்தை முதன்மைப்படுத்தி நடத்தவேண்டியது முக்கியமாகும். இந்த வாய்ப்புவளங்களை தன்னாட்சி அதிகாரம் பெற்றஅறக்கட்டளைகளிடமும், அரசியல் தொடர்பற்றஅரசு நிறுவனங்களிடமும் விட வேண்டும். சில யூனியன்கள் ஏற்கனவே இந்த நோக்கில் நடவடிக்கை எடுத்துள்ளன. அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டு, பொது இயக்கம் ஒன்றைநடத்த வழி கண்டாக வேண்டும்.

எல்லா ஐந்து நாடுகளிலும் பத்திரிகையாளர்களுக்கும், ஊடக ஊழியர்களுக்கும் விரிவாக தேசிய அளவில் பயிற்சியும், கல்வியும் அளிக்கவேண்டும் என்பது இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்தப் பயிற்சித் திட்டத்துக்கு ஊடக உரிமையாளர்களும், நிர்வாகிகளும், யூனியன்களும் தார்மீக ஆதரவும் நிதி உதவியும் செய்ய வேண்டும். இதன் மூலம் நன்னெறி, தொழில்திறன், நிர்வாகம், வணிகத் திட்டமிடல் ஆகியவற்றில் அடிப்படைப்பாடத் திட்டங்களை உருவாக்க வேண்டும். எல்லா நாடுகளிலும் ஒதுக்கப்பட்ட பிரிவினர் பங்கேற்கும்படியாகப் பயிற்சித் திட்டங்கள் அமைய வேண்டும்.

பத்திரிக்கையாளர்களுக்குத் தீவிரமான சவால்கள் ஏற்பட்டுள்ள தெற்காசிய நாடுகளில் தேசியத் தலைநகர்களுக்கும், தொலைவுப் பகுதிகளுக்கும் இடையே வலுவான பிணைப்புக்களை யூனியன்கள் ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால், தொலைவுப் பகுதிகளில் பேச்சுரிமையைப் பயன்படுத்துவதற்கு இடையூறான தடங்கல்களைக் கண்டறிந்து, அவற்றைப் பற்றி தேசியத் தலைநகர்களில் பெருநகர்களில், உள்ள யூனியன்களின் ஆதரவுடன் பொது அக்கறைஉள்ள பிரச்சினைகளாக ஆக்க வேண்டும். பத்திரிகையாளர்களை இணைக்கவும், தகவல்களைப் பகிர்ந்துகொள்ளவும் மேம்பட்ட வழிகள் தேவைப்படுகின்றன.

இளம் தொழில்முறைப் பத்திரிகையாளர்களிடையே, உரிமைகளைப் பாதுகாப்பதில் நீண்டநெடும் வரலாறு உள்ள பத்திரிகையாளர் அமைப்புக்களுக்கு உறுதுணையாக இருப்பதில் அக்கறைதென்படவில்லை. இதைச் சீர் செய்வதற்காக இளம் பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக ஊழியர்களைப் பிரதிநிதிகளாக்கி அமைப்புக்களை யூனியன்கள் ஏற்படுத்த வேண்டும். எல்லா நாடுகளிலும் ஊடக சுதந்திரத்தின் எதிர்காலத்திற்கு இது மிகவும் முக்கியமான முதலீடாகும்.

எல்லா ஊடக ஊழியர்களுக்கும் அதிக ஊதியம், மேம்பட்ட பணிநிலை கிடைச்ச பாடுபடும் தனது வழக்கமான பங்குபணிகளை யூனியன்கள் தொடரவேண்டும். சட்டபூர்வ ஊதியக் குழுக்கள் மூலமாக ஊதியம் நிர்ணயம் செய்யும் ஒரு நிறுவனமுறைஏற்படுத்தப் பட்டுவிட்ட பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா ஆகிய நாடுகளில் இந்தப் பிரச்சினை இப்போது எப்படி அணுகப்படுகிறது என்பதை மறுமதிப்பீடு செய்து, ஊழியரின் உரிமைகள் பற்றிய ஊடக உரிமையாளர்களின் போக்கில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர வட்டார இயக்கம் தேவைப்படுகிறது.

பத்திரிகைத் தொழிலில் பெண்களின் பங்கேற்பு அதிகரித்து வருகிறது. இது மகிழ்ச்சி தருகிறது. ஊடக யூனியன்களிலும் பெண்கள் அதிகம் பங்கேற்கின்றனர். எல்லா நிலைகளிலும் பெண்களின் பங்கேற்பை ஊக்கப்படுத்த யூனியன்கள் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இறுதியாக, உறுப்பினர்களுக்குத் தகவல்களை அனுப்பி, அவர்களைத் தீவிரமாக ஈடுபடுத்த புதிய ஊடகத் தொழில்நுட்பங்களை யூனியன்கள் தேட வேண்டும். இதனால் ஒதுக்கப்படும் உணர்வு குறைந்து, புவி எல்லைகளைத் தாண்டி ஒருமைப்பாடு உருவெடுக்கும்.

மேலும் தகவல் அறிய வாரீர் **asiapacific.ifj.org** அல்லது **www.ifj.org**

**IFJ** ஒரு அரசு சாராத, லாபநோக்கற்றஅமைப்பு. இது பத்திரிகைச் சுதந்திரத்தையும், சமூக நீதியையும் பாதுகாக்க வலுவான, சுதந்திரமான, சுயேச்சையான பத்திரிகையாளர் தொழிற்சங்கங்களை வளர்ப்பதன் மூலமாக ஒருங்கிணைந்த சர்வதேச நடவடிக்கைகளை ஆசிய-பசிபிக் வட்டாரத்தில் **IFJ-** ஆசிய-பசிபிக் ஒருங்கிணைக்கிறது. ஐ.நா.வுடன். குறிப்பாக **UNESCO, OHCHR, WIPO, ILO** ஆகியவற்றுடன் **IFJ** சேர்ந்து உழைக்கிறது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டி, ஐரோப்பிய ஒன்றியம், ஐரோப்பா கவுன்சில் ஆகியவற்றுடனும், பற்பல சர்வதேசத் தொழிற்சங்கங்கள் மற்றும் கருத்து வெளியீட்டு அமைப்புக்களுடனும் சேர்ந்து செயல்படுகிறது. பத்திரிகையாளர்களின் தொழில் முறைமற்றும் தொழில் நலன்கள் **IFJ** அதிகார வரம்புக்குள் வருகின்றன.